# தமிழ்ப் பேராய்வு
## ஆய்விதழ்

தொகுதி - 6 Volume - 6

டிசம்பர் / December 2017

# JOURNAL OF TAMIL PERAIVU

Published by
**Department of Indian Studies**
**Faculty of Arts and Social Sciences**
**University of Malaya**

Indexed by MyJurnal
Malaysian Citation Centre

UNIVERSITY OF MALAYA
*The Leader in Research & Innovation*

Malaysian Citation Centre
Pusat Sitasi Malaysia

**ISSN 2289- 8379**

# Editorial Board

2016-2019

## Editors–in–Chief

## Professor Dr. M. Rajantheran, Malaysia

Indian civilization, Tamil culture and literature, early cultural relations between India and Southeast Asia & culture and life of the Malaysian Indians

## Professor Dr. K. Srinivasan

Associate Professor Dr- English language and literature, literary criticism, philosophy and religion. Department of English, National College, Thiruchy, Tamil Nadu.

## Chief Executive Editor

## Assistant Professor Dr. Silllalee S. Kandasamy

Media, Tamil literature and culture, Malaysian Indians & sociology

## Editorial Board Members

**Era. Kamarasu,** Professor Dr – Tamil Language, Classical literature, modern literature & culture, Department of Tamil Literature. Tamil University, Tanjavur, Tamil Nadu, India.

**G. Singaravelu,** Professor Dr- Primary Education, Teacher Education, English Education, Head, Department of Education, Syndicate member of the university, Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.

**Ira. Kurinji Vendan,** Professor Dr- Tamil literature, Culture & Diaspora. Post graduate section, Arinyar Anna College, University of Pondicherry.

**Jeevendiran Chemen,** Associate Professor Dr- Ethic identity of Mauritian Tamils, Tamil language and Linguistic & Sociology. Mahatma Gandhi Institute, University of Maurititus.

**Kizhambur S. Sankara Subramanian,** Tamil journalism, Tamil Literature and Culture & Tamil Civilization, India.

**Mohanadass Ramasamy,** Senior Lecturer Dr- Language and linguistics, Head Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**P. Sivakumar,** Professor Dr – Educational Technology, Environmental Education & Biology Education, Dean, Faculty of Education, Alagappa University, Tamil Nadu, India.

**Paramasivam Muthusamy,** Associate Professor Dr- Tamil language and literature, socio-

linguistics, pedagogy and Tamil culture. Department of Foreign Languages. Faculty of Modern Languages and Communication, University Putra Malaysia.

**Ponsamy Tiroumalechetty,** (Retired) Associate Professor Dr – Socio- linguistics, Socio Culture of Tamils. Head, School of Indian Studies, Mahatma Gandhi Institute, Mauritius.

**Rakkappan Velmurugan,** Senior Lecturer Dr- Linguistics, Pedagogy, Tamil language, Literature & Grammar. Asian Languages and Cultures Academic group, National Institute of Education, Nanyang Technological University, Singapore.

**Samikkanu Jabamoney Ishak Samuel,** Associate Professor Dr – Malaysian Tamil Literature, Modern Tamil Literature, Tamil Language and Pedagogy. Tamil unit Coordinator, Sultan Idris Educational University.

**Seethalakshmi,** Associate Professor Dr- Tamil lexicography, teaching Tail as a second language, Tamil Pedagogy, Sociolinguistics & Literature through Mass Media. Department of Asian Languages & Cultures (ALC), Nanyang Technological University, Singapore.

**V. Maheswaran,** Professor Dr- Epigraphy, Tamil culture, folklore, literature. Department of Tamil, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

**Vasu Aranganathan,** Dr- History of Tamil language, literature, religion, inscriptions & Teaching and learning of Tamil language. South Asia Studies, University of Pennsylvania, USA.

# Journal of Tamil Peraivu Editorial office
## Office of the Editor – in – Chief

No. 132, Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences,
University of Malaya, 50603 Kuala Lumpur, Malaysia
Tel: +60379675670
rajanmun@um.edu.my / rajantheran@gmail.com

**Publisher**

Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.
Tel: +60379675510

**Sponsored by**

Almaa Herbal Nature Pvt ltd
No.1/8, Pinjala Subramanian street,
T. Nagar, Chennai – 600 017
Tamilnadu, India
mglv@rediffmail.com/ www. Almaaherbal.com

**Printed at**

BIG C GRAPHICS (M) SDN. BHD
No. 36, Ground Floor, Jalan Tun Sambanthan 3, Brickfilds, 50470, Kuala Lumpur, Malaysia

**Designed by**

Dr. K. Govindaraj,
Assistant Professor, Department of Zoology, National College (Autonomous), Trichy.
S. Krishnamoorthy,
System Administrator, National College (Autonomous), Trichy.
D. Esther Fathima,
Data Entry Operator, National College (Autonomous), Trichy.


---


The publisher of Tamil Peraivu Aivithal (Journal of Tamil Peraivu), will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for lost of damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

© Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

# PREFACE

The Department of Indian Studies, University of Malaya brings out the sixth volume of *Tamil Peraivu* which is a bi-annual journal. Academicians around the globe contribute their articles to this journal. The present volume consist of nine research articles. The leit –motive of a research has to be scientific and this is the sole objective of this journal

The article, 'The Indication of Society in Civilization and Moral Literature', by Professor Dr. M. Rajantheran (Malaysia), Associate Professor Dr.Srivasan (India) and Dr Umadevi Naidu Allaghery (Mauritius) focuses on the indication of society in mass civilization and moral literature, it is essential to probe into the words 'Society' and 'Civilization'. The experts who study civilization propose four main characteristics of civilization. They are the objective of reaching an aim, appreciative actions, moral values and an understanding of humanity. All these are dealt with deeply in *Thirukkural* and this becomes the focus of this paper.

The next article is by Dr M S Shri Lakshmi (Singapore) deals with The Debates in Tamil Murasu through an analytical perspective. This research paper discusses three literary arguments which were published in Tamil Murasu between 1951-52 and 1991. Legend Puthumaipithan and his writings and the short story written by N.Varadharsan of Kepala Batas, Malaysia became a subject matter for these arguments. These arguments not only depict the writing skills and argumentative skills but also the literary knowledge of the participants. As a result of these arguments many constructive initiatives were taken to develop the local literature.

The third article in this volume is about the Literatures and Astrologers of Indian Astrology, written by G.Sivapalan (Malaysia) and Dr.S.Manimaran (Malaysia). This article points out that in Indian civilisation the astrological ideas were devised in the form of poetry by ancient saints many centuries ago and later those works have been compiled as books. Later these books were recognised as the main literature text for the Indian Astrology. These works seem to have gone through a simplication process in the past, but their quality and information were not compromised.

The following article of Dr.K.Subashini (Germany) is entitled, 'Cave Temples in Tamil Temple Architecture'. This Paper provides insight into several rock-cut temples of 6th to 8th century A.D. in Tamil Nadu, India. This article examines the political changes happened in the ancient Tamil country which has witnessed significant variations in culture, religion and arts. The author identifies that the king, Mahendravarman built a new type of temple architecture by avoiding materials such as bricks, timbers, metal and mortar which have been used vastly in the temple architecture. Finally this article also highlights the deteriorating present conditions of these temples with the aim to raise awareness for protection.

'Divine names of lord Civan in Tiruvicaippa' by Dr. R. Seeta Lechumi (Malaysia) is the next article in this volume of *Tamil Peraivu* journal. *Tiruvicaippa* has been authored by nine devotees, from Tirumalikai Tevar to Cetirayar. In this work the author has identified various divine names of Lord Civan which are mentioned in *Tiruvicaippa*. According to the author, these names may be classified as special (cirappu) names, common(pothu) names and names of address (vili). It may be noted that these names depict the characteristics of the Lord in His natural (corupa) state and His general (tadatta) state.

The next article entitled, 'Impressimison in Bharathidasan's *Pandian Parisu* – Problem in Translation' was written by Dr Umadevi Naidu Allaghery (Mauritius). This article gives some background information about Pavendar Bharathidasan and his works. He is said to have mark a deep intellectual thoughts in his works which covers various genre. *Pandian Parisu* is the historical approach in this context. Which has been translated into English. This paper deals with how impressionism and the techniques of translation used in *Pandian Parisu*.

'The lesson learnt in the last century regarding the maintaining of Quality in Tamil Syllabus' by Dr. Jothi S. Themozhi (USA) is based on a literary debate which focuses on P. S. Subrahmanya Sastri's book *Tolkāppiyam*: *Collatikāram.* A review of the last century *Tamil Pozhil*, Tamil Journal articles reveal a literary criticism and a heated debate over P. S. Subrahmanya Sastri's above mentioned work. These events that took place for years, and the efforts put forth by the Tamil scholars teach the importance to maintain the quality of University Tamil Textbook Standards.

The following article by Dr.K.Silllalee (Malaysia) and S. Narayanee (Australia) entitled, 'Leadership qualities depicted in Moral Literature', is written based on *Pathinen Keezh Kanaku Noolgal* which are considered as Moral literature in the History of Tamil Literature. These works also indicate moral that pave the way for the upliftment of a man. This does not only develop a man but also the society around him. This paper brings out how ancient Tamil literature show the leadership qualities.

The last article of this volume is entitled 'Medicine in Temple Worship: An introduction', authored by Dr.S.Manimaran (Malaysia) and G.Sivapalan (Malaysia). This paper reveals that the daily routine of *Poojas'*, festivals and rituals in temples not only promote bhakti but also prescribe healthy life of man with medicines. The offering of food, things for *Archana*, the holy water, *Abishekam*, the musical instruments played, the temple environment, all these, are filled with medicine in one way or other and act as a cure to many diseases.

This Journal in its sustaining effort records the innovate ideas of many researchers. The Editorial Board feels immense pleasure in bringing this sixth Volume of *Tamil Peraivu* expressing heartfelt thanks to all the contributors and evaluators of this volume. Last but not least, we would like to thank Mr.MGL. Velayutham – Alma Herbal Nature Pvt. Ltd for his sincere generosity in sponsoring this journal.

**Professor Dr.M.Rajantheran**
**Associate Professor Dr.K. Srinivasan**
**Chief Editors**
**23.12.2017**

# முகவுரை

தமிழ்ப் பேராய்வு ஆய்விதழின் ஆறாவது தொகுப்பாக இவ்விதழை மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை வெளியீடு செய்கிறது. அரையாண்டிதழாக வெளியீடு காணும் இவ்விதழில் பன்னாட்டு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. ஆய்வு என்பது அறிவியல் பூர்வமாக இருக்க வேண்டும் என்பதால் இவ்வாய்வேடு அதனை முன்னிருத்தி உருவாக்கம் கண்டுள்ளது. இந்தத் தொகுப்பில் மொத்தம் ஒன்பது ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

'நாகரிகப் பொருண்மையும் நீதி இலக்கியமும் காட்டும் சமுதாயம்', எனும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் (மலேசியா), இணைப் பேராசிரியர் முனைவர் ஸ்ரீனிவசன் (இந்தியா) மற்றும் முனைவர் உமா தேவி நாயுடு அழகிரி (மொரீசியசு) ஆகியோரின் ஆய்வுக் கட்டுரையானது இத்தொகுப்பின் முதல் கட்டுரையாக அமையப்பெற்றுள்ளது. நாகரீகச் சமுதாயத்தின் கூறுகள் நீதி இலக்கியத்தில் வெளிப்படும் பாங்கைச் சுட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. நாகரிகவியல் அறிஞர்கள் இலக்கை அடையும் நோக்கு, போற்றத்தக்க செயல்கள், நன்நெறிக் கூறுகள், மனிதர்களிடையே புரிந்துணர்வு மிக்க தொடர்பு ஆகிய நான்கு முதன்மைக் கூறுகளை நாகரிகத்திற்கு அடிப்படையாகக் கொள்வர். இவை திருக்குறளில் வெளிப்படும் பாங்கை முன்வைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

அடுத்த கட்டுரை, முனைவர் எம்.எஸ். ஸ்ரீலஷ்மி (சிங்கப்பூர்) அவர்களின் 'தமிழ் முரசு விவாதங்கள்ஓர் ஆய்வியல் கண்ணோட்டம்', என்பதாகும். இவ்வாய்வானது 19511952 மற்றும் 1991 ஆம் ஆண்டு தமிழ் முரசில் வெளியீடு கண்ட மூன்று இலக்கிய விவாதங்களை / சர்ச்சைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. புதுமைப்பித்தன் (தமிழ் நாடு), ந.வரதராசன் (மலேசியா) படைப்புகளின் சர்ச்சைகள் இக்கட்டுரையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இச்சர்ச்சைகளாவன சம்பந்தப்பட்டவர்களின் விவாதத் திறனையும் இலக்கிய அறிவையும் பறைசாற்றுகின்றன. இச்சர்ச்சைகளின் வழி ஆக்கப்பூர்வமான முயற்சிகள் பல இலக்கிய உலகில் முளைவிட்டிருப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இத்தொகுப்பின் மூன்றாவது கட்டுரை, இந்திய சோதிட இலக்கியங்களையும் சோதிடர்களையும் அடிப்படையாகக் கொண்டு கோ.வி.சிவபாலன் (மலேசியா), முனைவர் மணிமாறன் (மலேசியா) ஆகியோரால் படைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையில், இந்திய நாகரிகத்தில் சோதிடம் குறித்த செய்திகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஞானியர்களால் கவிதை வடிவில் விட்டுச் சென்றிருப்பதாகவும் பின்னாளில் அவை நூல் வடிவம் பெற்று இந்தியச் சோதிட இலக்கியங்கள் என அங்கிகாரம் பெற்றதாகவும் குறிப்பிடுகின்றனர். பின்னாளில் இவை பலரால் எளிமைபடுத்தப்பட்டு இருந்த போதிலும், அவை தம் தரத்தாலும் தரவுகளாலும் குறையவில்லை எனும் கருத்தை நிறுவுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

தொடரும் ஆய்வுக் கட்டுரையை முனைவர் சுபாஷினி (ஜெர்மனி), 'தமிழர் கோயிற்கலை கட்டுமான அமைப்பில் குடைவரைக் கோயில்கள்', எனும் தலைப்பில் படைத்துள்ளார். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் குடைவரைக் கோ யில்கள் குறித்த செய்திகளை இக்கட்டுரை தாங்கியுள்ளது. தமிழ் நாட்டில் தொடர்ந்து நிகழ்ந்த அரசியல் போக்குகள் காரணமாக ஏற்பட்ட பண்பாடு, சமயம், கலை ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஒரு மதிப்பீடாகவும் காட்டும் இக்கட்டுரை மகேந்திரவர்மன், அழியும் தன்மையுடைய பொருள்களைத் தவிர்த்து புதிய வகையில் கோயில்கள் அமைக்கும் முயற்சியைத் தொடங்கியதாகச் சுட்டுகிறது. இறுதியாக இக்கோயில்களின் தற்போதைய பராமரிப்பற்ற நிலையைச் சுட்டி விழிப்புணர்வூட்டும் வகையில் இக்கட்டுரை நிறைவுறுகிறது.

'திருவிசைப்பாவில் இறைவன் திருநாமச்சிறப்பு: ஓர் ஆய்வு', எனும் முனைவர் ஆர். சீத்தா லெட்சுமியின் (மலேசியா) கட்டுரை இத்தொகுப்பில் அடுத்து அமைந்துள்ளது. திருவிசைப்பாவானது திருமாளிகைத் தேவர் தொட்டு சேதிராயர் உட்பட ஒன்பது

சிவனடியார்களால் படைக்கப்பட்டதாகும். இத்திருமுறையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிவபெருமானின் திருநாமங்களையும் விளிப்பெயர்களையும் கண்டறிந்து விளக்கியுள்ளார் ஆசிரியர். இத்திருநாமங்களாவன, சிவபெருமானின் பொது மற்றும் தடத்த நிலைகளை சுட்டுவனவாகவே உள்ளதாக இக்கட்டுரை முடிவுரைக்கிறது.

அடுத்து, 'பாண்டியன் பரிசில் படிமம்மொழிபெயர்ப்புச் சிக்கல்', எனும் உமா தேவியின் (மொரீசியசு) ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது. பாவேந்தர் பாரதிதாசன், அவர்தம் படைப்புகள் ஆகியவற்றைப் பின்புலமாகக் கூறி அவை ஆழ்ந்த அறிவுப்பூர்வமான படைப்புகளாக அமைந்திருப்பது இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 'பாண்டியன் பரிசு', வரலாற்றியல் முறையில் அமைந்த படைப்பாக ஆசிரியர் காண்கிறார். இப்படைப்பிலக்கியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை மதிப்பீடு செய்யும் வகையில் படிமம், அதன் உத்தி எவ்வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை ஆய்வுப்பூர்வமாக விளக்கப்படுத்துகிறது.

தொடர்ந்து, 'பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பாடநூல்கள் தரம் குறித்து படிப்பினை தரும் சென்ற நூற்றாண்டு நிகழ்வுகள்', எனும் தலைப்பிலான கட்டுரையை முனைவர் ஜோதி எஸ்.தேமொழி (அமெரிக்கா) படைத்துள்ளார். பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களின் 'தொல்காப்பியம்: சொல்லதிகாரம்', எனும் நூலினை அடிப்படையாகக் கொண்டு எழுந்த விவாதங்களை முன்னிருத்தி 'தமிழ்ப் பொழில்', ஆய்விதழில் பதிப்பிக்கப்பட்டக் கட்டுரைகளைத் தரவுகளாகக் கொண்டு எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரை இதுவாகும். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்ற இவ்விவாதங்களின் வழி பல்கலைக்கழகங்களில் தரம்மிகுந்த பாட புத்தகங்களை நிலைநிறுத்த வேண்டியதின் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளதாக இக்கட்டுரையாசிரியர் கருத்துரைக்கிறார்.

அடுத்து, 'நீதி இலக்கியம் சாற்றும் தலைமைத்துவப் பண்புகள்', எனும் கட்டுரையானது முனைவர் க.சில்லாழி (மலேசியா), எஸ்.நாராயணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் படைப்பாக அமைகின்றது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. நீதி இலக்கியங்கள் தனிமனித உயர்வுக்கு ஒழுக்கங்களை வழிவகுத்துத் தருவதன் வழி சமுதாய மேம்பாட்டுக்கும் வித்திடும் நிலை இக்கட்டுரையில் சுட்டப்படுகின்றது. மேற்கத்திய ஆய்வியல் துறையில் கூறப்படும் ஏழு தலைமைத்துவக் கூறிகளின் அடிப்படையில், தமிழில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் தலைமைத்துவம் இவ்விடம் உதாரணங்களுடன் நிறுவப்பட்டுள்ளது.

இறுதியாக, 'ஆலய வழிபாட்டில் மருத்துவம்: ஓர் அறிமுகம்' எனும் முனைவர் மணிமாறன் (மலேசியா), கோ.வி.சிவபாலன் (மலேசியா) ஆகியோரின் கட்டுரை இவ்வாய்விதழில் தொகுக்கப்பட்டுள்ளது. கோவில்களில் நடைபெறும் பூசைகள், விழாக்கள், சடங்குகள் போன்றவை சமய கிரியைகளாக மட்டுமல்லாது மனிதனின் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகை செய்வதாகவும் உள்ளன. கோவில் பிரசாதங்கள், அர்ச்சனை, அபிசேகம், இசை, சுற்றுச் சூழல் ஆகிய அனைத்திலுமே மருத்துவத் தன்மை நிறைந்து அவை மனிதனுக்குத் துணை செய்வதாக இக்கட்டுரை சுட்டுகிறது.

பல அறிஞர்களின் சிறந்த ஆய்வுகளைப் பதிவு செய்வதன் மூலம் 'தமிழ்ப் பேராய்வு', தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகிறது. பதிப்பாசிரியர் குழு இவ்வேளையில் இந்த ஆறாவது தமிழ்ப் பேராய்வு தொகுப்பின் வெளியீட்டிற்கு துணை புரிந்த கட்டுரையாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றது. இத்தொகுப்பின் பதிப்புச் செலவை மனமுவந்து ஏற்றுக் கொண்ட அல்மா ஹெர்பல் நேச்சர் நிறுவணத்தில் தோற்றுனரும் தலைமை நிர்வாகியுமாகிய திருமிகு விநிலி. வேலாயுதம் அவர்களின் தாராள மனதை இவ்விடம் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்.

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
**இணைப்பேராசிரியர் முனைவர் கி.ஸ்ரீனிவாசன்**
**முதன்மை ஆசிரியர்கள்**
**23.12.2017**

# தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் / Journal of Tamil Peraivu
## Vol 6, July 2017

பொருளடக்கம் / Contents பக்கம் / Page


1. நாகாஜீகப் பொருண்மையும் நீதி இலக்கியமும் காட்டும்சமுதாயம் ...............................10
.....
The Indication of Society in civilization and Moral literature பேராசிரியர் முனைவர் மு. இராசேந்திரன் / Professor Dr. M. Rajantheran, இணைப் பேராசிரியர் முனைவர் கி. சீனிவாசன் / Associate Professor Dr. K. Srinivasan – முனைவர் உமா தேவி நாயுடு அழகிரி / Dr. Umadevi Naidu Allaghery.

2. தமிழ் முரசு விவாதங்கள் ஓலீ; ஆய்வியல் கண்ணோட்டம்...............................20
The Debates in Tamil Murasu – an Analytical Perspective முனைவர் எம்.எஸ். ஸ்ரீ லக்ஷ்மி / Dr. M. S. Shri Lakshmi, Singapore

3. இந்திய சோதிட இலக்கியங்களும் சோதிடா;களும்...............................34
Indian Astrologers and Astrological Literature கோ.விஇ சிவபாலன் / G. Sivapalan – முனைவர் சு.மணிமாறன் / Dr. S. Manimaran

4. தமிழா; கோயிற்கலை கட்டுமான அமைப்பில் குடைவரைக் கோயில்கள்...............................44
Cave Temples in Tamil Temple Architecture முனைவர் க.சுபாஷினி / Dr. K. Subashini

5. திருவிசைப்பாவில் இறைவன் திருநாமச்சிறப்பு: ஓர; ஆய்வு...............................55
Divine Names of Lord civan in Tiruvicaippa முனைவர் இரா. சீதா லட்சுமி / Dr. R. Seeta Lechumi

6. "பாண்டியன் பாஜீ" சில் படிமம் மொழிபெயா;ப்புச் சிக்கல்...............................65
Impressionism in Bharathidasan's Pandian parisu and Problem in Translation முனைவர் உமாதேவி நாயுடு அழகிரி / Dr. Umadevi Naidu Allaghery.

7. பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பாடநூல்கள் தரம் குறித்து படிப்பினை தரும் சென்ற நூற்றாண்டு நிகழ்வுகள் ...............................71
The lesson learnt in the last century regarding the maintaining of Quality in Tamil Syllabus முனைவர் ஜோதி எஸ். தேமொழி / Dr. Jothi S. Themozhi

8. நீதி இலக்கியம் சாற்றும் தலைமைத்துவப் பண்புகள்...............................80
Leadership qualities depicted in Moral Literature முனைவர் க.சில்லாழி / Dr. K. Silllalee - சீ. நாராயணி / S. Narayanee

9. ஆலய வழிபாட்டில் மருத்துவம் : ஓலீ; அறிமுகம்...............................91
Medicine in Temple Worship : In Introduction முனைவர் சு.மணிமாறன் / Dr. S. Manimaran - கோ.வி. சிவபாலன் / G. Sivapalan

# நாகரிகப் பொருண்மையும் நீதி இலக்கியமும் காட்டும் சமுதாயம்

# The Indication of Society in Civilization and Moral Literature

பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் / Professor Dr. M. Rajantheran

இணைப்பேராசிரியர் முனைவர் ஸ்ரீனிவாசன் / Associate Professor Dr.Srivasan

முனைவர் உமா தேவி நாயுடு அழகிரி / Dr Umadevi Naidu Allaghery

***Abstract***

Since the theme of this paper is the Indication of society in mass civilization and moral literature, it is essential to probe into the words ‘Society’ and ‘Civilaization’. The height of culture is civilization and society is a group of people with an identity living in the same place permanently. The experts who stady civilization propose from main characteristics of civilization. They are the objective of reaching an aim, appreciative actions, moral values and an understanding of humanity. All these from characters are dealt with deeply in Thirukkural. And this becomes the focus of this paper.

**Key Words:** Civilization, Culture, Society, Tamil Ethical Literature, Thirukkural

## முன்னுரை

நீதி நூல்கள் தோன்றிய சங்கம் மருவிய காலத்தைப் பொதுவில் இருண்ட காலம் எனவும் குறிப்பிடுவர். தென்னகத்தில் தமிழ் மன்னர்தம் ஆட்சி வீழ்ச்சியுற்று கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் அயலார் ஆட்சி ஏற்பட்டது. இக்காலகட்டத்தில் சோழ நாடும் பாண்டிய நாடும் களப்பிரர் கீழும், நடு நாடும் தொண்டை நாடும் பல்லவர்பாலும் இருந்தன. தமிழ் ஆட்சி மொழியாக இல்லாமல் பிராகிரதமும் பாலியும் கோளோச்சின. இதனால் தமிழ் மொழி, கலை, நாகரீகம் முதலியவற்றின் மேம்பாடு நலிவுற்று அவை பிற மொழி பண்பாட்டுத் தாக்கத்திற்கும் ஆட்பட் டது. இதனால் இக்கால கட்டத்தை இருண்ட காலம் எனக் கொண்டனர் தமிழ் அறிஞர்கள் (பாலசுப்பிரமணியன், *1974*, p.*75*).

ஆயினும், தமிழ் இலக்கிய வளர்ச்சி யில் இக்காலகட்டத்தை முழுவதும் இருண்ட காலம் எனத் தள்ளிவிடுதல் பொருந்தாது. இந்தக் காலகட்டத்தில் தான் திருக்குறள்

The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajanmun@ um.edu.my / rajantheran@gmail.com

The author is a Associate Professor and Vice Principle in National College of Thiruchy, Tamil Nadu, India. ksriisin2011@yahoo.com

The author is a Lecturer in the Department of Tamil, Mahatma Gandhi Institute, Mauritious. u.allaghery@gmail.com

உட்பட தமிழ் நீதி இலக்கியங்கள் பதினெட்டும் தோன் றின என்பது வரலாறு. அவற்றுள் கார் நாற்பது (அகம்), திணைமொழி ஐம்பது (அகம்), திணைமாலை நூற்றைம்பது (அகம்), ஐந்திணை எழுபது (அகம்), ஐந்திணை ஐம்பது (அகம்), களவழி நாற்பது (புறம்), ஆகிய ஆறு நூல்களும் நீதி நூல்கள் வரிசையில் வைக்கப்பட்டிருந்தாலும் அவை சங்ககால பாடுபொருள் அமைப்பைச் சார்ந்தவையாக உள்ளன என்பது தெளிவு (வரதராசனார், 1992, p.80).

இந்நீதி இலக்கியங்கள் பொது வில் மனிதன் மனிதனாக வாழும் வழிவகைகளை முன்வைப்பனவாக இருக்கின்றன. தமிழரின் நாகரீகம் (Civilisation) குறித்துப் பேசுகின்ற யாராயினும் நீதி இலக்கியங்களைத் தவிர்த்துப் பேசுதல் குறையுடைய தாகிவிடும். இக்கட்டு ரையில் நாகரீகவியளாலர் காட்டும் உயர்ந்த சமுதாயப் பொருண்மையை நீதி இலக்கியங்கள் வழி விளக்கப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு முன்னதாக நாகரீகம், பண்பாடு, சமுதாயம் ஆகியவற்றின் பொருளை உள்வாங்கிக் கொள்வது பயனுடையதாக இருக்கும்.

## ஆய்வு முன்னோடிகள் (Literature Review)

நீதி நூல்களுக்கு பல அறிஞர்கள் உரை செய்துள்ளனர். அவற்றுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது 1957இல் வ.சுப.மாணி க்கனார் அவர்களின் 'பிற்கால நீதி நூல்கள்', எனும் விளக்கவுரை நூலாகும். இதில், ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, உலகநீதி ஆகியனவற்றிற்கு உரை எழுதியுள் ளார். இது பல பதிப்பு களைக் கண்டுள்ளது. 1991இல் மணிவாசகர் பதிப்பகம் இந்நூலை மறுபதிப்பு செய்துள்ளது. இவ்வுரையானது ஓர் ஆய்வு உரையாகவே அமையப் பெற்றுள்ளது. இவ்வாய்வுப் போக்கா னது நீதி இலக்கியங்களின் உட்கிடக் கைகளை வெளிப்படுத்திக் காட்டவல்ல தாக உள் ளது. எனவே நீதி இலக்கியத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் பொழுது வ.சுப.மாணிக் கனாரின் மேற் சொன்ன நூல் கட்டாயம் பார்க்கப்பட வேண்டிய நூல் என்பதால் அது குறித்து இவ்வாய் விலும் குறிப்பிடாமல் இரு க்க இயல வில்லை.

'திருக்குறள் புதைபொருள்', எனும் கி.ஆ.பெ.விஸ்வநாதம் அவர்க ளின் நூல் நீதி இலக்கியங் களுள் திருக்குறளை ஆழ்ந்து அனுபவிப்ப தற்கு வழிவ குக்கும் ஓர் அரிய நூலாகும். இது, ஒரு சிறிய நூல் என்ற போதிலும் அதன் கருத்து வெல்லும் தன்மையதாக அமைந்துள்ளது. திருக் குறள் மீது கொள்ளும் காதலை வலு கொள்ளச் செய்ய வல்லது. இந்நூலைப் படித்த எவரும் திருக்குறளை ஆழ்ந்து நோக்கும் மனத்தைப் பெறுவர் என்பது திண்ணம். அவ்வகையில் நாகரீகப் பொருண்மையும் நீதி இலக்கியமும் காட்டும் சமுதாயம் எனும் இக்கட்டுரை கூட இந்நூல் தந்த அறிவால் வந்தது என்று கூடச் சொல்லலாம்.

அடுத்து, 'வேலா நினைவு வரிசை', எனும் தலைப்பில் திருக்குறளின் பல்வேறு கருத்துகளை சிறு சிறு நூல்களாக வெளியிட் டிருக்கும் மதுரை இளங்குமரனார் அவர்களின் படைப்புகள் முக்கியம் பெறுகின்றன. இந்தப் படைப்புகள் திருக்குறளின் உன்னத கருத்துகளை குறிப்பிட்ட தலைப்புகளில் ஆழ்ந்து ஆய்ந்து முன் வைக்கும் வகையி னதாக அமைகின்றது. இதிலே நல்ல சான்றோராக, நல்ல ஆட்சியராக போன்ற சிறு தலைப்பைக் கொண்ட நூல்கள் இக்கட்டுரையில் உள்ளடக் கத்திற்கு வலு சேர்ப்பதாக அமைந்தது.

நீதி இலக்கியங்கள் தவிர்த்து, நாகரீகம் குறித்த ஆய்வு முன்னோடிகள் என்று பார்க்கும் போது இவற்றுள் 'A History of Civilization' (1987 மறுபதிப்பு 1993) எனும் Fernand Braudel எனும் அறிஞரின் நூலைக் குறிப்பிட வேண்டும். இவரது நூலில் நாகரிகம் குறித்த மிக நிறைவான குறிப்புகள் வெளிப்படுகின்றன. இவரது நூல் நாகரிகத்தின் பொருண்மை, வரலாறு, அவற்றின் கூறுகள், நாகரிக சமு யாய த்தின் அடையளாங்கள், அதன் வள ர்ச்சி, அதன் அளவை போன்ற பல்வேறு கூறுகளை விரிவாக விளக்குவதாக அமைந்துள்ளது. இதில் உலக நாகரிகங்கள் பலவற்றையும்

ஆராய்ச்சி அறிமுகம் செய்யும் போக்கு காணப்படுகின்றது.

அடுத்து இத்துறையில் கவனிக் கப்பட வேண்டிய பிரிதொரு நூல் 'Ancient Civilizations', எனும் தலைப்பிலான Brian வி. Fagan, Chris Scarre ஆகியோரின் படைப்பாகும். இந்நூல் உலகத் தொல் நாகரீக வரலாற்றை ஆழ்ந்த நோக்கில் வரை யகீத்து உரிய ஆதாரங்களுடன் விள க்கப் படுத்துவதாக உள்ளது. இந் நூலை ஆழ்ந்து நோக்கும் பொழுது, தொல் நாகரிக வரலாறு தவிர நாகரிகத்தின் உட்கூறுகளும் விளங்கப் பெறுகிறது.

இதற்கு மாறாக, நாகரிகத்தி ற்கும் தனிமனிதனுக்கும் ஏற்படும் அழுத்தங்களை விளக்கும் வகையில் அமைந்துள்ள Sigmund Freud என்பாரின் 'Civilization and Its Discontents' எனும் நூல் இக்கட்டு ரையை வடிவமைப்பதற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது எனலாம். நாகரிகம் என்பது சமுதாய நன்மை கருதி மனிதனுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இது சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுகிறது. மறுபுரத்தில் தனிமனிதன் தன்னுடைய சுதந்திரத்தை முதன்மைப்படுத்த நினைக்கும் பொழுது நாகரிகக் கட்டமைப்புக்கும் தனி மனித எண்ணங்களுக்கும் பொறுத்தம் சரிவர அமைவதில்லை. இதன் காரணமாக நாகரிகம் தீங்கு விளைவிக்கும் தனி மனித செயல்பாட்டுக்கும் அவர் தம் சுதந்திரப் போக்கும் கட்டுப்பாடுகளை முன்வைக்க வேண்டியதாகிறது. இந்நிலையில் நாகரிகம் என்பது ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலன் காக்கும் கேடையமாகக் காட்டப்படுகின்றது. இக்கட்டுரையும் சமுதாய நலன் காக்கும் நீதி இலக்கியங்களின் பார்வையில் நாகரி கக் கூறுகளை முன்வைப்பதாக அமைவதால் மேற்சொன்ன நூலின் கருத்துகளை உள்வாக்கிக் கொள்வது அவசியமாகிறது.

பண்பாடு குறித்துப் பார்க்கும் போது, அ.தட்சிணாமூர்த்தியின் 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்', எனும் நூல் முக்கியத்துவம் பெறுகின்றது. இவரது நூல் தமிழர்களின் பண்பாட்டுக் கூறு களை இலக்கியம், வரலாறு, கல்வெட்டு எனப் பல்வேறு ஆதாரக் குறிப்புகளின் துணையுடன் வரையறு த்து விவரிப்பதாக உள்ளது. இந்நூல் தமிழர் நாகரிகம் குறித்து சிந்திக்கும், ஆய்வு செய்யும் எவருக்கும் நல்லதொரு தமிழர் பண்பாட்டுச் சட்டகத்தைக் கொடுப் பதாக அமையும். எனவே பண்பாடு குறித்த ஆய்வுகளில் தவிர்க்க இயலாத பிரிதொரு நூலாக இதனைக் கொள்ளலாம்.

ஒட்டுமொத்தத்தில் நிறைய எழுத்துகள் நீதிநூல்கள், நாகரிகம், தமிழர் நாகரிகம் ஆகியவற்றைத் தொட்டு வெளிவந்திருந்த போதும் மேற்குறிப்பிட்டுள்ள நூல்கள் இந்த பொருண்மைகளை உள்வாங்கிக் கொள்வதற்குப் பெரும் பயனாக இருக்கும். ஆய்வுலகில் மேலும் பல அரிய நூல்கள் இருந்த போதும் சுறுக்கம் கருதி அவை தவிர்க்கப் பட்டுள்ளன. முதன்மை நூல்களாகவும், கட்டாயம் படிக்க வேண்டிய ஒரு சில தொடர்புடைய நூல்கள் மட்டுமே இவ்விடம் ஆய்வு முன்னோடிகளாக முன் வைக்கப் பட்டுள்ளன.

## ஆய்வு நெறி / Methodology

நீதி இலக்கியங்களில் நாகரிகக் கூறுகளின் வெளிப்பாடுகளை ஆய் ந்துள்ள இக்கட்டுரை தரப்பகு ப்பாய்வு (qualitative) நெறியின் அடிப்படையில் ஆய்வு செய்யப் பட்டுள்ளது. பொதுவில் இலக்கியங் களில் வெளிப்படும் நாகரிக, சமூகவியல் கூறுகளை ஆய்வு செய்வதற்கு தரப்பகுப்பாய்வு நெறியே உற்ற நெறியாக விளங்குகிறது (Creswell, 2003, ஜீ.182). தரப்பகுப்பாய்வு நெறியின் மூலம் ஓர் இலக்கியதில் பொதிந்துள்ள உட் பொருளை கண்டறிவது இயலும் (Merrian, 2009, ஜீ.2). அதே வேளையில் இலக்கிய ங்களின் உட் பொருளை விளக்குவதற்கு தரப்பகுப்பு நெறியுடன் தொடர்புடைய Hermanutic எனப்படும் விளக்கமுறை ஆய்வு நெறி இலக்கியங்களை ஆய்வு செய்வதற்கு ஏற்புடைய நெறியாகக் காணப் படுகின்றது (Melissa Freeman, 2008, p.338). விளக்க முறை ஆய்வு நெறியின் அடிப்படையில் ஓர் ஆய் வானது நான்கு படிநிலைகளில் மேற் கொள்ளப்படுகின்றது. அவையாவன:

## அட்டவணை 1: ஆய்வின் நான்கு படிநிலைகள்

| எண் | ஆய்வு நெறி படிநிலைகள் | விளக்கம் |
|---|---|---|
| 1 | அடையாளம் காணுதல் - ஆவணப்படுத்துதல் | இதன் அடிப்படையில் முதலில் தற்போதை ஆய்வுக்கு முதன்மையாக விளங்கும் நீதி இலக்கியங்களும், நாகரீகப் பொருண்மைகளும் அடையாளம் காணப்பட்டு அவை முறையாக ஆவணப்படுத்தப்படும். |
| 2 | ஆராய்தல் - பகுத்தல் | இரண்டாம் நிலையில் ஆவணப்படுத்தப்பட்ட நீதி இலக்கியத் தரவுகள் யாவும் அதன் தன்மைகளைப் பொருத்து ஆராயப்பட்டு அதன் பின்னர் அவை நாகரிகம் முன்வைக்கும் நான்கு அடிப்படைக் கூறுகளின் கீழ் பகுத்து வைக்கப்படும். |
| 3 | உட்பொருளாய்வு - விளக்கமளிப்பு | மூன்றாவது நிலையில் பகுக்கப்பட்ட தரவுகள் யாவும் உட்பொருளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுப் பின்னர் அவை யாவும் விளக்கப்படுத்தப்படும். |
| 4 | ஒருங்கிணைத்தல் - முடிவுரை | இறுதியாக இந்த ஆய்வில் வெளிக்கொணரப்பட்ட கண்டுபிடிப்புகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டு அவை முடிவுரையாக தொகுக்கப்படும். |

### நாகரீகமும் பண்பாடும்

நாகரீகம் எனப்படுவது ‘நகர்’‘இகம்’, எனும் பொருளில் பேசப்படும் பொழுது அது நகர்ப்புறம் வாழும் மக்களின் மேம்பட்ட வாழ்க்கையையும் கட்டீடக்கலை வளர்ச்சியையும் முன்னி கீத்துவதாக உள்ளது. தொல்லியல் அறிஞர்கள் கட்டட நிர்மாணிப்பு இல்லாத எந்த ஒரு தொல்லியல் ஆய்வுக் கண்டுபிடிப்பு களையும் நாகரீக வளர்ச்சியைக் காட்டுவனவாக ஏற்பதில்லை. இந்த அடிப்படையில் பார்த்தால் நகர் புறத்தைத் தவிர்ழ்;துப் பிற இடங்களில் வாழ்வோர் நாகரீகம் அற்றோர் என ஆகிவிடும். இக்கருத்து நிச்சயமாக பிழைபட்டுப் போகும். ஆகவே, தற்போதைய கட்டுரையானது பண் பா ட்டின் முதிர்ந்த கூறுகளையே நாகரீகம் எனக் கொள்கிறது.

மக்களால் பொதுவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இயற்கைச் சூழல், இனம், மொழி, எனும் தனித்துவ அடையாளத்தில் உருவாகும் பொரு ளியல் மற்றும் அருளியல் வாழ்க்கை முறையே பண்பாடு எனப்படுகிறது. இது மாற்றமும் மேம்பாடும் அடையும் தன்மையை உடையது. இவ்வளர்ச் சியானது நீண்ட கால பண்பாட்டு மேம்பாட்டின் பதிவில் நிலை பெறுவ தாகும். எனவே நாகரீகம் எனப்ப டுவது ஒரு பண் பாட்டின் முதிர்ச்சி யைக் குறிப்பதாகும் (Rajantheran, 2012, p.1).

இவ்வாறு உருவாக்கம் காணும் கூறுகள் யாவும் மனிதனின் உயர்ந்த சிந்தனை வளர்ச்சியாலும் திறமை யாலும் அடையப் பெறுகின்ற அகப் புற வளர்ச்சி எனவும் கூறலாம் (Stephen Blaha, 2002, p.14). நாகரீகம் அடையப்பெற்ற ஒரு சமுதாயமானது இலக்கை அடையும் நோக்கு, போற்றத்தக்க செயல்கள், நன்நெறிக் கூறுகள், மனிதர்களிடையே புரிந்துணர்வு மிக்க தொடர்பு ஆகிய நான்கு வாழ்வியல் ஆதாரச் சிந்த னைகளுக்கு முக்கியத்துவம் அளித் திருக்க வேண்டும் (Rajantheran, 2012, p.1).

### சமுதாயம்

சமுதாயம் எனப்படுவது தனி மனிதனில் இருந்து தோன்றி ஒரு மக்கள் தொகுதியாக விரிவடைகிறது. இதில் இனம், மக்கள்

தொகுதி, சமயப் பிரிவுகள், கொள்கைப் பிரிவுகள், சமுதாய உட்கட்டமைப்புப் பிரிவுகள் எனப் பல கூறுகளை உள்ளடக்கிய மனிதக் கூட்டத்தின் ஒட்டு மொத்த சேர்க்கையே சமுதாயம் எனப்ப டுகிறது. இச்சேர்க்கையானது தனி மனிதனின் செயல்பாடுகளையும் அடை யாளங்களையும் பெருவாரியாக வடிவ மைக்கின்றது (Berry,1974,27 & p.36). மேலும், சமுதாயம் எனப்படுவது மக்கள் தொகுதியை மட்டும் குறிப்பிடாமல் அம்மக்கள் கூட்டத்தி பீரிடையே உள்ள தொடர் புகளையும் தனித்துவ அடையாளங் களையும் குறிப்பதாகப் பொருள் கொள்ளப் படுகிறது (Durkheim, 1964, p.102). ஒரு சமுதாயம் எனப்படும் போது அதில் உள்ள மக்களிடையே ஒரே மாதிரியான அடையாளங்கள், ஒருமை ப்பாடு, சகோதரத்துவம், ஒருமித்த இலக்கு ஆகிய கூறுகள் விளங்கும் என்பது பெறப்படும் (Ting Chew Peh, 1979, p.55).

## இலக்கை அடையும் நோக்கு

தமிழர் மரபில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டிய இலக்காக வைக்கப் பட்டுள்ளது. இவற்றுள் அறமே முதலிடத்தில் வைத்து எண்ணத் தக்கது. அறத்தின் அடிப்படையில்தான் மற்ற பண்புகள் வளர்ந்து வளம் பெற்று பயன் தந்து நிறைவுறும் (Mahadevan, 1984, pp.190-200). அந்த அடிப்படையில் அறவழியில் வருவதுதான் பொருளாகிய இரண் டாவது அடைவாக வைக்கப்படுகிறது. அறவழி மீறிய பொருளைப் பொருளாகக் கொள்வது தமிழர் மரபு அல்ல (Rajantheran, 2012, p.80). அறவழிச் செல்வம் மட்டுமே நன்மை யைத் தரும். அதனால்தான் மூன்றா வது இலக்காகிய இன்பத்தை அறவழி வரும் பொருளாலும் முறைவழி வரும் வாழ்க்கைத் துணையாலும் அமைய வேண்டும் என்பர். தீய வழி வரும் செல்வம் கவர்ச்சி மிக்கதாய்க் காணப் படினும் அதன் மறுபுறம் மனிதனை இருளுக்கு இட்டுச் செல்லும் பாவம் பொதிந்தே வருவதை உணர்ந்தே தமிழர்கள் அறவழிச் செல்வத்தை மட்டுமே அங்கீகரித்தனர் (Rajakrishn- an & Rajantheran, 1994, pp.263-264). திருவள்ளுவரும் அறவழிச் செல்வத்தைத்தான் வலியுறுத்திப் பேசு கின்றார்.

*‘அருளொடும் அன்பொடும் வாராப்*
*பொருளாக்கம்புல்லார் புரள விடல்’*

*(குறள்: 755)*

மேற்காணும் குறள் வழி அறம் மீறி வந்த செல்வத்தைத் தீமையெனக் கருதி அதனை முற்றாக நீக்கிவிட வேண்டும் எனும் பொருளில் வருவது கவனிக்கத்தக்கது. இது அரசருக்குச் சொல்லப்பட்டிருந்த போதும் ஒவ் வொரு தனி மனிதனுக்கும் பொருந்தும். ‘அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி’ அல்லவா. மாறாக அற வழியில் வரும் செல்வத்தை,

*‘அறன்ஈனும் இன்பமும் ஈனும்*
*திறனறிந்து தீதின்றி வந்த பொருள்*

*(குறள்: 754)*

என வள்ளுவப் பெருந்தகை, பொருளைச் சேர்க்கும் வகையை அறிந்து தீமையற்ற வகையில் சேர்க்கப்படும் செல்வமானது ஒருவ னுக்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும் என்கிறார். அடுத்த நிலையில்

*‘ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு*
*எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு’*

*(குறள்: 760)*

எனும் குறள் வழி செல்வத்தை மிகுதியாக ஈட்ட வேண்டுவதன் தேவையையும் முன்வைக்கிறார் திருவள்ளுவர். இவ்விடத்தே அறம் என்பது தனித்து நிற்காமல் செயல் படுபவனைச் சார்ந்தே இருக் கிறது என்றும், அவ்வறத்தைச் சார்ந்தே செயல்படுபவனும் நன் மைகளைப் பெறுகிறான் என்ப தனையும் கருத்தாக வைக்கிறார் என்பதை உணர்தல் வேண்டும்.

முடிவாக நாகரீகவியளாலர்கள் இலக்கை அடையும் நோக்கு பற்றி மட்டுமே பேசுகிறார்கள். ஆனால் தமிழ் நீதி இலக்கியங்களோ, இந்த இலக்கை அடையும் நோக்கை மட்டும் நிர்ணயித்ததோடு மட்டுமல்லாமல் அதனை அடையும் முயற்சியானது உலக மக்கள் யாருக்கும் தீது செய்கின்ற ஒன்றாக அமையக் கூடாது

எனும் உலகலாவிய உயர்ந்த கருத்தையும் முன்வைக்கிறது என்பது மேற்சொன்ன நாகரீகக் கோட்பாட்டை வலுப்படுத்தி கருத்தால் விஞ்சி நிற்கும் தமிழர்தம் சிந்தனையைக் காட்டுகிறது.

இப்படியொரு வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்பவனுக்கு அல்லாமல் வேறு யாருக்கு வீடு பேறாகிய பேரின்பத்தைத் தரப்போகிறார் என்பதன் வழி அறமே அருளுக்கும் முக்திக்கும் வழித்தடமாக வித்தாக அமைந்திருக்கிறது என்பதும் எளிதில் பெறப்படும் செய்தியாகும். இதனால் தான் முப்பாலில் நாப்பாலை மொழிந் தோன் எனத் திருவள்ளு வரைப் போற்றும் மரபும் தமிழரிடத்தே தோன்றியுள்ளது போலும்.

## போற்றத்தக்க செயல்கள்

நாகரீகவியளாலர் பார்வையில் போற்ற த்தக்க செயல்கள் எனப்படுபவை பொதுவில் அனை வருக்கும் நன்மை பயக்கக் கூடியதான சிறந்த செயல்களாக இருத்தல் வேண்டும் என்கின்றனர் (Rajantheran, 2012, p.1). அந்த வகையில் திருவள்ளுவர் ஒருவர் பெறக்கூடிய பேறுகளில் மிகச் சிறந்ததாக அறிவார்ந்த நன்மக் களைப் பெறுவதையே சுட்டுகிறார் (குறள்: 61). அப்படிப் பெறப்படும் பிள்ளைகள் பழி பாவங்களுக்கு அஞ்சி நடக்கின்ற நெஞ்சுரம் கொண்ட வர்களாக இருக்க வேண்டும் என்றும் உரைக்கின்றார் (குறள்: 62). எனவே திருவள்ளுவரைப் பொகீத்த வரையில் ஒரு சமுதாயத்திற்கு முதலில் தேவைப்படுவது அறிவறிந்த, பழிபிறங்காப் பண்புடை மக்களே என்பது தெரிகிறது. இது ஏனெனில் இவ்வகை மக்களே போற்றத்தக்க செயல்களின் பிறப்பிடமாக இருப்பர் என்பதை உணர முடிகின்றது. இதுவே மனித வளம், ஆள் பலம் என்பதாகத் தமிழர் மரபு கொள்கிறது. இதற்கு மாறானவர்களை மனித வளத்தின் ஒரு பகுதியாகவோ, ஆள் பலமாகவோ கொள்ள தமிழர் நாகரீகம் இடம் கொடுப்பதாக இல்லை.

இத்தகைய உயர் மனிதப் பிறப்பைத்தான் ஔவை ‘அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது’ என்றும், திருமூலர் ‘ஊனுடம்பு ஆலயம்’ என்றும் குறிப்பிட்டனர் என்பதாகப் பொருள் கொள்ள இடமுண்டு. காரணம் வள்ளுவப் பெருந்தகையே திருடர்கள் உருவத்தால் மனிதர்க ளாயினும் அவர்களை மனிதர்கள் என ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே மனிதர்களாக இருப்பதற்கு மனித உருவம் மட்டும் போதாது, அவர்க ளுக்கு மூளை வளமும் நெஞ்ச வளமும் சேர்ந்திருக்க வேண்டும் என்பது இவ்விடம் பெறப்படும். ‘நாடா கொன்றோ’ எனத் துவங்கும் சங்கப் பாடல் கூட (புறநானூறு: 187) போற்றத்தக்க செயல்களையுடைய குடிமக்களால்தான் ஒரு நாடு சிறப்பு பெறும் எனும் கருத்தை முன் வைப்பது இவ்விடத்தில் சிந்திக் கத்தக்கது (Rajantheran & Silllalee, 2015, p.11).

அறிவறிந்த மக்களுக்கு நெஞ்ச வளமும் வேண்டும் என்பது கூறப்பட்டது. இந்நெஞ்ச வளமானது ஊக்கத்தின் வலிமையால் மேம்படுகிறது (குறள்: 595). மேலும், இந்த ஊக்கம் மிக்க மக்கள் மனதில்தான் உயர்வான எண்ணங் களும் அப்படி எண்ணியவற்றை அடையும் திறனும் இருக்கும் என்றும் வள்ளுவர் உரைக்கின்றார் (குறள்: 596). அப்படியே எடுத்த முயற்சி கைகூடாமல் போனாலும் உயர்ந்த எண்ணத்தைக் கைவிடல் கூடாது என்பதைத் திருவள்ளுவர்,

*‘உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்*
*மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து’*

*(குறள்: 596)*

எனும் குறளின் வழி முன்வைக்கிறார். ஏனென்றால் உயர்ந்த எண்ணம்தான் சிறந்த செயல்பாடுகளுக்குப் பிறப்பிடம் என்பது வள்ளுவனின் கருத்து. இதனை மேலும் வலியுறுத்தும் வண்ணம் இந்த உயர் எண்ணங்களை உள்ள ஊக்கம்தான் தக்க வைத்துக் கொள்ள சரியான கருவியாகவும் அவர் காண்கிறார் (குறள்: 600).

எனவே வள்ளுவர் காட்டும் சமுதாயமானது, வெறும் போற்றத்தக்க செயல்களின் அடிப்படையில் மட்டுமல்லாமல் பிறருக்குத் தீமை/ துன்பம் விளைவிக்காத ஒரு செயலாகவும் இருக்க வேண்டுவதாகக் கூறப்படுகின்றது. ஏனென்றால் ஒரு செயலானது நம்மளவில் நன்மை பயக்கக் கூடியதாயினும் உலக

மக்களுக்கு அது பயனுடையதாக இருக்கிறதா என்பதனையும் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு வெறும் மூளை வளம் மட்டுமே போதாது, மாறாக நெஞ்ச வளமும் வேண்டும் என்பது தமிழ் நீதிநூல்களின் செய்தியாக உள்ளது. இக்கருத்தானது நகரீகவியளாலர் கூறும் 'போற்றத்தக்க செயல்கள்' என்பதற்கு ஓர் உலகலாவிய ஒழுக்கமாகவும் இலக்கணமாகவும் அமைந்திருக்கின்றது.

## நன்நெறிக் கூறுகள்

நாகரீகம் அடைந்த சமுதாயம் நன்நெறிக் கூறுகளுக்கு முக்கியத்துவம் அளித்திருக்க வேண்டும் என்பது நாகரீகவியளாலர்களின் பிரிதொரு கருத்தாகும் (Rajantheran, 2012, p.1). தமிழில் தொல்காப்பியம் தொட்டு நீதிநூல் தொடர்ந்து பின் வளர்ந்த இலக்கியங்கள் யாவுமே நன்நெறிப் பண்புகளை முன்வைப்பனவாகவே உள்ளன என்பதைத் தமிழறிந்தோர் உணர்வர். ஆயினும் இந்தக் கட்டுரையின் தேவைக்காக நீதி இலக்கியங்களின் சில நன்நெறிக் கூறுகளை மட்டும் சமுதாயப் பார்வையில் இவ்விடம் காணலாம்.

அடிப்படையில் சமுதாயத்தின் மிகச் சிறிய கட்டமைப்பாக குடும்பத்தைக் காண்பர். குடும்பத்துள் தனி மனிதரும் சேர்த்து விடுவர். எனவே திருவள்ளுவர் காட்டும் சமுதாயம் குடும்பத்திலிருந்தே தொடங்குகிறது எனலாம். இந்தக் குடும்பத்தின் பயன் நன்மக்களைப் பெறுதலே. வீட்டுக்கு விளங்காத பிள்ளை நாட்டுக்கு விளங்காது என்பது முதுமொழி. எனவே பிள்ளைகளை அறம் சார்ந்து வளர்க்க வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு உண்டு (Manimaran & Rajantheran, 2006, p.113).

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்'

(குறள்: 67)

எனும் குறள், தந்தையானவர் (இன்றைய நிலையில் பெற்றோர்கள் எனக் கொள்வதே பொருந்தும்) தன் பிள்ளைக்கு அறத்தையும் அறிவையும் பெறும் வாய்ப்புகளையெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்து அதன் விளைவாக அப்பிள்ளை அறிஞர் கூடும் அவையில் முன்னிற்கும் தகுதியை அடையும் படி செய்தல் வேண்டும் என்பதாக பொருளுரைக்கின்றது. அறமும் அறிவும் கொண்ட பிள்ளைகளிடம் இயற்கை யாகவே பிறருக்குத் துன்பம் விளைவி ப்பதையும் இயற்கைக்கு மாறாக நடப்பதையும் பிழை/பாவம் என உணரும் தன்மை நிறைந்திருக்கும். அஃதோடல்லாமல் பிழை/பாவச் செயல்கள் நிகழாமல் இருப்பதற்குரிய வழிவகைகளையும் சிந்திக்கக் கூடியவர் களாகவும் இருப்பர். இந்நன்மக்களால் சமுதாயம் சிறப்புறும். நன்நெறிப் பண்புகள் அவர்தம் வாழ்வில் ஒளிவிடும்.

இவ்வாறான நன்மக்களைத்தான் கண்டு தாயும் பெரிது உவப்பாள் என திருவள்ளுவர் சாற்றுகிறார் (குறள்: 69). இந்தப் பிள்ளைகள் தங்கள் பொறுப்புகளையும் முழுமையாக உணர்ந்தவர்களாக இருக்கக் கூடிய வாய்ப்புகள். இப்பொறுப்புகளுள் போற்றத்தக்க ஒன்று, தம் பெற்றோர் களைப் பேணிக் காக்கும் நன்நெறிப் பண்பாகும். இந்த நன்நெறிப் பண்பை முன்வைக்கும் வகையில்தான் திருவள்ளுவரும்,

'மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி
இவன்தந்தைஎன்நோற்றான்கொல்எனும்
சொல்'

(குறள்: 70)

எனும் குறளை இயற்றியுள்ளார்.

இன்றைய நிலையில் பொது வாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை முழுவதும் நம்பி வாழக்கூடாது என்றும் தங்களைத் தாங்களே அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஒரு சிந்தனையைப் பலரும் பேசக் கேட்டிருக்கிறோம். இந்தச் சிந்தனைக் குப் பின்னால் பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்யும் துரோகத் தைக் கூடச் சமாதானம் கூறுகின்ற நாகரீகமாக அப்பிள்ளைகளின் நலன் கருதிப் பெற்றோர்கள் மன்னிக்கும் போக்கைக் காண்கிறோம். ஆயினும் செய்நன்றி மறந்தார்க்கு உய்வில்லை என்பது வள்ளுவன் வாக்கு. ஈன்றாள் பசி காண்பது கொடுமை. அந்த நிலையில் கூடப் பழிச் செயல்களைச் செய்யக் கூடாது என்று

வள்ளுவம் வலியுறுத்துகிறது.

நாகரீகவியளாலர்கள் எவரும் மானமிழந்து உயிரோடு வாழக் கூடது எனும் கருத்தை முன் வைத்ததாகத் தெரியவில்லை. தமிழர் மரபு மட்டும் பாவத்தைச் செய்து மானமிழந்து வாழ்வதைவிட இறத்தலே மேல் எனும் கருத்துடையராக உள்ளனர். இதன் அடிப்படையில் நன்நெறிக் கூறுகளை உயிராக மதிக்கும் தமிழர் தம் மேன்மை பெறப்படும்.

## மனிதர்களிடையே புரிந்துணர்வு மிக்க தொடர்பு

மனிதர்களிடையே புரிந்துணர்வு மிக்க தொடர்பு என்பது நாகரீக மக்களிடைய இருக்க வேண்டிய மற்றுமொரு அடிப்படைக் கூறாக நாகரீகவியளாலர்கள் முன்வைக்கின்ற னர் (Rajantheran, 2012, p.1). ஆனால் தமிழர்தம் நீதி இலக்கி யங்களோ மனிதர்கள் மட்டும ன்றி எல்லா உயிர்களிடத்தும் புரிந்துணர்வு மிக்க தொடர்பானது இருத்தல் வேண்டும் எனும் மேம்பட்ட சிந்தனையை முன்வைக்கின்றது. புலால் மறுத்தல் எனும் அதிகாரம் இதற்குத் தக்க சான்றாக விளங்குகிறது. இவ் வதிகாரத்தில்,

*“அருளல்ல தியாதெனிற் கொல்லாமை*
*கோறல் பொருளல்ல தவ்வூன் தினல்”*

*(குறள்: 254)*

எனும் குறளின் வழி கொல்லாமையை அருளுடைமையாகவும் உயிர்க்கொ லையை அருளற்ற செயலாகவும் குறிப்பிடுகிறார் வள்ளுவர். எனவே உயிர்க்கொலைக்கு முதன்மைக் காரணமாக விளங்கும் புலால் உண்ணும் பழக்கத்தைத் தவிர்த்தலே அறமாகும் என்கிறார். இந்த அறத்தை கைகொள்ளத் தவறியவருக்கு அருள் என்பது அமையாது என்பதாகவும் கூறுகிறார் (குறள்: 251). இதன் அடிப்படையில் மனிதரிடையே மட்டு மல்லாமல் உலக உயிர்கள் அனைத் திடமும் ஒரு நல்ல அறம் சார்ந்த தொடர்பை வளர்த்தால்தான் வாழ்வு சிறக்கும். இதுவே உயர்ந்த நாகரீகம் என்பது வள்ளுவத்தின் கருத்தாக உள்ளது.

அந்த வகையில் அன்பு என்பது அனைத்தையும் விஞ்சி மனித மனங்களில் அருளை விதைக்க வல்லது. அனைத்து உயிர்களையும் போற்றுகின்ற பெரிய பண்பை மனிதருக்குள் அன்பு விதைத்து விடும். ஆறறிவு படைத்த மனித இனமே உலகை ஆக்கவும் அழிக்கவும் வகை செய்யும் என்பதால் அன்பின் வழி நின்று அருளைப் போற்றி உலக வாழ்வில் எல்லா உயிர்களிடத்தும் தயை கொண்டு நல்ல தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்பது வள்ளுவரின் முன்மொழிவாக இருப் பது தெரிகிறது.

*“அன்பின் வழியது உயிர்நிலை*
*அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த*
*உடம்பு”*

*(குறள்: 80)*

இதன் வழி அன்பில்லாதவருக்கு உயிரே இல்லை என்பதாகவே வள்ளுவர் அறுதியிட்டுக் கூறுகின்றார். இந்த அன்பு வழியில் நின்றவர்கள் வையத்தில் சிறப்பென்று சொல்லப் படுகின்ற உயர் இன்பத்தை பெறுவார் கள் என்பதையும் வள்ளுவர் முன்னி ருத்துகின்றார் (குறள்: 75).

“அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை
இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்”

*(குறள்:243)*

அந்த இன்பத்தையும் தாண்டி அருளுடையவர்கள் ஒருபோதும் நரகம் சேர மாட்டார்கள் என்பதாகவும் மேற்காணும் குறளின் வழி திருவள்ளுவர் உறுதியளிக்கின்றார்.

ஒரு சமுதாயத்தில் புரிந்து ணர்வு மிக்க தொடர்பானது இருக்க வேண்டும் என்பர். திருவள்ளுவரோ அந்தத் தொடர்புகூட எப்படிப்பட்ட மனிதர்களோடு அமைந்தார் உலகுக்கு நன்மை பயக்கும் எனும் உயரிய செய்தியை

*“அரியவற்று ளெல்லாம் அரிதே*
*பெரியாரைப்பேணித் தமராக் கொளல்”*

*(குறள்:443)*

எனும் குறள் வழி விளக்குகிறார். பெரிழிணீலீரைப் போற்றி அவரைத் தமக்கு உறவாகக் கொள்ளும் தொடர்பு

உருவாக்கத்தை செய்யக் கூடிய அரிய காரியங்களுள் அரியதாக அடையாளப் படுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை. 'செயற்கரிய செய்வர் பெரியர்' (குறள்: 26) என்பார் வள்ளுவர். அதனினும் பெரிதாக அந்தப் பெரியாரோடு கொள்ளும் மனிதத் தொடர்பை முன்னிருத்தி உலக நாகரீகவியளாலர்களின் சிந்தனையை விஞ்சி நிற்கும் வள்ளுவரின் திறம் உலகத் தமிழர் அனைவரும் அறிந்து போற்றுதற்குரியதாகும்.

## முடிவுரை

பொதுவில், நாகரிகம் என்பது ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலன் காக்கும் கேறீயமாகக் கருதப்படுகி ன்றது. இலக்கியம் என்பதுவோ சமுதாய உலக அனுபவத்தின் பதிவாக உள்ளது. இவ்வகையில் இலக்கியம் ஓர் இனத்தின் நாகரிகப் பதிவு என்பது தவறாகாது. அவ்வகையில் தமிழ் இலக்கியங்களைப் பற்றி எழுதுகையில் சொலோபில் காமில் என்பவர் தமிழர் இலக்கியங்கள் குறிப்பாக சங்க இலக்கியம் போன்றவை உலக இலக்கியங்களுள் ஒத்த நிலையில் அல்லது அதிலும் சற்று மேம்பட்ட நிலையில் இருப்பதாகவும், ஆனால் தமிழர்கள் தங்கள் இலக்கியங்களை உலக அரங்கிலே பதிவு செய்து பலரும் அறிந்து போற்றும் வழி வகைகளைச் செய்வதில் பின்தங்கி இருக்கிறார்கள் என்பதாகக் கருத்து ரைப்பார். நீதி இலக்கியங்களை, அதுவும் திருக்குறளை மட்டும் கொண்டு நாகரீகக் கூறுகளை விளக்கப்படுத்தும் முயற்சியில் மேற் சொன்ன கருத்து உண்மைதான் என்பதாகத் தெரிகிறது. நாகரீக வியளாலர்கள் முன்வைக்கும் இலக்கை அடையும் நோக்கு, போற்றத்தக்க செயல்கள், நன்நெறிக் கூறுகள், மனிதர்களிடையே புரிந்து ணர்வு மிக்க தொடர்பு ஆகிய நான்கு கூறுகள் உலகலாவிய எண்ணத்தையும் அறத்தையும் அதன் விளைவையும் முன்வைத்துப் பேசப்ப டுவதாக இல்லை. அவர்கள் ஒவ்வொரு சமுதாயத்திற்குரிய உயர்வைப் பேசுகி ன்ற வகையில்தான் அந்த நான்கு கூறு களை முன்வைக்கிறார்கள். ஆனால் தமிழ் நீதி இலக்கியமோ ஒரு தனித்த சமுதாயத்தைக் கொண்டு உலக சமுதாய நாகரீகத்திற்கு அடி த்தளம் இட்டு அதற்கான வழிவகை களையும் தெளிவுறுத்துவதாக உள்ளது.

## References


Balasubramanian, S. (1974). *Tamil Ilakiya Varalaru*. Chennai: Pari Nilayam.

Berry, David. (1974). *Central Ideas In Sociology: An Introduction*. London: Constable.

Brian M. Fagan, Chris Scarre. (2016). *Ancient Civilizations*. United Kingdom: Routledge.

Creswell W., John. (2003). *Research Design Qualitative, Quantitative And Mixed Methods Approaches*. (2nd Edition). London: Sage Publication, Inc.

Fernand Braudel. (1993). *A History of Civilization*. Penguin Books.

Ilangkumaran, Ira. (1991). *Vela Ninaivu Varisai-Valluvar Vazhiyil Nalla Sandroraga*. Erode: Kuralayam Publication.

Ilangkumaran, Ira. (1991). *Vela Ninaivu Varisai-Valluvar Vazhiyil Nalla Adchiyaraga*. Erode: Kuralayam Publication.

Mahadevan, T.,M.,P. (1984). *Outlines of Hinduism*. 4th Edition. Bombay: Chetana Pvt. Ltd.

Manikanar, Va.,Suba. (1991). *Pirtkala Niithi Nuulgal*. Chennai: Manivasagar Publications.

Manimaran Subramaniam & Rajantheran, M. (2006). ‘Indian Malaysian: Origin, Classification, Kinship and Religious Beliefs’, *Journal Of Indian Studies*, (Vol. 9, pp. 110-116). Kuala Lumpur: Penerbitan Universiti Malaya. ISSN:1675-171X.

Melissa Freeman. (2008). Hermaneutics. In M., Given Lisa (Ed.), *The Sage Encyclopedia of Qualitative Research Methods*. (Vol. 1, pp. 385-388). London: Sage Publication, Inc.

Merrian, B., Sharan. (2009). *Qualitative Research A Guide To Design And Implementation*. San Francisco: A Wiley Imprint.

Rajakrishnan, R & Rajantheran, M. (1994). *Pengantar Tamadun India*. Kuala Lumpur: Fajar Bakti Sdn.Bhd.

Rajantheran. (2012). *An Introduction to Hinduism*. Selangor: Malaysia Hindu Sangam.

Sigmund Freud. (1994). *Civilization and Its Discontents*. USA: Courier Dover Publications.

Silllalee, K. (2015). “Sangath Tamilarin Manam Katha Veeram”, *Journal of Tamil Peraivu*. (Vol. 1, pp.7-15). ISSN 2289-8379.

Stephen Blaha. (2002). *The Life Cycle of Civilizations*. USA, Auburn: Pingree-Hill Publishing. *Thirukkural*.

Ting Chew Peh. (1979). *Konsep Asas Sosialogi*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Varatharasan, Mu. (1992). *Tamil Ilakiya Varalaru*. New Delhi: Sahitya Akademi.

Visvanatham,Ki.,A,.,Pe. (1970). *Thirukkural Puthaiporul*. Chennai: Pari Nilayam.

# தமிழ் முரசு விவாதங்கள் ஓர் ஆய்வியல் கண்ணோட்டம்

# The Debates in Tamil Murasu-an Analytical Perspective

முனைவர் எம்.எஸ். ஸ்ரீ லஷ்மி,சிங்கப்பூர் / Dr M S Shri Lakshmi, Singapore

***Abstract***

This research paper discusses three literary arguments which were published in Tamil Murasu between 1951-52 and 1991. Among these three arguments two of them were about short stories. Legend Puthumaipithan and his writings and the short sory written by N.Varadharsan of Kapalabatas, Malaysia became a subject matter for these arguments. These arguments not only depict the writing skills, argumentative skills and also the literary knowledge of the participants. As a result of these arguments many constructive initiatives were taken to develop the local literature.

**Key Words:** Short Stories, Tamil Murasu Daily, Literture Debate, Pudhumaipitham, Research in Singapore.

## முன்னுரை:

மனிதர்கள் தாம் பெற்ற அறிவு வளர்ச்சியின் காரணமாகத் தம் வாழ்வில் பல்வேறு நோக்கங்களுக்காக விவாதங்கள் புரிவதும் பல்வேறு துறைகளிலும் சர்ச்சைகளை எழுப்பி அவற்றில் ஈடுபடுவதும் பெருவழ க்காக இருந்துவந்துள்ளது. இவ்வாறு மனிதர்களிடையே எழுந்த சர்ச்சைகள் அவர்களோடு தொடர்புடைய இலக்கியத்துறையிலும் நிகழ்ந்தன."எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருளா " எனக் காணவிழையும் விமரிசன அறிவு வேண்டப்படும் இலக்கிய உலகில் பொதுவாகச் சர்ச்சைகள் எழுவது இயல்பு என்பதை இலக்கிய வரலாற்றின் வழி அறிகிறோம். எழுத்தாளர் ஜெயமோகனின் முகநூலில் ஏராளமான செய்திகள் இவ்விலக்கிய சர்ச்சைகள் குறித்து எழுதப்பட்டுள்ளன.

இலக்கியத்துறையில் இந்தச் சர்ச்சைகள் இலக்கியப் பூசல்களாக இலக்கிய யுத்தங்களாக இலக்கியச் சமர்களாக இலக்கிய விவாதங்களாக அவ்வப்போது நடைபெற்று வந்துள்ளன. அவை காலத்துக்கேற்ற வண்ணம் நிகழ்ந்துள்ளன. அச்சு ஊடக வளர்ச்சிக்காலத்தில் இவற்றைப் பத்திரிகைககள் (சிறுபத்திரிகைகள் உட்பட) முன்னெடுத்துள்ளதை அறிகி றோம்.

The author is an Associate Lecturer in Singapore University of Social Sciences, Singapore.
Visaka_2004@yahoo.com

சுதேசமித்திரன் இதழ்களைத் தொகுத்து வெளியிட்ட வல்லிக் கண்ணன் தம் முன்னுரையில் "சுதேசமித்திரன் பத்திரிக்கை இலக்கிய சர்ச்சைகளையும் கருத்துப் பரிமாற் றங்களையும் ஆரோக்கியமான விமர்சனரீதியில் வளர்த்து வந்துள்ளது. மொழிபெயர்ப்புகளையும் நாடகங்களையும் வெளியிட்டுத் தமிழ்ப்பணி புரிந்தது. வளர்ந்து புகழேணி மேலே சென்றுகொண்டிருந்த எழுத்தாளர்கள், தங்கள் திறமையால் எழுத்துத்துறையில் முன்னேறி வாசகர் களின் கவனத்தைப் பெற்றுக் கொண்டிருந்த எழுத்தாளர்கள், புதிதாக எழுதத்தொடங்கி வளர்ச்சிப் பாதையில் ஊக்கத்தோடு அடிபதித்தவர்கள் இப்படிப் பலதரத்துப் படைப்பாளர்களின் வகைவகையான எழுத்துக்களை வெளியிட்டது" என்று (வல்லிக் கண்ணன், 2004) வல்லிக்கண்ணன் குறிப்பிடுகிறார். சுதேசமித்திரனின் தமிழ் வளர்ச்சிப் பணிகளைக் குறிப்பிட் டுள்ள வல்லிக்கண்ணனின் கருத்திலி ருந்து ஒரு பத்திரிகை எவ்வாறு செயல்படவேண்டும் என்பதையும் அறியமுடிகிறது. இந்த வகையில் சிங்கப்பூரின் தமிழ் வளர்ச்சிப் பணியில் தமிழ்முரசின் பங்கினை நாம் குறைத்து மதிப்பிட்டுவிடமுடியாது.

தமிழ் புழங்கும் நாடுகளில் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் இலக்கிய சர்ச்சைகள் நடந்துள்ளன என்பதைத் தமிழ்நேசன், தமிழ்முரசு ஆகிய நாளிதழ்களின் வழி அறிகிறோம். சிங்கப்பூரில் தமிழ் முரசின் வழி நிகழ்ந்த இலக்கிய சர்ச்சைகள் குறிப்பிடத்தக்க பயன்களை விளைவித்துள்ளன. அன்றைய மலாயாவில் நிகழ்ந்த புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சை , 'யார் குற்றம்' என்னும் கதை பற்றிய இலக்கிய சர்ச்சை, சிங்கப்பூர் சுதந்திர நாடாகி இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்தும் புதுக்கவிதை, மரபுக்கவிதைகுறித்து நிகழ்ந்த கருத்து மோதல்கள் ஆகிய மூன்றும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வேரும் விழுதுமாகி உள்ளன என்னும் கருதுகோளின் அடிப்படையில் இந்த மூன்றினைப் பற்றிய ஆய்வுக் கண்ணோட்டத்தை இக்கட்டுரை முன்வைக்கிறது.

## புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சை பிறந்த சூழல்

தமிழக எழுத்தாளர்களின் எழுத்துக் களை 1950களில் தமிழ்முரசு மறுபதிப்புச் செய்து கொண்டிருந்தது. "இந்நாட்டில் எழுத்தாளர்களை உருவாக்கமுடியாது" (இராமையா, 1978) என்று தமிழ்முரசு கொண்டிருந்த அவநம்பிக்கையும், உள்ளூர்ப்படை ப்புக்களுக்கு ஆதரவு கொடுத்து வெளியிடாத பத்திரி கைச்சூழலும் இக்கால கட்டத்தில் நிலவியது. இத்தகைய சூழலில்தான் புதுமைப்பி த்தன் இலக்கியசர்ச்சை அறிமு கமானது. மேலும் சிங்கப்பூரின் தமிழ்ச் சிறுகதை வரலாறு குறித்து எழுதிய நா. கோவிந்தசாமி குறிப்பிடும் ஏழு காலகட்டங்களில் இன எழுச்சிக் காலமும் (1950 1960) ஒன்று. இக்கால கட்டத்தில் புதுமைப்பித்தனின் நடை ச்சித்திரமான 'திருக்குறள் குமரேச ம் பிள்ளையை' வெளியி ட்டதைத் தவிரப் புதுமைப்பித்தனின் சிறுகதை களைத் தமிழ்முரசு வெளியிட் டதில்லை என்பதையும் இவண் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இருப்பினும் அன்றைய மலாயாவில் புதுமைப் பித்தனைத் தேடித்தேடிப் படித்த எழுத்தாளர்கள் இருந்தார்கள் என்ப தும் அறியக்கிடைக்கின்றது. சிறுகதை ப்பித்தன் என்னும் நக்கம்பாடி கரீம் (பினாங்கில் புத்தகக்கடை வைத்திருந்தார்), தமிழ்நாடு புத்த கக்கடை வைத்திருந்த (கிள்ளாங் ரோடு) நடராசன் ஆகியோர் மூலமாகவும் புதுமைப்பித்தன் கதை கள் படிக்கக் கிடைத்தன. ஆகவே அன்றைய காலகட்டத்தில் எழுத் தாளர்களும் வாசகர்களும் புதுமை ப்பித்தன்பற்றி அறிந்திருந்ததால் சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தேடிப்படிக்கும் ஆர்வப்பெருக்கு, உற்சா கம் முதலியவை கனிந்திருந்தன என்று கூறுவதில் தவறு இருக்க முடியாது. இச்சூழலில்தான் புதுமைப் பித்தன் இலக்கிய சர்ச்சை உருவாவதற்கேற்ற களமும் தமிழ் முரசின் வழியாக 1950களில் உருவாக்கித் தரப்பட்டது.

தமிழ்முரசின் துணையாசிரி யராகத் திரு. வை. திருநாவுக்கரசு பொறுப் பேற்ற பிறகு அந்த நாளிதழில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழகப் படை ப்புக்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப் படவேண்டும் என்னும் கோ. சாரங்க பாணி அவர்களின் விடாப்பி டியான கொள்கை வை. திருநாவுக் கரசுவின் முயற்சிகளால் தளர்ந்தது. உள்ளூர்ப்படைப்புக்கள் அதிகரிக்கவும், உள்ளூர் எழுத்தாளர்கள் பெருகவும், வாசகர்களின் எண்ணிக்கை கூடுவத ற்கும் 1951 இல் வை. திருநாவுக்கரசு பல புது முயற்சிகளை மேற்கொண்டது புதுமைப்பித்தன் பற்றிய இலக்கிய சர்ச்சைக்கு ஆதரவான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது.

10.07.1951 அன்று வெளிவந்த தமிழ்முரசு சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டத்தினைப் பற்றியும், மறைந்த புதுமைப்பித்தனின் குடும்பத்திற்கு நிதி திரட்டுவது அதன் நோக்கமாக இருந்ததுபற்றியும் தகவல் களை வெளி யிட்டது. மேலும் முன் னாள் மராமத்து அமைச்சர் பக்த வச்சலம் அவர்களின் பாராட்டுரை, மற்றப் பிரமுகர்களின் புகழுரை, பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் வாழ்த்துச்செய்தி எனப்பல அங்கங்கள் அவ்வெளியீட்டில் இடம்பெற்றன. 12.07.1951 அன்று வெளிவந்த தமிழ் முரசு இலங்கையில் நடைபெற்ற புதுமைப்பித்தன் நினைவுநாள் கூட்டம் பற்றியும் அங்கு நிதிதிரட்ட அமைக் கப்பட்ட கூட்டம் பற்றியும் செய்தி வெளி யிட்டது.

02.09.1951 அன்று பூந்தோட்டம் என்னும் பகுதியில் தும்பி என்னும் புனைபெயரில் வை.திருநாவுக்கரசு எழுத்தாளனைச் சூழ்ந்திருக்கும் வறுமைபற்றி எழுதியதோடு மட்டு மின்றிப் புதுமைப்பித்தனின் கவிதை ஒன்றினை மேற்கோள் காட்டியுள்ளார். எழுத்தாளன் இறந்த பின்னர் அவன் பெயரால் நிதி திரட்டுவதை விரும்பாத புதுமைப்பி த்தனுக்கே நிதி திரட்டி உதவ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதையும் குறிப்பிடுகிறார். தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் வறுமை யில் வாடுவதற்காக வருந்தும் தும்பியின் மென்மையான உள்ளம் இக்கட்டு ரையில் புலப்படு கின்றது.மேலும் இக்கட்டுரை புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சைக்கும் மறைந்த அன்னாரின் குடும்பத்திற்கு நிதிதிரட்டும் பெரு நோக்கிற்கும் அடித்தளம் அமைத்தது.

## சர்ச்சையும் சமூகப்பின்னணியும்

புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சை கால்கொள்வதற்கு முன்பி ருந்த சமூகச்சூழலும் அச்சர்ச்சை உருவாக ஒரு காரணமாக இருந் திருக்கலாம் என்பதைச் சமூகவியல் கண்ணோட் டத்தின் அடிப்படையில் கூறமுடியும். மக்களைச் சூழ்ந்திருந்த வறுமை, அதன் காரணமாகப் பிழைப்பு நாடித் தமிழகத்தைவிட்டு மலாயாவுக்கு வந்தமை, அவ்வாறு வந்தவர்களுள் ளும் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாயும் பெண்களின் எண்ணிக்கை குறைவாயும் இருந்தமை ஆகிய வற்றால் ஒழுக்கக் கேடுகளுக்குக் குறை வில்லை. வயிற்றைக் கழுவுவதற்காக ஒரு பெண் பல் ஆண்களுடன் உறவு கொண்டது, திருமணமான பின்னரும் ஒரு பெண் தன் கணவன் கண்டும் காணாமல் இருக்கப் பல ஆண்களுடன் உறவுகொள்ள வேண்டிய அவல நிலை யும் நிலவியது. ரப்பர்த்தோட்டங்கள், தொழிலாளர் குடியிருப்புகள் போன்ற வற்றில் இந்தநிலைமை விளங்கியது என்பதை வரலாறு அறிந்தோர் மறக்கமாட்டார்கள். வறுமை பல ஒழுக்கக்கேடுகளுக்கும் மூலவித்தாக இருந்த சூழலே இருந்தது. இந்த உண்மைநிலை உள்ளூர் எழுத்தாளர் களின் படைப்புக்களில் பிரதிபலித்தது. இதற்குச் சான்றாக பி.கிருஷ்ணனின் “பரோபகாரி” என்னும் கதையைக் கூறமுடியும். ந.பழநிவேலுவின் கதை களில் சீர்திருத்தம் பேசப்பட்டதற்கும் ஒழுக்கக்குறைபாடுகள் நிறைந்த சூழ லே காரணம் என்பதை மறுக்கமுடியாது.

## புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சை யின் கரு

புதுமைப்பித்தனின் மேதைமை வெளிப்படும் கதைகள் பல உள்ளன. ‘செல்லம்மாள்’, ‘சாபவிமோசனம்’, ‘சிற்பியின் நகரம்’, ‘கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்’,

'மனக்குகை ஓவியங்கள்' எனச் சில கதைகளைச் சான்று காட்டலாம். புதுமைப்பித்தனின் அனைத்துப் படைப்புக்களையும் அவர் தம்முடைய சமகாலப் படைப்புக் களிலிருந்து வேறுபடும் இடங் களையும் ஒப்பிட்டு நடுவுநிலைமை தவறாமல் ஆராய்வோர் புதுமைப் பித்தனின் மேதைமையைச் சந்தேகிக் கமாட்டார்கள் என்பதற்குக் க. நா. சுப்பிரமணியன் 'புதுமைப்பித்தன் என்றொரு மேதை" என்ற கட்டுரை சான்றாகத் திகழ்கிறது. புதுமைப்பி த்தனின் தீவிர வாசகர் என்ற நிலையில் புதுமைப்பித்தன் நினைவு மலரை உருவாக்கிய சுந்தரராமசாமி ஒரு படைப்பாளி என்ற முறையில் அவரது கதைகளை மேதைமை வெளிப்படும் கதைகள், முக்கியமான கதைகள், சிகர்சாதனை க்கதைகள் ,உருவம் கைகூடாக் கதைகள் என்றெல்லாம் வகைப்படுத்தியுள்ளார் (புதுமைப்பித் தன் கதைகள் முழுத்தொகுப்பு முன்னுரை, 2002).

மற்றவர் புதுமைப்பித்தனை மேதை என்று சொல்வதால் மட்டும் புதுமைப்பித்தனை மேதை என்று ஒருவர் ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் அவர் படைப்புக்களைப்பற்றிய ஆழ்ந்த வாசிப்பு, அவர் எழுதிய காலகட்டமும் அதன் தேவை, சமகாலப் படைப்பா ளிகளிடமிருந்து அவர் வேறுபடும் முக்கியக்கூறுகள், அவருடைய உள்ள டக்கங்கள், மொழிநடை, உத்தி முறைகள் ,அவருடைய விமர்சன வீச்சு எனப் பல அளவுகோல்களைக் கொண்டு அவருடைய கதைகளை மதிப்பிடுவோர் அவரைச் சிறுகதைத் துறையின் தந்தை எனவும் இலக்கியமேதை எனவும் தயங்காமல் ஒப்புக்கொள்வர்.

தமிழகத்தில் புதுமைப்பித்தனை மேதையாகக் கொண்டாட மலாயாவில் என்ன நிகழ்ந்தது? வீ.க.சபாபதி "இலக்கிய மேதை யார்?" என்ற கட்டுரையை எழுதித் தமிழ்முரசில் வெளியிடும்போது புதுமைப்பித்தனின் மேதைமை காட்டும் படைப்புக்களை விடுத்துப் பாலியல் சார்ந்த உள்ளடக்கம் கொண்ட 'விபரீத ஆசை' என்னும் சாதாரணக் கதையை ஏன் கருத்தில் கொண்டார்? என்று சிந்திக்க வேண்டும். அக்காலகட்டத்தில் நிலவிய ஒழுக்கக்கேடு மிகுந்த சமூகச்சூழல் என்பதைக் காரணமாகக் கூற முடியும். இக்கதையை ஆபாசமில்லை என்று சாதித்தவர்க ளைகூடச் சபாபதி ஒழுக்கத்தரா சிலிட்டு எடைபோடுகிறார். புதுமைப்பி த்தன் வாழ்ந்த காலகட்டத்தில் பாலியல் பிரச்னைகளைக் கதைக்கரு வாகக் கொள்வது அதிர்ச்சி தந்த விஷயமாகும். புதுமைப்பித்தன் பற்றிய சர்ச்சை எழுந்த காலகட்டத்தில் 'விபரீத ஆசை' என்னும் கதை மலாயாவில் மரபு மீறலாகவே கருதப்பட்டது என்பது சபாபதி போன்றோரின் கட்டுரைகளிலிருந்து தெரியவருகிறது.

புதுமைப்பித்தன்பற்றிய செய்தி களை வெளியிட்ட தமிழ்முரசு, சுயவிருப்பத்தின் பேரில் புதுமைப் பித்தனின் நூல்களைப்படித்த வாசகத்தளம் ஆகியவற்றின் பின்னணி யில்தான் வீ.க.சபாபதி 'விபரீத ஆசை' கதையை மனத்தில்கொண்டு தம் கட்டுரையை எழுதினார். இக்கட்டு ரையும் 30.09.1951 அன்று தமிழ் முரசில் பிரசுரமானது. இக்கட்டு ரையின் கீழ் "எழுத்தாளர் சிந்தனை யைக் கிளறிவிடும் இக்கட்டுரை படித்தற்குரியது; விவாதிக்கத்தக்கது." என்ற குறிப்பையும் தமிழ்முரசு வெளியிட்டிருந்தது. இக்குறிப்பின் மூலம் இலக்கிய சர்ச்சை கருக்கொண்டதையும், திரு.வை. திருநாவுக்கரசு அவர்களே இலக்கிய சர்ச்சையை விரும்பி அதற்குரிய தோற்றுவாயையும் அஸ்திவாரமிட் டிருக்கிறார் என்பது தேற்றம். பின்னர் இந்த இலக்கியப்பூசல் சூடுபிடிக்கத் தொடங்கியது.

## சர்ச்சையின் முக்கியத்துவம்

மலாயாவின் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த இலக்கிய சர்ச்சை தமிழ்முரசு நாளிதழில் வெளிவந்த முதல் இலக்கிய சர்ச்சையாகும். ஆகவே சிங்கப்பூரின் முதல் இலக்கிய சர்ச் சையாகவும் கூறப்படுகிறது. இவ் விலக்கிய சர்ச்சையைத் தொடர்ந்து பல சர்ச்சைகள் எழுந்தன. புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சை பற்றி முதன்முதலில் பதிவுசெய்த பெருமை அமரர் நா.கோவிந்தசாமிக்கு உண்டு.

'சிங்கப்பூரில் சிறுகதை வளர்ச்சி' என்னும் தம் கட்டுரையில் இவ்விவாதம்பற்றிக் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.

"விபரீத ஆசை என்ற சிறுகதையை எழுதிய புதுமைப்பி த்தன் சிறுகதை மேதையா? என்ற விவாதம் 30.09.51ல் தமிழ்முரசில் தொடங்கப்பட்டது.விவாதம் ஏழு மாத ங்கள் நீடித்தது. சிருகதி என்ற கலைவடிவம் தொடர்பாகவும் ,புதுமிப்பித்தன் சிறுகதைகள், செய்த சோதனைகள் ,சாதனைகள் தொடர்பாகவும் பல நுட்பமான இலக்கிய விவரங்கள் தொடர்பாகவும் காரசாரமாக விவாதிக்கப்பட்டன. தமிழகத் திறனாய்வாளர் தி.க.சிவசங்கரன் புதுமைப்பித்தனைப் பற்றி எழுதிய ஒரு கட்டுரை தமிழ்முரசில் மறுபதிப்பாக வெளியி டப்பட்டது." (கோவிந்தசாமி ,1990)

கோவிந்தசாமி இலக்கியச்சர்ச் சையின் தலைப்பைச் சற்று மாற்றியும் இலக்கிய சர்ச்சை நிகழ்ந்த காலகட்டத்தைச் சற்றே குறைத்தும் கூறியிருந்தாலும் இதன் முக்கியத்துவம் அறிந்து பதிவு செய்ததில் மூலவராயும் முதல் வராயும் திகழ்கிறார். மேலும் சிங்கப்பூரின் தமிழ்ச்சிறுகதை வரலாறு குறித்த கருத்தரங்குகளில் கட்டுரை படைத்தோர் இவ்விலக்கிய சர்ச் சையின் முக்கியத்துவம் அறிந்தி ருக்கவில்லை. .இராம கண்ணபிரான் தொடக்கத்தில் (1980) எழுதிய கட்டுரையில் இதனைக் கோடி காட்டுகிறார். ஆயின் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக அமைந்த 'சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு ஓர் அறிமுகம் (2011)' என்னும் நூலில் ஏறத்தாழ இரண்டு பக்கங்களுக்கு இவ்விவாதத்தினைப் பற்றி எழுது கிறார். முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி அவர்கள் எழுதிய 'புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சை (51522006) என்னும் நூலை முழுவதும் அடியொற்றியே தழுவியே தம் கட்டுரையினை எழுதியுள்ளார். இவ்விவாதத்தின் முடிவில் இந்த நூலைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

## சர்ச்சையின் நோக்கும் போக்கும்

வீ.க.சபாபதிக்கு இலக்கியச்சர்ச் சையை உருவாக்கவேண்டும் என்ற உள்நோக்கம் எதுவும் இல்லை. சென்னை எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் புதுமைப்பித்தனின் மேதைமையைப் பாராட்டியது அவருக்கு மகிழ்ச்சி தரவில்லை. அவரைப் பொறுத்தமட்டில் புதுமை ப்பித்தனை மேதையாகக் கருத முடியவில்லை. அதற்கு அவர் தரும் காரங்களும் வேடிக்கையானவை. " நிதி திரட்டவேண்டும் என்ற காரணத்திற் காகவோ , புதுமைப்பித்தன் இறந்து விட்டார் என்ற காரணத்திற் காகவோ அவரை இலக்கிய மேதை என்பதையும், அன்னாரின் நினைவு நாள் கொண்டாடுவதையும் மறுக்கிறேன் (வீ.க.சபாபதி, 30.09.51, தமிழ்முரசு) என எழுதியுள்ளார். மேலும் அவர் மனத்தில் அறிஞர் களாக, மேதைகளாகப் புகழப்படும் தகுதி கொண்டோர் பட்டியலே இருந்திருக்கிறது. அப்பட்டியலில் திரு.வி.க., மு.வரதராசன், யோகி சுத்தானந்த பாரதியார் ஆகியோர் இருந்திருக்கின்றனர். மேலும் சபாபதி புதுமைப்பித்தனை மேதை என ஒத்துக்கொள்ளாததற்குக் காரணமாக மற்றொரு கருத்தையும் அவர் கூறுகிறார்." புதுமைப்பித்தன் சமுதாயத்தைத் தவறான வழியில் பயன்படுத்தும் கீழான நோக்கம் கொண்டவர்" ( வீ.க.சபாபதி , 30.09.51, தமிழ்முரசு ) .தனது கருத்தை வலியுறுத்தி முல்லையின் ஒன்பதா வது இதழில் பதினேழாம் பக்கத்தில் வெளியிடப்பட்ட 'விபரீத ஆசை' என்ற கதையை ஆதாரமாகக் காட்டியுள்ளார். முப்பத்தெட்டுத் தமிழக எழுத்தாளர் கள் கொண்ட பட்டியலை முன்வைத்து அவர்களிடம் இக்கதையை எழுதியவர் இலக்கிய அறிஞரா? மேதையா? எனக் கேட்கிறார். தமிழக எழுத்தாளர்களில் எவ்வித பேதமும் இன்றிப் புதுமைப்பித்தனின் சமகாலத்தவர் களையும், அவருக்குப் பிறகு தோன்றிய எழுத்தாளர்களையும் பட்டியலிடுகிறார்.இதன் வாயிலாக அவர் குறிப்பிட்ட எழுத்தாளர்களின் மீது அபிமானமும் நல்ல அபிப்பிராயமும் இருந்திருக்கிறது.

அன்பர் சபாபதி தமிழக இலக்கியச்சூழலில் நாட்டம் காட்டி யவர் என்பதும், அங்கு நடைபெற்ற விவாதங்களையும் நன்கு அறிந்தவர் என்பதும் அவர் கடிதத்தின்

வழி நன்கு புலனாகின்றன. "யாத்ரா மார்க்கம்" என்ற தலைப்பின் கீழ் பாரதி மகாகவியா? வரகவியா? என்பது பற்றி நடந்த விவாதத்தினைச் சான்றுகாட்டிப் பாரதியாரையே விவாதப்பொருளாக்கி அவரது மேதைமையைச் சர்ச்சிக்கு ள்ளக்கும்போது புதுமைப்பித்தன் எந்த மூளை? என்றும் கேட்கிறார். புதுமைப்பித்தனை மேதை அல்லர் என்று கூற நினைத்தாலும் சபாபதி பாரதியையும் பாரதிதாசனை யும் ஒப்பிட்டுப் பார்க்கத் தூண்டியு ள்ளார். விவாதத்தின் விதிமுறைகளை சபாபதி நிர்ணயித்து விட்டாலும் அவர் ஒப்பீட்டுச் சிந்தனைக்கு வழிவகு க்கிறார். இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த படைப்பாளிகள் என்னும் அடிப்படையில் தமிழ்க்கவிதை உல கில் புதிய மாற்றத்தை உருவாக்கிய பாரதியையும், தமிழ் வசன நடையில் புதுமைகள் புரிந்த புதுமைப் பித்தனையும் ஒப்பிட்டு ஆய்வுசெய்யத் தூண்டியுள்ளார் சபாபதி.

ஒழுக்கமும் அறமுமே இலக் கியம் வலியுறுத்தவேண்டிய அடிப்படைப் பண்புகள் என்று சபாபதி கருதியதால் 'விபரீத ஆசை; ஒழுக்கக் கேடான கதை என்பதும், புதுமை பித்தன் ஒழுக்கக்கேட்டை வளர்க்கும் கொள்கை உடையவர் என்பதும் அவரது முடிந்த முடிபாக அமை கின்றன. மேலும் புதுமைப்பி த்தனை மேதை என்று போற்று வோரையும் ஒழுக்க அளவுகோலைக் கொண்டே சந்தேகிக்க முயன்றுள்ளதும் தெளி வாகிறது.

புதுமைப்பித்தனை விமர்சனம் செய்யும் சபாபதி தொ.மு.சி.ரகுநாதன் கூறுவது போன்று விஷமத்தனத்தைக் கையாள்கிறார். "புதுமைப்பித்தன் செகாவைக் காப்பியடித்துத் தோற்று விட்டார் (வீ.க.சபாபதி, 30.09.51, தமிழ்முரசு) என்பது என் கருத்து என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளார். ஆனால் அவர் செகாவின் எந்தக் கதையைக் காப்பியடித்தார் என்று சான்று காட்டவில்லை. ஆதார மில்லாத குற்றச்சாட்டை எப்படி ஏற்றுக்கொள்ள இயலும்? தொ.மு. சி.ரகுநாதன் குறிப்பிடுவோரின் கருத்து க்களை மனத்துட்கொண்டே சபாபதி செகாவின் கதைகளைக் காப்பியடித்து எழுதியதாகத் தவறான கருதுகோளை முன்வைத்திருக்கவேண்டும். சபாபதி தரும் பட்டியலில் உள்ள எழுத் தா ள ர்களில் புதுமைப்பித்தனின் சமகாலத் தவர்களை மனத்துட்கொண்டு சபாபதி இம்முடிவுக்கு வந்திருக்கலாமோ என்று ஐயப்பட வேண்டியுள்ளது.

இலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றிப் புதுமைப்பித்தன் 1942 இல் கூறியவற்றைக் கவனத்தில் கொள்ளாத சபாபதி புதுமைப்பித்தன் மீதும், அவர்தம் படைப்புக்கள் மீதும் ஒழுக்கக்கேடு என்னும் முத்திரை குத்தியுள்ளார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழியைத் தன் கண்டனக் குரலுக்குச் சாதகமாக்கிக்கொண்டு புதுமைப்பித்தனின் படைப்பாளு மையைச் சந்தேகித்துள்ளார்.

"சென்ற சில நூற்றாண்டுகளாக புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அதாரண அலௌகீக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித்திறமை என்று தீர்மானம் செய்து கொண்டார்கள் (அன்னை இட்ட தீ ,1998) என்று புதுமைப்பித்தன் கூறியுள்ளது போன்று முன்னோர்கள் காட்டிய வழியைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு இலக்கியப் புதுமை யாளர்களை வரவேற்க மனமின்றிக் குறை கூறுகின்றனர். சபாபதியின் குற்றச்சாட்டுக்கு அவருடைய பத்தாம் பசலி மனப்போக்கும் 'புதுமைப்பித்தன் கூறிய சீலைப்பேன் வாழ்வில் ஊறிப் போனதுமே ' காரணமாகும்.

புதுமைப்பித்தன் மீதுபொறா மை கொண்டோ எந்தக் கட்சியின் சார்பிலுமோ அவரை மேதையல்லர் என்று எழுதியதாகக கருதவேண்டாம் என வேண்டுகோள் விடுத்துத் தனது நோக்கம் உயர்ந்ததா ?தாழ்ந்ததா என அறிய விரும்பு வதாகவும் தனது கட்டுரையின் எதிரொலிகள் மூலம் அதை அறிய விரும்புவதாகவும் கட்டுரையை முடித்துள்ளார். புதுமைப்பித்தனின் மேதைமையை மட்டும் சந்தேகிக் காமல் அவர்தம் இலக்கிய உணர் வையுமே சந்தேகக்கண்கொண்டு பார்த்துள்ளார்

சபாபதி. தனது கருத்துக்கணிப்பு எப்படிப்பட்டது எனத் தெரிந்து கொள்ளும் ஆவலும் அவருக்கு இருந்திருக்கிறது.

சபாபதியின் கட்டுரைக்குக் குறிப்புரை எழுதி வெளியிட்டு இலக்கிய சர்ச்சைக்கு அடித்தளமிட்ட வை.திருநாவுக்கரசு தமிழக இலக்கியச் சூழலையும், அங்கு நடைபெற்ற விவாதங்களையும் நன்கு அறிந்தவர். உள்நாட்டு எழுத்தா ளர்களைப் பெருக்கி, வாசகர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் நாளிதழின் துணை ஆசிரியர் என்ற முறையில் விவாதத்தை முடுக்கிவிட்டார். எரிந்தகட்சி, எரியாதகட்சி என இரு குழுக்களாக வளர்ந்த.

## புதுமைப்பித்தன் மேதையே ஆதரித்தோர்

புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சையில் அவர் மேதையே என ஆதரித்து இருபத்தேழு பேர் கட்டுரை எழுதியுள்ளனர். “சிந்தனை செய்திடுக” என்னும் தலைப்பில் சிங்கைதாசன், “குற்றம் யாருடையது” என்னும் தலைப்பில் அ.இ.முகம்மது இப்புராஹிம், “ சிந்திக்கட்டும்”, “புதுமைப்பித்தன் இலக்கிய மேதை”, ”இலக்கிய மேதை என்பதில் தவறில்லை” என்னும் தலைப்புகளில் பெ.கிருஷ்ணன்,” “புதுமைப்பித்தன் இலக்கிய கர்த்தா” என்னும் தலைப்பில் அ.சேதுராமன், “விபரீத ஆசை வெளிவரட்டும்” என்னும் தலைப்பில் வெயிலன், “புதுமைப் பித்தன் இலக்கிய மேதையே”, “சிறுகதை வள்ளுவர்”; “இரு சிந்த னைச்சிற்பிகள்” என்னும் தலைப்புகளில் எம் எஸ்.மாயதேவன், “சிறந்த எழுத்தாளர்” என்னும் தலைப்பில் புலிக்கடியன், “சிந்தித் தேன்” என்னும் தலைப்பில் க. நாதன்; “இலக்கியம் என்பது எது”, “சிந்தியுங்கள்” என்னும் தலைப்புகளில் எம்.கே. துரைசிங்கம் , “மேதை புதுமைப்பித்தன்”; “ மேதை புதுமைப் பித்தன் விவகாரம்” என்னும் தலைப்புகளில் கந்தசாமி வாத்தியார் என்ற சுப. நாராயணன் , “எழுத்தாளர் தொல்லை” என்னும் தலைப்பில் அழகாந்திரு வள்ளியப்பன், “புதுமைப்பித்தன் மேதையே” என்னும் தலைப்பில் சே.மு.லிங்கம்;” யார் மேதை “என்னும் தலைப்பில் உள்ளன்பு, “புதுமைப்பித்தன் ஏன் மேதையாக முடியாது?” என்னும் தலைப்பில் அ. நெடுஞ்செழியன்; “விளக்கம் கொடுங்கள்” என்னும் தலைப்பில் சந்தேகப்பிறவி, “வெறும் அறிஞர் விவகாரம்” என்னும் தலைப்பில் கெ.பாலகிருஷ்ணன், “புதுமைப்பித்தன் மேதை: அண்ணா துரை?” சுப .நெடுங்கீரன்; “சிரிக்கவும் வேண்டாம் ;அழவும் வேண்டாம்” என்னும் தலைப்பில் ராஜம்; “புதுமைப்பித்தன் விவகாரப்பித்தன்; “கதை வல்லான்” என்னும் தலைப்பில் பூந்தோட்டம் தும்பி ஆகியோர் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

புதுமைப்பித்தன் மேதையே என்று ஆதரித்துக் கட்டுரை எழுதியோர் தம் வாதத்துக்குத் தேவையான கருத்துக்களைப் பல அணுகுமுறைகளில் வெளியிட்டனர். பன்முகப்படைப்பளியான புதுமைப் பித்தனின் எல்லாப் படைப்புக்களையும் படித்துவிட்டு எழுதியதால் அவர்களின் கருத்துக்களில் முழுமை தெரிகிறது. எம் எஸ் மாயதேவன் ‘இலக்கியத்தில் புதுமைப்பித்தன் ‘என்னும் சிறு நூலை எழுதி வெளியிட்டு இலவசமாகவே அனைவருக்கும் வழங்கினார். தொ.மு.சி ரகுநாதன், தி.க.சிவசங்கரன் போன்றவர்களின் கட்டுரைகளையும் ,மேனாட்டு எழுத்தளர்களின் படைப்புக் களையும் பி.கிருஷ்ணன் போன்றோர் படித்துவிட்டுக் கருத்துரைத்துள்ள தையும் காணமுடிகிறது.

## புதுமைப்பித்தன் மேதை அல்லர் மறுப்புக் கட்டுரை

புதுமைப்பித்தன் மேதையல்லர் என மறுத்துப் பதினைந்து பேர் கட்டுரை எழுதியுள்ளனர். “இலக்கிய மேதை யார்?” ; “சிந்திக்க வேண்டியது யார்?”; “ நான் கண்ட புதுமைப்பித்தன்”; “ஒழுக்கமும் அறமுமே இலக்கியப் பண்பு”; “அன்பர்களுக்கு என் பதில்” ஆகிய ஐந்து கட்டுரைகள் புதுமைப் பித்தன் இலக்கிய சர்ச்சையைத் தொடங்கிய வீ.க.சபாபதியால் எழுதப் பட்டுள்ளன. “கதைகள்”; “இரண்டுமே தான்” என்னும் தலைப்பில் எம்.ஆர்.வி (இராமையா) இரண்டு கட்டுரை களையும், “சிந்தனை செய்திடுக” என்னும் தலைப்பில் எச் .ஏ. இப்ராஹிம்; “இலக்கிய மேதையா?” என்னும் தலைப்பிலும்

,தலைப்புக் கொடுக்காமல் தன் கருத்தையும் இர.வெங்கடேசன் இரு கட்டுரைகளில் எழுதியுள்ளார். "புதுமைப்பித்தன் வெறும் எழுத்தாளரே" என்னும் தலைப்பில் மெ.சிதம்பரம் ; 'புதுமைப்பித்தன் மேதையா? என்னும் புரட்சிப்பித்தன் ; "சந்தேகமில்லை" என்னும் தலைப்பில் எம். பி. எம். ஷஹீது; "விபரீத வியாக்கியானம்" என்னும் தலைப்பில் பேஸ்தாசன் என்பவரும் எழுதியுள்ளனர்.

புதுமைப்பித்தனை மேதையல் லர் என மறுத்து எழுதியோரிடையே கருத்துப்பஞ்சம் நிலவியது. சொல்லப் பட்ட கருத்துக்களையே மீண்டும் மீண்டும் கூறினர். வாதத்துக்குத் தேவையற்ற விதண்டாவாதங்களும் முன்வைக்கப்பட்டன.

## விவகாரமும் நிலைப்பாடும்

வெயிலன் என்பவர் "இலக்கியக் கர்த்தாக்களா "?என்னும் தலைப்பில் புதுமைப்பித்தன் மேதை அல்லர் என மறுத்து எழுதியுள்ள இவர் 'விபரீத ஆசை வெளிவரட்டும்' என்னும் தலைப்பில் ஆதரித்தும் எழுதியுள்ள தை நோக்க இவருடைய நிலைப்பாடு குறித்து ஐயம் எழுகிறது.

## விவகாரத்தில் விவகாரம்

சுப.நெடுங்கீரன் என்பவர் புதுமைப் பித்தன் விவகாரத்தில் அறிஞர் அண்ணாதுரையைப் பற்றி எழுதுகிறார். ஆகவே அறிஞர் அண்ணா மேதையா என்று மற்றொரு விவாதம் கால்கொள்கிறது. தமிழ்முரசில் வெளிவந்த விவாதங்களுள்ளும் இக் கட்டுரை ஆசிரியர் இலக்கிய விவாதங்களை மட்டுமே இக்கட்டு ரையின் மையப்பொருளாகக் கையாண் டுள்ளார். அறிஞர் அண்ணா அரசியல் வாதி என்பதால் அவரைப்பற்றிய விவாதம் இலக்கியச்சர்ச்சை என்னும் வகைப்பாட்டுக்குள் இடம்பெறவில்லை.

பெ.கிருஷ்ணன் புதுமைப் பித்தனின் கதைகள் அனைத்தையும் படித்தபின்னரே அவரைப்பற்றி எழுதவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். அவர் கூறிய இக்கருத்து வரவேற்கப்படவேண்டியதே. புதுமைப் பித்தன் மேதையே என வலியுறுத்த விரும்பியதால் சீர்திருத்த நோக்கம் உடையவர் புதுமைப்பித்தன் எனத் தவறுதலாகக் குறிப்பிடுகிறார். புதுமைப்பித்தன் " பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசம் பண்ணி உய்விக்க ஏற்பாடு செய்யும் ஸ்தாபனம் அல்ல;பிற்கால நல்வாழ்வுக்கு சௌகரியம் பண்ணிவைக்கும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும் பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்துகொண்டிருக்கிறேன்" என்று எழுதியிருப்பது பெ.கிருஷ்ணனின் கவனத்துக்கு வரவில்லை போலும்.

தம் கருத்துக்கு வலுச்சேர்ப் பதற்காகக் 'கம்பரசம்' என்னும் நூலை எடுத்துக்காட்டாகக் கூறுகிறார்." அறிஞர் சி.என்.அண்ணாத்துரை அவர்கள் தீட்டிய 'கம்பரசம்' என்னும் நூலில் கம்பன் எழுதிய கவிதைகளில் உள்ள ஆபாசங்களை நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். இதனால் அவரை இலக்கிய ஞானம் இல்லாதவர் என்றும் இலக்கியமேதை என்று சொல்லப்பட அருகதை அற்றவர் என்றும் கூறுவது சரியா?" என்று கேட்டுள்ளார். பே. கிருஷ்ணன் விளக்க முனைந்த கந்தசாமி வாத்தியார் அண்ணாத்துரை அறிஞரா? என்னும் மற்றொரு விவாதத்திற்கு வழிகோலியுள்ளார். பெ.கிருஷ்ணன் அண்ணாதுரையின் கம்பரசத்தை உதாரண மாய்க் காட்டியது " விவகாரத்தில் விவகாரம்" என்னும் போக்கை உருவாக்கிவிட்டது. 'வேறொன்று விரித்தல்' என நன்னூல் கூறும் பத்துவகைக் குற்றங்களில் ஒன்று. விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட பொருளை விட்டு விலகி வேறு கருத்தைக் கூறுவதற்கு வழிவகுத்துவிட்டார் பெ.கிருஷ்ணன்.

## புதுமைப்பித்தன் பொதுக்கட்டுரைகள்

மேற்கூறியவை தவிரப் புதுமைப்பித்தன் பற்றிய பொதுவான செய்திகளைத் தாங்கி வெளிவந்த கட்டுரைகள் மொத்தம் இருபத் தொன்று. இவற்றுள்வை. திருநாவுக் கரசு, தி.க.சிவசங்கரன் (ஓர் எச்சரிக்கை) ஆகியோரின் கட்டுரைகள் மிக முக்கியமானவை. ' பித்தனின் வெற்றி'

என்னும் கவிதை கந்தசாமி வாத்தியாரால் எழுதப்பட்டது. புதுமைப்பித்தன் குடும்பநிதி பற்றிய செய்திகளும் கட்டுரைகளாக இடம் பெற்றுள்ளன.

## புதுமைப்பித்தன் விவகாரம் விளைவுகள் பொது நன்மைகள்

புதுமைப்பித்தன்பற்றிய இலக்கிய சர்ச்சையை 29.06.52 இல் தும்பி 'புதுமைப்பித்தன் விவகாரப்பித்தன்; கதைவல்லான்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதி விவாதத்தை முடித்து வைக்கிறார். என் இக்கட்டுரையில் " விவகாரம் விவேகத்தை வளர்க்கிறது ;விவகார எழுத்தாளன் அறிவைத் தூண்டிவிடுபவன் என்பது என் வாதம்" என்று அவர் குறிப்பிடுவது விவகாரத்தின் விளைவு எனலாம். பொழுதுபோக்கிற்காகப் படிப்பவர்களை ஆழ்ந்து சிந்திக்கவைத்தது. இதனால் மலாயாத் தமிழ் இலக்கிய உலகம் பல நன்மைகளைப் பெற்றது. புதுமைப்பித்தன் பற்றி ஆழமான வாசிப்புக் கொண்ட வாசகர்கள் பெருகினர். மேலும் பரந்த வாசிப்பு அனுபவமும் அவர்களுக்குக் கிடைத்தது. சிறுகதைக் கலையின் நுட்பங்கள் பற்றியும் சிறுகதை என்னும் கலைவடிவம் பற்றியும் வாசகர்கள் நிறையவே அறிந்து கொண்டனர். எழுத்தார்வம் பெருகியது. தங்களின் எழுத்துத் திறனை வளர்த்துக் கொண்டனர். எவ்வாறு விமர்சனம் செய்வது என்று அறிந்தனர்.

## ரசனை வகுப்பின் தொடக்கம்

தமிழ்நேசன் பத்திரிகையில் சுப.நாராயணன் என்னும் கந்தசாமி வாத்தியார் திருபைரோஜி நாராயணனுடன் சேர்ந்து கதை வகுப்பு நடத்தினார். புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சையில் பங்கெடுத்து ரசனை விமர்சனமாகப் புதுமைப் பித்தனின் விபரீத ஆசை என்னும் கதையைப் பற்றி விரிவான கட்டுரை ஒன்று எழுதியிருந்தார் (தமிழ் முரசு, 22.11.1952). விவாதத்தில் பங்கெடுத்த ஒவ்வொருவரின் கட்டுரையையும் விமர்சன் நோக்கில் கந்தசாமி வாத்தியார் எழுதினார். இதன் விளைவாக ரசனை வகுப்பு தமிழ்முரசில் தோன்றியது. 19.04.1952 முதல் 28.06.1952 வரை ரசனை வகுப்பு நடந்தது. ஒன்பது மாத காலம் இலக்கிய சர்ச்சை நீடிக்க ரசனை வகுப்போ ஒன்பது வாரத்தில் முடிந்துபோனது. இவ்வகுப்பின் மூலம் விமர்சனக்கலை இந்த நாட்டில் வேர்விட வாய்ப்பு உருவானது.

## ரசனை விமர்சனம் வளர வாய்ப்பு

ஒவ்வொரு மனிதனிடமும் ரசனை உணர்வு அமைந்திருப்பது இயல்பு. ஆயின் அது மனிதருக்கு மனிதர் வேறுபடும். இந்த உணர்வைக் கலைத்துறையில் வளர்க்க விரும்பிய கந்தசாமி வாத்தியார் பத்திரிகை, வானொலி, இசை, இலக்கியம் ஆகிய துறைகளில் கேள்விகள் கேட்க தமிழ்முரசின் வகுப்புப் பாடங்களில் மாணவர்கள் பதில் எழுதினர். பதினெட்டுப்பேர் பங்கெடுத்த இந்த ரசனை வகுப்பு மாறுபட்ட கருத்துக்களைக் கூறும் ஆற்றலை யும், ரசனை விமர்சனத் தையும் வளர்த்தது. இவை எழுத்தாளர்களின் படைப்பாக்கத் திறனை வளர்த்துச் சிறுகதை எழுதுவதற்குத் துணை புரிந்தது.

## எழுத்தாளர் பேரவையின் தொடக்கம்

ரசனைவகுப்பு தன் பயணத்தை முடித்துக்கொண்டதும் எழுத்தாளர் பேரவை தொடங்கப்பட்டது. "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்" என்னும் முழக்க வரியுடன் செயல்படத்தொடங்கியது. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று எழுத்தாளர் பேரவை தமிழ்முரசில் பிரசுரமானது. புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சை , ரசனை வகுப்பு ஆகியவற்றில் கலந்துகொண்டோ ரிடையே இப்பேரவை நல்ல வரவேற்பைப்பெற்றது. சிங்கப்பூர் எழுத்தாளர்களான ந.பழநிவேலு , தா.சி.மா. பாக்கியசிற்பியன், ரா.நாக்கின், பி.கிருஷ்ணன், ஆர்.வெற்றிவேல், பா.சண்முகம், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, அ.கணபதி ஆகியோர் எழுத்தாளர் பேரவையில் உறுப்பினராயினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஓராண்டுக்கு நீடித்தது பேரவை.

முரசு ஆசிரியர் கோ.சாரங்க பாணி "மலாயா பெடரேஷன், சிங்கப்பூர் காலனி ஆகிய இடங்களில் ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் இல்லாமல் எழுத்தாளர்கள் இருக் கிறார்கள். இவர்களை ஒரு குடும்பத் தினராய் ஒன்று சேர்க்கும் முயற்சியே எழுத்தாளர் பேரவை. எழுதப்படும் விஷயங்கள் மலாயா நாட்டுத் தமிழர்கள் சம்பந்தமாய் இருக்க வேண்டும்.தமிழக, இந்திய நாட்டுச்சம் பவங்களாய் இருக்கக்கூடாது .பேரவை உறுப்பினர் குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை ஒரு கதையோ ,ஒரு கவிதையோ ,ஒரு கட்டுரையோ எழுதவேண்டும்" எனக் கூறியது உள்ளூர்ப் பிரச்னைகளுக்கு முக்கி யத்துவம் தந்து எழுதக்கூடி யவர்களை அடையாளம் காண உதவுவதாய் அமைந்தது. மேலும் அவர்களின் படைப்பூக்கத்தை வளர்ப்ப தாயும் இருந்தது.

பேரவையை வழிநடத்திய வை.திருநாவுக்கரசு எழுத்தாளர் பேரவையின் செயல்பாட்டையும், அதன் உயர்ந்த நோக்கத்தையும் பின்வருமாறு எழுதுகிறார்." புலவர்கள் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். நாம் எழுத்தாளர் பேரவை அமைத்து விழுமிய எழுத்தைப் பெருக்குவோம். எழுத்தாளர் பேரவை பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்ல.ஆனால், இதில் அங்கத்தினர்கள் சேர்க்கப்படுவர். உறுப்பினர்களின் பெயர்கள், முகவரி கள் வெளியிடப்படும். எழுத்தாளர்க ளிடையே கடிதத்தொடர்பு இருக்க வேண்டும் எனப் பேரவை வற்புறுத்து கிறது. பேரவையின் ஓர் உறுப்பினர் எழுதியனுப்பும் கதை அல்லது கட்டுரை மற்றோர் உறுப்பினருக்கு அனுப்பப்படும். அவர் அதனைப் படித்துத் திருத்திக் கருத்துரைக்க வேண்டும்.இதன்வழி பத்திரிகை ஆசிரியர் அனுபவத்தை எழுத் தாளருக்குக் கொடுக்க விரும்புகிறது" என்று எழுதியிருப்பது மலாயாவுக்குத் தேவையான பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் ஆகியோரை வளர்க்கும் முயற்சியின் படிநிலை என்பது தவறாகாது.

## புதுமைப்பித்தன் நினைவு மலர்

நக்கம்பாடி கரீமும் எம்.துரை ராஜூும் இணைந்து புதுமைப்பித்தன் நினைவு மலரை வெளியிட்டனர். இதன் மூலம் கிடைத்த நிதியையும் புதுமைப்பித்தன் குடும்பத்திற்கு அனுப்பினர். இந் நினைவுமலர் மலாயாவில் புதுமை ப்பித்தன் பெற்றிருந்த செல்வாக்கின் எதிரொலி.

## புதுமைப்பித்தன் பரம்பரை கட்டுரைத் தொடர்

புதுமைப்பித்தன் பரம்பரை என்னும் கட்டுரைத்தொடரை நக்கம் பாடி கரீம் எழுதினார். இது மலாயாத் தமிழ் எழுத்தாளர் ஒருவரின் பார்வையில் புதுமைப் பித்தன் பரம்பரையை மலாயாத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திய முயற்சி ஆகும்.

## புதுமைப்பித்தன் குடும்பநிதி

தமிழ்முரசு நாளிதழ், அகால மரணம் அடைந்த புதுமைப்பித்தன் குடும்பத்திற்கு உதவும் வகையில் நிதி திரட்டிக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இந்த நிதிக்கு உதவுக என்னும் வேண்டுகோள் 12.02.52 அன்று விடுக்கப்பட்டது. ஆயிரத்து அறுபத்து மூன்று பேர் தங்களால் இயன்ற தொகையைக் கொடுத்து ($1147 .10) உதவினர். இத்தொகையைப் பெற்றுக் கொண்ட திருமதி கமலா விருத்தாசலம் (புதுமைப்பித்தனின் மனைவி) மலாயா வாழ் தமிழர்க ளுக்கு நன்றி தெரிவித்து எழுதிய கடிதத்தை 05.06.1952 இல் பிரசுரித்தது. கமலாவிருத்தாசலம், புதுமைப்பித்த னின் மகள் தினகரி ஆகிய இருவரின் நிழற்படங்களையும் பிரசுரித்திருந்தது.

## தனிப்பட்ட நன்மைகள்

சிங்கப்பூர் எழுத்தாளராகிய பெ.கிருஷ்ணன் (தற்போது பி.கிருஷ்ணன்) புதுமைப்பித்தன் குறித்த இலக்கிய சர்ச்சையில் கலந்துகொண்ட பின் 1953 லிருந்தே தம் பெயரைப் புதுமைதாசன் என மாற்றிக்கொண்டார். தம் பெயர் மாற்றத்துக்கான காரணமாகப் புதுமைப்பித்தனின் புதிய பாணி

எழுத்து, புதுப்புது உத்திகள், அவருடைய மொழிநடை ,கிண்டலும் கேலியும் நிறைந்த சமூகப்பார்வை போன்றவை தம்மிடம் நிறையப் பாதிப்புக்களை ஏற்படுத்தியதைக் குறிப்பிடுகிறார் (எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி, 2006). பி.கிருஷ்ணன் புதுமைப்பித் தனின் விமர்சன வீச்சால் கவரப்பட்டு 'ரசமட்டம்' என்னும் புனைபெயரைச் சூட்டிக்கொண்டார். காரசாரமாக எழுதும்போது இப்பெயரைப் பயன்படுத் தியுள்ளார்.எழுத்தாளர் பேரவையில் தமிழ்நாட்டிலிருந்து எழுதப்பட்ட படைப்புகள் வெளியிடப்பட்டபோது அவற்றை மறுத்து ரசமட்டம் என்ற பெயரில் எழுதியுள்ளார் (எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி, 2006).

## யார் குற்றம்? விவகாரம்

யார் குற்றம் என்னும் கதையை கப்பாலாபத்தாஸ் ந.வரதராசன் எழுதியுள்ளார். இவர் வெற்றிப்படிகள், நினைவின் அலைகள் என்னும் சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட் டவர். அறிஞர் மு.வ.வின் மீது அளவுகடந்த மதிப்புக்கொண்டவர். இவருடைய சிறுகதைகளில் மொழி நடை, கதைக்கரு ஆகியவற்றில் மு.வ.வின் சாயல் வெளிப்படுவது பொது இயல்பு. இவர் எழுதிய யார் குற்றம் என்னும் கதை 15.04.1956 தமிழ்முரசில் பிரசுரமானது.

## கதைச்சுருக்கம்

தமிழ்நாட்டில் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் என்னும் இளைஞன் கல்லூரியில் படிக்கின்ற சமயத்தில் "ஆசை வெள்ளம்" என்னும் நாடகத்தின் மூலம் விமலா என்னும் பெண்ணுக்கு அறிமுகமாகிறான். தமிழ்ச்செல்வனின் புரட்சிநோக்கு , சொற்பொழிவாற்றல் போன்றவற்றில் மயங்கிய விமலாவுக்கும் அவனுக்கும் காதல் மலர்கிறது. இருவரும் திருமணமும் செய்துகொள்கிறார்கள். தனிக்குடித் தனம் தொடங்குகிறார்கள்.குடும்பம் நடத்தப்பொருள் தேவையல்லவா? அதனைச் சம்பாதிக்க மலாயாவுக்கு வருகிறான் தமிழ்ச்செல்வன். ஆண்டு கள் நான்கு ஓடிவிடுகின்றன. மீண்டும் தமிழகம் செல்லவில்லை. விமலா இவனுக்காகக் காத்திருந்த காலத்தில் நெறி தவறியதால் விஷம் அருந்தித் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். தன் சாவுக்கு முன்பு கடிதம் எழுதிவைத்துவிட்டு இறக் கிறாள். அக்கடிதம் தமிழ்ச் செல்வனின் கைக்குக் கிடைக்கிறது.வேலை தேடி வந்த இடத்தில் அவனுடைய முதலாளி அவனது சொந்த வாழ்க்கை பற்றிக் கேட்கிறார். அப்போது தமிழ்ச்செல்வன் விமலா எழுதிய கடிதத்தை அவரிடம் கொடுத்துவிட்டு சிவகுரு புத்தகசாலை வரை சென்று வருவதாகக் கூறிவிட்டுச் செல்கிறான். கடிதத்தில் தமிழ்ச்செல்வன் மீது குற்றம் சுமத்துகிறாள் விமலா

## விவாதம்:

இக்கதை குறித்த விவாதம் ஆறு மாதங்களுக்குத் தொடர்ந்து நடந்ததாகவும் ,விவாதம் திசைமாறிச் சென்று பல குழப்பங்களை ஏற்படுத்தியதால் விவாதம் நிறுத்தப்பட வேண்டிய சூழல் உருவானதாகவும் ந.வரதராசன் கூறினார். (15.11.17 அன்று கட்டுரையாளர் தொலைபேசி வழி நடத்திய உரையாடலில் தெரி வித்த கருத்து.)

15.05.1956 அன்று எம் ஆர்.வி எழுதிய கடிதம் 04.05.1956 அன்று வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்திற்கு மறுப்பாக எழுதப்பட்டது. "சிறுகதை என்றால் என்ன? அதனை ஒரு அகல்விளக்கு என்று கூறுகிறார் பிரபல எழுத்தாளர் ஒருவர். அந்த விளக்கை இங்கு காண்பது அரிது போலும்" என்று அன்பர் ஒருவர் வெளியிட்டிருக்கும் ஆயாசப்பெருமூ ச்சைத் தமிழ்முரசு இதழில் கண்டதாகவும் ,இதற்கு மறுப்பு எழுத முதலில் நினைக்காவிட்டாலும் மறுப்பு எழுதவேண்டும் என்னும் எண்ணத்தைத் தூண்டிய சொற் றொடர்கள் அப்பகுதியில் இருந்த தாகவும் அதனால் தாம் மறுப்பு எழுதவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானதாகவும் மா.இராமையா கூறி விவாதத்தில் இறங்குகிறார்.

எழுத்தாளர் ந.வரதராசன் தமிழர் பண்பை மனத்தில் கொண்டு விமலாவின் கையில் நச்சுக் கோப்பையைக் கொடுத்திருக்க வேண்டாம். அவளை ஐந்து அல்லது ஆறு

*மாதக் கர்ப்பிணியாக்கி வாழவிட்டிருக்கலாம். எழுத்தாளருக்கு முதுகெலும்பு இல்லை. ஆகவே கற்புக்கரசியர் வாழ்ந்த நாட்டில் காமுகனால் கசக்கி எறியப்பட்ட பெண் வாழக்கூடாது; அது தமிழ்ப்பண் பாட்டுக்கு ஒவ்வாதது என்று கதையை முடித்துவிட்டார். ஆண்கள் தற்காலிக மனைவியோடு மலாயாவில் வாழும் போது பெண்கள் மட்டும் உணர்ச்சி யற்ற மரக்கட்டை களாகிக் கணவன் வரும்வரை காத்திருக்க வேண்டுமா?* என்றும், மேனாட்டுப் பெண்களை உதாரணம் காட்டி எழுதியதும், மலாயா வாழ் தமிழ்ப்பெண்களைப் பற்றிப் பக்கம்பக்கமாகத் தவறான செய்திகளை எழுதியதும் அக்காலச் சூழலில் ஒரு பிரளயத்தையே ஏற்படுத்தியிருக்கவேண்டும். ஆகவே தான் எம் ஆர் வி என்னும் புனைபெயரில் இராமையா மறுப்பு எழுதவேண்டிய சூழல் உருவாகி விட்டது.

தான் எதிர்பார்ப்பதை எல்லாம் எழுத்தாளன் எழுதவேண்டும் என்று ஒருவர் விமர்சித்ததும் , பெண் களைப்பற்றி இழிவாக எழுதியதும் விவாதத்தின் போக்கினைத் தவறாக வளர்த்துவிட்டன. ஆகவே சந்திரிகா தேவி, ராதாராணி ஆகியோர் தமிழ்நாட்டுப்பெண்கள், மலாயா வாழ் தமிழ்ப்பெண்கள் எனத் தரம்பிரித்துக் கொண்டு அவர்களை ஒருவர் ஒருவர் பழித்தும் கூக்குரலிட்டும் எழுது கின்றனர். மேலும் ஆண் எழுத் தாளர்கள் பலரும் *கற்பெனும் திண்மை, சீர்திருத்தம்,ஏன் இந்த அவசரம்? சிந்தித்து எழுதுவது நன்று,சாலிவாகனன்,சந்திரிகா தேவி கவனத்துக்கு, சரியா? தப்பா? ,இங்கு உண்டு அங்கு இல்லை; திருந்தட்டும் சந்திரிகா, தமிழ்நாட்டுக்காரிக்குப் பதில் ,தோழியர் ராதாராணியின் விழிகட்கு, மலைநாட்டுப்பெண்கட்கு* எனப் பல தலைப்புகளில் எழுதியுள்ளனர். ஆனால் யார் குற்றம் என்னும் கதை விவகாரத்துக்கு இவை தேவை யற்றவை என்பதால் இக்கட்டுரையில் குறிப்பிடப்படவில்லை. *இப்படிப்பட்ட விவாதத்தினை நிறுத்துவார்களா? (தா. ஜெகதீசன், சிங்கப்பூர் 18.5.1956)* என் றும், *எழுத்தாளர்கள் எழுதுவனவ ற்றைச் சிந்தித்து எழுதவேண்டும் (மு.ஜெயராமன் ,பிறை, 31.7.1956)* என்றும், வேண்டாம் வீண்வாதம் *(தமிழ்த்துறைவன், சுங்கை பூராங்)*, போதும் நிறுத்துங்கள் *(அன்பன், சிங்கை)* என்றும் வெறுப்படைந்து எழுதியுள்ளனர்.

ந.வரதராசன் சமுதாயத்தைத் திருத்துவதற்காக 'யார் குற்றம் போன்ற கதைகளை எழுதியதாகக் கூறுகிறார். மேலும் அவர் *"மலைநாட்டுத் தமிழ்ப்பெருமக்களே! சிந்தனைச்செல்வங்களே! கொஞ்சு தமிழ்க்குலத்தோரே! நம் தமிழ் மக்கள் வளமுடன் வாழவேண்டும் என்ற ஒரே ஆசையால் கேட்கிறேன்.நெஞ்சில் கை வைத்துச்சொல்லுங்கள் "தமிழ்ச் செல்வன் குற்றவாளியா? இல்லையா என்று" ஆகவே நன்றாகச் சிந்தித்து இதற்கு நல்லதொரு முடிவைத் தரும்படி விழைகிறேன்"* என்று *23.7.56* அன்றைய தமிழ்முரசில் எழுதுவது வேடிக்கையாக உள்ளது. எழுத்தாளர் என்ற முறையில் கதையை எழுதிமுடித்த பிறகு கதாநாயகன் குற்றவாளியா இல்லையா என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதில்லையே. ஒவ்வொருவரும் தங்கள் சிந்தனைக்கு ஏற்றவாறு குற்றம் செய்தவர் யார் என்று முடிவு செய்து கொள்வர் அல்லவா?. தமிழ்ச்செல்வன்தான் குற்றவாளி என்று பதில் சொல்லவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இவ்வாறு கேட்கிறாரோ? என்றார் எண்ண வேண்டியுள்ளது. ஆனால் *யார் குற்றம் போன்ற கதைகள் தேவை என்று (கிளன்மேரி எஸ்டேட்டைச் சேர்ந்த ப.வேலு)* எழுதியுள்ளார். இவர் தமிழ்ச்செல்வனே குற்றவாளி என்று தீர்ப்பு வழங்குகிறார். *திட்டியா தீர்ப்புக் கூறவேண்டும்?* என்று எழுதும் லோகாவாணன் யார் குற்றம் என்ற கதைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் எழுதியுள்ளார்.

மொத்தத்தில் யார் குற்றம் என்னும் கதையை விவாதிப்பதற்குப் பதில் தேவையற்ற செய்திகளை விவாதிப்பதால் இந்த விவகாரம் பெயரளவில் விவாதமாக உள்ளது. வாததிறமை, அறிவுத்திறன் ஆகிய வற்றை அளவுகோலாகக் கொண்டு நோக்கினால் இந்த விவாதம் சிறப்பாக அமையவில்லை. ஆறு மாதங்கள் வீணாக்கப்பட்டன என்ற வருத்தமே மிஞ்சுகிறது.

## ஆய்வு முடிவுகள்

- ❖ தமிழ்முரசின் ஆசிரியர் வை.திருநாவுக்கரசு ஓர் விவாதப்பிரியர்.
- ❖ விவாதங்களின்/விவகாரங்களன் வழி விவேகத்தைப் பெறமுடியும் என்று அவர் நம்பியது வீணாகவில்லை.
- ❖ எவ்வளவோ சிறந்த, நல்ல படைப்புக்கள் இருக்கப் பாலியல் சார்ந்த கதையைக் கொண்டு ஒரு மேதையின் பரிமாணம் சுருக்கிவிடப்படுவது வேதனை தரும் நிலை.
- ❖ புதுமைப்பித்தன் மேதையா என்னும் விவகாரத்தின் வழி புதிய விவாதங்கள் கிளைத்தன.
- ❖ புதுமைப்பித்தன் விவகாரத்தின் மூலம் புதுமைப்பித்தன் போன்ற சிறந்த படைப்பாளி களைகளைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் வாசிப்புத்திறன் பெருகியது.
- ❖ உள்ளூர் எழுத்தாளர்கள் உரு வாயினர்.
- ❖ ரசனை வகுப்பின் மூலம் ரசனை விமர்சனம் வளர வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.
- ❖ எழுத்தாளர் பேரவை தொடங் கப்பட்டது .
- ❖ உள்ளூர்ப் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் தந்து எழுத வேண்டும் என்னும் விழிப் புணர்வு பெருகியது.
- ❖ புதுமைப்பித்தன் நினைவு மலர் உருவாக்கப்பட்டதன் மூலமும் , தமிழ்முரசின் வழி பொது மக்களிடம் வசூலிக்கப்பட்டும் மறைந்த புதுமைப்பித்தனின் குடும்பத்திற்கு நிதி வழங்கப் பட்டது.
- ❖ புதுமைப்பித்தனின் செல்வாக் கால் தம் பெயரைப் புதுமை தாசன் என மாற்றிக்கொண்டு அவரைப் போலவே கேலியும் கிண்டலும் நிறைந்த எழுத்துக் களைப் படைத்தார் பி.கிருஷ் ணன்.
- ❖ புதுமைப்பித்தன் விவகாரம் அக்கால மலாயாவில் தமிழ்ச் சமூக நிலையைப் பிரதிபலிப் பதாயும் அமைந்தது.
- ❖ இளம் மனைவியைத் தமிழ கத்தில் விட்டுவிட்டுப் பிழைப்பு நாடி மலாயா வந்தவர்களின் கதை மூலம் தமிழ்ச்ச மூகத்தின் நிலையைப் பேசுகிறது "யார் குற்றம்' என்னும் கதை.
- ❖ யார் குற்றம் கதை விவாதம் விதண்டாவாதமாகித் தமிழ்நாட்டுப் பெண்களையும் மலாயாப்பெண்களையும் ஒப்பிடுவதன் வழி காலத்தை விரயமாக்கிக் கொண்டிருந்தது.
- ❖ கதையைக் குறித்து விவாதிக் காமல் வேண்டாத செய்தி களைப் பேசும் களமாக மாறிப்போனதால் தமிழ்மமுரசு தலையிட்டு விவாதத்தினை முடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.
- ❖ பிள்ளையார் பிடிக்கக் குரங் கான கதை போலானது யார் குற்றம் என்னும் கதை மீது நிகழ்ந்த விவகாரம்.
- ❖ விவேகமும் வாதத்திறமையும் மிக்க புதுமைப்பித்தன் விவகாரம் போல அமைய வில்லை.
- ❖ விவாதக் களத்தில் கதையை எழுதிய கப்பலாபத்தாஸ் ந. வரதராசனும். கலந்துகொண்டார்.
- ❖ ஒழுக்கமும் அறமுமே இலக்கிய நோக்கமாய் இருக்க வேண்டும் என்று பெரும் பான்மையோர் எதிர்பார்த்த சூழல் நிலவியது.

## References

Krishnasamy, P. (1995). *Puthumaipithanin Ilakiyatadam*. Bangalore: Kavya Publications.

Puthumaipithan. (1998). *Annai Iddathi: Putrhgumaipithanin Thokukapadatha Achidapa-datha Padaipugal*. Chennai: kalasuvadu Publications.

Ramaiya, Ma. (1978). *Malaysia Tamil Ilakiya Varalaru*. Chennai: Puratchi Pannai.

Sabapathi, V.,K. (30.9.1951). *Tamilmurasu News Paper*.

Shri Lakshmi, M., S. (2006). *Puthumaipittan Ilakiya Sarchai 1951-1952*. Singapore: Tarumu Publications.

Thinnappan, Su.Ba., Andiyappan, N. & Arunasalam, Suba. (2011). *Singapore Tamil Ilakiya Varalaru-Oor Arimugam*. Singapore: Singapore Tamil Writers Association.

Vallikannan. (2004). *Vallikannn Kadduraigal*. Chennai: Arjuna Publications.

Vethasagayam, M. (2002). *Puthumaipithanin Kathaigal: 103 Kathaigalin Muzhutoguppu*. Chennai: Puthumaipithan Publications.

# இந்திய சோதிட இலக்கியங்களும் சோதிடர்களும்

# Literatures and Astrologers of Indian Astrology


கோவி.சிவபாலன் / G.Sivapalan
முனைவர் சு.மணிமாறன் / Dr.S.Manimaran



***Abstract***

Astrology is one of the life skills and art in the indian civilization. Down the ages it has crossed many changes and developments. It is said that it was formulated by ancient saints. Astrologers made simple the astrological ideas in the form of poetry devised by experts many centuries ago and later these works have become books. Later these books were called Literature in Astrology. In the process of simplification no compromise was made regarding the content of the original texts. Because of this uncompromising native of the original text, indian astrology keeps its validity till date. The documentation of indian astrological works, paraphases and notes has been exemplery. The indian astrologers take thi credit.



**Key Words:** Indian Astrology, Astrologers, Literatures, History, Tradition


## முன்னுரை

இந்திய நாகரிகத்தில் உருவான பல்வேறு வாழ்வியல் கலைகளுள் சோதிடக்கலை தனித்தன்மையுடை யது. இக்கலை தோன்றிய காலந் தொடங்கி பல்வேறு காலக் கட்டங்களில் பல்வகை மாற்றங் களை ஏற்று வளர்ந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. ஏடு தோன்றா காலத்துக்கு முன்பு சோதிடக்கலையின் பரவல் செவி வழிச் செய்தியின் வாயிலாகவே நிகழ்ந்திருக்கின்றது. இந்தியர்களின் வாழ்க்கையில் ஓலைச்சுவடிகளின் அறிமுகமும் கருத்துகளை அவற்றில் பதிவு செய்யும் பழக்கமும் ஏற்பட்ட பின்னர் சோதிடம் சார்ந்த குறிப்புகள் யாவும் ஓலையேடுகளில் பதிவு செய்யப்பட்டன. ஆதியில் சித்தர்களும் ஞானியர்களும் எழுதி வைத்ததாகக் கருதப்படும் சோதிடப் பாடல்கள் இன்று நூல் வடிவில் பரவலாகக் கிடைக்கின்றன. அவற்றுள் பல அன்று சூத்திர வடிவிலும் கடின மொழிநடையமைப்பைக் கொண்டும் விளங்கின. காலவோட் டத்தில் இந்திய சோதிட மரபில் பல சோதிட வல்லுநர்கள் தோன்றினர். ஆதியில் உருவாக்கப்பட்ட சோதிட விதிகளை அடிப்படையாகக் கொண்டு காலந்தோறும்


The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. gsiva_palan@um.edu.my

The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

மக்களின் வாழ்க்கை முறைக்கும் தேவைக்கும் ஏற்ப கடின நடையமைப்பைக் கொண்ட சோதிடச் செய்யுள்களை அவர்கள் எளிமைப்படுத்தினர். பின்னாளில் அவை நூல்களாக் கப்பட்டன; சோதிட இலக்கியம் என அழைக்கப்பட்டன.

ஆனால் இந்திய சோதிடத் தைப் பொருத்தவரை மூல நூல்களின் கடினநடை எளிமைப் படுத்தப்பட்டபோதும் மூல சோதிட விதிகளில் எத்தகைய பெரிய மாற்றங்களும் அனுமதிக்கப் பட்டதில்லை. இதன்காரணமாகவே இந்திய சோதிடம் அதன் மூலத்தன்மையை இழக்காமல் இதுநாள்வரை வாழமுடிகின்றது. மேலும் வேறெந்த சோதிட மரபுக்கும் இல்லாதச் சிறப்பாக இந்திய சோதிடத்தில் மூல நூல்களும், வழி நூல்களும், விளக்க நூல்களும் முறையாக ஆவணப்படுத்துள்ளன. இதன்வழி இந்திய சோதிடர்களால் இக்கலையை இயன்றவரை மரபுக் கெடாமல் வளர்க்கமுடிகின்றது. இவ்வாறாக மிகத்தொன்மைய கலையாக விளங்கும் சோதிடக் கலையை மூலம் கெடாமல் இன்றைய தலைமுறையும் கற்றுப் பயனுறும் வண்ணம் ஆக்கித்தந்த பெருமை சோதிட ஆசிரியர்களையே சேரும். இந்த ஆய்வு சோதிட ஆசிரியர்களையும் அவர்கள் உரு வாக்கிய இலக்கியங்களாகிய சோதிட நூல்களையும் ஆராய்ந்து ஓர் அறிமுகத்தைத் தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆய்வு முன்னோடிகள் / Literature Review

தற்போதைய இந்த ஆய்வு க்குத் தேவையான தரவுகளைப் பெறுவதற்குச் சோதிடத்துறைச் சார்ந்த பல நூல்கள் வழிகாட்டி யுள்ளன. அவற்றுள் முதன்மையான ஆய்வு முன்னோடிகள் சிலவற்றைக் காண்போம். தி.மகாலட்சுமி 1996ஆம் ஆண்டில் வெளியிட்ட சோதிடவியல் எனும் தலைப்பிலான நூலும், தி.மகாலட்சுமி - கோவி சிவபாலன் 2016ஆம் ஆண்டில் பதிப்பித்த, மலேசியாவில் நடை பெற்ற சோதிடவியல் இரண்டாம் மாநாட்டுக் கட்டுரை தொகுப்பான காலக்கணித ஆய்வு நூலும் இந்த ஆய்வில் சோதிடக்கலையின் வரலாறு சார்ந்த கருத்துகளைப் பெறுவதற்குப் பெரிதும் உதவின. நடேச சாஸ்திரிகள், 1998இல் வெளியிட்ட பிருஹத் ஜாதகம் என்னும் நூல் வடமொழியில் வெளிவந்த சோதிட இலக்கியங்கள் குறித்தப் பகுதியை இந்த ஆய்வில் நிறைவு செய்வதற்குத் துணை செய்தது. Müller, A. என்பவரால் 1990இல் எழுதப்பட்ட Planetary Influences on Human Behavior: Absurd for a Scientific Explanation? எனும் கட்டுரை மனிதகுலத்தின் மீது கோள்கள் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து விவரிக்கின்றது. சோதிட நம்பிக்கையைப்பற்றிய ஒரு பொதுவான புரிதலுக்கு இத்தக வல்கள் உதவின. இதே நோக்கத்து க்கு Cajochen, Christian மற்றும் பலர் 2013இல் வெளியிட்ட Evidence that Lunar Cycle Influences Human Sleep எனும் கட்டுரை துணைசெய்தது. மு. மாதேஸ்வரன் என்பவர் 1997இல் வெளியீடு செய்த சோதிட ஆராய்ச்சித் திரட்டு (பாகம்2) எனும் நூல் தமிழ் மரபில் வந்த சோதிடர்களையும் நூல்களையும் பற்றிய பயனுள்ள கருத்துகளை முன்வைக்கின்றது. B.V. Raman, 1992இல் எழுதிய Hindu Astrology and The West எனும் நூல் பல்வேறு காலக்கட்டங்களில் இந்திய சோதி டம் அடைந்து வந்துள்ள மாற்றங்களை எடுத்துரைக்கின்றது. வடமொழி மற்றும் தமிழ் மொழியில் வெளிவந்துள்ள சோதிட நூல்களைப் பற்றி அறிந்துகொள்ள அக்குறிப்பு கள் உதவின. புலியூர் பாலுவின் 50 ஜோதிட ஆராய்ச்சி கட்டுரைகளின் தொகுப்பு நூல் இந்த ஆய்வு தொடர்பான பரவலான தகவல்களைப்பெற வழிசெய்தது.

## ஆய்வு நெறி / Methodology

இவ்வாய்வு தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியை அடிப்படை யாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது. சமூகவியல், பண்பாடு, உளவியல் சார்ந்த துறைகளை ஆய்வு செய்வதற்கு இந்நெறி ஏற்புடையதாகும் (Sabith Marican, 2005, p.12). தரப்பகுப்பாய்வு முறையில் ஆய்வுப்பொருளின் உள்ளடக்கக் கருத்துகளின் உண்மை நிலையைக் கண்டறிய இயலும் (இராசேந்திரன் - சில்லாழி, 2017, pp.55). தரப்பகுப்பாய்வு ஆய்வு முறையானது விளக்கமுறைக்கு (interpretation) ஏதுவாகின்றது.

விளக்கமுறையின் வழி, சேகரிக்கப் படும் தரவுகள் யாவும் சூழல், கருப்பொருள், நோக்கம் ஆகிய முக்கூறுகளின் அடிப்படையில் ஆராயப்படும். தரப்பகுப்பாய்வு முறையில் நான்கு நடவடிக்கைகள் பின்பற்றப்படும் (Lawrence Neuman, 2007, p.122). அவை பின்வருமாறு அமைகின்றன. ஆராய்ச்சி ஆவணங்களை அடை யாளம் காணல் (identification and documentation), தரவுகளை ஆராய் ந்து பகுத்தாய்தல் (investigation and compartmentalization), செயல்முறை விளக்கத்துடன் பகுத்தாய்தல் (interpretation and analysis), தரவுகளை ஒருங்கிணைத்து ஆய்வின் முடிவுகளைக் காணல் (intergration and conclusion).

## சோதிடம்

சோதிடம் என்பது கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் போன்ற பலன்களை எடுத்தியம்பும் ஒரு கலையாகும். சோதிடம் வழி, எந்தெந்தக் காரியத்தை எந்தெந்த நேரத்தில், எந்தெந்த முறைப்படி செய்ய வேண்டும்; அதனால் எவ்விதப் பலன்கள் கிட்டும் என்பதைச் சோதிடம் தெரிவிக்கிறது (ரிஷபானந்தர், 1999, ஜீ.4). பண்டைக்காலத்தில் வேள்வி, பூசை, தவம் போன்றவற்றைச் செய்ய ஏற்ற கால நேரங்களையெல்லாம் தேர்ந் தெடுப்பதற்கான சிறந்த கலையாக உதவியது சோதிடக்கலை.

சோதிடத்தின் வாயிலாக, அவரவர்கள் தங்களிடம் புதைந்து ள்ள ஆற்றலை உணர்ந்து அதற்கேற்றத் தொழில்களிலும், இதர நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியும் (மேலது). மேலும், கிரகங்களின் நிலையையும் நட்சத்திரங்களின் நிலையையும் கொண்டு நாம் உலக விவகாரங்களைப் பற்றி முன் கூட்டியே அறியவும் முடியும் (கலைக்களஞ் சியம்தொகுதி 5, 1958,p.260).

இருப்பினும், சோதிடத்தின் மூலம் அனைத்தையுமே கணிக்க முடியாது. ஒருவரின் வாழ்க்கையை ஓரளவு மட்டுமே சோதிடத்தால் கணித்துக் கூற முடியும் என்னும் கருத்தும் உள்ளது. “சோதிடர்கள் கிரகங்களின் அசைவுகளைக் கொண்டு இயன்றவரை பலன்களை முன்கூட்டி அறிவிக்கிறார்கள். ஆயினும், நம்மைப் படைத்த பிரமனைத் தவிர, வேறு யாராலும் திட்டவட்டமாக இதுதான் நடக்கும் என்று கூற முடியாது” என்பார் காளிதாசர் (ராமய்யங்கார், 2000, முன்னுரை).

சோதிடம் மனிதனுக்கு சரியாக வாழ்வதற்குரிய வழியைக் காட்டி அவனைப் பக்குவப்படுத்து கின்றது. இருள் சூழ்ந்த பாதையில் நடந்து செல்பவனுக்குச் சூரியனின் கதிரொளி பாதை காட்டுவதுபோல மனிதன் செம்மையுற வாழ்வதற்குச் சோதிடம் பாதை காட்டுகின்றது. சோதிடக்கலையை அறிந்தவர்கள் கோள்களின் நியதியை மனந் துணிந்து ஏற்றுக்கொள்வதோடு பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம் ஆகிய நற்குண நற்செயல் களால் தன்னைப் பற்றியிருக்கும் தீவினைகளைப் போக்கிக் கொள்ள தயாராகின்றனர். மனிதன், தனக்கு வரும் நன்மைக்குரிய காலத்தை முன்னரே அறிந்து வைத்துக் கொண்டு தன் வாழ்க்கையை மேலும் வளப்படுத்திக் கொள்ளவும், துன்ப காலத்தில் மனம் துவண்டு விடாமல் தனக்கு அமைந்துள்ள வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு வாழவும் சோதிடக்கலை துணை புரிகின்றது. இக்கலை, இயற்கை யின் அளப்பெரும் ஆற்றலை மனிதனுக்கு உணர்த்தி, இறை வனின் திருவடியே கதியென சரணடையச் செய்கின்றது. மனிதன் துன்பங்களுக்கு ஆட்பட்டுவிடாமல் வாழ்க்கைப் பாதையைக் கடந்து வந்து மன நிம்மதி பெறுவதற்கும் இக்கலை வகை செய்கின்றது. இதன்வழி சோதிடம் என்பது மனிதனின் கருமவினைக் கணக்கை ச் சொல்லுகின்ற கலை என்பதைப் புரிந்துகொள்ளவியலும்.

சோதிடரும் சோதிட நூல்களும்: ஓர் அறிமுகம் சோதிட க்கலை மக்களிடையே பரவுவதற்கு சோதிடர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். அக்கால த்தில் மன்னர்களும் கூட இக்கலையில் சிறந்து விளங் கியுள்ளனர். பண்டைய காலத்துச் சக்கரவர்த்தி கள், பேரரசர்கள், பெருநில குறுநில மன்னர்கள் எல்லாம் தமது அரசவைகளில் அரசவை சோதிடர் களை அமர்த்திக் கொண்டுள்ளனர். அவர்களின் மதியுரைப்படி அரசாட் சியைத் திறம்பட

நடத்தினர் என்ற குறிப்புகளும் நமது இலக்கியங்களில் காணப்படுகின்றன (மகாலட்சுமி,1996, ஜீ.19). போர்க் காலங்களில், கிரக நிலைகளை ஆராய்ந்து அதற்குத் தக்கபடி தமது போர் நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டு வெற்றி கண்டிருக்கின்றனர் அக்கால மன்னர்கள் (மேலது). மேலும், சமாதான காலங் களில், நாட்டில் சோதிடக்கலை அறிவை பரப்பு வதிலும் வளர்ப்பதிலும் ஈடுபாடு கொண்டு வளரச்செய்திருக்கின்றனர் (புலியூர் பாலு, 1997, p. 35).

சோதிடத்தைப் பொருள் ஈட்டித் தரும் தொழிலாக மட்டும் பாராமல் முழு ஆர்வத்தோடும், இறைச்சிந்தனையோடும் மேற்கொண்டுள்ளனர். சோதிடம் பார்க்க வரும் சாதகருக்குரிய பலன்களை உள்ளது உள்ளவாறே எடுத்தியம்பி வந்தனர் அக்கால சோதிடர்கள். அக்காலத்தில், சோதிடர்களின் வாக்கு பொய்யாகாது என்ற பெரும் நம்பிக்கையுடன் இந்தியர்கள் இருந்து வந்தனர். எனவேதான், சோதிடர்களைத் தீர்க்கதரிசிகள் என்று அழைத்தனர். இந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் சோதிடம் இன்றளவும் பேணி காக்கப்பட்டு வந்துள்ளது எனலாம்.

சோதிடக்கலை தொடங்கிய காலத்தில், சோதிட ஆசிரியர்களாக சித்தர்களும் இருடிமார்களுமே (ரிஷி) இருந்துள்ளனர். மொத்தம் 18 சித்தர்கள் இந்துக்களின் சோதிட ஆசிரியர்களாக இருந்திருக்கின்றனர். இவர்களே சோதிடவியலுக்கு முதல் நூல் இயற்றினர். இவர்கள் இயற்றிய மொத்தச் சுலோகங்கள் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் என்று ‘சாதக அலங்கார’த்தின் பாயிரம் குறிப்பிடுகிறது (மகா லட்சுமி - சிவபாலன், 2016, ஜீ.56). சி.சி. இராசன் என்பவர் துருவன், சயமுனி, கர்க்கர், வியாசர், சத்தியாச்சாரியார், மணித்தர் ஆகியவர்களால் சோதிட மரபு வந்தது என்று குறிப்பிடுகின்றார் (வாழ் வியல் களஞ்சியம் தொகுதி 9,1988, p.642).

சித்தர்களும் இருடிமார்களும் கடவுளின் அருளாலும், தங்களின் தவ வலிமையாலும் முக்காலமும் உணர்ந்தவர்களாக விளங்கினர். அவர்களே மக்களின் நல்வாழ்வு களுக்காகச் சோதிடத்தைக் கணித்துக் குறித்து வைத்திருந்தனர். இவ்வாறு இவர்கள் சோதிடத்தைப் பற்றி எழுதி வைத்திருந்த குறிப்புகள்தான் பிற்காலத்தில் பல சோதிடர்களும் சோதிட நூல்களும் உருவாவதற்குக் காரணமாக இருந் திருக்கின்றன. பழங்காலம்தொட்டே சோதிடம் தொடர்பாக பல நூல்கள் வெளியாகியுள்ளன. வரலாற்றுக்கு முந்தையகாலத்தைச் சேர்ந்த வசிட்டர், கார்க்கி, பராசரர், கௌதமர், ஜெயமுனி, சுகர் போன்ற இருடிகள் பல சோதிட நூல்களை வெளியிட்டனர். பிற்காலத்தில் வராஹமிஹிராசாரியார், பட்டோத் பவர், சத்யாசாரியார், வெங்கடேசர், வைத்தியநாத தீட்சிதர் போன்றோர் முன்னவர்களின் நூல்களை அடித் தளமாகக் கொண்டு பற்பல சோதிட நூல்களை எழுதினர். பெரும்பாலான நூல்கள் சமஸ்கிருத மொழியிலேயே உள்ளன. இவ்வாறு இவர்கள் இயற்றிய நூல்கள் பல அழிந்து விட்டன. அவற்றின் சிறு பகுதிகளே கிடைத்துள்ளன. தமிழ் மொழியிலும் பல சோதிட நூல்கள் இருக்கின்றன. அவற்றுள் பல வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை; சில நூல்கள் நேரடியாக தமிழில் எழுதப்பட்டவை. வடமொழியிலு ள்ள சோதிடமூல நூல்களையும், வழி நூல்களையும், விரிவுரை நூல்களை யும் மூல நூல்களாகக் கொண்டு தமிழில் பல சோதிட நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இனி, வட மொழியிலும் தமிழிலும் எழுந்த சோதிட நூல்களையும் சோதிட ஆசிரியர்களையும் குறித்து விரிவாகக் காண்போம்.

## தமிழ் மரபில் சோதிட ஆசிரியர்களும் நூல்களும்

தமிழில் வந்த சோதிட நூல்கள் சோதிடனுக்குரிய இலக்கணத் தையும், கடமைகளையும், பெரு மைகளையும் பலபட இயம் புகின்றன. அரசவை மட்டுமின்றி ஆலயங்களிலும் தனியாகச் சோதிடர் இருந்தனர். அவர்கள் ஆலய நிகழ்வுகளை மட்டுமே கவனிப்பர். ஆண்டுதோறும்,

அரசவையிலும் கோயில்களிலும் பஞ் சாங்கம் படிப்பது ஒரு பழக்கமாக அந்நாளில் இருந்துள்ளது (சரஸ்வதி, 1994, p.97). ஆதியில், அட்சரேகை (Latitude), தீர்க்கரேகை (Longitude) முதலியவற்றைச் சூரியனது நிழலைக் கொண்டு சோதிடரே கணித்தனர் என்பது 'ஜாதக சாகரம்' எனும் நூலினால் அறியலாகும் செய்தியாகும்(மகாலட்சுமி, 1996, p.169).

மேலும், 'சாதக அலங்காரம்' என்னும் நூல், ஊர்களின் அட்சரேகை, தீர்க்கரேகை, காலநிர்ணயம் முதலியவற்றை அறிந்திருத்தல், உத்தம குணம், பொறுமை, மனுநீதி, நூலறிவு, பெரியோர்க்கு இணக்கம் முதலியன சோதிடனுக்குரிய தகுதிகள் எனக் கூறுகிறது (மேலது). இதன்வழி, சோதிடன் என்பவன் நிரம்பிய அறிவுடையவனாக இருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. சோதிடர்களின் பெருமைகளை நமது இலக்கியங்கள் பலவாறாக எடுத்துக் கூறியுள்ளன.

பொதுவாக, சோதிடத்தைக் கணித்துக் கூறுபவரைச் சோதிடர் என்பர். சோதிடரைக் குறிக்க அந்நாளில் 'அறிவன்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் சோதிடரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதைப் பின்வரும் நூற்பாவினால் அறியமுடிகிறது. "மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயம் நாவிரு வழக்கில் தாபதப் பக்கமும் பாலறி மரபில் பொருநர் கண்ணும்" (புறத்திணை.16)

இப்பாடலுக்கு, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூவகைக் காலத்தையும் நெறியோடு முழுமனதுடன் உணர்ந்தவர் என்றும் இல்லற வாழ்க்கையைத் துறந்து தவம் செய்யும் முனிவர் என்றும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். மேலும், உரையாசிரியர் இளம்பூரணர், அறிவன் என்பது கணியனைக் குறிக்கும் என்பார் (மகாலட்சுமி, 1996, ஜீ.117). இதுவன்றி இன்னும் பல பாடல்களின் மூலம் தொல்காப்பியர் காலத்திலும் சங்ககாலத்திலும் சோதிடர்கள், அறிவன், அறிவர் என்ற சொற்களால் குறிக்கப்படுவது மட்டுமின்றி இவர்கள் முனி வர்களாகவும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டவர்களாகவும் இருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.

மேலும், 'கணி', 'கணிகள்', 'கணியன்', 'கணியான்', 'கணிவன்' என்றெல்லாம் சோதிடர்கள் அழைக் கப்பட்டுள்ளனர் (மேலது,p.120). கணி என்பதற்குச் சோதிடன் என்று செந்தமிழ் அகராதியும், சோதிடம் என்று சங்க இலக்கியப் பொருட் களஞ் சியமும் பொருள் தருகின்றன (சாரங்கபாணி, 1986, ஜீ.95)

தவிர, தமிழ் இலக்கியங்களான பெருங்காப்பியங்கள், சிறுகாப்பி யங்கள், இலக்கண நூல்கள், பக்தி இலக்கியங்கள், புராணங்கள் போன்றவை சோதிடரைக் குறிக்கக்'கணி' என்ற சொல்லையே பரவலாகக் கையாண்டுள்ளன. கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் சங்ககாலச் சோதிடர்களில் ஒருவராகத் திகழ்ந்திருக்கின்றார் என்ற குறிப்பும் கிடைக்கப் பெறுகிறது (மகாலட்சுமி, 1996, p.121). இங்கு, கணியன் பூங்குன்றனார் என்னும் பெயரில் வரும் 'கணியன்' என்னும் சொல் அவர் ஒரு சோதிடர் என்பதனை உறுதிச்செய்கிறது.

சோதிடரைக் குறிக்கும் வகையில் 'பஞ் சவர்' என்ற சொல்லும் காப்பிய காலத்தில் நிலவி வந்திருக்கிறது. பன்னிரண்டு மாதமும் கோள்கள் நிற்கும் நிலையினை நன்கு கற்றறிந்த கணித நூல் வல்லுநர் அன்றிருந்தனர். அக்கணித நூலுக்குரிய திதி, வாரம், நாள், யோகம், கரணம் என்னும் ஐவகை உறுப்புகளின் இலக் கணங்களை அறிந்திருந்ததால், அவர்களைப் பஞ்சவர் என்றும் பண்டைத்தமிழர் அழைத்தனர் (மேலது,ஜீ.130). மேலும், ஆட்சி, உச்சம், பகை, நீச்சம், சமம் என்ற ஐந்து நிலைகளையும் நுட்பமாய் அறிந்து கூறுவதாலும் இவர்களைப் பஞ்சவர் என்று கூறுவதுமுண்டு.

இதுவன்றி, கோளர், குறிக்கோளாளர், காலக் கணிதர், அந்தணர், நிமித்தகர், நாழிகைக் கணக்கர் என்று இன்னும் பல பெயர்களாலும் சோதிடர்கள் குறிப்பிடப்படுகின்றனர் என்பது நமது இலக்கியங்கள் வழி அறியப்படும்

செய்திகளாகும் (சாரங் கபாணி, 1986, p.81). அக்காலத்தில் சோதிடர்கள் மக்களிடையே நன்மதிப்பையும் முக்கியத்துவத்தை யும் பெற்றிருந்தனர் என்பதனை இது காட்டுகிறது. கீரனூர் நடராஜன் என்பவர் தமிழில் சோதிட நூல்கள் இயற்ற காரணமாக இருந்தவர் எனலாம். கீரனூர் நடராஜன் கி.பி. 1725ஆம் ஆண்டுக்கு முன்பு வடமொழியி லுள்ள ‘ஹோராசாரம்‘, ‘சாராவளி’, ‘பராசாரியம்‘, ‘சந்தான தீபம்‘, ‘பிருகத் சாதகம்‘, ‘சருவார்த்த சிந்தாமணி’, ‘மணிகண்ட கேரளம்‘, ‘சம்புநாதம்‘ போன்ற பல கிரந்தங்களின் உட்பொருளைத் திரட்டி ‘சாதக அலங்காரம்‘ என்ற பெயரில் விருத்தங்கள் என்னும் செய்யுள் வடிவில் வெளியிட்டுள் ளார். அவர் இயற்றிய இந்நூலுக்கு, கோவை மாவட்டம் அனுப்பப் பாளையம் திரு.ஆ.சி.ரா.முருகைய சோதிடர் விரிவுரை எழுதி ‘சாதகலங்காரம்‘ என்ற பெயரிலேயே கி.பி.1900ஆம் ஆண்டில் வெளி யிட்டார். அது தான் தற்சமயம் தமிழ் மொழியிலுள்ள சோதிட நூல்களுக்கு எல்லாம் சிகரமாகத் திகழ்கிறது (மாதேஸ் வரன், 1997, p.170). தமிழ்ச் சோதிட நூல்களில் தலை சிறந்த நூல் ‘சாதக அலங்காரம்‘ எனலாம்.

இதைத்தவிரச் சாதக சிந்தாமணி, குமாரசுவாமியம், நாரதர் சோதிடம், கார்க்கேயர் சோதிடம், மாணிக்கக் கணித சோதிட முருகசேகரம், நந்தி வாக்கியம், வராகர் ஓராசாத்திரம், பூர்வப் பராசரியம், அகத்தியர் காண்டம் போன்ற நூல்கள் தமிழில் குறிப்பிடத்தக்கவை.

## வடமொழி மரபில் சோதிட ஆசிரியர்களும் நூல்களும்

வட இந்தியர்களிடயே சோதிடக் கலை வேதகாலந்தொட்டு மிகப்பெரிய செல்வாக்கைப் பெற்று ள்ளது. தென்னிந்தியர்களோடு ஒப்பிடுகையில் வட இந்தியர்களின் சோதிட நம்பிக்கை நீண்ட நெடிய பாரம்பரியத்தைக் கொண்டது. இந்த மரபில் வந்த சோதிடர்கள், சோதிட நூல்களின் எண்ணிக்கை பெரிய தாகும். வட இந்தியாவில் சோதிட சாத்திரத்தை வகுத்து நடத்தியவர்கள், சுவாயம்புமனு, சுவாரோசிஷன்மனு, உத்தமன்மனு, தாமசமனு, ரைவதன்மனு, சாசுஷன்மனு, வைவசுதனமனு, சாவர்ணிமனு, தஷசாவர்ணிமனு, பிர்ம்மசாவர்ணிமனு, தர்மசாவர்ணி மனு, ருத்திரசாவர்ணி மனு, ரவுச்யன்மனு, பவுத்யன்மனு முதலான பதினான்கு மனுக்கள் ஆவர்(மகாலட்சுமி, 1996, p.1011).

வடமொழி சோதிட ஆசிரி யர்களுள் வராஹமிஹிராசாரியார் மிகவும் முக்கியமானவர். இவர் காலத்துக்கு முன்பே சித்தர்களும் ரிஷிகளும் சோதிடம் தொடர்பான பல நூல்களை இயற்றியுள்ளனர். அவர்கள் இயற்றிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு வராஹ மிஹிராசாரியார் பல நூல்க ளைப் படைத்தார் (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 9, 1988, p.642). இவரே சோதிட ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோ டியாகத் திகழ்கின்றார். வராஹமிஹிராசாரியார் வான ஆராய்ச்சியிலும் சோதிடத்திலும் சிறந்தவர் ஆவார். அவர் குப்தப் பேரரசர்களின் ஆட்சிக்காலத்தில் கி.பி.4 அல்லது 5ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார் (லேனா தமிழ் வாணன்,1990,p.12). இருப்பி னும், அவருடைய காலத்தை வரையறுத்துக் கூறுவதில் பலர் பல கருத்துகளைக் கூறுகின்றனர். வரா ஹமிஹிராசாரியார் விக்கிரமாதித் தன் அவைக்களச் சோதிடராகவும் விளங்கியுள்ளார் என்பதனை சில ஆய்வுகள் காட்டுகின்றன. பிருகத் ஜாதகத்தின் 28ஆவது அத்தியாயத் தில் 9ஆவது சுலோகத்தில் அவருடைய காலம் மற்றும் சரித்திரம் போன்ற குறிப்புகள் சில கிடைக்கின்றன. அதாவது, இவருடைய தந்தை பெயர் ஆதித்யதாஸர் என்றும், அவர் பிறந்த ஊர் அவந்தீ என்றும், சூரிய மூர்த்தியிடமிருந்து அருள் பெற்றவர் என்றும் அவ்வத்தியாயத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. மேலும், இவரு டைய காலம் சாராவளி இயற்றிய கல்யாணவர்மாவுக்கும் முன்னமே என்ற குறிப்பும் கிடைக்கிறது.

இவர் இயற்றிய நூல்கள், பிருஹத்ஜாதகம், பிருஹத்சம்ஹிதை, பிருகத் யாத்திரை, பஞ்ச

சித்தாந்தம், லகு ஜாதகம், பிருஹத் விவாக படலம் போன்றவை ஆகும். இவர், தமது 'பிருஹத்சம்ஹிதா'வில் வேறு தேசத்தாரால் மேஷம் முதல் மீனம் வரையுள்ள பன்னிரண்டு இராசிகட்கு இடப்பட்ட பெயரைத் தாமும் ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளார் (வாழ்வியல் களஞ்சியம்தொகுதி 9, 1988, p.642). இக்கூற்றானது, வராஹ மிஹிராசாரியாரின் காலத்திற்கு முன்பே பல சோதிட நூல்கள் பிற நாட்டிலும் இருந்திருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்றது. வராஹமிஹிராசாரியாரின் நூல்களுக்கு ஸ்ரீபதிபட்டாச்சாரியார் என்பவர் விளக்கவுரை எழுத்தியுள்ளார். இது, 'சிரிபதி பத்ததி' (Sripathy System) எனப்படுகின்றது (ரிஷபானந்தர், 1999, p.13). இந்து தெய்வப் பெயர்களும் வருணப் பகுப்புகளும் சிரிபதி முறையில் சேர்க்கப் பெற்றுள்ளமையால், 'இந்து முறைச் சோதிடம்' என்றும் இந்நூலுக்குப் பெயரிடப் பெற்றுள்ளது (வாழ்வியல் களஞ்சியம்தொகுதி 9, 1988, p.642).

அக்காலக்கட்டத்தில் நிறைய 'சங்கிதை' மற்றும் 'ஓரை' நூல்கள் நிறையவே வந்துள்ளன. இங்கு, சங்கிதை மற்றும் ஓரை என்ற சொல் சோதிடத்தையே குறிக்கிறது. வராஹமிஹிராசாரியாருடைய காலத்துக்குமுன் கர்கர், பராசரர், அசிதர், தேவலர், விருத்தகர்கர், கச்யபர், பிருகு, வசிஷ்டர், பிருகஸ்பதி, மநு, மயர், சாரஸ்வதர், ரிஷிபுத்திரர் போன்றவர்கள் 'சங்கிதை' மற்று 'ஓரை' நூல்கள் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஓரை நூல்களுள் நாடி நூல்கள் என்று மற்றொரு வகையும் உண்டு. சத்யாசாரியர், சுக்ராசாரியர் முதலி யோர் சமஸ்கிருதத்தில் இவ்வகை நூல்களை இயற்றி யுள்ளனர்.

'சங்கிதை ஸ்காந்தத்'தின் ஒரு பகுதியான 'முகூர்த்த'ப் பகுதி, வராஹமிஹிராசாரியாருடைய காலம்தொட்டே அதன் முக்கியத்து வத்தை அறிந்து, தனிப் பிரிவாகப் பிரித்து, அதன் தொடர்பாக பல நூல்கள் எழுதப்பெற்றன என்று குறிப்புகள் காட்டுகின்றன. கர்ப்பா தானம் முதலிய சடங்குகளுக்கும், பிரயாணங்களுக்கும், வாங்கல், விற்றல், உழவு, அறுவடை முதலிய செயல்களுக்கும் திருமணப் பொருத் தங்களையும், சுபாசுபங்களில் விலக்க வேண்டிய காலங்களையும் முகூர்த்த நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு, வராஹமிஹிராசாரி யாருடைய காலத்திற்கு முன்னும், அவருடைய காலக்கட்டத்திலும் நிறைய சோதிட நூல்கள் வெளிவந்துள்ளன.

வராஹமிஹிராசாரியாருக்குப் பின் பல சாஸ்திர விற்பன்னர்கள் தோன்றி பல நூல்களை அளித்துள்ளார்கள். அவற்றுள் பெரும்பாலானவை அவருடைய பிருகத் ஜாதகத்தையே மூல நூலாகப் பயன்படுத்தி உள்ளன. பாஸ்கராச்சார்யா, ஆரியபட்டர் போன்ற வான ஆராய்ச்சி நிபுணர்களும் சோதிடவியல் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளனர். பூமி உருண்டை வடிவானது என்பதையும், அது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றி வருவதையும் பல ஆராய்ச்சிகளின் மூலம் இவர்கள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

குப்தப் பேரரசு காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் ஆரிய பட்டர், வான சாத்திர ஆராய்ச் சியில் ஈடுபட்டு, கோள்களின் நிலைகளைக் கண்ட றிந்து, உலகத்திலேயே முதன் முதலில், 'பஞ்சாங்கம் போடும்' முறையைக் கண்டறிந்து, முதல் பஞ்சாங்கத்தை வெளியிட்டார் (லேனா தமிழ்வாணன், 1990, ஜீ.12). வான சாஸ்திரம், பஞ்சாங்கம் போன்ற துறைகளுக்கு ஆரியபட்டர் ஒரு வழிகாட்டியாக இருந்ததைப் போற்றும் வண்ணம், இந்தியா பறக்கவிட்ட முதல் விண்வெளிக் கப்பலுக்கு ஆரியபட்டர் என்ற பெயர் சூட்டப்பட்டது. இவருடைய காலம் கொப்பர்னிகஸ் (Coppernicus-15th century) என்ற வானியல் நிபுணரின் காலத்திற்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் என்ற கருத்தும் காணப்படுகிறது(Raman, 1992, p.244). அவருடன் கூட்டாகச் சேர்ந்து செயல்புரிந்தவர் வராஹமிஹிராச்சாரியார் என்று சொல்லப்படுகிறது (மாதேஸ்வரன், 1997, p.15). இதைத் தவிர்த்து, ஆரியபட்டர் எழுதிய 'சூரிய சித்தாந்தம்' என்கிற பழைய சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், பிற்கால த்தில்

கண்டுப்பிடிக்கப்பட்ட பல வானாராய்ச்சி உண்மைகளைத் துல்லியமாகப் பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்பே நமது முன்னோர்கள் எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள் என்னும் உண்மை புலனாகின்றது.

'சாராவளி' என்ற மற்றொரு சோதிட சாஸ்திர மூலகிரந்தத்தை வட மொழியில் எழுதி வெளியிட்டவர் கல்யாணவர்மா ஆவார். கல்யாணவர்மா, கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்(மேலது,p.13). பிரம்ம குப்தா மற்றும் பாஸ்கரா போன்ற வானாராய்ச்சியாளர்களும் வானவி யல் நூல்களை எழுதி யுள்ளனர் (மகாலட்சுமி, 1996, p.16).

வராஹமிஹிராசாரியார், ஆரியபட்டர் போன்றவர்களின் காலத்திற்கு முன்பே கூட பல சோதிட நூல்கள் வெளியாகியுள்ளன என்பதனை மேலே கண்டோம். அதாவது, பராசர முனிவர் என்பவர் சோதிடக்கலைக்குச் சீரிய வடிவம் கொடுத்து 'பராசர ஹோரா' என்ற நூலை இயற்றினார் என்றும், இவரது காலம் 6000 ஆண்டுகளுக்கு முன்பு என்றும் குறிப்புகள் கூறுகின்றன (மேலது). மேலும், உஜ்ஜயினியை ஆண்ட விக்ரமாதித்த மாமன்னரின் அரசவையில் உள்ள காளிதாச மகாகவி, 'கலாமிர்தம்', 'சோதிட விதபரணா' போன்ற நூல்களை இயற்றினார் (சுப்பிரமணியன், 1998, ஜீ.269). அவரது காலம் கி.மு. 128 என்று கூறப்படுகிறது. விக்கிரமாதி த்தனின் காலக்கட்டத்தில் பல இந்தியச் சோதிடர்கள் பஞ்சாங்கம் கணித்தனர் என்பது தெரிகிறது. மயன், மணித்தர், சத்யாச்சாரி ஆகியோர், முதல் பதினெட்டு நூலாசிரியர் உருவாக்கித் தந்த நூல்களின் அடிப்படையில் சோதிடக் கலையைப் பற்றி எழுதினர். ஆனால், இந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை (வாழ்வி யல் களஞ்சியம்தொகுதி 9, 1988, ஜீ.642). அடுத்து, பராசரர், மாண்டவியர், கார்கி, பாதராயணர், யாஞ்ஞ வல்கியர் முதலிய முனிவர்களும், மந்திலர், தேவ கீர்த்தி, கனகாசாரியர், மயர், யவனர், மணித்தர், சக்தி, சத்யர், சீவசர்மா, விஷ்ணுகுப்தர், சித்தசேனர் முதலியோரும் வராஹமிஹிராசாரியார் காலத்திற்கு முன்பே ஓரை நூல்களை எழுதியிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், இவற்றில் சில மட்டுமே வழிநூல் உருவில் கிடைக்கின்றன. எவ்வாறாயினும், இந்தியர்களின் முதல் சோதிட நூல்கள் எது; முதல் பஞ்சாங்கம் எது என்ற குறிப்பு தெளிவுப்படுத்தப் படவில்லை.

முஸ்லிம் ஆட்சி வட இந்தியாவில் ஏற்பட்ட பின்னர் அராபியருடனும் பாரசீகருடனும் வட இந்தியர்களுக்கு தொடர்பு ஏற்பட்டு, அதன் விளைவாக ஓரைப்பகுதியில் தாஜிகம் (Tajika) என்ற ஒருவகை நூல்கள் எழுதப்பெற்றன. தாஜிக நூல் வகைகள், 13ஆம் நூற்றாண்டின் பார்சி மொழி வழியாக அராபிய மொழிக்கு வந்து, அதன்பின் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க் கப்பட்டவையாகும். சாதகத்தைக் கொண்டும், குறிப்பிட்ட ஆண்டின் கிரகசாரத்தைக் கொண்டும், தனி மனிதன் அவ்வாண்டில் அடையும் பலன்களைக் கூறுவது இதன் நோக்கம் ஆகும். இம்முறை வட இந்தியாவில் மிகுதியாகக் கையாளப்பெறுகிறது.

ஆக மொத்தத்தில், தற்கால நடைமுறையில் உள்ள பல்வேறு சோதிட நூல்களுக்குகெல்லாம் கீழ்க்காணும் மூன்று நூல்களே முன்னோடியாக இருந்துள்ளன எனக் கூறலாம். அவை பின் வருமாறு:

அ) வராகமிஹிராச்சாரியார் எழுதிய பிருகத் ஜாதகம்

ஆ) கல்யாணவர்மா எழுதிய சாராவளி

இ) கீரனூர் நடராஜன் எழுதிய சாதகலங்காரம்

## முடிவுரை

மேற்கண்ட ஆய்வின் வழியாக சில கருத்து முடிபுகள் கண்டறியப்பட்டுள்ளன. வட இந்தியர்களின் சோதிட நம்பிக்கை மரபு மிகப்பழமையானது. தென்னிந் தியர்களின் சோதிட இலக்கியங்கள், வடமொழி சோதிட இலக்கியங் களை அடிப்படையாகக் கொண் டெழுந்தவையாகும். ஆதியில் சித்தர் களும் இருடிகளும் சோதிடக் கலையை உருவாக்கி அளித்தனர். கடினநடையில் இருந்த மூல

சோதிட நூல்களைப் பின்னாளில் வந்த சோதிட ஆசிரியர்கள் எளிமைப் படுத்தினர். இதனால் மூல நூல்களிலிருந்து வழிநூல்களும் விளக்க நூல்களும் நிறைய உருவாகின. முன்னாளில் வாழ்ந்த சோதிடர்கள் அறநெறி பிறழாது வாழ்ந்தனர். இந்நாளிலும் சோதிடக் கலையில் பலர் ஈடுபட்டு வருகி ன்றனர். ஆயினும் இவர்களது ஈடுபாடு பெரும்பாலும் பொருளா தாரத் தேவையைச் சார்ந்ததாகவே உள்ளது. இவர்கள் தொழில்முறைச் சோதிடர்களாகவும், பகுதி நேரச் சோதிடர்களாகவும் உள்ளனர். இவர்கள் அவ்வப்போது தங்களது அனுபவங்களை உள்ளடக் கியும், மூலசோதிட நூல்களிலுள்ள சில கூறுகளை எளிமைபடுத்தியும் சிறு சிறு நூல்களாக வெளியிட்டு வருகின்றனர். அறநெறியைக் கைக் கொண்டால் இன்றைய சோதிடர் களும் அவர்களது இலக்கியப் படைப்புகளும் மக்களிடம் மதிப்புப் பெறும்.

## References


*Britannica Concise Encyclopedia-Tamil Edition*. (2007). (Vol.3). New Delhi: KM Thomas Pvt. Ltd.

Ganesan, B.,C. (2001). *Jothidam-Oru Vinyanak Kalaiya?.* Chennai: Sura Books (Private) Limited.

*Kalaikkalanjiyam*. (1958). (Vol.5) Chennai: Tamil Valaarchi Kalagam.

Lawrance W., Neuman. (2007). *Basics Of Social Research Qualitative And Quantitative Approaches*. USA: Pearson.

Lena Tamilvanan (ed.). (1990). *Kiragangal Pesukinrana*. Chennai: Manimegalaip Pirsuram.

Mahaletchumi, T. (1996). *Ilakkiyattil Sothidaam*. Chennai: Ulagat Tamilaraaychi Niruvanam.

Mahaletchumi, T. (1996). *Sothidaviyal*. Chennai: Ulagat Tamilaraaychi Niruvanam.

Mahaletchumi, T. & Sivapalan, G. (eds.). (2015). *Anaittulaga Vaniyal Marrum Sothida Manadduk Karuttaranggak Kadduraigal*. Chennai: Tamilp Panpaaddup Pathippagam.

Mahaletchumi, T. & Sivapalan,G. (eds.). (2016). *Kaalakkanitha Ayvu – Malaysiyavil Nadaaiperra Sothidaviyal irandaam Manadduk Kadduraigal*. Chennai: Tamilp Panpaaddup Pathippagam.

Matheswaran, Mu. (1997). *Sothida Araychit Tiraddu (Pagam-2)*. Koyamuttur: Vijaya Pathippagaam.

Muller, A. (1990). "Planetary Influences on Human Behavior: Absurd for a Scientific Explanation?", *Journal of Scientific Exploration*, (Vol. 4, No. 1, pp.85-104).

Nadesa Sastrigal. (1998). *Brigat Jathagam*. Chennai: Kadalaangudi Publications.

Puliyurbalu. (1997). *50 Jothidaa Araychi Kadduraigalin Toguppu*. Chennai: Bharathi Pathippagam.
Rajantheran, M & Silllalee, K. (2017). "The Deities of Sangam People Through Purananuru", *Journal of Tamil Peraivu*. (Vol. 5, pp.53-64). ISSN 2289-8379.

Ramaiyangar. (2000). *Kudumba Jothidam*. Chennai: Bharathi Pathippagam.

Raman, B.,V. (1992). *Hindu Astrology and the West*. New Delhi: UBS publishers Distributors.

Rishabananthar. (1999). *Bhogam Tarum Enkanitha Sastiram*. Chennai: Anuragam Pathippagam.

Sabitha Marican. 2005. *Kaedah Penyelidikan Sains Sosial*. Petaling Jaya: Pearson / Prentice Hall.

Saraswathy, K.,N. (1994). *Jothida Anubhava Araycchi Kadduraigal*. Chennai: Kadalaangkudi Publication.

Saminathaiyar, U.,Ve. (1957). *Pathirruppattu Mulamum Palaiya Uraiyum*. Chennai: Kabeer Acchukkudam.

Sarangabhani, Ira. (1986). *Sanga Ilakkiya Porut Kalanjiyam.* (Vol. 2). Thanjavur: Tamilppalkalaikalagam.

Shangkar, Ve. (2002). *Jothish Nyanam*. Puthuchery: Nanmolip Pathippagam.

Singaravellu Muthaliyar. (1881). *Abhitana Sinthamani*. Chennai: Asian Educational Services.

Sivathasan, Ravi. (2007). *Nadi Jothida Vilakkangal*. Tammampatti: Sri Aromira Pirasuram.

Sivachandralingam Sundara Raja. (1999). *Tamadun Dunia*. Shah Alam: Penerbitan Fajar Bakti.

Subramaaniayan, S., P. (1998). *Jothidak Kalaikkalanjiyam*. Chennai: Narmatha Pathippagam.

*Tamil Lexicon.* (1982). (Vol III). Madras: Macmillan India Press.

*Vaalviyal Kalanjiyam*. (1988). (Vol. 9). Thanjavur: Tamilppalkalaikkalagam.

# தமிழர் கோயிற்கலை கட்டுமான அமைப்பில் குடைவரைக் கோயில்கள்

முனைவர்.க.சுபாஷிணி / Dr.K.Subashini

***Abstract***

Political changes happened in the ancient Tamil country has witnessed significant variations in culture, religion and arts. Pallava dynasty extended power in the northern and Chola region. The reign of Pallava king Mahendravarman-I (AD 600-630) witnessed change in art and temple architecture. The Mandagapattu rock-cut cave temple built by Mahendravarman-I in Villupuram district is considered the oldest of this kind in Tamil country. According to the Grandha inscription found in the Mandagapattu temple, Mahendravarman built a new type of temple architecture by avoiding materials such as bricks, timbers, metal and mortar which have been used wastly in the temple architecture. Rock-cut temples are also found in the Pandya region built at the same period. This Paper provides insight into several rock-cut temples of $6^{th}$ to $8^{th}$ century A.D. in Tamil Nadu, India. This article highlights the deteriorating present conditions of these temples with the aim to raise awareness for protection.

**Key Words:** Architecture, Cave Temples, Research in inscription Statues, Culture.

## முன்னுரை

கட்டிட கட்டுமானக் கலை என்பது அழகியல் கலையின் ஒரு வடிவம். மனிதர்கள் வசிப்பதற்காக கட்டப்படும் கட்டிடங்களிலிருந்து அலுவல்கள் தொடர்பான பணிகளில் ஈடுபடு வதற்காகக் கட்டப்படும் கட்டிடங் களிலிருந்து வழிபாட்டு மையங்களின் கட்டிட அமைப்புக்கள் மாறுபடும். சமயங்களின் குறியீடுகளை மையப் படுத்தியே வழிபாட்டு கட்டிட கட்டுமானங்கள் அமைகின்றன. தமிழர் பாரம்பரியத்தில் காணப்படுகின்ற வழிபாட்டு மையங்களான ஆலயங் களின் கட்டிட கட்டுமானங்கள் தமிழக நிலப்பரப்பில் தோன்றிய மரபின் நீட்சியாகவே அமைகின்றன. உலகெங் கிலும் உள்ள தமிழர் வழிபாட்டு மையங்களாகத் திகழும் ஆலயங்கள் தமிழர் மரபின் அடிப்படையை ஒற்றிய வகையில் அமைக்கப்பட்டவை.

இந்திய ஆலய கட்டிட அமைப்பு மூன்று பெறும் பிரிவிற்குள் அடங்கும். சிற்பக்கலைஞர்கள் இந்த மூன்று பெறும் பிரிவுகளை நாகரம், வேசரம், திராவிடம் என வகைப்படுத்துவர். நாகரம் எனப் படுவது இந்தியாவின் வட நாட்டில் அமைக்கப்படும் கோயில் கட்டிட வகை. நருமதை ஆற்றுக்கு வடக்கே வட இந்திய நிலப்பகுதியில் அமைக்கப்படும் கோயில்கள் இவ்வகையானவை. அடுத்து வேசரம் எனப்படுவது பண்டைய இந்தியாவில் பவுத்த

The author is a Lead IT Architect, Hewlett-packard Germany & President of Tamil Heritage Foundation (International Organization for Preserving Tamil Heritage). ksubashini@gmail.com

மதத்தோரால் கட்டி எழுப்பப்பட்ட ஒரு வகை கட்டிடக்கலை வடிவமாகும். பவுத்த விகாரைகளின் அமைப்பு கட்டிடத்தில் தரையும் உடல்பகுதியும் நீண்ட அல்லது அரை வட்ட வடிவில் என அமைந்திருக்கும். இந்த வடிவத்தை தமிழ் நாட்டில் இன்றுள்ள சில கோயில் கட்டுமானக் கலைகளில் காணலாம். மூன்றாவது பிரிவானது திராவிடம் எனும் பிரிவு. இந்தியாவின் கிருஷ்ணா நதி முதல் தென்குமரி வரை காணப்படும் கோயில் கட்டிட கட்டுமான அமைப்பு இது. இதில் உட்பிரிவுகளாகத் தமிழர், சாளுக்கியர், ஹொய்சளர் முதலிய கோயில் கட்டுமானக் கலைகள் உள்ளன. இவற்றினுள், தமிழர் கோயில் கட்டு மானம் என்று மட்டுமே எடுத்துக் கொண்டால் அதில் இன்று நாம் காணும் வகைகளாக இருப்பவை பல்லவர் கால கட்டுமானம், பிற்கால சோழர் காலத்துக் கட்டுமானம், பாண்டியர் காலத்துக் கட்டுமானக் கலை, விஜயநகர அரசர்கள் காலத்து கட்டுமானக் கலை எனவகைப் படுத்தலாம் (மயிலை சீனிவேங்கட சாமி, 2003, p.36)

திராவிடக் கோயில் கட்டுமானக் கலையில் தமிழர் மரபில் பல்லவர் காலத்தில் உருவானையிதான் குடைவரைக் கோயில் கட்டுமான அமைப்பு. இக்கட்டுரை, தமிழகத்தில் இன்று காணக்கிடைக்கும் சில குறிப்பிடத்தக்க குடவரைக் கோயில் களை விளக்குவதாகவும், கோயில் களின் தற்போதைய நிலையை அலசுவதாகவும் அமைகின்றது.

## ஆய்வுப் பின்புலம்

இன்று நாம் காணக்கூடிய ஆலயங்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்ற பொது வான கருத்து உலவுகின்றது. வரலாற்று நோக்கில் இந்த கருத்துக்கள் ஆராயப் படும் போது ஒரு கட்டுமானத்தின் வயது, அது கட்டப்பட்ட காலகட்டம் என்பன தொல்லியல், கல்வெட்டியல், மானுடவியல் ஆய்வுகளின் வழி அறியக்கூடிய சாத்தியம் அமைகின் றது. ஒரு வழிபாட்டு மையம் இருந்த இடத்தில் அதன் தொடக்க நிலையில் கட்டப்பட்ட கட்டுமானம் சிதலம் அடைந்து போகும் போது அதன் சீரமைப்பு என்பது இயல்பானதே. ஆனால் கட்டுமானத் தொழில்நுட் பத்தின் வளர்ச்சியின் அடிப்படையில் காலத்துக்குக் காலம் கட்டுமான அமைப்பில் மாற்றங்கள் நிகழ்ந்துள் ளன என்பது குறிப்பிடத்தக்கது. சில இடங்களில் ஒரு சமயத்தின் அடை யாளமான ஒரு கோயில் இருந்து பின்னர் அச்சமயம் வலு இழக்கும் போது புதிதாக வளர்ச்சியுறும் சமயத்தின் கோயிலாக அக்கோயில் கட்டிடமும் அதன் வளாகமும் மாற்றம் பெறும் நிகழ்வுகளும் நிகழ்ந் திருக் கின்றன. காலத்துக்குக் காலம் கட்டுமானத் தொழில்நுட்பத்தில் அறி முகப்படுத்தப்படுகின்ற வழிமுறை கள் கோயில் அமைப்பின் மாற்றங்களுக்கு முக்கியக் காரணமாக இருந்துள்ளன என்பதை இக்கட்டுரை வலியுறுத் துகிறது.

குடைவரைக் கோயில்கள் என்பன கோயில் கட்டுமான தொழில்நுட்பத்தில் மாபெரும் மாற்றத் தை உருவாக்கிய ஒரு தொழில்நுட்பம். இதற்குக் காரணம், இவ்வகை கோயில் அமைப்புக்கள் உருவாவதற்கு முன்னர் அமைக்க ப்பட்ட கோயில்கள், மரத்தினாலும், சுண்ணாம்பினாலும், மண்ணினாலும், செங்கல்லினாலும் அமைக்கப்பட்டவை. இப்படி மண்ணி னாலும், மரத்தினாலும் சுதையினாலும் அமைக்கப்பட்ட கோயில்கள் நெடுங் காலம் சேதப் படாமல் இருக்கும் சாத்தியம் இல்லை. இயற்கை சீற்றங்களினாலும் வேறு பல சமூக நிகழ்வுகளினாலும் இத்தகைய கோயில் கள் எளிமையாகத் தக்ர்க் கப்பட்டு சிதைக்கப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்த மையால் இவ்வகைக் கட்டு மானங்கள் நீண்ட கால நிலைத் தன்மைக்கு உத்தரவாதம் அளிக்காத ஒரு நிலை இருந்தது. கட்டுமான அமைப்பில் ஒரு புரட்சியாக, நீண்ட காலம் சிதைவுறா வண்ணம் செதுக்கப்பட்ட ஆலயங் களாகத் திகழ் கின்றன குடைவரைக் கோயில் கள். இவ்வகைக் கோயில்கள் கோயிலின் நிலைத்தன் மையை உறுதி செய்தாலும், எல்லா இடங்களிலும் அமைக்கப்படக் கூடிய சாத்தியங்கள் இல்லாமையினால் இதற்கு அடுத்த கட்ட தொழில்நுட்ப அமைப்பாக கற்பாறைகளால் அமைக்கப்பட்ட

கோயில்கள், அதாவது கற்றளிகள் என்பவை உருவாகக் காரணமாகின. இவ்வகை கோயில் கட்டுமான தொழில்நுட்ப அமைப்பே இன்று வரை தொடரும் ஒரு கட்டுமான முறைக்கு அடிப்படையாகத் திகழ்கின்றது (நடன காசிநாதன், 2006, ஜீ.17) ஆக, குடைவரைக் கோயில்கள் வகையிலான அமைப்பு என்பது இன்றைய கற்றளி கோயில் அமைப்பு உருவாகுவதற்கு முன்னர் உருவாக்கப்பட்டவை என்பதும், இவை நெடுங்காலம் சிதலமுறாமல் இருப்பதை உறுதி செய்ய அமைக்கப்பட்டவை என்பதனையும் இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. குடைவரைக் கோயில்கள் தமிழகக் கோயில் கட்டுமானக் கலையில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் ஒரு கலை என்ற போதிலும், குறிப்பிட்ட ஒரு சில குடைவரைக் கோயில்களைத் தவிர ஏனையவை பலர் அறியப்படாத நிலையிலும், அவற்றுள் சில சிதல மடைந்தும் கவனிப்பு தேவைப் படும் நிலையிலும் தக்கப் பாதுகாப்பு வழங்கப்படாமலும் இருக்கின்றது என்னும் கருத்தையும் இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

## ஆய்வுமுறை / Methodology

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை விளக்கும் வகையிலான கருத்துக்களை வெளிப்படுத்தும் நூல்கள் இக்கட்டு ரையில் ஆராயப்பட்டுள்ளன. தமிழ் மூதறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களது நூல்களான, பௌத்தமும் தமிழும், மகேந்திரவர்மப்பல்லவன், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் போன்ற நூல்களோடு தமிழகச் சிற்பிகள் வரலாறு, கோபுரக்கலை மரபு, கல்வெட்டுக்கலை ஆராய்ச்சி போன்ற நூல்களும் இவ்வாய்வில் வாசிப்புக் குட்படுத்தப்பட்டன.

இக்கட்டுரை ஆசிரியர் தொடர்ச்சியாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொண்ட களப்பணி ஆராய்ச்சியின் வழி அறியப்பட்ட நேரடி தகவல்களே இக்கட்டுரையில் சேர்க்கப்பட்டுள்ளன. களப்பணிகளின் போது தொல்லியல், அகழ்வாராய்ச்சி மற்றும் கல்வெட்டாய்வு அறிஞர்கள் வழங்கிய தகவல்களும் இக்கட்டு ரைக்குப் பக்கபலமாக இணைக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தின் காரைக்குடி, செஞ்சி மாவட்டம், மதுரை மாவட்டம், விழுப்புரம் மாவட்டம் ஆகியபகு திகளில் கட்டுரை ஆசிரியரால் நேரடி களப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. இக்களப்பணிகளின் போது கண்டறிய ப்பட்ட செய்திகளும், தமிழகத்தைச் சார்ந்த தொல்லியல் அறிஞர்களின் ஆய்வுச் செய்திகளும் <http:// www. Tamilheritage.org> என்ற இணையத் தளத்தில் வெளியிடப்பட்டு ள்ளன.

## குடைவரைக் கோயில் 1மண்டகப்பட்டு மகேந்திரப்பல்லவன் சிவன் கோயில்

*(பின்னிணைப்பு 1புகைப்படம் குடைவரைக் கோயில் அமைந்துள்ள பாறைப் பகுதியைக் காட்டுகின்றது)*

தமிழகத்தில் கோயில் கட்டிடக் கலையில், குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்த நூற்றாண்டாக கி.பி.6ம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி கி.பி7ம் நூற்றாண்டைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். குடைவரைக் கோயில் எனப்படும் கட்டுமான அமைப்பு இன்றைய தமிழக நிலப்பரப்பில் தோன்றிய காலகட்டம் அது. தெற்கில் பாண்டியர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்க தொண்டை நாடு முழுமைக்கும் பல்லவர் ஆட்சி பரவி இருந்ததோடு சோழர்களின் நிலப்பகுதியையும் வெற்றி கொண்டு ஆட்சி செலுத்தி வந்தனர். பல்லவ மன்னர்களில் கி.பி. 600 முதல் 630 வரை தமிழ்நாட்டின் வடபகுதியை ஆண்டவன் மன்னன் மகேந்திரவர்ம பல்லவன். இவனே வரலாற்று ஆர்வலர்களால் முதலாம் மகேந்திர வர்ம பல்லவன் எனக் குறிப்பிடப்ப டுகிறான். (மராசுகுமார் - சரவணன், 2001, பஜீ.8)

மகேந்திரவர்மன் இலக்கியம் மற்றும் கட்டிடக்கலைகளைப் போற்றியதோடு அவை வளரவும் வழி செய்தான். புகழ் பெற்ற குடைவரைக் கோயில் கலையின் முன்னோடி இவ்வரசனே. இம்மன்னனுக்கு

விசித்திர சித்தன், சித்திரகாரப் புலி, மத்தவிலாசன் என ஏனைய பெயர்களும் உண்டு.மகேந்திரவர்மப் பல்லவன் தான் கட்டிய மண்டகப்பட்டு குடைவரைக் கோவிலின் கல்வெட்டில், தான் இதுவரை இருந்த கோயில் கட்டுமான முறையான, மரம், செங்கல் மற்றும் சுண்ணாம்புக் கலவை பயன்படுத்தி கோயில் அமைக்கும் முறை என்பது அல்லாமல், பாறையைக் குடைந்து கோயிலைக் கட்டியதாக அறிவித்துள்ளான். இந்த மண்டகப்பட்டு குடைவரைக் கோயிலே இம்மன்னன் குடைந்து எழுப்பிய முதல் குடைவரைக் கோயில். இதில் குடைவரைக் கோயிலின் ஆரம்ப கால அமைப்பு முறைகளை நன்கு காணலாம். (பின்னிணைப்பு 2.புகைப்படம்குடைவரைக் கோயிலின் முகப்புப் பகுதியைக் காட்டுகின்றது)

ஒரு பெரிய பாறையைக் குடைந்து அதனைப்பகுதி பகுதியாகப் பிரித்து தூண்கள், கருவவீஷ்ப்பகுதி என அமைப்பது, அதே பாறை யிலேயே துவாரபாலகர் சிற்பத் தைச் செதுக்குவது, எனச் சோதனை முயற்சி போல இந்தக் கோயிலை உரு வாக்கியமையைக் காணமுடிகின்றது. இதே மகேந்திரவர்மன் உருவா க்கிய சிறந்த குடைவறைக் கோவில்களில் சிலவற்றை மகா பலிபுரத்திலும் விழுப்புரம் மாவட்டத் திலும் காணலாம். (<http://tamilheritage foundation.blogspot.my/2016/09/2016_17.html>, 2016)

## குடைவரைக் கோயில் உபனைமலை தாளகிரீஸ்வரர் கோயில்

(பின்னிணைப்பு 3.புகைப்படம் பாறை அமைந்துள்ள முகப்புப் பகுதியைக் காட்டுகின்றது)

செஞ்சிக்கு அருகே உள்ள மண்ட கப்பட்டு, தளவானூர் போல பல்லவர்க்கால கோயில் கட்டுமானக் கலைக்குப் புகழ்ச்சேர்க்கும் ஒரு கோயில் பனைமலை தாளகிரீஸ்வரர் கோயில்.

செஞ்சியிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் இருக்கின்றது "பனைமலை". இந்த குன்றுப்பகுதியைச் சார்ந்தார் போன்ற ஒரு பெரிய ஏரி அமைந்துள்ளது. மலையைச் சுற்றிலும் விவசாய நிலங்கள் சூழ்ந்திருக்கின்றன. இயற்கை வளம் நிறைந்த ஒரு பகுதி இது. அருகாமையில் இருக்கும் விவசாயிகள் இந்த நிலங்களில் விவசாயம் செய்வதால் இந்தப் பகுதியும் இதன் சுற்றுப்புறப் பகுதியும் பசுமை குன்றாது கண்களைக்கவரும் எழிலுடன் திகழ்கின்றது.

காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டியவர் என்ற சிறப்பினைப் பெறும் 2ம் நரசிம்மவர்ம பல்லவனால் (கி.பி.695722) கட்டப் பட்டது இந்தக் கோயில். இந்த மன்னன் இராசசிம்மன் என்றும் அழைக்கப்படுகின்றான். பல்லவ மன்னர்கள் கலைகளை வளர்த்த வர்கள். பாறைக் கோயில்கள், குடைவரைக்கோயில் கட்டுமானங்கள், பாறைகளைக் குடைந்து புடைப்புச் சிற்பங்களாக தெய்வ வடிவங்களை வடித்தல் ஆகியவற்றோடு கவின் மிகு ஓவியங்களையும் கோயில்களில் சுவர்ச் சித்திரங்களாக இணைக்கும் முயற்சி களையும் மேற்கொண்டனர் என்பதற்கு பனைமலை தாளகிரீஸ்வரர் ஆலய பாறை ஓவியங்கள் சான்றாக அமைகின்றன.

கோயில்களைக் கட்டி இறை வழிபாட்டையும் கலைகளையும் போற்றியது போல வேளாண்மைக்கு உதவும் வகையில் ஏரிகளை அமைத்து விவசாயத்தை விரிவாக்கியதில் தமிழ கத்தில் பல்லவ மன்னர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அகன்று விரிந்து கடல் போலக் காட்சியளிக்கும் பனை மலை ஏரியும் இதற்குச் சான்றாக விளங்குகின்றது.

காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோயிலைப் போலவே கோயில் சன்னிதானத்தில் சுவர் ஓவியங்களை இக்கோயிலிலும் தீட்டி இருக்கிறார்கள். அதற்கான சுவடுகள் ஆங்காங்கே இன்றும் தெரிகிறன. இந்தக் கோயிலின் சிறப்பு எனக் கருதப்படுவது கோயிலுக்கு இடப் பக்கம் உள்ள சன்னிதியில் தீட்டப் பட்ட உமையம்மையின் ஓவியம். ஓவியத்தின் பெரும்பாலான பகுதிகள் சிதைந்தாலும் கூட இன்றும் ஓரளவு காணக்கூடிய வகையில் இந்த ஓவியம் இருக்கின்றது என்பது ஆறுதல் அளிக்கும் ஒன்று (<http://tamilheritage foundation.blogspot.my/2016/11/2016_26.html>, 2016).

## குடைவரைக் கோயில் 3ஆனைமலை ஸ்ரீயோகநரசிம்மர் கோயில்

ஆனைமலை மதுரைக்கு அருகில் இருக்கின்றது. சமணத்தின் சுவடுகள் பல நிறைந்த ஒரு பகுதியாக ஆனைமலை விளங்குகின்றது. மதுரை பகுதியில் சமண முனிவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். பள்ளிகள் அமைத்து சமண நெறிகளை போதித்து வந்தனர். 6ம் நூற்றாண்டுக்குப் பிறகு சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் எதிரான மிகப் பெரிய புரட்சி தோன்றியது. இது பக்தி காலம் என்று சைவர்களால் சிறப்பித்து அழைக்கப் படும் ஒரு காலகட்டத்தின் தொடக்க காலமாகும். சமணர் இருக்கும் இடங்களுக்கு அருகிலேயே மலை களில் குடவரைகளைச் சைவ சமயத்தை ஆதரித்த பாண்டிய மன்னர்கள் அமைத்தனர். பெரும்பாலான குடைவரைகள் சிவபெருமானுக்கு இருப்பவையே. இங்கே சிறப்பாக வைண சமயத்தை போற்றும் வகையில் நரசிம்ம பெரு மாளுக்கு ஒரு குடவரைக் கோயில் கட்டியிருக்கின்றனர்.

நரசிம்ம பெருமாளின் மிகப் பெரிய உருவத்திலான புடைப்புச் சிற்பம் வீரிய வடிவத்தில் அமைக் கப்பட்டிருக்கின்றது. முதலாம் வரகுண பாண்டியன் காலத்தில் இது கட்டப்பட்டது. சுவர்களில் இரண்டு புறமும் வடமொழியில் கிரந்ததிலும் மற்றொரு சுவற்றில் தமிழில் வட்டெழுத்திலும் கல்வெட்டுக்கள் உள்ளன. முதலாம் வரகுண பாண்டியன் காலத்தில் மன்னனுக்கு அமைச்சராக இருந்தவன் மாறங்காரி என்பவன். அவன் இந்தக் குடைவரையை அரசரின் துணையோடு குடைந்திருக்கின்றான். இது நிகழ்ந்தது ஏறக்குறைய கி.பி.770ம் ஆண்டில். மாறங்காரி இப்பணி முடிவதற்கு முன்னரே இறந்து விடுகின்றான். அதன் பின்னர் அவனது சகோதரனே இப்பணியை முடித்தான் என்பதை இக்கோயில் கல்வெட்டு குறிப்பிடு கின்றது.

அகன்ற தாமரைக்குளத்தோடு ஒட்டியபடி இந்தக் குடைவரைக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலுக்குள் நுழைந்ததும் வடக்கே, தெற்குதிசை நோக்கியபடி அமர்ந்த திருக்கோலத்தில் மேலிரு கரங்களில் தாமரை, முன்னிரு கரங்களில் அபயவரத முத்திரைகளுடன் காட்சி தரும் வடிவில் ஸ்ரீநரசிங்கவல்லித் தாயார் சன்னிதி உள்ளது. இது பிற்காலத்தில் அமைக்கப்பட்ட ஒரு பகுதியகும்.

அடுத்து கருட மண்டபம்; மகா மண்டபம்; முன்மண்டபம். இவற்றைக் கடந்து உள்ளே செல்ல சிறிய கருவறையில், யோகாசன நிலையில் கம்பீரமாகக் காட்சி தருகிறார் ஸ்ரீயோகநரசிம்மர். பின்னிருகரங் களில் சங்குசக்கரம் திகழ, முன்னிரு கரங்களை, முழங்கால் மீது வைத்திருக்கும் வகையில் அமைக் கப்பட்ட ஸ்ரீயோக நரசிம்மர் வடிவம் இது.

கருவறைக்கு இருபுறமும் அகன்ற மிக உறுதியான வடிவிலான பாறைகள் உள்ளன. இக்கல்வெட்டின் செய்திகள் ஒரு புறம் வட்டெழுத்து தமிழிலும், மறுபுறம் கிரந்தத்தில் சமஸ்கிருதத்திலும் வழங்கப்பட்டுள்ள (<http://tamilheritagef oundation.blogspot.my/2015/01/2015.html>, 2015).

## குடைவரைக் கோயில் 4லாடன் கோயில் குடைவரைக்கோயில்

மதுரையில் ஆனைமலைக்கு அருகே தொடர்ச்சியாக வரும் பாறை அமைப்பின் ஒரு பகுதியில் அமைந் திருக்கின்றது லாடன் கோயில். திருப்பரங்குன்றம் கோயிலைப் போல முருகனுக்காக எடுக்கப்பட்ட குடை வரைக் கோயில் என்ற சிறப்பினை இந்த லாடன் கோயில் குடைவரைக் கோயில் பெறுகின்றது. 7, 8ம் நூற்றாண்டில் முற்காலப் பாண்டியர் களால் கட்டப்பட்டது இக்குடைவரைக் கோயில். வேறு தெய்வங்கள் இல்லாமல் முருகனுக்கு மட்டுமென்று தனிப்பட்ட வகையில் இருக்கும் ஒரே குடைவரை கோயில் இது என்ற தனிச்சிறப்பும் பெறுகின்றது இக்குடை வரைக் கோயில். முருகனோடு வள்ளிக்குச் சிற்பம் இல்லாமல், தெய்வானை மட்டுமே இருக்கும் வகையில் புடைப்புச் சிற்பமாக முருகனின் வடிவம் அமைக்கப்பட்டி ருக்கின்றது. கருவரை க்கு

வெளியே இரண்டு துவார பாலகர்களும், மயிலும் சேவலும் இருக்கும் புடைப்புச் சிற்பங்களும் இங்குள்ளன.

அர்த்த மண்டபத்தில் இரண்டு முழுத்தூண்களையும் இரண்டு அரைத் தூண்களையும் செதுக்கியிருக் கின்றனர். உள்ளே கருவறையில் மாடத்தில் புடைப்புச் சிற்பமாக தெய்வானையுடன் அமர்ந்த நிலையில் மூல சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது (<http://tamilheritagefo undation.blogspot.my/2015/05/2015_23.html>, 2015).

## குடைவரைக் கோயில் 5மலையடிப்பட்டி குடைவரை கோயில்

மதுரையைப் போலவே புதுக்கோட்டை யிலும் சில குடைவரைக் கோயில்கள் உள்ளன. திருச்சியிலிருந்து ஏறக்கு றைய 45 கிமீ தூரத்தில் இருக்கும் ஒரு சிற்றூர் மலையடிப்பட்டி. இது புதுக் கோட்டையைச் சார்ந்த கிராமம். இங்கு எழில் நிறைந்த இயற்கைச் சூழலில் ஒரு மாபெரும் பாறையில் இரண்டு கோயில்கள் ஒன்றாக என இணைந்து ஒரு குடைவரைக் கோயில் அமைந்திருக்கின்றது. ஒன்று சிவ பெருமானுக்காகவும் மற்றொன்று அனந்தபத்மநாப சுவாமிக்காகவும் என அமைக்கப்பட்ட கோயில்கள் இவை. இக்கோயில் 8ம் நூற்றாண்டைச் சேர்ந்த தந்திவர்மன் எனும் பல்லவ மன்னனால் உருவாக்கப்பட்டிருக்கலாம் என அறிய முடிகின்றது.

இக்கோயிலின் உள் அமைப்பு புதுக்கோட்டையில் இருக்கும் திருமயம் ஆலயத்தை வடிவத்தில் ஒத்திருக்கின்றது. தெளிவாக செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்கள் சுவற்றிலும் தூண்களிலும் நிறைந் திருக்கின்றன. 15 அடி உயரத்தில் மூலவர் சிலை செதுக்கப்பட்டி ருக்கின்றது. மூலவர் சிலையைச் சுற்றிலும் தேவ கணங்களும் தெய்வ வடிவங்களும் என்ற வகையில் ஒரு கலைப்பொக்கிஷமாக இந்தச் சுவர் காட்சியளிக்கின்றது.

இக்கோயிலில் ஆங்காங்கே கல்வெட்டுக்கள் உள்ளன. அதில் ஒரு கல்வெட்டு கிபி.960ம் ஆண்டைச் சேர்ந்தது. இது சோழ மன்னன் ராஜகேசரி சுந்தரச் சோழனின் கால கல்வெட்டு.

இந்தக் குடைவரை கோயிலின் அருகில் இருக்கும் பிரமாண்ட வடிவ பாறைகளின் மேல் சமணப் படுகைகள் வரிசை வரிசையாக அமைக்கப் பட்டிருக்கின்றன. கிபி. 7க்கு முன்னர் இப்பகுதியில் சமண சமயம் மிக விரிவாக பரவி செழித்து இருந்திருக்க வேண்டும் என்பதை இந்த சமணப் படுகைகள் நமக்கு உணர்த்துகின்றன. இக்கோயில் தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பினை உணர்த்தும் கலைக் கோயில்கள் பட்டியலில் ஒன்றாக இடம்பெறுகின்றது. எண் 134, 135 http://asi.nic.in/asi_monu_alphalist_tamilnadu.asp.

இக்கோயிலைப் பற்றிய மிக விரிவான கட்டுரை ஒன்று வரலாறு.காம் வலைப்பக்கத்தில் உள்ளது (<http:// tamilheritagefoundation.blogspot.my/2014/03/2014_27.html>, 2014).

## குடைவரைக் கோயில் 6மேசிலீச்சுரம் சிவன் கோயில்

குன்றக்குடி நகரில், குன்றக்குடி மடம் அமைந்திருக்கும் பகுதியின் பின் பகுதியில் சற்றே தொலைவில் குன்றக்குடி முருகன் கோயில் சித்திரக்கூடம் அமைந்திருக்கும் பகுதியில் இக்குடைவரைக் கோயில் உள்ளது.

இக்குடைவரைக் கோயிலின் முன் பகுதியில் கற்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முன்பகுதியைக் கடந்து உள்ளே சென்றால் அர்த்த மண்டபமும் அதன் உள்ளே பிரகார சன்னிதியும் உள்ளன. இந்த ஒரு குடைவரைக் கோயிலின் உள்ளே தனித்தனியாக மூன்று கோயில்கள் இருக்கின்றன. இந்த மூன்று தனித்தனி கோயில் களுக்கும் தனித்தனி சன்னிதிகள் அமைந்திருக்குன்றன. அவற்றின் கருவறைப்பகுதியில் சிவலிங்க வடிவங்கள் கற்குகைக்குள் குடையப்பட்ட வடிவில் அமைந் திருக்கின்றன.

கோயிலின் உட்பகுதி கற்பாறையின் ஒரு பகுதி சுவர் போன்று வெட்டப்பட்டுள்ளது. இதனைக் குடைந்து இதில் நின்ற வடிவத்தில்

இருக்கும் முருகனின் புடைப்புச் சிற்பத்தைச் செதுக்கியுள்ளனர். இந்த முருகனின் சிற்ப அமைப்பு கி.பி.7 அல்லது 8ம் நூற்றாண்டை சேர்ந்தது. இச்சிற் பத்தை முருகன் சிற்பம்தான் எனக் கண்டறிய உதவும் வகையில் இதற்கு நேரெதிரே விநாயகரின் சிலை ஒன்று புடைப்புச் சிற்பமாக அமைக் கப்பட்டுள்ளதைக் கொள்ளலாம். முருகன் சிற்பத்திற்கு நேர் எதிராக விநாயகர் புடைப்புச் சிற்பம் உள்ளது. இது வலம்புரி விநாயகர் சிற்பம். பிரம்மா, பெருமாள், சிவன் சிற்பத் தொகுதி ஒரு தொகுப்பாக அமைக்கப்பட்டுள்ளது. முதலில் பெருமாள் நின்ற வடிவத்தில் இருக்கும் புடைப்புச் சிற்பம் உள்ளது. கருங்கல் சிற்பத்தின் மேல் வர்ணச் சாயம் பூசப்பட்டு அது தற்சமயம் சிதிலம் அடைந்த நிலையில் இப் புடைப்புச் சிற்பம் காட்சியளிக்கின்றது. இதற்குப் பக்கத்தில் விஷ்ணுதுர்க்கையின் புடைப்புச் சிற்பம் அமைந்துள்ளது. வலது கைகளில் ஒன்றில் சக்கரத்தையும் இடது கைகளின் ஒன்றில் சங்கினை ஏந்திய வகையிலும் இச்சிற்பம் உள்ளது.

விஷ்ணு துர்க்கையின் இடதுபுறத்தில் நின்ற கோலத்தில் சங்கரநாராயணன் வடிவம் புடைப்புச் சிற்பமாக செதுக்கபப்ட்டுள்ளது. சைவம் வைணவம் ஆகிய இரு பெரு சமயங்களையும் இணைக்கும் நோக்கத்துடன் எழுந்ததுதான் சங்கரநாராயணன் வடிவம். இந்த இரு வேறு சமயங்களுக்கும் போட்டி சமயமாக சமணம் இருக்க, அதனை வீழ்த்த சைவமும் வைணவமும் இணைந்து கைகோர்த்து செயல்படுவது உதவும் என்ற நோக்கத்தின் வெளிப்பாடாகவும் இதனைக் காணலாம்.

சங்கரநாராயணன் சிற்பத்திற்கு அடுத்தாற்போல நடராசர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் பொதுவாக நாம் காணும் நடராசர் சிற்பம் போலல்லாது இரண்டு கால்களையும் சதுரமாக நிலத்தில் குத்தி நிற்கும் வகையில் செதுக்கப்பட்டுள்ளது. இது சதுரநடனம் எனக்கூறப்படுவது. நடராசர் எட்டு கைகளுடன் இருக்க, கீழே குள்ள பூதகணங்கள் இசைக்கருவிகளை வாசிக்கும் வகையில் நடராசர் சிற்பத்தொகுதி செதுக்கப்பட்டுள்ளது.

வெளிப்புறப்பகுதியைக் கடந்து பிரகாரப் பகுதியில் தனித்தனியாக சன்னிதிகள் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன. அர்த்தமண் டபத்தைத் தாண்டி உள்ளே பாறையைக் குடைந்து அதனுள்ளேயே சிவலிங்கம் செதுக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தப்பகுதியில் மேலும் ஒரு சன்னிதி அமைக்கப்பட்டுள்ளது. சிறு பாறையைக் குடைந்து சற்றே சிறிய வடிவிலான சிவலிங்கம் ஒன்று அங்கு செதுக்கப்பட்டுள்ளது. இந்த சிவலிங்கத்தின் முன்னர் இரு துவாரபாலகர்கள் வடிவமும் செதுக் கப்பட்டுள்ளது. முதல் குடைவரைக் கோயிலின் துவாரபாலகர்கள் சிற்பத்தை விட இவை உருவத்தில் சிறியனவாகவே உள்ளன. குடைவரைக்கோயிலின் பிரகாரத்தின் படியானது, அர்த்தசந்திர வடிவில் அறை வட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இது குடைவரைக் கோயில்களில் உள்ள கட்டுமான அமைப்பின் பொதுக்கூறுகளில் ஒன்று எனலாம். அதனையே இங்கும் காண்கின்றோம்.

இக்கோயில் கட்டுமானக் கலையை நோக்கும் போது, இது கி.பி.7 அல்லது 8ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதைக் காட்டும் வகையில் அதன் அமைப்பு உள்ளது. பட்டையான அமைப்பில், பருத்த நீள்சதுர வாக்கில் குடைவரைக் கோயிலின் உட்பகுதி கற்பாறைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் மேல் பிற்காலச் சோழர்கள் தங்கள் கல்வெட்டுக்களைப் பொறிக்கச் செய்துள்ளனர். ராஜராஜ சோழனின் கல்வெட்டினைக் குறிக்கும் “ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போல பெருநிலச் செல்வியுந்...” எனத் தொடங்கும் கல்வெட்டு இக்கோயில் தூண்களில் காணப்படுகின்றது. முதலாம் ராஜராஜனின் காலத்தில் பாண்டிய நாடும் சோழ மன்னனின் கீழ் இருந்தது. ஆக, இக்கோயிலுக்குக் கொடை வழங்கிய போது அதனைப் பதிந்து வைக்கும் வகையில் கல்வெட்டுக்கள் அச்செய்திகளைத் தாங்கி பொறிக்கப்பட்டுள்ளன.

ராஜராஜ சோழன் காலத்துக்

கல்வெட்டுக்களை அடுத்து, இதே கோயிலில் முதலாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் அமைந்துள்ள பிற்கால சோழமன்னர்களின் கல்வெட்டுக் களாவன நல்ல வளர்ச்சி பெற்ற தமிழ் எழுத்துக்களால் ஆனவை. இக்கல்வெட்டுகள் மட்டுமன்றி பாண்டிய மன்னர்களின் ஆதரவில் இக்கோயில் கட்டப்பட்டபோது பொறிக்கப்பட்ட வட்டெழுத்து கல்வெட்டுக்கள் சிலவற்றையும் இக்கோயிலில் காண முடிகின்றது. அதில் ஒரு கல்வெட்டு மசிலீச்சுவரம் என்ற பெயரைத்தாங்கியிருக்கின்றது. மசிலீச் சுவரம் என்பது மயில் + மலை + ஈச்சுவரம் என்ற பொருளைக் குறிப்பது. இக்கல்வெட்டு இக்கு டைவரைக் கோயிலின் காலத்தைச் சரியாகக் கணக்கிட உதவுவதாக அமைந்திருக்கின்றது. இந்த வட்டெ ழூத்து வடிவத்தை நோக்குங்கால் இது கி.பி.7 அல்லது 8ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என முடிவுக்கு வரலாம்

(<http://tamilheri tagefoundation.blogspot.my/2015/01/2015.html>, 2015)

## குடைவரைக் கோயில் 6அரிட்டாபட்டி சிவன்கோயில் லகுலீசர் சிற்பம்

*(பின்னிணைப்பு 4.புகைப்படம் குடைவரைக் கோயில் முன்புறத்தில் உள்ள லகுலீசர்சிற்பத்தைக்காட்டு கின்றது)*

அரிட்டாபட்டி மதுரையில் நரசிங்கம்பட்டிக்கு வடக்காக சுமார் 4 கி.மீ தூரத்தில் அமைந்திருக்கும் ஊர். மேற்கில் கழிஞ்சமலை என அழைக்கப்படும் மலைத்தொடர்களால் சூழப்பட்டிருக்கின்றது அரிட்டாபட்டி. விவசாயிகள் நிறைந்திருக்கும் இப்பகுதி நெற்பயிற்கள் நிறைந்து பசுமையாகக் காட்சியளிக்கின்றது. இப்பகுதியில் தான் அமைந் திருக்கின்றது அரிட்டாபட்டி குடைவரைக் கோயில். வாகனத்தைச் சாலையில் தூரத்தே நிறுத்தி விட்டு வயல் வரப்பில் நடந்து வரும்போது தூரத்தே செங்குத்தான பாறைகளைப் பார்த்துக் கொண்டே வந்தால் அதன் பின்னால் பாறைகளைக் குடைந்த வகையில் இக்குடைவரைக் கோயில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இக்குடைவரையைப் பற்றிய கல்வெட்டுக்கள் இங்கு காணப்பட்ட வில்லையெனினும், இக்குடைவரைக் கோயிலின் அமைப்பைக் கொண்டு இது கி.பி.7 அல்லது 8ம் நூற்றாண்டு பாண்டிய மன்னர்கள் குடைவித்த கோயில்தான் என்பதை தொல்லியல், கல்வெட்டியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தெளிவான கல் வெட்டுக்கள் இல்லாத போதிலும், இக்கோயிலின் முன்புறத்தில் முற்கால தமிழ் எழுத்துக்களின் சில வரிகள் எழுதப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது. கல்வெட்டாகச் செதுக் குவதற்காக எழுதப்பட்டு பின்னர் முழுமைப்படுத்தப்படாமல் போன நிலையாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. (இரா சேந்திரன் - சாந்தலிங்கம், 2010, p.74)

இந்தக் கோயிலின் சிறப்பு இங்கு முற்பகுதியில் அமைக்கப் பட்டிருக்கும் லகுலீசர் சிற்பமாகும். தலையில் கரண்ட மகுடத்துடனும், மார்பில் பட்டையான யக்ஞோபவீ தத்துடனும் லகுலீசர் சிற்ப வடிவில் காட்சி தருகின்றார்.

அடர்ந்த பாறைப்பகுதியில் குடைந்தெடுக்கப்பட்ட உட்பகுதி இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு ள்ளன. கருவறைக்குள் சிவலிங்கம் பாறையைச் செதுக்கி உருவாக்கப் பட்டுள்ளது. கருவறைக்கு முன்னே வலப்பக்கம் லகுலீசரின் சிற்பமும் இடப்பக்கம் விநாயகரின் சிற்பமும் மட்டுமே இங்கே செதுக்கப்பட்டுள்ளன.

லகுலீசர் கி.பி.2ம் நூற்றாண்டு வாக்கில் குஜராத் மாநிலத்தின் காரோஹணம் என்ற ஊரில் பிறந்தவர். பவுத்தமும், சமணமும் தமிழகத்தில் விரிவாகப் பரவியிருந்த காலகட்டத்தில் லிங்க வழிபாட்டைப் புதுப்பித்தவர் என்ற சிறப்பு இவருக்கு உண்டு. லகுலீசர் உருவாக்கிய சைவ சமயத்தின் பிரிவு பாசுபத சைவம் என அழைக்கப்படுவது. சிவபெருமானே லகுலீசராக அவதாரம்

செய்தார் என்று ஏகலிங்கி என்ற ஊரில் உள்ள கல்வெட்டு கூறுகிறது. லகுலீசரின் பாசுபத சித்தாந்தத்தை அடிப்படை யாகக் கொண்டு லிங்க வழிபாடு தொடங்கப்பட்ட இடங்கள் காரோஹணம் என்றே வழங்கப்பட்டன. தமிழகத்தில் பக்தி இயக்கக் காலத்தில் காரோஹண சைவம் நிலை பெற்றிருந்தது. நாகைக் காரோஹணம், குடந்தைக் காரோஹணம், கச்சிக் காரோஹணம் ஆகிய மூன்றுமே அவை. இறைவனே இறங்கி மானுட வடிவில் வந்து அவதரிப்பதையே காரோஹ ணம், அதாவது காயமாகிய உடல் கீழே இறங்கி வருதல் என்ற பொருளாகின்றது (பத்மாவதி, 2003, பக் 67).

தமிழகத்தில் சிவலிங்க வழிபாடு பக்தி இயக்கக் காலத்தில் கோயில்களில் விரிவடைந்தமைக்கு பாசுபத கொள்கை அடிப்படையாக அமைந்தது. சைவத்தை அரசியல் மதமாக ஏற்ற பாண்டியர்களும் பின்னர் சோழர்களும் சிவ வழிபாட்டினை விரிவாக்கும் வகையில் தமிழகத்தின் பல பகுதிகளில் சிவாலயங்களை நிர்மானித்தார்கள். பெரிய கற்கோயில்கள் தொடங் கப்பட்ட காலமாகிய கி.பி.8ம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திற்கு முன்னர் குடைவரைக்கோயில்களில் சைவசமயத்தின் குறியீடாகிய சிவலிங் கங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டு வழிபாடு நடந்த இடங்களாக அமைந்தன (பத்மாவதி, 2003, p.73) தமிழக வரலாற்றில் சைவ சமய வரலாற்றிற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குடைவரைக் கோயிலாக இந்த அரிட்டாபட்டி குடைவரைக் கோயில் திகழ்கின்றது

(<http://tamilheri tagefoundation.blogspot.my/2017/06/2017.html>, 2017)

## குடைவரைக் கோயில் 6குன்னத்தூர் உதயகிரீசுவரர் சிவன் ஆலயம்

(பின்னினைப்பு 5.புகைப்படம்குடை வரைக் கோயிலின் முகப்புப் பகுதியைக் காட்டுகின்றது)

மதுரை வடக்கு வட்டத்திற்குள் அடங்கிய சிற்றூர் குன்னத்தூர். முற்காலப் பாண்டியர் காலத்தில் ஏறக்குறைய ஒன்பது அல்லது 10ம் நூஷ்;ஷ்லீக்ஷ்;லி வாக்கில் இவ்வூர் குன்றத்தூர்க் குளக்கீழ் என்ற நாட்டுப் பிரிவுக்குட்பட்ட பிரமதேய கிராம மாகத் திகழ்ந்துள்ளது. இன்று குன்னத்தூர் மலை என்று அழைக் கப்படும் குன்றில் இந்தக் குடைவரைக் கோயில் அமைந்துள்ளது.

குன்றின் கிழக்குப் பகுதியில் சூரியன் உதிக்கும் கிழக்குத் திக்கை நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ள மையால் உதயகிரீசுவரர் என்ற பெயர் இந்த சிவாலயத்திற்கு வழக்கில் உள்ளது (இராசேந்திரன் - சாந்தலிங்கம், 2010, பp.76) வித்தியாசமான வடிவில் தெற்கு நோக்கிய பாறையில் நின்ற நிலையில் இருக்கும் விநாயகர் திருமேனி செதுக்கப்பட்டுள்ளது. பிற்கால நந்தி சிற்பம் ஒன்றும் கோயிலுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்குள் பாறையைச் செதுக்கி சிவலிங்கம் உருவாக்கப்பட்டுள்ளது

(<http://tamilherit agefoundation.blogspot.my/2017/04/2017_29.html>, 2017).

## மதிப்பீடு

தமிழக கோயில் கட்டுமானக் கலைகளில் கி.பி 6ம் நூற்றாண்டு தொடங்கி குடைவரை கோயில்கள் பரவலாக தொண்டை நாடு, சோழர் நாடு, பாண்டிய நாடு ஆகிய பகுதிகளில் மன்னர்களின் பேராத ரவுடன் கட்டப்பட்டமையைக் காண் கின்றோம். பாண்டிய மன்னர்களும் பல்லவ பேரரசும் சைவத்தையும் வைணவத்தையும் ஆதரிக்கத் தொடங்கிய கால கட்டமே குடைவரைக் கோயில்களின் தொடக் கத்திற்குக் காரணமாக அமைகின்றன. கி.பி.7ம் நூற்றாண் டுக்குப் பின்னர் குடைவரைக் கோயில்கள் கற்றளி கோயில்களாக, அதாவது பாறை களைக் குடைந்து சிற்பங்களை உருவாக்குவதற்கு பதிலாக, கற்களை தனித்தனேயே செதுக்கி தரைப்ப குதிகளில் வைத்து அடித்தளம், விமானம்,கோபுரங்கள் என புதிய கட்டுமானக் கலை உருவாக்கம் தொடங்குகின்றது. கி.பி.6ம் நூற்றாண்டு காலகட்டத்தில் செதுக்கப்பட்ட குடைவரைக்கோயில்கள் பல இன்று தமிழக தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட

புராதனச் சின்னங்கள் என்ற பட்டியலில் அடங்குகின்றன. இருப்பினும் இங்கு இக்கட்டிடங்கள் சீரமைப்பு பணி தேவைப்படும் நிலையில் இருப்பதையே நேரடி களப்பணி அனுபவம் காட்டுகின்றது. தமிழர் கோயில் கட்டுமானக் கலையில் மிகச் சிறப்பித்துக் கூறப்பட வேண்டிய ஒரு வகையாக குடைவரைக் கோயில் கட்டுமானக் கலை திகழ்கின்றது.

## முடிவுரை

தமிழகக் கோயில் கட்டுமானக் கலை அமைப்பில் தனித்துவம் பெறும் குடைவரைக் கோயில் அமைப்பினை முழுமையாக பட்டியலிட்டு, புகைப்படங்களைச் சேகரித்து, விழியப் (Video) பதிவுகளாக்கி ஆராய்ந்து வெளியிடும் முயற்சிகளைத் தமிழ் மரபு அறக்கட்டளை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. இவ் வெளியீடுகள் <http://www.tamilheritage.org> என்ற வலைப்பக்கத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழகக் குடைவரைக் கோயில்களின் முழுமையான தொகுப்பு இதுவரை வெளிவரவில்லை என்ற குறைய நிவர்த்தி செய்யும் வகையில் முழுமையாக தமிழகத்தின் அனைத்து குடைவரைக் கோயில்களின் தகவல்களும் சேகரிக்கப்பட்டு அவை தொகுப்பாக்கப்பட்டு நூல் வடிவில் வெளியிடப்பட வேண்டிய தேவை அவசியமாகின்றது!.

## References


Irasenthiran, P. & Santhalingam, S. (2010), *Mamathurai*. Madurai: Pandiya Naddu Varalaru Aivu Maiyam.

Nadana Kasinathan. (2006 ). *Tamilaga Sirpigal Varalaru*. Chennai: Thachina Kalai Nuul Pathipagam.

Pathmavathi, R. (2003). *Saivathin Thotram*. Chennai: Kumaran Book House.

Rasukumar, M.,T., & Saravanan, P. (2001). *Mayilai Seeni Vengkadasamy Aivuk Kadduraigal*. (Vol.2). Chennai: Makkal Veliyidu.

Seeni Vengkadasamy, Mayilai. (2003). *Nun Kalaigal.* Chennai: Pumbukar Pathipakam.

Seeni Vengkadasamy, Mayilai. (2003). *Tamilar Valartha Azhakuk Kalaigal*. Pavai Publications.

http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID=658

http://tamilheritagefoundation.blogspot.my/2014/03/2014_27.html

http://tamilheritagefoundation.blogspot.my/2015/05/2015_23.html

http://tamilheritagefoundation.blogspot.my/2015/01/2015.html

http://tamilheritagefoundation.blogspot.my/2016/11/2016_26.html

http://tamilheritagefoundation.blogspot.my/2016/09/2016_17.html


http://tamilheritagefoundation.blogspot.my/2017/06/2017.html


http://tamilheritagefoundation.blogspot.my/2017/04/2017_29.html

## பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு 1:

(பின்னிணைப்பு 1.புகைப்படம் குடைவரைக் கோயில் அமைந்துள்ள பாறைப் பகுதியைக் காட்டுகின்றது)






(பின்னிணைப்பு 2.புகைப்படம் குடைவரைக் கோயிலின் முகப்புப் பகுதியைக் காட்டுகின்றது)

(பின்னிணைப்பு 3.புகைப்படம் பாறை அமைந்துள்ள முகப்புப் பகுதியைக் காட்டுகின்றது)





(பின்னிணைப்பு 4. புகைப்படம் குடைவரைக் கோயில் முன்புறத்தில் உள்ள லகுலீசர் சிற்பத்தைக் காட்டுகின்றது).

(பின்னிணைப்பு 5.புகைப்படம் குடைவரைக் கோயிலின் முகப்புப் பகுதியைக் காட்டுகின்றது).



# திருவிசைப்பாவில் இறைவன் திருநாமச்சிறப்பு: ஓர் ஆய்வு
# DIVINE NAMES OF LORD CIVAN IN TIRUVICAIPPA

முனைவர் இரா. சீதா லட்சுமி / DR. R. Seeta Lechumi

***Abstract***

Of the Twelve Saiva Tirumurais, the Tiruvicaippa is classified as the Ninth Tirumurai. This Tirumurai consists of 28 patikams with a total of 288 verses, which has been authored by nine devotees, from Tirumalikai Tevar to Cetirayar. Following the Saiva tradition of worshipping Civan, the paramount one without a name or form using various names and forms, the authors have pointed out copiously the aspect of His forms and appearance. Thus, it is possible to identify in this text, where the divine names of Lord Civan are mentioned. These names may be classified as special(cirappu) names, common(p-othu) names and names of address(vili). It may be noted that these names depict the characteristics of the Lord in His natural(corupa) state and His general(tadatta) state. Hence, this research paper studies the divine names of the Lord in two sections such as the Names of the Natural(Corupa) State and those of the General(Tadatta) State.

**Key Words:** Tiruvicaippa, Iraivan (Civan), Divine Names, Natural State, General State.

## முன்னுரை

சைவத்திருமுறைகள் பன்னிரண் டனுள் ஒன்பதாம் திருமுறை என்று முறைசெய்து போற்றப்பெறுவது திருவிசைப்பா ஆகும். 28 பதிகங்களும், மொத்தம் 288 பாக்களும் உள்ளடங்கிய இந்நூலின் அருளாசிரியர்கள் திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் வரையுள்ள ஒன்பது தொகையடியார்களாவர் (அருணா சலம், 1974, ஜீஜீ.1112). ஒரு நாமம் ஓருருவமற்ற பரம்பொருளான இறைவனுக்குப் பலபல திருநா மங்களைக் கூறி, பல்வேறு மூர்த்திபேதங்களைக் போற்றுவது சைவநன்மரபு ஆகும் (குமரன், 2015, pp.4041)

அந்நெறியினைப் போற்றும் வகையில், திருவிசைப்பா அருளா ளர்கள் ஒன்பதின்மரும் இறைவன் திருநாமச்சிறப்புக் குறித்துப் பலவாறாக விளித்துள் ளதை அடையாளங்கான முடிகின்றது. அத்திருநாமங்கள், 'சிறப்புப்பெயர்', 'பொதுப்பெயர்', 'விளிப்பெயர்' எனும் அடிப்படைகளில் அமைந்து ள்ளதை அறியலாம். அவை, பதிப்பொருளான இறைவனது சொரூப, தடத்த நிலைகளில் வெளிப்படும் இயல்புகளைப் பிரதிபலிப்பனவாகத் திகழ்வன என்பது குறிப்பிடத்தக்கது. அதன் அடிப்படையில், திருவிசைப்பாவில் பெறப்படும் இறைவன்

The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

திருநாமங்களை, 'சொரூபநிலைத் திருநாமங்கள்', 'தடத்தநிலைத் திருநாமங்கள்' என்று ஆய்ந்தறிந்து விவரிப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

## முன்னைய ஆய்வு

திருவிசைப்பா குறித்த முன்னைய ஆய்வுகளைக் கண்ணோட்டமிடும் வேளை, வ. சு. செங்கல்வராய பிள்ளை எழுதியிருக்கும், திருவி சைப்பா ஒளிநெறி எனும் நூல் (1972) திருவிசைப்பாவிலுள்ள ஒட்டுமொத்த செய்திகளின் தொகுப் புப்பட்டியலை உள்ளடக் கிய ஆராய்ச்சிநூலாகத் திகழ்கிறது. இதில் 'சிவபிரான் தன்மை', 'சிவபிரான் திருநாமங்கள்' ஆகிய தலைப்புகளின்கீழ் இடம்பெற்று ள்ள செய்திகள் இறைவனின் சொரூப, தடத்தநிலைத்திருநா மங்களை வகைப்படுத்திப் பட்டி யலிடப் பேருதவியாக அமைந் துள்ளன.

தொடர்ந்து, வேல். கார்த்தி கேயன் பதிப்பித்திருக்கும், "ஒன்ப தாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆய்வு மணிகள்" எனும் ஆய்வுக் கருத்தரங்கு நூலில் (2005), ஒன்பதாம் திருமுறை யிலுள்ள பலதரப்பட்ட இலக்கிய, இலக்கண, சமயச் செய்திகளை உள்ளடக்கிய 71 தலைப்புகளிலான ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்று ள்ளன. மேலும், கோ. ப. நல்லசிவம் பதிப்பித்திருக்கும், "ஒன்பதாம் திருமுறை, திருமந்திர ஆய்வு மாலை" எனும் ஆய்வு மாநாட்டு நூல் இருதொகுதிகளாக வெளியீடு கண்டுள்ளது (2007). திருவிசைப்பாவின் அமைப்பு, சிறப்பு, ஆசிரியர் வரலாறு, தலங்கள், சமய சித்தாந்த செய்திகள் உள்ளிட்ட தகவல்களை இத்தொகுப்பு நூலிலுள்ள ஆய்வுக் கட்டுரைகள் சுருக்கமாக விவரிக் கின்றன. இக்கட்டுரைகள் அனைத் தும் திருவிசைப்பாவின் பன்முக ச்சிந்தனை வெளிப்பாடாகத் திகழ்கின்றன தவிர, ஆய்வாளரின் ஆய்வுத்தலைப்புக்கு நேரடித் தொடர்புடையதாக விளங்கவில் லை. ஆக, திருவிசைப்பாவில் இறைவனின் திருநாமச்சிறப்புக் குறித்த முழுநிலை ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை என்பது தெளிவாகும். அவ்வகையில், திருவிசைப்பாவில் உணர்த்தப்பெறும் இறைவனின் சொரூப, தடத்தநிலைத் திரு நாமச்சிறப்பு இவ்விடம் முழுநி லையில் ஆய்ந்தறியப்படு கின்றது.

## ஆய்வுநெறி

இந்த ஆய்வுக்கட்டுரை திருவி சைப்பா உணர்த்தும் இறைவனின் சொரூப, தடத்தநிலைகளிலான திருநாமச்சிறப்பினைப் பகுத்தாய் தலை மையமாகக் கொண்டு விளங்குவதால், இவ்விடம் பண்பு சார் ஆய்வு அணுகுமுறை கையாளப்பெறுகின்றது. மேலும், இஃது ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவை ஆதாரமாகக் கொண்டுள்ளதனால், இவ்ஆய்வு முழுக்க முழுக்க இலக்கியம் சார்ந்த விளக்கமுறை அடிப்படையிலான நூலக ஆய்வாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுநெறிகளின் வழி பெறப்படும் தரவுகள் ஆய்வுக்குட் படுத்தப்பட்டு, பகுப்பாய்வு செய்யப் படுகின்றன; ஆய்வு முடிவுகள் பின்வருமாறு விவரிக்கப்பெறு கின்றன.

## திருவிசைப்பாவில் இறைவன் திருநாமச்சிறப்பு

பொருள்களின் இயல்பைச் சைவ சித்தாந்தம் 'பொதுவியல்பு', 'உண்மை இயல்பு' என இருவகைப்பட்ட நிலையில் பகுத்துணர்கின்றது. ஒரு பொருளுக்குப் பிற பொருளின் சார்பினால் உண்டாகும் இயல்பு 'பொது இயல்பு' ; பிற பொருளின் சார்பின்றித் தன்னிடத்தில் இயல்பாக உள்ள தன்மை 'உண்மை இயல்பு' ஆகும். பொதுவியல்பு 'தடத்த இலக்கணம்' என்றும், உண்மை இயல்பு 'சொரூப இலக்கணம்' என்றும் வடமொழியில் சொல்லப்படும். உண்மை இயல்பினை, 'சிறப்பியல்பு', 'தன்னியல்பு' என்றும் சுட்டலாம்(கங்காதரன்,1980, ஜீஜீ.70 71).

பதியாகிய பரம்பொருளுக்கும் உண்மை (சிறப்பு) இயல்பாகிய சொரூப இலக்கணம், பொது இயல்பாகிய தடத்த இலக்கணம் எனும் இருவகை இயல்புகள் கூறப்படுகின்றன. பதியின் உண்மை இயல்பாக சைவ ஆகமங;யீள் கூறும் 'தன்வயத்தன்' முதலிய எட்டு குணங்களை எடுத்தியம்பியுள்ளது

உணரத்தக்கது. பிறிதொரு பொருளின் சார்பினால் மாறுபடாத தன்மையுடைய பதியிடம் உலகத்தை நோக்கி நிற்கும் நிலையில் காணப்படும் இயல்புகளே பதியின் பொதுவியல்பாகிய தடத்த இலக்கணமாமாகும். இது குணங்குறிக ளோடு கூடிய நிலை (நாகப்பன், 2008, ஜீ.137).

திருவிசைப்பா அருளாளர்கள் தமது திருப்பாடல்களில் இறைவனின் சொரூப, தடத்த நிலைகளில் வெளிப்படும் இலக்கணங்களின் பிரதி பலிப்பாக பரம்பொருளைப் பல வாறான திருநாமங்களால் போற்றிப் பரவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## i) சொரூபநிலைத் திருநாமங்கள்

சொரூபநிலையில், எண்குணங்கள் பொருந்தியவனாகச் சித்திரிக்கப் படும் இறைவனது திருநாமங்களும் அந்த அருட்கு ணங்களின் பிரதிபலிப் பாகவே அமைந்துள் ளதை உணரலாம். அவ்வகையில், தன்வயத்தன்மை கொண்ட இறைவன், எல்லா உயிர்களுக்கும் தனிப்பெருந்தலைவனாக விளங்கி காத்தருளும் திறத்தைச் சுட்டும் வண்ணம் திருவிசைப்பா ஆசிரியர்கள் கீழ்க்காணும் பதங்களின் வழி இறைவனைப் போற்றித் துதிப்பது தெரிகிறது.

### அட்டவணை 1: திருவிசைப்பாவில் இறைவனின் சொரூபநிலைத் திருநாமங்கள்

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | ஈசன் | 16, 41, 415, 208, 259 |
| 2 | அத்தன் | 257 |
| 3 | தேவன் | 241, 245 |
| 4 | எம்பிரான் | 254, 257, 258 |
| 5 | ஏகநாயகன் | 51 |
| 6 | கடவுள் | 1311 |
| 7 | கோவே! | 38, 202 |
| 8 | பசுபதீ! | 111 |
| 9 | முதல்வனே | 159 |

இவ்வாறு தனிப்பெருந்தலைவனாக விளங்கும் பரம்பொருள், திருவரு ளையே வடிவமாக உடைய தூய உடம்பினன் என்பதனைக் குறிப்பதாக, ‘புனிதன்’ (5 6), ‘புனிதர்’ - ‘புண்ணியர்’ (1610) முதலான பெயர்களைக் கையாண்ட திருவிசைப்பா ஆசிரியர்கள், இப்புண்ணிய வடிவில் இறைவன் இயற்கையறிவோடு திகழும் தன்மையை உணர்த்திட, ‘குருமணி’ (53), ‘குருநீ’ (310) என்று இறைவனை அழைக்கின்றனர்.

இத்தகு இயற்கையுணர்வால் இறைவன் அனைத்தையும் ஏககா லத்தில் தானாகவே உணரும் முற்றறிவு கொண்டு விளங்கும் சிறப்பினைப் புலப்படுத்தும் வண்ணம், ‘உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே’ (11), ‘ஞானகொழுந்து’ (204) என்ற சொற்களால் இறைவனைச் சுட்டும் அருளா சிரியர்கள், இம்முற்றறி வினால் பதிப்பொருள் இயல்பாகவே மலமற்றவன் என்பதனை உணர்த்திட, ‘பளிங்கின் திரள் மணிக்குன்றே!’ (11), ‘அனகனே!’ (17), ‘நிமலத்திரள்’ (25 6) முதலான பதங்களால் இறைவனைச் சுட்டியழைப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியாகப் பாசங்கள் பொருந்தாத அருட்குணத்தால் இறைவன் குறைவுபடாத அருளாள னாக எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதும் குறையாத, கை மாறற்ற பெருங்கருணை புரியும் மாண்பை வெளிப்படுத்தும் வண்ணம் திருவிசைப்பா பாடியோர் பின்வறுமாறு இறைவனைப் போற்றியழைக்கின்றனர்.

### அட்டவணை 2: திருவிசைப்பாவில் இறைவனின் பெருங்கருணைக் குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | நேசன் | 258 |
| 2 | வள்ளல் | 104 |
| 3 | கருணைமா கடல் | 52 |
| 4 | கருணா நிலையமே | 111 |
| 5 | கருணாலயா | 67 |
| 6 | சீருயிரே | 267 |
| 7 | சேமத்துணையே! | 38 |
| 8 | என் சித்தமே!! | 69 |

மேற்சுட்டிய பேரருள் காரணமாக இறைவன் முடிவிலா ஆற்றல் கொண்டு உயிர்களுக்கு அருள் பாலிக்கும் சிறப்புப் புலப்படும் பாங்கில் கீழ்க்காணும் பதங்களால் திருவிசைப்பா ஆசிரியர்கள் இறை வனைப் பெயரிட்டு அழைப்பது உணரத்தக்கது.

### அட்டவணை 3: திருவிசைப்பாவில் இறைவனின் பேராற்றல் குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | செழுஞ்சுடர் | 54 |
| 2 | பரஞ்சுடர் | 251 |
| 3 | தாந்தோன்றி நம்பி | 57 |
| 4 | தாணுவே! | 157 |
| 5 | காலமே! | 15 |
| 6 | அணுவே! | 157,159 |
| 7 | பூரணா! | 117 |
| 8 | கனக நற்றூணே! | 17 |
| 9 | நிரந்தரனே! | 63 |
| 10 | பேரொளியே! | 116,117 |
| 11 | பாடிலாமணியே! | 134 |
| 12 | என்றன் களைகணே! | 156 |

இவ்வாறு பேராற்றல்மிக்க இறைமைப்பண்பினால் பரிபூரண னாகத் திகழும் இறைவன் இன்ப வடிவினன்; ஆனந்தமே அவன் எனும்படியால், இறைவனின் வரம்பிலா இன்பமுடைமைப் பண்பை உணர்த்தும் பொருட்டுத் திருவிசைப்பா பாடியருளியோர் இறைவனைப் பின்வருமாறு பெயரிட்டு விளித்துள்ளதைக் கற்று ணர முடிகின்றது.

### அட்டவணை 4: திருவிசைப்பாவில் இறைவனின் வரம்பிலா இன்பமுடைமை குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அமிர்தர்" – தீங்கரும்பர் | 1610 |
| 2 | முத்தர் | 278, 279 |
| 3 | போகநாயகர் | 51 |
| 4 | அருமருந்து | 57 |
| 5 | இன்னமுது | 251 |
| 6 | கற்பகக்கனி | 511,512 |
| 7 | அமுதே! | 28, 69, 111, 131 |
| 8 | சம்புவே | 157 |
| 9 | கரும்பே! | 17 |
| 10 | ஆனந்த கனியே | 11 |
| 11 | தேனே | 131 |

மேற்படி அருட்குணங்களின் முழுவார்ப்பாக விளங்கும் இறைவன், குணங்களைக் கடந்த நிலையில் பரிபூரணனாய், சீர்மிகு செம்பொருளாய், முழுமுதற் தன்மையுடன் தோன்றும் நித்தியப் பொருளாயிருக்கும் திறத்தைச் சுட்டும் பாங்கில் கீழ்வரும் பதங்களை இறைவனுக்குரிய திருநாமங்களாகத் திருவிசைப்பா ஆசிரியர்கள் எடுத்தியம்பியுள்ளது உணரத்தக்கச் செய்தியாகும்.

### அட்டவணை 5: திருவிசைப்பாவில் இறைவனின் குணங்கள்

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | குணக்கடல் | 65 |
| 2 | செல்வன் | 261 |
| 3 | பரமன் | 1410, 248 - 249 |
| 4 | சிவன் | 17, 52 - 1311 |
| 5 | தனிமுழுமுதலுமாய் | 182 |
| 6 | விகிர்தன் | 242 |
| 7 | விழுமியோன் | 178 |
| 8 | குணக்குன்றே | 3 |
| 9 | குணங்குறி இறந்ததோர் குணமே | 15 |
| 10 | தற்பரம் பொருளே! | 13 |
| 11 | பரம் பரமா! | 227 |
| 12 | சங்கரா | 17, 157 - 268 |
| 13 | அமரனே! | 158, 159 |
| 14 | அறவனே! | 288 |

### (வீ) தடத்தநிலைத் திருநாமங்கள்

தடத்தநிலையில், இறைவன் மூவகை வடிவங்கொள்கிறான்; உருவத் திருமேனியில் பல அணிகளும் ஆடை அணிகலனும், படை ஆயுதங்களும், வாகனமும் கொண்டு, பல வண்ணக்கோலம் பூண்டு, அழகுத் திருகாட்சியளிக்கிறான்; அடியார் பொருட்டுப் பல இடங்களில் எழுந்தருளுகிறான்; திருநடனம் புரிந்து ஐந்தொழி லாற்றுகிறான்; அருளிச்செயல்களும் அட்டவீரட்டச் செயல்களும் புரிகின்றான்; உறவுமுறைகளும் உண்டு. இவ்வாறு உலகை நோக்கிய நிலையில், இறைவன் எழுந்தருளிய திறத்தையும், மேற்கொள்ளும் செயற்பாட்டையும் பிரதிபலிப் பனவாகவே இறை வனது தடத்த நிலைத் திருநாமங்களும் அமைந் துள்ளன என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

அவ்வகையில் இறைவனது வடிவநிலைகளில் மனம் செலுத்திய திருவிசைப்பா ஆசிரியர்கள், இறை வனது அருவ, அருவுருவ நிலைகளைக் குறிக்கும் வண்ணம் பின்வருமாறு பஞ்சபூதங்களையும், இருசுடரையும் இறைவனது திரு நாமங்களாகச் சுட்டியழைப்பது உணரத்தக்கது.

### அட்டவணை 6: திருவிசைப்பாவில் இறைவனின் அருவ, அருவுருவ நிலைகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அம்பரா - அணிலமே! | 119 - 156 |
| 2 | அம்புவே! | 119 |
| 3 | அனலா! | 119, 156 |
| 4 | புனலே! | 156 |
| 5 | தனிமுழுமுதலுமாய் | 119, 156 |
| 6 | ஞாலமே! | 15 |
| 7 | இந்துவே! - இரவி! | 119 |

இதனையடுத்த நிலையில், திருமேனி கொள்ளும் பரமனின் எழில்கோலத்தைச் சித்திரிக்கும் திருவிசைப்பா அருளாளர்கள், சிவ னின் திருவடியழகு புலப்படும் வண்ணம், ‘அறைகழலரசன்’(111), ‘பொற்கழலர்’(1610) என்ற பதங் களால் இறைவனைப் பெயரி ட்டழைக்கும் பாங்கில், இறைவனது திருவடிகளில் அணியப்பெற்றுள்ள கழல்களையே அப்பிரானது பெயராகச் சுட்டி யிருக்கும் போக்கு உணரத்தக்கது.

இன்னும் இதே பாணியில், சிவனார் திருக்கரங்களில் ஏந்தி யுள்ள அணிகளையும், படை ஆயுதங்களையும் பிரதிபலிக்கும் வண்ணம், கீழ்க்காணும் பதங்களால் சிவனைப் பெயரிட்டழைக்கும் போக்கைக் காணவியலுகிறது.

### அட்டவணை 7: திருவிசைப்பாவில் இறைவனின் அணிகளும் ஆயுதங்களும்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | மானமர் தடங்கைவள்ளல் | 74 |
| 2 | கனல் மழுவான் | 221 |
| 3 | சூலபாணியே! | 17 |
| 4 | சேவேந்து வெல்கொடியானே! | 38 |

இவ்விடம் சிவனின் திருக்கரங் களிலுள்ள மான், மழு, சூலம், இடபக்கொடி முதலியன அடிப் படையில் திருநாமங்கள் ஆகிவந் துள்ளன குறிப்பிடத் தக்கன.

மேலும், சிவனார் திருமேனி யின் தோற்றப்பொலிவில் ஈடுபட்ட திருவிசைப்பா அருளா ளர்கள், சிவனார் திருமேனியில் அணியப்பெற்ற கொன்றைமாலை, வெள்ளைப் பூணூல் ஆகியன அடிப்படைகளில், ‘கொன்றை மாலையான்’ *(209)*, ‘வெண்புரிநூற் கட்டியர்’ *(1610)* என இறைவனைச் சுட்டுவதோடு, பரமன் கோவணமும் பாம்பும் தரித்து நிற்பதை உணர்த்திட, ‘கோவணன்’ *(12 4)*, ‘பண்ணகாபரணன்’ *(111, 113, 114 - 1110)* முதலான திருநாமங்களால் அழைப்பதைக் காணலாம்.

இவ்வாறு பொலிவு காட்டும் சிவனார் திருமேனியின் பலவண் ணத் தோற்றத்தை வெளிப்படுத்தும் அமைப்பில் சிவனாருக்குத் திருநா மங்கள் சுட்டப்பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கது. அவ்வகையில், செந்நிற திருமேனியுடன் காட்சி கொடுக்கும் சிவனை, என்றபடி

### அட்டவணை 8: திருவிசைப்பாவில் இறைவனின் பல்வேறு திருத்தோற்றங்கள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | தீவணன் | 1410 |
| 2 | பவள மால்வரை | 231 |
| 3 | செம்பளிங்கே! | 123 |
| 4 | செம்பொன்னே, பவளக்குன்றமே! | 157 |

பெயரிட்டழைக்கும் நிலையில், தீயும், பவளமும், பொன்னும் சிவனுக்குரிய செந்நிறத்திற்கு உவமையாக அமைந்துள்ளதை அறியலாம்.

மேலும், பூணூலும் திருவெண் ணீறும் பூத்த வெண்மை நிறத்தோடு விளங்கும் திருமேனியனை,

### அட்டவணை 9: திருவிசைப்பாவில் இறைவனின் திருமேனி.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | வெண்பளிங்கு | 51 - 54 |
| 2 | பால் வண்ணன் | 156 |
| 3 | வெள்ளிக்குன்றமே! | 239 |
| 4 | நீறணி பவளக்குன்றமே! | 15 |

என்ற திருநாமங்களால் சுட்டும் அருளாளர்கள், சிவனின் வெண்மை பூத்த திருமேனியில் கருமை படர்ந்த திருகண்டத்தை நினைவுப டுத்தும் வண்ணம், ‘கருமையின் வெளியே!’ (14) எனச் சிவனைப் போற்றியழைப்பது கற்றுணரத்தக் கச் செய்தியாகும்.

மேற்படி திருக்கோலம் பூண்ட சிவபெருமான், திவ்விய அழகும் மங்கலமும் பொருந்திய திருமுகப்பொலிவுடன் விளங்கு வதைப் புலப்படுத்தும் பாங்கில், பின்வரும் திருநாமங்களால் திருவிசைப்பாப் பாடியோர் சிவனை அழைத்துத் துதிப்பது குறிப்பிடத்தக்கது.

### அட்டவணை 10: திருவிசைப்பாவில் இறைவனின் அழகுத்திருக்கோலம்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அழகன் | 243, 246, 254 |
| 2 | குழகன் | 1410, 247, 2410 |
| 3 | கோலமே! | 14 |
| 4 | சொக்கனே! | 19 |
| 5 | சைவனே! | 156 |
| 6 | விடங்கனே! | 110 |

இவ்வாறு பொலிவுகாட்டும் சிவனார் திருமுகத்திலுள்ள அழகிய இருவிழிகளுடன் நெற்றிக்கண்ண ழகும் ஒருசேர தோன்றும் தன்மையினைக் கீழ்வரும் பதங் களால் திருவிசைப்பா ஆசிரியர்கள் சிவனைப் பெயரிட்ட ழைப்பதும் உணரத்தக்கது.

### அட்டவணை 11: திருவிசைப்பாவில் இறைவனின் முக்கண்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | முக்கணா | 131 |
| 2 | முக்கட்பகவன் | 135 |
| 3 | முக்கண் நாயகர் | 181 |
| 4 | அங்கணா | 158 |
| 5 | கண்ணுதலான் | 2711 |
| 6 | கண்கள் மூன்றுடையதோர் கரும்பே | 17 |

இன்னும் இதே அமைப்பில், சிவனார் திருமுடியழகில் ஈடுபட்ட அருளாளர்கள், ‘செஞ்சடை அரன்’ (76), ‘பொன்முடியோன்’ (58), ‘புரிசடா மகுடர்’ (1610) என்ற நாமங்களால் ஈசனைப் போற்றிய நிலையில், சிவனார் திருமுடியில் ஊமத்தம்பூ சூடியிருப்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணம், ‘மத்தன்’ (1011) என்று ஓரிடத்தில் இறைவனை அழைத்திருப்பதும் கருதத்தக்கச் செய்தியாகும்.

இதோடு மட்டுமின்றி, சிவ னார் விடைவாகனம் கொண்டு விளங்குவதைக் குறித்திட, ‘எருது வாகனன்’ - ‘ஏறு சேவகன்’(135), ‘மழவிடைமேல் வருவான்’ (511) முதலான

நாமங்களால் பரமனைப் போற்றும் அருளாளர்கள், அப்பர மனுக்குத் திருமாலே விடைவாக னனாக எழுந்தருளிய புராணச் செய்தி புலப்படும் வண்ணம், 'மால்விடை ஏறி!'(221) என்று இறைவனை ஓரிடத்தில் விளித் திருப்பது சுட்டத்தக்கது.

அடுத்தநிலையில், அடியார் பொருட்டுச் சிவனார் எழுந்தருளி யவிடங்களின் பெயர்களைப் பிரதிபலிக்கும் திருநாமச்சிறப்பும் சிவனுக்கு உண்டு. அவ்வகையில், 'கோயில்' எனப்படும் தில்லைத் தலத்தைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்ட ஈசனை, 'தில்லை நாயனார்' (2810), 'தில்லை செல்வன்' (42), 'தில்லைவாணா!' (41) என்ற பெயர்களால் சுட்டும் அருளாளர்கள், அத்தில்லையிலுள்ள பொன்னம்பலத்தில் எழுந்தருளித் திருவருள் புரியும் சிவபெருமானை, 'தில்லை அம்பலவன்'(222), 'தில்லை சிற்றம்பலவர்' (27), 'தில்லை செம்பொன் அம்பலவன்' (411) எனப் போற்றித் துதிப்பது உணரத்தக்கது.

மேலும் இதே போக்கில், திருவீழிமிழலையில் எழுந்தருளிய சிவனை, 'திருவீழிமிழலையான்' (510), 'வீழிமிழலை வேந்தே!' (511) என்ற பெயர்களால் அழைக்கும் திருவிசைப்பா ஆசிரியர்கள், திரு வாவடுதுறை, சாந்தையூர் ஈசனை, 'சாந்தையர் வேந்தனே!' (65), 'திருஆவடுதுறை அமுதே!' (61), 'திருஆவடுதுறை நம்பி!' (65) என்றவாறு விளித்துப் போற்று வதைக் காணலாம்.

இன்னும், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலத்தில் எழுந்தருளியரு ளும் பரமனை, 'மணியம்பலவன்' (103 - 105) என்று ஓரிடத்தில் அழைக்கும் அருளாளர்கள், 'திரை லோக்கிய சுந்தரனே!' (12) எனும் பெயரால் திரைலோக்கிய சுந்தரத்தில் வீற்றருளியிருக்கும் பெருமானை விளிப்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும், கங்கை கொண்ட சோளேச்சரத்தில் எழுந்தருளிய பெருமானை, 'கங்கைகொண்ட சோளேச்சரத்தானே!' (13) எனவும், திருவாரூரில் வீதிவிடங்கராய் எழுந்தருளி அருளும் பிரானை, 'ஆரூர் ஆதி(யாய்)' (181 - 182) எனவும் பெயரிட்டழைக்கும் அருளாளர்களின் திறம் போற்று தற்குரியது.

பிறிதொரு நிலையில், மகேந்திர மலையில் உறையும் ஈசனை, 'குறவா!' (31), 'மகேந்திர வெற்பா!' (32), 'மகேந்திரநாதா' (37) என்ற நாமங்களால் அழைக்கும் திருவிசைப்பா ஆசிரியர்கள், குருமூர்த்தியாகக் கல்லால் நிழல்கீழ் வீற்றிருக்கும் இறைவனை, 'கல்லால் நிழலாய்' (241) எனும் தொடராலும், இடுகாட்டில் உலவும் சிவனை, 'மயானர்' (98) எனும் பதத்தாலும் சுட்டிக்காட்டியிருப்பது கற்றுணரத்தக்கச் செய்தியாகும்.

இதனையடுத்தநிலையில், ஐந்தொழிலும் திருநடனமும் புரிந்து உயிர்களை உய்விக்கும் பேரருளாளனான சிவபிரானை,

## அட்டவணை 12: திருவிசைப்பாவில் இறைவனின் திருநடனம்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அம்பலக்கூத்தன் | 12, 13 |
| 2 | அம்பலத்தாடி | 13, 44 |
| 3 | கூத்தனே! | 233, 234, 264 |
| 4 | கூத்தா! | 12, 1, 2 |
| 5 | மாநடம் மகிழ்வோனே! | 238 |

என்றவாறு அழைக்கும் அருளாளர்கள், எறியாடும் ஈசனை, 'ஆரழல் ஆடுவான்' (221) எனவும், வீதியில் அசபாநடனம் புரிய உலாவரும் அழகனை, 'வீதி விடங்கர்(ஆய்)' (181 - 182) எனவும் பெயரிட்டழைக்கும் சிறப் பைக் காணலாம். பிறிதொரு கோணத்தில், சிவனார் அருளிச்செயல்கள் அடிப் படையில் எழுந்த திருநாமச்சிறப்பும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில், உமையாளுக்குத் தமது உடலில் ஒரு கூறு அருளிய சிவனாரது அறக்கருணையைப் புலப்படுத்தும் வண்ணம், 'அரிவையோர் கூறு கந்தான்' (254), 'மாதொரு கூறன்' (221), 'வனிதைபாகன்' (56 - 1410) என்ற பெயர்களால் அழைக்கும் அருளாசிரியர்கள், உமையாளை மணந்து தமது பக்கத்தில் இருத்திக் கொண்ட சிவனாரின் பேரருளைப் போற்றுமுகமாக பின்வரும் பதங்களால் போற்றித் துதிப்பதைக் கற்றுணர முடிகின்றது.

### அட்டவணை 13: திருவிசைப்பாவில் இறைவனின் உமையுடன் கூடிய குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | உமாபதி | 511 |
| 2 | உமை மணவாளன் | 58 |
| 3 | உமையாள் கணவன் | 2610 |
| 4 | மலைமகள் மணவாளநம்பி | 63 |

இன்னும் இதே பாணியில், கங்கையைத் தம் திருமுடியில் தாங்கியருளிய ஈசனை,'கங்கை நாயகன்' (15), 'கங்கை அழகரே!' (94), 'கங்கை நங்கை காதலனே!' (205) எனும் நாமங்களால் சுட்டியழைக்கும் அருளாளர்கள், தேய்ப்பிறைச் சந்திரனையும் தமது திருமுடியில் சூடி அருள்பாலிக்கும் பரமனின் கருணையை உணர்த் திட, கீழ்வருமாறு பெயரிட்ட ழைக்கும் அழகைக் காணலாம்.

### அட்டவணை 14: திருவிசைப்பாவில் இறைவனின் திருமுடி வர்ணனை.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அம்புலி சூடும்அரன் | 204 |
| 2 | இந்து சேகரன் | 63 |
| 3 | சசிகுலா மவுலி | 54 |
| 4 | சசிகண்ட சிகண்டா | 13 |
| 5 | தருணேந்து சேகரன் | 63 |
| 6 | மதிசூடி! | 195 |

கூடவே, தேவர்களைக் காக்கும் பொருட்டு ஆலகால விடத்தை உண்டருளிய சிவனின் மாண்பை எடுத்துணர்த்தும் போக்கில்,

### அட்டவணை 15: திருவிசைப்பாவில் இறைவனின் விடமுண்ட பேரருள் குறிப்பு.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | கறைக்கண்டன் | 227 |
| 2 | ஆலகண்டா! | 249 |
| 3 | நீலகண்டனே! | 136 |
| 4 | சாமகண்டா! | 13 |

என்ற நாமங்களால் சிவனைச் சுட்டும் திருவிசைப்பா ஆசிரியர் கள், இவ்வாறாக அருளிய ஈசனே தேவர்களுக்கெல்லாம் தலைவனு மாவான் என்ற கருத்துப் புலப்பட,

### அட்டவணை 16: திருவிசைப்பாவில் இறைவன் தேவர் தலைவனான குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அமரர் புராணன் | 62 |
| 2 | இமையவர்க்கு அரசு | 51 |
| 3 | வானவர் கோன் | 1710, 10 |
| 4 | அமரர்கள் தலைவனே! | 158 |

என்றெல்லாம் சிவனைப் போற்றி யழைப்பது கருதத்தக்கது. மேலும், அருச்சுனனுக்கு அருளும் பொருட்டு வேடரூபம் பூண்டருளிய சிவனாரை

### அட்டவணை 17: திருவிசைப்பாவில் இறைவன் வேடனான திருவிளையாடல்

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | மறவா! | 31, 288 |
| 2 | வேடா! | 32 |
| 3 | புளின நற்காளாய் | 33 |
| 4 | விசயற்கருள் செய்த வேந்தே! | 34 |

என்ற நாமங்களால் விளித் தழைக்கும் அருளாசிரியர்கள், சனகாதி முனிவர் முதலான வருக்குக் கல்லால மரநிழல்கீழ்

குருவாக எழுந்தருளி உபதேசம் புரிந்தருளிய பரமனின் மாண்பு புலப்பட, 'அருந்தவர்க்கு அரசு'(18) என்ற பதத்தால் இறைவனைப் பெயரிட்டழைக்கும் திறன் போற்று தற்குரியது.

மற்றொருநிலையில் தாருகா வனத்தில் பிச்சாண்டி கோலம் பூண்டு, பிரம கபாலத்தைக் கையில் ஏந்தித் திரியும் சிவனின் மறக்கருணை வெளிப்படும் வண்ணம், 'பலிதிரி அடிகள்' (172), 'வெண்டலை ஏந்தும் குழகன்' (1410), என்ற பெயர்களால் அருளாளர்களால் போற்றப்படும் சிவனார், பிரமன் திருமாலுக்கு அரியவராகி அனல்மலையாக வெளிப்பட்ட தன்மையினால், 'ஞ்தாட்டிருக் கமலத்தவரும் மாலவனும் அறிவரும் பெருமை அடலழல் உமிழ்தழற் பிழம்பர்' (16 5) என்று விளிக்கப்படுவதோடு, செருக்குற்ற இராவணனது வலிய டக்கி அருள்புரிந்த பேராற்ற லால், 'இலங்கையர்கோன் மன்னு முடிகள் நெரித்த மணவாளர்' (278) எனவும் போற்றியழைக்கப் படுவது கற்றுணரத்தக்கது.

இதோடன்றி, சிவனார் புரியும் அட்ட வீரட்டச் செயல்கள் அடிப்படையில் ஆராயும் போது, காமனைத் தம் நெற்றிக்கண்ணால் சுட்டெரித்த சிவனை, 'காமநாசா!' (15), 'காம புராந்தகன்' (611) என்ற நாமங்களால் குறிப்பிடும் திருவிசைப்பா ஆசிரியர்கள், மார்க்கண்டேயன் பொருட்டுக் காலனை எட்டி உதைத்த வீரப்பண்பினால், 'காலகாலா!' (15) என்று ஓரிடத்தில் அச்சிவனைச் சுட்டுவதோடு, வில்லேந்தி திரிபுரம் அழித்த சிவனின் வீரத்தன்மை புலப்படும் நோக்கில், 'புரமூன்று எய்த வில்லி' (207), 'பொன்மலை வில்லி' (78), 'மேருவில் வீரா!' (16) என்ற திருநாமங்களால் அவ்வீ சனை அழைக்கும் போக்கை இவ்விடம் காண முடிகின்றது.

இறுதியாக, உறவுமுறைகள் அடிப்படையில் சிவனைக் குறிப்பிடும் வண்ணம், 'சேந்தன் தாதை' (511) என்ற நாமத்தால் முருகனுக்குத் தந்தையாகவும், 'குமர விநாயக சனகா!' (1 7) என்ற பெயரால் முருகனுக்கும் விநாய கனுக்கும் தந்தையாகவும் திகழும் அவ்வீசனைத் திருவிசைப்பா அருளாளர்கள்,'தனதன்நற் றோழா!' (17) என்றபடி, குபேரனுக்கு நண்பனாக விளங்கும் அப்பெரு மானை விளித்துப் போற்றுவதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

## முடிவுரை

மொத்தத்தில், எண்குணத்தவனாய் குறிக்கப்பெறும் ஈடுஇணையற்ற பரம்பொருள், தன்னிலையில் தன்மைக ளும் அடையாளங்களும் கடந்த செம்பொருளாகும். அஃது, எண்ணி றந்த உயிர்களுக்கெல்லாம் உணர்த்தும் உணர்வாக இருப்பினும், தம் முழுமையை எடுத்தியம் பவியலாததாய், கால இட எல்லைக்கு உட்படாததாய், வியாபகமிக்கதாகவும், அதே வேளை அதிநுட்பமானதாகவும் இருப்பதே அதன் சிறப்பியல்பாகும். இதுவே சைவ சித்தாந்த துணிபு (இராசேந்திரன், 2017, ஜீஜீ.56 57). மறுகோணத்தில், திருவிசைப்பாவில் இறைவனின் சொரூபநிலைத் திருநா மங்களைத் திருவிசைப்பா அருளா ளர்கள் பாடியிருக்கும் பாங்கு பரம்பொருளின் ஒப்பில்லாத பேராற்ற லைப் பறைசாற்றுகின்றது. அதே வேளை, இறைவனின் பருநிலையில் புலப்படும் தடத்த திருமேனியில் சிவபெருமானுக்குச் சுட்டப்படும் ஆயிரம் திருநாமங் களைக் கூறி போற்றும் வகையில் அவ்வரு ளாளர்கள் பாடியிருப்பது அவர்களது பக்தி அனுபவத்தின் உச்சத்தையே புலப்படுத்தி நிற்கின்றது (துரியானந்தம், 2015, pp.7879; சர்மிளா சதாசிவம், 2016, pp.5152). அவ்வகையில், பதிப்பொருளான இறைவன் குணங்குறிகளைக் கடந்த சொரூப நிலையில் அனைத்தையும் ஆட் கொண்ட ருளும் அருட்குண வடிவானவன்; உயிர்கள்பால் கொண்டுள்ள பேரருட்தன்மை யினால், அவற்றை உய்விக்கும் பொருட்டு வடிவம் தாங்குகிறான். இத்தத்துவ வெளிப் பாட்டின் பிரதி பலிப்பே திருவி சைப்பாவில் காணப்பெறும் இறை வனின் சொரூப, தடத்தநிலை திருநாமங் களாகும். தவிர, மனம், மொழி, மெய்யால் இறைவனைப் போற்றித் துதித்த அருளாளர் பெருமக்களது பக்திப்பெருக்கின் விளைவை மிகத் தெளிவாகப் புலப்படுத்தும் போக்கில் திரு விசைப்பாவில் இறைவன் திரு நாமச்சிறப்புக் குறித்த செய்திகள் அமைந்திருப்பது உய்த்துணரத் தக்கதாகும்.

## References

Anantharasan, A. (2007). *Civanana Potam: Valitunai Vilakkam*. Tirunelvi: Arunanthi Sivam Puttaka Nilaiyam.

Arunaivadivelu Mutaliyar, Si. (1975). *Cittanta Vina-vittai*. Tarumapuram: Nyanasambantam Patipakam, Tarumai Aatinam.

Arunasalam, Mu. (1974). *Onpataam Tirumurai Tiruvisaippaa Tiruppallaandu (Paavum Payindra Nilaiyum)*. Chennai: Chennaip Palkalaikkalaga Veliyeedu.

Gangatharan, Sa. (1980). *Caiva Cittanta Atippataik Kolkaikal*. Madurai: Madurai Tamizhaalaji Publishers. First Edition.

Kantasamy, S. N. (1995). *Tirumurai Ilakkiyam*. Chennai: Ulagat Tamilaaraicci Niruvanam.

Kumaran, R. (2015) "Periya Puranathil Velippadhum Bakthineri". *Journal of Tamil Peraivu*. (Vol.1 & pp.40-41). ISSN 2289-8379.

Nagappan, A. (2008). *Cittanta Caivam*. Kuala Lumpur: Siva Enterprise. First Edition.

*Onpataam Tirumurai, Tirumantira Aayvu Maalai*. (2007). Pathippaasiriyar: Dr.G.P. Nallasivam. Varanasi: Onpataam Tirumurai, Tirumantira Aayvu Maanaadu, Kumaarasaamit Tirumadam. Volume 1 & 2. First Edition.

*Onpataam Tirumurai, Tiruvisaippaa Tirupallaandu Aayvu Manikal*. (2005). Pathippaasiriyar: Dr.Vel.Kartikeyan. Mayilam : Kamachi Patippakam. First Edition.

Rajantheran, M., & Silllalee, K. (2017) "The Deities Of Sangam People Through Purananuru", *Journal of Tamil Peraivu*. (Vol.5 & pp.56-57). ISSN2289-8379.

Sengkalvaraaya Pillai,Va.Su. (1972). *Tiruvisaippaa Olineri*. Chennai: Tirunelvelit Tennintiya Saiva Siddhantha Nuurpatippuk Kalagam, Ltd. First Edition.

Sharmila Sathasivam. (2016) "Suntharar's Rude Language and Its Inner Meanings", *Journal of Tamil Peraivu*. (Vol.4 & pp.51-52). ISSN 2289-8379.

Thuriyanantham, K. (2015). "Tirumuraigalil Iyarkai Varunanai". *Journal of Tamil Peraivu*. (Vol 2 & pp.78-79-57). ISSN 2289-8379.

*Tiruvisaippaa Tiruppallaandu (Onpataam Tirumurai) Telivurai*. (1964). Ti.Paddusamy Othuvaar Urai. Sri Vaikundam: Sri Kumarakuruparan Sangam.

*Tiruvisaippaa Tiruppallaandu. Onpataam Tirumurai. Polippurai, Vilakkak Kurippuraikaludan*. (1977). C.Arunaivadivelu Mutaliyaar Vilakkak Kurippurai. Mayilaaduthurai: Nyanasambantam Patippakam, Tarumai Aatinam. Second Edition.

*Tiruvisaippaa Tiruppallaandu. Onpataam Tirumurai. Polippurai, Vilakkak Kurippuraikaludan*. (1997). Pathippaasiriyar: Srimath Tirunyanasambantat Tambiraan Swamigal. Mayilaaduthurai: Tarumai Aatinam. Second Edition.

# "பாண்டியன் பரி" சில் படிமம் மொழிபெயர்ப்புச் சிக்கல்

# Impressimison in Bharathidasan's Pandian Parisu - Problem in Translation

முனைவர் உமா தேவி நாயுடு அழகிரி / Dr. Umadevi Naidu Allaghery

***Abstract***

Pavendan Bharathidasan in one of the Pioneers in Tamil literature and he made use of many faculties in his poetry. In the game called short literature, he made his mark with deep intellectual thoughts. Pandian Parisu is the historical approach in this context. Which has been translated into English. Usually translating one literature into other languages is not an easy task. It is really a challenge to keep the spirit of the some language into the translated language. To express imagination, poets make use of comparison, imagery, impression and symbols. This paper deals with how impressionism and the techniques of translation used in Pandian Parisu.

**Key Words:** Pavendan Bharathidasan, Pandian Parisu, Translation, Literature, குறுநாவல்

## முன்னுரை

செம்மொழியாம் தமிழ் மொழியில் காலந்தோறும் எண்ணிறைந்த சிறந்த இலக்கியங்கள் தோன்றி யுள்ளன கவிதைகளிலும் கவிஞர் கள் வழங்கியுள்ளனர். அந்த மரபு வழி வந்த கவிஞர்களுள் போற்றப் படுபவர் பாவேந்தர் பாரதிதாசன்.

பாவேந்தர் பாரதிதாசன் பல துறைகளில் புதிய கண்ணோட்டத் தில் கவிதைகளைப் படைத்துப் பலரை வியக்கச் செய்துள்ளார். அவர் ஆழ்ந்த சிந்தனையை இனிய எளிய கவிதைகளில் பல வடிவங்களில் வழங்கியுள்ளார். அவ்வடிவங்களுள் குறிப்பிடத்தக் கது குறுங்காப்பியம். பாவேந்தர் பாரதிதாசன் புனைந்த குறுங்காப் பியங்களாவன 'புரட்சிக் கவி', 'வீரத்தாய்', 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'தமிழச்சியின் கத்தி', 'எதிர்பாராத முத்தம்', 'பாண்டியன் பரிசு' என்பவை ஆகும். வரலாறு அடிப்படையில் ஒரு புதிய முயற்சி யாக அமைந்துள்ள 'பாண்டியன் பரிசு' என்ற குறுங்காப்பியம் ஆங்கில மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

கவிஞர்களுடைய கற்பனைத் திறத்தை வெளிப்படுத்துபவை உவமை, உருவகம், படிமம், குறியீடு முதலிய உத்திகள் ஆகும். 'பாண்டியன் பரிசில் படிமம் என்னும் இலக்கிய உத்தி அமைந்துள்ள விதமும் அவை மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதமும் ஆராயப்படும். இந்த மொழி பெயர்ப்பின் போது பலவகை சிக்கல்கள் தோன்றலாம். மொழி பெயர்ப்பாளர் அவற்றைக் களைத் துள்ள விதமும் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படும்.

The author is a Lecturer in the Department of Tamil, Mahatma Gandhi Institute, Mauritious.
u.allaghery@gmail.com

## பாரதிதாசனும் 'பாண்டியன் பரிசும்

கடவுள், இயற்கை, மொழி, பெண், சமூகம் முதலிய பாடுபொருள் களைப் பயன்படுத்தித் தம் சீர்திருத்தங்களை மேற்கொண்டவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இவர் படைத்த குறுங்காப்பியங் களுள் தனிப்பட்டது 'பாண்டியன் பரிசு'. இது நானூறு எண்சீர் விருத்தங்களால் படைக்கப்பட்ட ஒரு புரட்சிக் காப்பியமாக விளங்குகிறது. பாண்டியன் பரிசு என்ற ஆட்சி உரிமையைக் கொண்ட பேழையை அடிப்படை யாகக் கொண்டு எழுந்தது. இளவரசியான அன்னம் சாதாரணக் குடும்பத்தைச் சார்ந்த வேலன் என்பவனை மணக்கும் கற்பனைக் கதையில் புரட்சியை உருவாக்கி யுள்ளார் பாவேந்தர்.

மொழிபெயர்ப்பு ஒரு விளக்கம்

மொழிபெயர்ப்பை ஒரு மொழிக்கும் மற்றொரு மொழிக்கு மான உறவு நிலை, இணைப்புப் பாலம் எனலாம். ஒரு மொழியி லுள்ள மூலப் பகுதிக்கு ஈடாக மற்றொரு மொழியினைப் பயன் படுத்தி அச்செய்தியை வெளிப் படுத்தும் செயற்பாங்கே மொழி பெயர்ப்பு என்பர். மொழிகளுக் கிடையில் இடம்பெறும் செய்தி களின் பரி மாற்றமே மொழி பெயர்ப்பு ஆகும் எனலாம்.

மொழிபெயர்ப்பை வரை யறை செய்கையில், "ஒரு மொழியின் மூலச் செய்திகளை மற்றொரு மொழியில் இதற்கு இணையான அளவில் நடைமாற்றம் செய்வதை மொழி பெயர்ப்பு" என்பார் ஜே.சி. காட்ஃபோர்டு (Catford, *2000*, p.*20*). அகராதிகள் தரும் மொழிபெயர்ப் பின் விளக்கங்களாவன,

"Change into another language"

(World book Dictionary, 1990, p.1047)

இன்னொரு மொழியில் மாற்றுவது எனவும்,

"The action or process turning into another language; a version in a different language"

(Oxford Universal Dictionary, 1933, p.1148)

ஒரு மொழியிலிருந்து இன் னொரு மொழிக்குப் பெயர்க்கும் செயல் அல்லது செயற்பாங்கு, வேற்று மொழியில் ஒரு மொழி பெயர்ப்புரு எனவும் விளக்குகின் றன.

## மொழிபெயர்ப்புச் சிக்கல்

பொதுவாக மொழிபெயர்ப் பில் சிக்கல்களாகக் கருதப்படுவன மொழி மற்றும் பண்பாடு. ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழியிலுள்ள இலக்கியங்களை மொழிபெயர்ப்பது எளிது. ஏனெ னில் இவை பொதுவான பண்பாட்டுப் பின்னணியினையும் மொழியியல் அமைப்பினையும் கொண்டுள்ளன. இம்மொழிக் குடும்பத்தைச் சேராத மொழிகளை மொழிபெயர்ப்பதிலே சிக்கல்கள் நிறைந்திருக்கும். தமிழும் ஆங்கி லமும் இருவேறு குடும்பத்தைச் சார்ந்த மொழிகள். எனவே அவற்றை மொழிபெயர்ப்பதில் சிக்கல் தோன்றுவது இயல்பு. மேலும் தரும் மொழி, பெறும் மொழி ஆகிய இரண்டின் தன்மையை நன்கு உணரா விட்டால் மொழிபெயர்ப்பில் சிக்கல் ஏற்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்று. தரும் மொழிப் பனுவலைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் குழப்பம், மறைப்பொருள், புதைநிலைப் பொருள், தரும் மொழிப் பனுவலின் சிதைவுற்ற நிலை ஆகியவற்றில் பலவும் மொழிபெயர்ப்புச் சிக்கல்களுக்குக் காரணங்கள் ஆகலாம்.

பண்பாட்டு மொழிபெயர்ப்பு, இலக்கிய மொழிபெயர்ப்பு, பயன் பாட்டு மொழிபெயர்ப்பு ஆகிய மொழிபெயர்ப்புகளில் சிக்கல்கள் தோன்றுவதைக் காணலாம். பண்பாட்டு மொழிபெயர்ப்பு என்ற வகையில் சொல் அளவில் அதிகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அது ஒரு பண்பாட்டை மாற்றுவதற்கான முயற்சி ஆதலால் சிக்கல்கள் தோன்றுகின்றன. அவ்வாறு மாறும் போது, அதில் காணப்பெறும் பண்பாடு தொடர்பான சொல்லோ அல்லது தொடரோ மாற்றப்படும் மொழிக்கு இணையாகக் கிடைக்க வில்லை என்றால், அதற்கான இணையான சொல்லை உருவாக் கிக் கொள்ளலாம்.

பொதுவாக, மற்ற மொழி பெயர்ப்புகளில்

காணப்படும் சிக்கல்கள் அனைத்தும் இலக்கிய வகை மொழிபெயர்ப்புகளில் சிக் கல்களுக்குப் பெரும்பாலும் யாப்பு, அணி, உணர்வுப் பொருள் ஆகியவை காரணாமாகும்.

## படிமம்

புலனுணர்வுப் பொருள்களைத் தனித்தனியாக மனத்தில் உருவாக்கி மொழியால் வெளிப் படுத்துதல் படிமங்களாகும். "மனக்காட்சிகளும் அவற்றை வெளிப்படுத்தும் மொழியும் படிமங்கள் எனப்படும்" என்று கைன் ஆல்டென்பொன்டும் லெஸ்லி லீவிஸ் என்பாரும் உரைத்தது இக்கருத்துக்கு அர ணாக அமைத்துள்ளது (Lynn Aktenrubernd & Leslie Lewis, 1970, p.12).

படிமம் சூழ்நிலைக்கேற்ற வாறும் கவிஞர் தாம் நுகரும் திறனுக்கு ஏற்றவாறும் வடிவம் எடுக்கக்கூடியது; உணர்ச்சிக்குத் தக்கவாறும் மாறுபடும் திறனு டையது. இலக்கியத்தில் ஐம்புலன் நுகர்ச்சிக்கும் பயன் அளிப்பதாய் உள்ளது இப்படிமம். "சொல் கேட் டார்க்குப் பொருள் கண்கூடாதல்" (தமிழண்ணல் பெரியகருப்பன், 2003, ஜீ.107) என்ற பேராசிரியரின் விளக்கத்தை முனைவர் தமிழண் ணல் படிமத்தோடு தொடர்பு படுத்துகிறார்.

கவிஞர் தம் பட்டறிவைத் தேர்ந்தெடுத்த சொற்களால் உணர்வூட்டி நமக்குத் தருகிறார். இந்தச் சொற்களே படிமங்கள், சிந்தனை இவற்றின் குறியீடு களாகச் சொற்கள் பணி செய்கின்றன. 'பர்ட்டன்' (Burton) என்ற திறனாய்வாளரின் கருத்துபடி கவிதையின் படிமங்கள் சொற்க ளின் மூலம் நம் புலன்களைத் தொடுகிறது. புலன்களின் மூலம் படிப்போரின் உணர்ச்சிகளும் அறிவும் விரைவாகத் தூண்டப் பெறுகின்றன. இதன் காரணமாகக் கவிதையில் படிமம் அதிகமாகப் பயன்படுகிறது (Burton, 1976, ஜீ.97). அவர் மேலும் கூறுவது: "செலுத்தப் பெறும் புலன்களுக்கேற்ப, படிமம் வகைப்படுத்தப் பெறுகிறது." ஆகவே நாம் பெறுபவை: கட்புலப் படிமங்கள், செவிப் புலப் படிமங்கள், நாற்றப் புலப் படிமங்கள், தொடுபுலப் படிமங்கள் என்பவை ஆகும்." இவ் வகைகள் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் வழி ஆராயப்படுகின்றன.

## கட்புலப் படிமம்

"பல்வேறு படிமங்களிடையேயும் கட்புலத்தைக் கவரும் படிமங்களே அதிகமாக உள்ளன. இவையே படிப்போரின் மனத்தில் நிலையான பதிவினை உண்டாக்கி விடு கின்றன." (சுப்பு ரெட்டியார், 2002) பாவேந்தர் பாடல்களில் கட்புல னைக் கவரும் ஒரு சில படிமங்களும் வேறு வகை படிமங்களும் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் சுட்டிக்காட்டியுள்ள வற்றைக் கீழ்க் கண்டவாறு அமைந்துள்ளதைக் காணலாம். பாவேந்தர் பூதமாக வரும் "எட்டி" என்பதை வருணிக்கும் கவிதைப் பகுதியை நோக்கத்தக்கது.

*"எட்டி" எனும் ஓர் ஆளை அழைத்து வந்தே*

*எரிவிழியும் கருமுகமும் நீண்ட பல்லும்*

*குட்டைமயிர் விரிதலையும் கொடுவாள் கையும*

*கூக்குரலும் நீர்ப்பாம்பு நெளியும் மார்பும்*

*கட்டியதோர் காருடையும் ஆக மாற்றிக் காணுவார்."*

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.47)*

இதில் எரிவிழி, கருமுகம், நீண்ட பல், குட்டை மயிர், விரிதலை, கொடுவாள் மீசை, நீர்ப்பாம்பு, நெளியும் மார்பு, காருடை என்பவை கட்புலப் படிமங்கள். இதற்கான ஆங்கில மொழி பெயர்ப்பு பின்வருமாறு,

"A person named 'Etti' was brought there

And made to appear like a monster!

Black face, flaming eyes and protruding teeth

Broad skull, short hair, armed with dagger,

A painted snake on the breast-portion,

Of its black robe and frightening noise!"

(Venkatachalam, 1999, pp.128-129)

மொழிபெயர்ப்பில், படிமங் களை, 'Black face, flaming eyes and protruding teeth, broad skull, short hair, armed with dagger, a painted snake on the breast-portion, of its black robe' என மொழிபெயர்த்து ள்ளதாகத் தெரிகிறது. தமிழ் மொழி அமைப்பும் ஆங்கில மொழி அமைப்பும் வெவ்வேறானவை ஆதலால் மொழிபெயர்ப்பாளர் ஆங்கில மொழியில் கவிதை நடையைக் கொண்டு வர முயற்சி செய்துள்ளார். 'எட்டி' என்பதற்கு ஒலிபெயர்ப்பு அளித்ததோடு மூலப் பொருளை உணர்த்தும்படி அதற் குரிய விளக்கம் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. 'A poisonous bitter tree- here this term indicates an unwanted creature. Also refers to abominable snowman (Tibetan)' இதற்கான இணையான விளக்கம் ஆகும்.

## செவிப் புலப் படிமம்

காதினால் மட்டிலும் கேட்டு உள்ளத்தைப் பறி கொடுக்கச் செய்யும் படிமம் செவிப் புலப் படிமம் ஆகும். நரிக்கண்ணனுக்கு முடிசூட்டப் போவதை முரசு ஆய்ந்து முழங்குவதை,

*"முடி" வைத்தான்; முழங்குகின்றான்; அன்னோன் வாழ்வின்*

*முடிவைத்தான் முழக்குகின்றான் முரச றைந்தே!"*

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.27)*

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இதற்கானமொழிபெயர்ப்பு, "Crowned today, his end is nor far! That is the portent of this drummer" (Venkatachalam, 1999, p.68) என்பதாகும்.

மொழிபெயர்ப்பில் மூலத்தி லுள்ள பொருள் மிக நுணுக்கமாக அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 'வைத்தான்' என்ற வினை திருப்பித் திருப்பி வருவதால் அதன் விளக்கம் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. அது 'again typical of the poet, is this stanza with its tonemic repetition of vaittaan. Again 'then' is the emphatic intensive particle, signifying certainty. The genitive use of these terms and particle is impossible in English by any equivalent' என்று அமைகிறது.

"முழங்கிற்றுக் குதிரைகளின் அடிஓ சைதான்!" (பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.28) என்பதற்கு "The noise of the hooves of drating horses" (Venkatachalam, 1999, pp.69-70) என்று வழங்கப்பட்டுள்ளது. 'Drating' என்பது அதிகச் சத்தம் கொண்டது என்று பொருள்படும். மூலத்திலுள்ள நேர் பொருளையும் வேகத்தையும் உணர்த்துகிறது இம்மொழிபெயர்ப்பு. 'Made the earth tremble!' என்ற அடி மிகையாக அமைந்துள்ளது.

*"கதிர்நாட்டின் விதியெலாம் யானைமீது*

*கடிமுரசு முழக்கினான்"*

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.41)*

என்பதன் ஆங்கில மொழிபெயர்ப்பு

"The drum mounted on an elephant, made this announcement in all the streets" (Venkatachalam, 1999, p.110) என்பதாகும்.

ஆங்கில மொழி நடையைக் கொண்டுவர மூல அடிகள் உள்ளவாறு மொழிபெயர்க்காமல் முன்பின் அடிகளாக மொழிபெயர்க் கப்பட்டுள்ளன. 'கடி' என்ற சொல் காவல், கூர்மை, விரை, விளக்கம், வன்மை என்னும் பல பொருள் களைத் தருகின்ற ஓர் உரிச்சொல். 'கடி முரசு' என்பது வன்மை முரசு என்ற பொருளில் அமைந்துள்ளது. மொழிபெயர்ப்பில் இது மொழி பெயர்க்காமல் விடுபட்டுள்ளது.

## சுவைப் புலப் படிமம்

*வேலன் நெஞ்சம் அன்னம்மேல் உள்ளது என்பதைக் கவிஞர்,*

*"கன்னலிலே சாறெடுத்து தமிழ்கு ழைத்துக்*

*கனி இதழாற் பரிமாறும் இனிய சொல்லாள்"*

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.78)*

என்று பாடுகிறார். அதன் மொழிபெயர்ப்பு சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது. அவ் அடிகளுக்கு "in sweet Tamil mixed in sugar cane juice" (Venkatachalam, 1999, p.218) என்று மொழிபெயர்ப்பு

அளிக்கப் படுள்ளது. மூலத்தின் பொருளை மொழிபெயர்க்காமல் விடுபட்டு ள்ளது. தமிழ் மொழியின் இனிமை யைப் புலப்படுத்த கவிஞர் கன்னலின் சாறு என்பதோடு ஒப்புமை செய்கிறார். இவ் ஒப்புமை மொழிபெயர்ப்பில் தெளி வாக அமையவில்லை. கருத்தை எடுத்துக் கொண்டு அதை விளக்கும்படி அமைந்துள்ளது.

*“சுரந்த பால் இருந்தருந்திப் பரந்து லாவும்*

*நெடும் பன்றிக் குட்டிகள்போல் மக்கள் யாரும்“*

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.26)*

என்பதற்கு “ Even piglets of the same litter, Cling affectionately to each other! , Likewise all humans should be kindly treated” (Venkatachalam, 1999, p.65) என்று மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மூலத்திலுள்ள சுவைப் புலப் படிமம் உவமைப் பொருளாகக் கொண்டு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## நாற்றப் புலப் படிமம்

நரிக்கண்ணன் பேழையை ஆள் மாறாட்டத்தால் தவறாகக் கொடுத்துவிட்டதை,

*“இமைக்குள்ளே கருவிழியைக் கொண்டு போகும்*

*எத்தனவன் பேழையினை ஏப்ப மிட்டான்*

*கமழாத புதர்ப்பூப்போல் திருடர் யாவரும்“*

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.47)*

என்று கவிஞர் வருணித்துப் பாடியுள்ளார். இதில் ‘கமழாத புதர்ப்பூ’ என்பது நாற்றப் புலப் படிமம் ஆகும். ஆங்கில மொழிபெயர்ப்பு “From one’s eyes, he stole that chest! , Like smelless flowers in thickets”22 (Venkatachalam, 1999, p.126) என்று அமைந்துள்ளது. உவமைப் பொருளைக் கொண்டு நேரான மொழிபெயர்ப்பு வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடு புலப் படிமம்

மன்னன் இறந்து கிடப்பதை அரசமாதேவி கண்ணுக்கினியாள் காண்கிறாள்.

*“அணைத்திட்டாள்! மலர்க்கையால் கன்னம் உச்சி*

*அணிமார்பு தடவினாள்!”*

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.10)*

இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு “Him she hugged close; felt his cheeks, crown and chest, in cuirass with her flower soft hands” (Venkatachalam, 1999, p.19) என்பது ஆகும். மூலத்திலுள்ள அவலத்தை ஆங்கில மொழியிலும் கொண்டு வருவதன் முயற்சி இருப்பதைக் காணலாம். மேலும் மூலத்திலுள்ள நிகரன் கொண்டு வருவதைக் காணலாம்.

தாய் தந்தையாரை இழந்த அன்னத்தின் உள்ளம் ஆழ்ந்த துன்பத்தைப் பொறுக்க முடியாமல் தன் வேதனையை உரைத்த அடிகள்,

*“ஒருக்கணித்து மார்பணைத்து மேனி யெல்லாம்*

*கைப்புறத்தில் ஆம்படிக்குத் தழுவி என்றன்*

*கண்மறைக்கும் சுரிகுழலை மேலோ துக்கி*

*மைப்புருவ விழிமீது விழிய மைத்து*

*மலர்வாயால் குளிர் தமிழால் கண்ணே”*

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு, p.26)*

என்பது ஆகும். இவ்வடிகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு “Hugged me when I was a cuddlesome babe, caringly caresses my hair, trimmed it, prettied my arched and low- like eyebrows, kissed my rosy lips and forehead, and called me ‘My child!’ In dulcet Tamil!” (Venkatachalam, 1999, p.65) என்பது ஆகும்.

## முடிவுரை

படிமங்கள் கவிதைக்குச் செறிவூட்டு கின்றன. இந்தச் செறிவைப் பாவேந்தர் பாரதிதாசனின் ‘பாண்டியன் பரி’சை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் வெளிக் கொண்டு வந்துள்ள திறம் பல்வேறு வகைகளில் வெளிப் பட்டிருப்பது இக்கட்டுரை வழியே தெரிய வந்துள்ளது.

## References

Bharathithasan. (2011). Pandiyan Parisu. Chennai: Mullai Nilayam.

Burton, H., Samuel. (1976). *The Criticism Of Poetry.* London: Longman and Green Co. Ltd.

Catford, J.,C. (2000) *A Linguistic Theory of Translation*. Oxford: Oxford University Press.

Clarence Lewis Barnhart & Robert. K., Barnhart. (1990). *World book Dictionary*. (Vol.1). Pennsylvania: Pennsylvania State University.

Joyce M., Hawkins. (1933). *Oxford Universal Dictionary*. Oxford: Oxford University Press.

Lynn Aktenrubernd & Leslie Lewis, A. (1970). *Handbook For The Study Of Poetry*. UK: Macmillan.

Selvakumar, P. (2007). *Mozhipeyarpiyal*. Chennai: The Parker.

Subbu Reddiyar, N. (2001). Paventharin Pattuth Thiran. Chennai: Sura Books.

Subbu Reddiyar, N. (2002). Pandiyan Parisu-Oru Mathipidu. Chennai: Sura Books.

Tamilannal Periyakaruppan, Irama. (2003). Sanga Ilakiyam Oppidu-Ilakiya Kolgaigal. Chennai: Menatchi Puthaga Nilaiyam.

Venkatachalam, M.,S. (1999). *Paratitacan Pantiyan Paricu*. Chennai: Institute of Asian Studies.

# பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பாடநூல்கள் தரம் குறித்து படிப்பினை தரும் சென்ற நூற்றாண்டு நிகழ்வுகள்

# The lesson learnt in the last century regarding the maintaining of Quality in Tamil Syllabus

முனைவர் ஜோதி எஸ்.தேமொழி / Dr. Jothi S. Themozhi

***Abstract***

Learning Lessons from the past: A review of the last century Tamil Pozhil Tamil Journal articles revels a literary criticism and a heated debate over P. S. Subrahmanya Sastri's book Tolkāppiyam: Collatikāram. These events that took place for years, and the efforts put forth by the Tamil scholars teach the importance to maintain the quality of University Tamil Textbook Standards. This debate could be seen in the articles published in the monthly journal Tamil Pozhil. Hence keeping the standard of syllabus in the Tamil Curriculum becomes the dire need. The debate that went on in the last century indicates the emphasis to maintain a Quality Tamil Syllabus in the text books.

**Key Words:** University Tamil Textbooks Standards, Tamil Pozhil, Tamil language, Tolkappiyam, Sollathikaram, Tolkāppiyam: Collatikāram, P. S. Subrahmanya Sastri.

## முன்னுரை

செம்மொழியான தமிழ்மொழி யாம் எனப் பெருமையுடன் நாம் போற்றும் தமிழ், என்றுமுளதென் தமிழ் என இளமை குன்றாமல் நிலைப்பது தமிழ்க்கல்வியில் காட்டும் கவனமான தரக்கட்டு ப்பாட்டின் அடிப்படையில் அமை கிறது. அதற்குதவும் வகையில் தமிழ்க்கல்வியின் தரத்தைக் காத்திட தக்க பாடநூல்களைத் தேர்வு செய்வது தமிழ்க் கல்வியாளர்களின் முதன்மையான பொறுப்பாகவும் இருக்கிறது. தமிழிலக்கிய இதழாகிய தமிழ்ப் பொழில் கட்டுரைகளின் மீது செய்யும் ஒரு மீள்பார்வை, தமிழ்க் கல்வியின் நிலையை மேம்படுத்து வதில் கல்வியாளர்கள் பெறக்கூடிய பாடம் என்னவென்று நாமறிய உதவும்.

## ஆய்வுப் பின்புலம்

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்று அறியப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் வெளியான ஒரு நூலின் அல்லது இதழின் உள்ளடக்கச் செய்திகளை ஆராயும் பொழுது, அவை தரும் தகவல்கள் அடிப்படையிலேயே பின்னர் வரலாற்றில் அதிகம் பேசப்படாத நிலையிலும் நூலின் காலத்தின் இருந்த சூழ்நிலையை நாம் அறிய வாய்ப்புள்ளது. சென்ற நூற்றாண் டின் முற்பகுதியில், 'மொழி மறுமலர்ச்சி இயக்கம்' தோன்றி வளரத் துவங்கிய நாட்களில் தமிழ்மொழியின் நிலையையும் நாம் இவ்வாறே அறியலாம். அந்நாட் களில் தமிழ்க் கல்வி பெற்றிருந்த மதிப்பற்ற நிலையையும், தமிழாசிரி யர்கள்

The author is a Freelance Researcher and writer (USA) as well as Editor for "Min Tamil Medai," the Quarterly e-zine for the Tamil Heritage Foundation.Ph.D scholar in government Management.
jsthemozhi@gmail.com

போற்றப்படாமல் மாற்றாந் தாய் பிள்ளைகள் நிலையில் நடத்தப்பட்டதையும், சரியான பதவியும் ஊதியமும் அங்கீகாரமும் கிடைக்கப்பெறாமல் தமிழறிஞர்கள் வருந்தியதையும், தமிழுக்காகப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக் கத் தமிழார்வலர்கள் முயன்றதையும், தமிழ் வளர்க்கும் நோக்கில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தை துவக்கும் முயற்சிகளை மேற்கொண்டதையும், தமிழ் வளர்ச் சியில் அக்கறை கொண்டோர் சமஸ்கிரதம், இந்தி, ஆங்கிலமொழி ஆதிக்கத்துடன் தொடர்ந்து போராடிக் கொண்டே இருந்த நிலை என இவையாவற்றையும் தமிழிலக் கியப் பதிவுகளின் வழியாக, அவை தரும் செய்திகள் மூலம் நாம் தெளிவாக அறிய முடியும் (தேமொழி, 2016, p.23).

## ஆய்வுமுறை / Methodology

தமிழ்ப் பாடநூல்கள் தரம் குறித்து மேற்கொள்ளப்பட்ட செயல்பாடு களை ஆய்ந்தறிவதற்கும் சென்ற நூற்றாண்டில் வெளியான தமிழி லக்கிய ஆய்விதழ்களும், குறிப்பாக தமிழ்ப் பொழில் இதழில் வெளியான கட்டுரைகளும் உதவுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்திய மண்ணில் தோன்றிய மொழி மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவாக, தமிழ் மக்கள் தமிழ கத்தில் தோற்றுவித்த தமிழ்ச் சங்கங்கள் என்ற மொழிவளர்ச்சி நிறுவனங்களும், தமிழ் இலக்கிய இதழ்களும் முழுமூச்சுடன் தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண் டன. பாண்டித்துரைத் தேவராலும், இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களாலும் 1901ஆம் ஆண்டு மதுரையில் துவக்கப்பட்டு நான்காம் தமிழ்ச் சங்கம் எனப் பாராட்டப் பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கமும், மதுரைத் தமிழ்ச் சங்கம் தந்த தாக்கத்தால் 1911 ஆம் ஆண்டு தஞ்சையின் கருந்திட்டைக்குடியில் தோற்றுவிக்கப்பட்ட தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கமும் தமிழ்மொழி மறுமலர்ச்சி இயக்க வரலாற்றில் அழியாத இடம் பிடித்த நிறுவனங்கள். இத்தமிழ்ச் சங்கங் கள் தங்கள் சங்கங்களின் செயல் வடிவமாகத் தமிழில் இலக்கண இலக்கிய ஆராய்ச்சிக்கென தமிழி லக்கிய இதழ்களையும் வெளியிட் டன. இந்தத் தமிழிலக்கிய இதழ்களும் அக்காலகட்டத்தில் தமிழின் வளர்ச்சி, தமிழ்க் கல்வியின் வளர்ச்சி நிலை என்ன என்பதை வெளிக்காட்டும் வண்ணம் அமைந் திருந்தன. (http://www.poornachandran.com/2016/03/).

## தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் திங்களிதழான தமிழ்ப் பொழிலின் வரலாறு:

தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கம் துவங்கக் காரணமாக இருந்த த.வே. உமாமகேசுவரனார் அவர்களின் திட்டங்களில் ஒன்று திங்கள் தோறும் வெளிவரும் ‘தமிழ்ப் பொழில்’ என்னும் இலக்கிய இதழ் வெளியீடு. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கங்களையும் செயல்பாடுகளையும் தமிழுல கத்திற்கு அறிவிக்கவும், தமிழரின் மேன்மையையும் தமிழின் தொன் மையையும் ஓங்கி ஒலித்து உலகறியச் செய்யவும், தமிழுக்கும் தமிழருக்கும் இழிவு ஏற்படுத்த முன்னெடுக்கப்படும் செயல்களை நியாய நெறியில் கண்டிக்கவும், பிற நாட்டு இலக்கியங்களையும் கலைநூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளிக்கொணரவும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவும் சங்கத்தின் சார்பில் ஒரு இலக்கிய இதழ் தேவை என்றக் குறிக் கோளுடன் துவக்கப்பட்டது தமிழ்ப் பொழில் இலக்கிய இதழ்.

இதன் வெளியீட்டு ஏற்பாடு களை முன்னெடுக்க த. வே. உமாம கேசுவரன் தலைமையில் திருவாளர்கள் நா. சீதாராம பிள்ளை, ஐ. குமாரசாமி பிள்ளை, த.வீ. சோமநாதராவ் மற்றும் த.வே. இராதாகிருட்டிணப் பிள்ளை ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்று 1914 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பத்திரிக்கைத் தொடங்குவதற்காக அரசாங்கத்தின் அனுமதி பெறுதல், வேண்டும் மூலதனத்தைத் திரட்டுதல் போன்ற பணிகள் துவக்கப்பட்டு, இதழுக்கு ‘தமிழ்ப் பொழில்’ என்னும் பெயரும் சூட்டப்பெற்றது. உமாம கேசுவரனார்

அவர்களால் 1913 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற முயற்சிகள் பொருள் பற்றாக் குறை போன்ற தடைகளையும் கடந்து, பன்னிரு ஆண்டுகளும் கடந்த பின்னர், நன்கொடை தந்த பல தமிழ் ஆர்வலர்களின் உதவியுடன் 1925 ஆம் ஆண்டு சித்திரைத் திங்களில், தமிழ்ப் பொழில் இதழின் முதல் இதழ் வெளியிடப் பெற்றது. இதழின் ஆசிரியர் பொழில் தொண்டர் எனக் குறிப்பிடப் பட்டார். கவிஞர் அரங்க. வேங்கடாசலம் பிள்ளை தமிழ்ப் பொழிலின் முதல் பொழிற்றொண் டராகப் பொறுப்பேற்ற வராவார்.

*"வாழி கரந்தை வளருந் தமிழ்ச்சங்கம்*

*வாழி தமிழ்ப்பொழில் மாண்புடனே வாழியரோ*

*மன்னுமதன் காவலராய் வண்மைபுரி வோரெவரும்*

*உன்னுபுக ழின்நலம் உற்று"*

என்று நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களின் வாழ்த்தையும் பெற்றது. (<http://karanthaijayakumar.blogspot.com/2013/07/17.html>). "தமிழ்ப் பொழில் முதலிரண்டு மலர்களும் பெற்று மகிழ்ந்தேன். தாங்களும் ஏனை கற்றறிஞரும் எழுதியிருக்கும் தமிழ்க் கட்டுரைகளை உற்று நோக்கி வியந்தேன். தமிழ்ப் பொழில் நீடு நின்று நிலவுமாறு முயல்க" என்று மறைமலை அடிகள் மனம் மகிழ்ந்து பாராட்டு வழங்கினார் (தமிழ்ப் பொழில், 1/4). அக்காலத்தில் தமிழ்ப் பொழிலுக்கு இணையாக 13 தமிழிலக்கிய இதழ்கள் வெளியானது (தமிழ்ப் பொழில், 8/12). அவற்றுள் தமிழ்மொழி வளர்ச்சியில் அக்கறை கொண்டு முன்னிலை வகித்த "செந்தமிழ்" (மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய இதழாக 1902 முதல் வெளியிடப்பட்டது), "செந்தமிழ்ச்செல்வி" (திருநெல்வே லிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் இலக்கிய இதழாக 1923 முதல் வெளியிடப்பட்டது), ஆகிய இதழ்களுடன் இணைத்து மதிக்கப் பட்ட நிலையில் தமிழ்ப் பொழில் விளங்கியது. மறைமலையடிகள் (தமிழ்ப் பொழில், 5/1), ஞா. தேவநேயப்பாவாணர் (தமிழ்ப் பொழில், 10/2), வ. உ. சிதம்பரம் பிள்ளை (தமிழ்ப் பொழில், 5/6, 5/910, 5/1112 - 6/1112), தி.வை. சதாசிவப் பண்டாரம் (தமிழ்ப் பொழில், 2/9 12), மா. இராசமா ணிக்கம் (தமிழ்ப் பொழில், 12/3), ஔவை சு. துரைசாமி பிள்ளை (தமிழ்ப் பொழில், 7/1) என இன்று நாம் அறியும் பல தமிழறிஞர்கள் கட்டுரைகள் தமிழ்ப் பொழிலில் வெளிவந்தன. தமிழ்ப் பொழிலில் வெளியான இவர்களது கட்டுரை களை நூல்களாகவும் தொகுத்து இந்தத் தமிழறிஞர்கள் நமக்குத் தந்து சென்றுள்ளனர்.

பல இன்னல்களைத் தாண்டி வெளியீடு பெற்றாலும் தமிழ்ப் பொழிலின் பதிப்பு வரலாறு பொருள் பற்றாக்குறையால் தடை கள் பல நிறைந்ததாகவே தொடர்ந் தது. ஒவ்வொரு மாதமும் தமிழ்ப் பொழிலின் இதழொன்று சராசரி யாக 40 பக்கங்களைக் கொண்டதாக வெளியிடப்பட்டுள்ளது. எதிர்பாரா இடையூறுகளை எதிர்கொண்ட காலங்களில், ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்களை ஒருங்கிணைத்து வெளி யிட நேர்ந்ததுண்டு. அதற்கேற்ப ஒருங்கிணைந்த அந்த இதழ்களின் பக்கங்களின் எண்ணிக்கையும், கட்டுரைகளும் ஈடுகட்டும் நோக்கில் ஓரளவு அதிகரிக்கப்பட்டதுமுண்டு. தமிழ்ப்பொழில் என்ற பூங்காவில் மலர்ந்த ஒவ்வொரு மாத இதழ் என்ற மலரும், ஒரு ஆண்டின் துணர் (பூங்கொத்து) ஒன்றின் பகுதி என்ற நோக்கில் குறிக்கப்பட்டது. தமிழ்ப் பொழில் (8/12) என்ற குறிப்பு, தமிழ்ப் பொழில் இதழ்: துணர் 8, மலர்12 என்பதைக் குறிக்கிறது. தமிழ்ப் பொழில் (8/12) என்று இணையத்தேடல் செய்தால் கூகுள் நூல்சேமிப்பில் உள்ள குறிப்பிட்ட தமிழ்ப் பொழில் இதழைப் படிக்க இயலும். தமிழ்ப் பொழில் இதழின் பதிப்பாசிரியர் குழு உறுப்பினர் திரு. கரந்தை ஜெயக்குமார் அவர்கள் முயற்சியில், திரு பொள்ளாச்சி நசன் அவர்கள் உதவியுடன் தமிழ்ப் பொழில் இதழ்கள் மின்னூல்களாக மின்னாக்கம் செய்யப்பட்டன. இவற்றைக் கூகுள் புக்ஸ் இணையத்தளத்தின் வழி தமிழ்மரபு அறக்கட்டளை நிறுவனம் பதிவே ற்றியுள்ள பணி தமிழ் ஆர்வலர்கள் பயன்பெற, தமிழாய்வு செய்திட ஒரு நல் வாய்ப்பாக அமைந்துள்ளது. இடையில் தடைப்பட்டாலும் மீண்டும் உயிர்த்தெழுந்து

*50 ஆண்டுகள் தமிழ்ப் பொழில் இலக்கிய திங்களிதழ் வெளிவந்து 1977 ஏப்ரல் ஆண்டு வெளியீட்டை நிறுத்திக் கொண்டது.*

## தமிழ்ப் பொழில் காட்டிய தமிழ்க் கல்வி வளர்ச்சி செயல்பாடுகள்

*தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் மேற்கொண்ட எண்ணிறைந்த தமிழ்ப்பணிகள் பன்முகத் தன்மை கொண்ட மிக விரிவான பணிகள், அவை தனியே விளக்கமாக அறியப்பட வேண்டியவை. தமிழ்ச் சங்கத்தின் குரலொலியாக வெளிவந்த தமிழ்ப் பொழிலின் வழியேயும் அவை வெளிப்பட்டன. தமிழகம், தமிழினம், தமிழ்மொழி உயர தமிழ்க் கல்வியின் வளர்ச்சி இன்றியமையாதது என்று தெளிவாக உணர்ந்து கொண்டு தமிழியல் ஆய்விலும், தமிழ்க் கல்வி வளர்ச்சிக்காகப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக பாடத்திட்டங்க ளுக்கு ஆலோசனையும், பரிந்து ரையும், நெறிப்படுத்துதலையும் தமிழ்ப் பொழில் கட்டுரைகள் வழியேயும் செய்து வந்தனர் தமிழ்ப் பொழிலின் ஆசிரியர்கள். இவற்றைக் கீழ்வரும் தமிழ்ப் பொழில் கட்டுரைகள் வாயிலாக அறிய வருகிறோம்.*

i) *பள்ளி இறுதி வகுப்பு பாடநூலுக்கு கி. ரி. சீநிவாச ஐயங்கார் எழுதிய உரைகளின் மீது ஆராய்ச்சி செய்து 'பள்ளிக்கூடப் பாடங்களில் உரை ஆராய்ச்சி' என்ற கட்டுரையை வெளியிடுகிறார் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை (தமிழ்ப் பொழில், 4/79);*

ii) *எழுதினவன் ஏட்டைக் கெடுத் தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான், உரைகாரன் இரண் டையும் கெடுத்தான் என்பது புதுமொழி என்று கண்டனம் தெரிவித்த வண்ணம் பாட நூல்களில் காணப்பெறும் பிழைகள் பலவற்றையும் 'பாட வேறுபாடுகள்' என்ற கட்டுரையில் பட்டியலி டுகிறார் அ. கந்தசாமிப் பிள்ளை (தமிழ்ப் பொழில், 4/56);*

iii) *பல்கலைப் பாடங்களில் தமிழுக்கு மதிப்பில்லை, பாடநூலில் பிழைகள் பல மலிந்துள்ளன என 'பல்கலைக்கழகங்களின் பாடநூல் கள்' என்று மு. வே. மா. வீ. உலகவூழியர் கண்டித்துக் கட்டுரை வரைகிறார் (தமிழ்ப் பொழில், 212);*

iv) *கல்லூரி மாணவர்களுக்குப் பாடநூலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, மு. இராகவையங்கார் எழுதிய சேரன் செங்குட்டுவன் என்ற நூலில் தான் கண்ட புதுமைகளைத் தொகுத்து என 'சில புதுமைகள்' என்ற கட்டுரையில் பாராட்டி எழுதுகிறார் அ. கந்தசாமிப் பிள்ளை (தமிழ்ப் பொழில், 5/6);*

v)*தி. வை. சதாசிவப் பண்டார த்தாரின் முதற் குலோத்துங்க சோழன் என்ற நூல் மூன்று ஆண்டுகளில் இரண்டு பதிப்புகள் கண்டதுடன், இண்டர்மீடியட் வகுப் பின் பாடநூலாகவும் தேர்வு செய்யப்பட்ட சிறப்பைப் பாராட்டு கிறார் (தமிழ்ப் பொழில், 9/4)*

*தமிழ்ப் பொழிலின் இதழாசிரியர் (தமிழ்ப் பொழில், 9/4); இவ்வாறு பாடநூல்களுக்கான பாராட்டுகளை யும் பரிந்துரைகளை வழங்கியும் பிழைகளைக் கண்டித்தும் எழுதி தமிழ்க் கல்வி வளர்ச்சியில் பங்காற்றிய தமிழ்ப்பொழில் கட்டுரையாசிரியர்கள், தக்கதொரு நூல் பாடநூலாக தேர்வு செய்யப் பெறாமல் போனால் கண்டிப்ப தையும், தகுதி பெறாத நூலாகக் கருதப்படுவது மாணவர்களுக்குப் பாடநூலாக அறிமுகப்படுத்தப்பட் டால் அவற்றை எதிர்த்தும் தமிழ்ப் பொழில் கட்டுரைகள் வாயிலாகக் குரல் கொடுத்துள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகம் மறைமலையடி களின் 'அறிவுரைக்கொத்து' என்ற நூலைப் பாடநூலாகத் தேர்வுசெய்த மைக்கு பல்கலைக் கழகத்திற்குப் பாராட்டுகளும்; தேர்வுக்குழு பாடநூ லாக அறிவித்த அறிவிப்பிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவர் களுக்குக் கண்டனமும் தெரிவிக்கப் பட்டுள்ளது (தமிழ்ப் பொழில், 11/5).*

*இந்த வரிசையில் றி.ஷி. சுப்பிரமணிய சாஸ்திரி எழுதி 1932 ஆம் ஆண்டு வெளியான "தொல் காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு" என்ற நூலின் மீது தமிழ்ப் பொழில் இதழ்களில் வெளியான விவாதங்கள் மிக நீண்ட வரலாறாகத் தொடர்ந் தது (சுப்பிரமணிய சாஸ்திரி, 1932).*

*பின்னங்குடி சுப்பிரமணிய சாஸ்திரி யின் தொல்காப்பியச் சொல்லதி காரக் குறிப்பு நூல் குறித்து எழுந்த மறுப்புரைகள்*

*பின்னங்குடி சுப்பிரமணிய சாஸ்திரி (பின்னங்குடி சாமிநாத சுப்பிரமணிய சாஸ்திரி, பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் எனவும் அறியப்படுவார்) மிகவும் புகழ் பெற்ற தமிழறிஞர். பன்மொழி அறிஞரான இவர் வடமொழிப் புலமையும் ஆங்கிலப் புலமையும் மிக்கவர். தமிழுக்கு இவர் ஆற்றிய பணிகளும் சிறப்பு மிக்கவை. தொல்காப்பியத்தை முதலில் ஆங்கி லத்தில் மொழி பெயர்த்தவர் இவரே. தமிழ் அகராதியியலில் ஒரு திருப்பு முனையாக இருந்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதியின் துணை ஆசிரியர்களுள் ஒருவராக வும் பணியாற்றினார். தமிழாய்வில் முதலில் முனைவர் பட்டம் பெற்றவர் என்ற சிறப்பையும் பெற்றவர் (*http://siragu.com/*தமிழாய்வில்முதலில்முனை/).*

*திருச்சி மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் கீழைமொழி த்துறைப் பேராசிரியரா கவும் துறைத் தலைவராகவும் பணியாற் றியவர். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வடமொழிப் பேராசிரியராகப் பணியாற்றியுள் ளார். தொல்காப்பியப் பதிப் பாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார். செம்மொழிகளான தமிழுக்கும் வடமொழிக்கும் இடையே தொன்று தொட்டு தொடர்பு இருந்துவருகிறது. இருமொழிகளிலும் இலக்கண இலக் கியப் படைப்புகளையும் ஆழ்ந்து பயின்ற பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் இம்மொழிகளுக் கிடையேயான உள்ள இலக்கணப் பொதுமைகள், வேற்றுமைகள் ஆகியவற்றை ஒப்பிட்டு அறிவதில் ஆர்வும் கொண்டார். பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர் களின் தொல்காப்பிய ஆய்வில் வடமொழி சார்பின் தாக்கம் அதிகம் என்றும், வடமொழியை உயர்த்திப் பிடிக்கும் கருத்துகளை முன்வைப் பவர் என்றும் தமிழறிஞர் களிடையே கருத்துகள் உண்டு. வடமொழி சார்பு இருந்தாலும் தமிழின் தனித்தன்மைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார் என்பதும் மறுக்க முடியாத உண்மையுமாகும். (*http://siragu.com/*தொல்காப்பியக்குறிப்பு).*

*'பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார்' எழுதிய 'தொல் காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு' என்ற நூலின் மீது ம. நா. சோமசுந்தரம் பிள்ளை (இவர் முன்னர் கட்டியவாறு கி. ரி. சீநிவாச ஐயங்கார் எழுதிய பள்ளி இறுதி வகுப்பு பாடல் உரைகளின் மீதும் ஆய்வு செய்து கட்டுரை வெளியிட்டவர்) அவர்கள் பிழைகள் பல கண்டு தமிழ்ப் பொழிலில் 'பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரி யார் தொல்காப்பியச் சொல்லதிகார ஆராய்ச்சிக் குறிப்பு ரையும் மறுப்புரையும்' என்ற நீண்டதொரு விமர்சனக் கட்டுரை ஒன்றை (47 பக்கங்களுக்கு) வரைகிறார் (தமிழ்ப் பொழில், 7/4, 7/5, 7/6, 7/8, 7/10, 7/11, 7/12, 8/12, 8/4, 8/8, 9/1, 9/2, 9/9, 9/10 - 10/1). நூலாசிரியர் சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் யாவருடைய உரையிலும் குற்றங் குறைகள் கூறி இறுதியில் தொல்காப்பியத்தில் வடமொழி சிவஞான முனிவர் நூலின் தாக்கம் உள்ளது என்று தனது நூலில் சொல்லிச் சென்றுள்ளார். நூலாசிரியருக்குத் தமிழிலக்கணத்தில் ஆழ்ந்த பயிற் சியும், வடமொழி இலக்கணத்தில் பயிற்சியும் இல்லை என்பதையே அவரது நூல் காட்டுகிறது, அவரது எழுத்துகூட சரியான தமிழின் நடையில் காணப்படவில்லை என்பதோடு, ஆங்கில நடையுடனும் சுப்பிரமணிய சாத்திரியார் எழுதுகிறார் என்ற தமது கருத்தை முன் வைக்கிறார். குறிப்பாக, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் பெரியோர்களில் பலர் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை இக்கட்டு ரையை எழுதுவதற்கு ஆதரவுகாட்டி வேண்டுகோள்களும் வைத்துள்ள குறிப்பும் கட்டுரையின் முன்னுரையில் காணப்படுகிறது. ஜூலை 1931 தமிழ்ப் பொழில் இதழில் வெளியான முதல் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புக்கு மறுப்புக் கட்டுரை இது. இதழ் முழுவதையும் இந்த ஒரு கட்டுரைக்காகவே ஒதுக்கி முதல் 20 மறுப்புகளை முன்வைத்து எழுதப் பட்ட இக்கட்டுரையின் மூலம் தமிழ்ப் பொழிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கமும் இக்கட்டுரைக்குக் கொடுத்த முக்கியத்துவம் தெரிய வருகிறது.*

இதுவே தொடர் கட்டுரையாகப் பல மறுப்புகளை முன் வைத்துப் பல ஆண்டுகள் தொடரும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

தமிழ்ப் பொழில் இதழாசிரியர் ஸி. வேங்கடாசலம் பிள்ளை அவர் களும் தனது பங்கிற்கு ‘ஆழ்ந்த நோக்கம் யாண்டையது’ என்ற தனது ஆய்வுக் கட்டுரையில் முனைவர் பின்னங்குடிச் சுப்பிர மணிய சாத்திரியாரின் தொல் காப்பியச் சொல்லதிகார ஆராய்ச் சிக் குறிப்புரை மீது மற்றுமொரு விமர்சனம் வைகிறார். அதில் 16, 17 ஆம் சூத்திர விளக்கங்கள் மீது சாத்திரியார் வைத்த குறிப்புரை ஆராய்ந்து தனது மறுப்புகளை முன்வைக்கிறார் (தமிழ்ப் பொழில், 7/7).

முனைவர் பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியாரின் தொல் காப்பியச் சொல்லதிகார ஆராய்ச் சிக் குறிப்புரை நூலுக்கு ஆதரவாக ‘பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரி யார் தொல்காப்பியச் சொல்லதிகார ஆராய்ச்சிக் குறிப்புரை மறுப்பின் மறுப்பு’ என்றொரு கட்டுரையை P. S. வேதாசலய்யர் தமிழ்ப் பொழிலில் வெளியிடுகிறார் (தமிழ்ப் பொழில், 7/11). அதில் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை மறுத்து எழுதிவரும் தொடர் கட்டுரையின் மீது தனது மறுப்புரைகளைப் பதிவு செய்கிறார். அதாவது ‘மறுப்புக்கு மறுப்பை’ முன்வைக்கிறார். P. S. வேதாச லய்யர் அவர்கள். ம. நா. சோமசுந்தரம் பிள்ளை கூறும் மறுப்புரைகள் பெரும்பாலும் சாத் திரியாரின் உரைநடையைப் பற்றி யக் கண்டனங்களாகவே உள்ளன. இக்கட்டுரை கற்போருக்கு பயனளி க்கும் வகையில் உள்ளதா என்ற கேள்வியை எழுப்புகிறார் P. S. வேதாசலய்யர்.

இவ்வாறு P. S. வேதாச லய்யர் வைத்த மறுப்பபை, பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரி யாரும் வேதாலசய்யரும் ஒருங்கி ணைந்து செயலாற்றும் திட்டமாக (அரசியல் செய்வதாக) ம. நா. சோமசுந்தரம் பிள்ளை கருதுகிறார். ஆகவே, ‘வித்துவான் வேதால சய்யர் என்பார் போலிமறுப்பு’ என்ற கட்டுரையை எழுதத் துவங்குகிறார் (தமிழ்ப் பொழில், 8/12, 8/4, 8/5, - 8/6). இதுவும் ஒரு தொடர் கட்டுரையாக உருவெடுத்து, P. S. வேதாசலய்யர் அவர்கள் பின்னங் குடிச் சுப்பிரமணிய சாத்திரியார் நூலுக்கு ஆதரவாக வைத்த மறுப்பு களைக் குறிப்பிட்டு அவற்றுக்கு ஒவ்வொன்றாக விளக்கம் அளிக்கத் துவங்குகிறார். பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார் நூலுக்கு ம. நா. சோமசுந்தரம் பிள்ளையின் மறுப்பு; ம. நா. சோமசுந்தரம் பிள்ளையின் கட்டுரைக்கு P. S. வேதாசலய்யர் மறுப்பு; P. S. வேதாசலய்யர் மறுப்புக் கட்டுரைக்கு மீண்டும் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை எழுதும் மறுப்பு என்று ‘மறுப்புக்கு மறுப்புக்கு மறுப்பு’ என்ற நிலையை எட்டிவிடுகிறது விவாதம்.

இதற்கிடையில், ம. நா. சோமசுந்தரம் பிள்ளை எழுதி வந்த முதல் கட்டுரையின் தொடர்ச்சி திசை திரும்பி அதன் போக்கும் தொய்வடைகிறது. இத்திசைத் திரும்புதலை அவதானித்த தமிழறிஞர் ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள், ஒருவர் ஒரு தொடர் கட்டுரையொன்றை எழுதி வரும்பொழுது P. S. வேதாசலய்யர் இடையிடுவது சரியான மறுப்பு முறையல்ல என்ற தனது கருத்தைக் கட்டுரையாக ‘மறுப்பு முறை’ என்ற தலைப்பில் எழுதுகிறார் (தமிழ்ப் பொழில், 8/7). அக்கட்டுரையில், பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரி யார் நூலுக்கு வைத்த மறுப்பு களைக் குறிப்பிட்டு ம. நா. சோம சுந்தரம் பிள்ளை சார்புநிலையின்றி நூலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆராய முற்படும் பொழுது P. S. வேதாசலய்யர் இடையிடுவது முறையன்று; அது தருக்க நெறிக்கு ஒவ்வாத செயல். அத்துடன், சாத்திரியாரின் உரைநடையை விமர்சிப்பது சரியல்ல என்று P. S. வேதாசலய்யர் கூறுவதும் பொருத் தமல்ல; இலக்கண ஆராய்ச்சிக்கு எத்துணை அறிவு வேண்டுமோ, அத்துணை அறிவு தனது ஆராய்ச்சியை வெளிப்படுத்து வதிலும் தேவை. அத்துடன், நூலாசிரியரான பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியாரின் கருத்தை அறியாது P. S. வேதாசலய்யர் மறுப்பெழுதத் துவங் குவதும் சரியல்ல எனத் தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

இவ்வாறு ஒரு முன்னிலை தமிழிலக்கிய திங்களிதழ் ஒன்றில் மறுப்புகளும் கண்டனங்களும் சொற் போர்களாக சூடுபிடித்துத் தொ டர்ந்து வரும் வேளையில்,

பின் னங்குடி சுப்பிரமணிய சாஸ்திரியின் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு நூலைச் சென்னை பல்கலை க்கழகத்தின் தமிழ் வித்துவான் தேர்வுக்குக்குரிய பாடநூலாகப் பல்கலைக்கழகம் அறிவித்து விடு கிறது. ஆகவே, அதிக காலம் இல்லாத காரணத்தால், ம. நா. சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் ஆய்வை விரைந்து முடிக்க வேண்டுகோள் வைக்கிறார் ஔவை சு. துரைசாமி பிள்ளை. மேலும், தனது பங்கிற்கு 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு ஆராய்ச்சி' என்ற கட்டுரையில் ஔவை சு. துரைசாமி பிள்ளையும் பின்னங் குடிச் சுப்பிரம ணிய சாத்திரியாரின் தொல்காப் பியச் சொல்லதிகார ஆராய்ச்சிக் குறிப்புரை நூலில் தாம் கண்ட பற்பலப் பிழைகளைச் சுட்டிக்காட்டு வதுடன் நில்லாமல், இந்த நூலை எவ்வாறு பல்கலைக்கழகம் பாட நூலாகத் தேர்வு செய்தது என்றும் வியக்கிறார் (தமிழ்ப் பொழில், 8/12, 11/2 - 11/6). மாணவர்கள் சாத்திரியார் நூலை அவ்வாறே ஏற்றுக் கொள்ளாமல் ஆய்ந்து படித்து உண்மையை அறிய உதவும் நோக்கில் அவரும் நூலில் தாம் கண்ணுற்ற பிழைகளை மறுத்து ஒரு தொடர் கட்டுரை எழுதுகிறார்.

இவ்வாறாக தமிழ்ப் பொழில் இதழின் வழியாகத் தமிழறிஞர்கள் எழுப்பும் வன்மையான கண்டனக் கட்டுரைகளைக் கண்ணுற்ற செந்தமிழ் இதழாசிரியர் திரு. நாராய ணையங்கார் அவர்கள் 1934 ஆடித்திங்களில் வெளியான செந்தமிழ் இதழில், 'வினையெச்ச முடிபு' என்ற தலைப்பில் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை கருத்துகளை மறுத்துரைக்கிறார். இதனைத் தொடர்ந்து இதுவரை பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார் தொல் காப்பியச் சொல்லதிகார ஆராய் ச்சிக் குறிப்புரை குறித்து 38 மறுப்புகளை மிக விரிவாக எழுதிய ம. நா. சோமசுந்தரம்பிள்ளை யவர்கள் செந்தமிழ் இதழாசிரியர் திரு. நாராயணையங்கார் கருத்து களுக்கும் மறுப்புரை கொடுக் கத் தொடங்குகிறார் (தமிழ்ப் பொழில், 10/5, 10/6, 10/7, 10/12, 11/1, 11/2, 11/10, 11/10, 13/1 - 13/3). செந்தமிழ் பத்திராதிபர் திரு. நாராயணையங்கார் மறுப்பதன் பின்னணிக்கும் காரணம் உள்ளது. 'பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார் எழுதிய 'தொல்காப் பியச் சொல்லதிகாரக் குறிப்பு' நூலை ஒரு கட்டுரைத் தொடராக செந்தமிழ் இதழில்தான் வெளியிட்டு வந்திருந்தார். பின்னரே இது நூல் வடிவம் பெற்று வெளியிடப்பட்டது. திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் 1917 முதல் 1926 வரை கீழைமொழித்துறைப் பேராசிரி யராக பின்னங்குடிச் சுப்பிரமணிய சாஸ்திரி பணி யாற்றிய பொழுது இளங்கலை மாணவர்களுக்கு 1919 ஆம் ஆண்டு கால்ட்வெல் அவர்களின் திராவிட மொழியி லக்கணம் கற்பிக்கும் வாய்ப்பு அவருக்கு அமைந்தது. அப்பொழுது கால்ட்வெல் தமிழ்மொழி பற்றிக் கூறியவை தமிழ் இலக்கண நூல்களில் குறிப்பிடப்பட்டுள் ளனவா என்று ஒப்பிட்டு ஆராயும் நோக்கில் தொல்காப்பியத்தை ஆழ்ந்து படிக்கும் நிலை ஏற்பட்டது. அவ்வாறு மேற்கொண்ட ஆய்வை "செந்தமிழ்" பத்திரிக்கையில் 1927 ஆம் ஆண்டு ஆய்வறிக்கையாகவும் வெளியிட்டார். திரு. நாராயணை யங்கார் கருத்துகளை மறுத்த கட்டுரைத்தொடர் 'பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார் தொல் காப்பியச் சொல்லதிகார ஆராய்ச் சிக் குறிப்புரையும் மறுப்பு ரையும், அதன் மேல் செந்தமிழ் பத்திராதிபர் திரு. நாராயணை யங்கார் எழுப்பிய தடையும், அதற்கு விடையும்' என்ற தலைப்பில் மேலும் ஒரு 10 கட்டுரையாக வளர்ந்து ஜூன் 1937 வரை தொடர்ந்த பின்னர் நிறைவுறுகிறது.

## மதிப்பீடு

'பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார் எழுதிய 'தொல்காப் பியச் சொல்லதிகாரக் குறிப்பு' என்ற நூலின் மீது ஜூலை 1931 தமிழ்ப் பொழிலில் துவங்கிய மறுப்புரைகள் ஜூன் 1937 இதழ் வரை 6 ஆண்டுகளாகத் தொடர்ந்தது. மறுப்புரைகளும் அவற்றுக்கான மறுப்புரைகளும் விளக்கங்களும் என 35 கட்டுரைகள் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு நூலைக் குறித்து எழுதப்பட்டன. இவற்றில் 29 கட்டுரைகளை ம. நா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் மட்டுமே எழுதியுள்ளார். தமிழ்ப் பொழில் காட்டிய இத்தகைய விடாத தொடர் முயற்சியானது

பிழையுள்ள பாடங் களை மாணவர்கள் ஏற்றுக் கொள்வதைத் தடை செய்ய வேண்டும் என்ற முனைப்பில் அடிப்படையில் இருந்துள்ளது தெளிவாகிறது.

## முடிவுரை

வரலாறு நமக்குப் படிப்பினையை விட்டுச் செல்கிறது. சென்ற நூற்றாண்டில் தமிழ்ப் பொழில் இதழ்கள் வழியாகத் தமிழறிஞர்கள் பாடல்நூல் தரத்தில் காட்டிய இத்தகைய அக்கறை, பல்கலைக் கழகங்களின் தமிழ்ப் பாடநூல்களின் தரம் குறித்து நாம் காட்ட வேண்டிய பொறுப்புணர்விற்கான படிப்பினை யைத் தருகிறது. தமிழ்க்கல்வியின் தரத்தைக் காப்பதிலும், அதற்குதவும் வகையில் தக்க பாடநூல்களைத் தேர்வு செய்வதிலும் தமிழறிஞர்கள் கொண்ட ஆய்வுக் குழுவை அமைத்து அவர்கள் பரிந்துரையின் மீது முடிவுகளைச் செயல்படுத்த வேண்டும் என்பதை தமிழ்ப் பொழில் கட்டுரைகள் மூலம் பெறும் பாடமாகக் கல்வியாளர்கள் கொண்டு தமிழ்க் கல்வியின் நிலையை மேம்படுத்துவதில் கவனம் கொள்ள வேண்டும். வரலாறு திரும்புகிறது என்பதும் சில நிகழ்வுகள் மீண்டும் நிகழும்பொழுது கூறப்படும் சொற்றொடர். ஆகவே, வரலாறு நமக்கு கற்றுக் கொடுத்து வரும் படிப்பினையை நினைவில் கொண்டு தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கையாள்வது தமிழ்க்கல்வி, தமிழ்ப் பாடநூல்கள் தரத்தை உயர்த்தும் முறைக்கும் பொருந்தும்.

## References


Irasamanikanar, Ma. Pandath Tamizhar Manamurai. *Tamil Pozhil* (12/3).

Ithalasiriyar. Puthaga Mathipurai. *Tamil Pozhil* (9/4).

Ithalasiriyar. Tamil Seithikal. *Tamil Pozhil* (11/5).

Kanthasami Pillai, A. Pada Verupadugal. *Tamil Pozhil* (4/5-6).

Kanthasami Pillai, A. Sila Puthumaigal. *Tamil Pozhil* (5/6).

Karathani Jayakumar. Karanthai Malar 17-http://karanthaijayakumar.blogspot.com/2013/07/17.html

Maraimalai Adigal. Periyar Nallurai. *Tamil Pozhil* (1/4).

Maraimalai Adigal. Saiva Unavukku Marana Sila Kolgaikal. *Tamil Pozhil* (5/1).

Purnasanthiran, K, Tholkapiyak Kuripurai-http://siragu.com/தொல்காப்பியக்-கூறிப்பு.

Purnasanthiran, K. Thamilpozhil-Oor Arimugam-http://www.poornachandran.com/2016/03/.

Sathasiva Pandaram, T., Vai. Muthalam Kulothunga Soolan. *Tamil Pozhil* (2/9-12).

Sithambaram Pillai, Va.,Vu.,Si. Thiruvalluvar Thirukural. *Tamil Pozhil* (5/6), (5/9-10), (5/11-12) & (6/11-12).

Somasutharam Pillai, Ma.,Na. Pallikudap Padangkalil Urai Araichi. *Tamil Pozhil* (4/7-9).

Somasutharam Pillai, Ma.,Na. Pinnangudi Subramania Sastriyar Tholkapiya Sollathikara Araichik Kuripuraiyum Marupuraiyum. *Tamil Pozhil* (7/4), (7/5), (7/6), (7/8), (7/10), (7/11), (7/12), (8/1-2), (8/4), (8/8), (9/1), (9/2), (9/9), (9/10), (10/1).

Somasutharam Pillai, Ma.,Na. Pinnangudi Subramania Sastriyar Tholkapiya Sollathikara

Araichik Kuripuraiyum Marupuraiyum, Atan Mel Senthamiz Pathirathibar Thiru.Narayanaiyangar Ezhupiya Tadaiyum, Atarku Vidaiyum. *Tamil Pozhil* (10/5), (10/6), (10/7), (10/12), (11/1), (11/2), (11/10), (11/10), (13/1) & (13/3).

Somasutharam Pillai, Ma.,Na. Vithvan Vethasalainyar Enbar Polimaruppu. *Tamil Pozhil*, (8/12), (8/4), (8/5), & (8/6).

Subramania Sastri, P., S. (1932). *Tholkapiya Sollathikara Kurippu*. Chennai: M.L.J.Press.

Themozhi, Tamilayvil Muthalil Munaivar Paddam Petravar-http://siragu.com/தமிழாய்வில் தமிழில் முனை/

Themozhi. (2016) Irubatham Nutrandin Murtpakuthiyil Palkalaikazhaka Tamil Kalviyin Nilai. Mintamizmedai. (6/7/2016).

Thevaneya Pavanar, Nya. Ilakkiyam Ilakkanam. *Tamil Pozhil* (10/2).

Thuraismi Pillai, Auvai., Su. Maruppu Murai. *Tamil Pozhil* (8/7).

Thuraismi Pillai, Auvai., Su. Paranar. *Tamil Pozhil* (7/1).

Thuraismi Pillai, Auvai., Su. Tholkapiya Sollathikara Kurippu Araichi. *Tamil Pozhil* (8/12), (11/2) & (11/6).

Ulakauliyar, Mu.,Ve.,Ma.,Vi. Palkalaikazhakangalin Padanulgal. *Tamil Pozhil* (2-12).

Vengkadasalam Pillai, R. Alntha Nookkam Yandudaiyathu, *Tamil Pozhil* (7/7).

Vengkadasalam, R. Karanthai Tamil Sangathu 21-Aam Andu Niraivu Vizha. *Tamil Pozhil* (8/12).

Vethasalainyar, P.,S. Pinnangudi Subramania Sastriyar Tholkapiya Sollathikara Araichik Kuripuraiyum Marupuraiyum. *Tamil Pozhil* (7/11).

# நீதி இலக்கியம் சாற்றும் தலைமைத்துவப் பண்புகள்
# Leadership qualities depicted in Moral Literature

முனைவர் க.சில்லாழி / Dr.K.Silllalee
எஸ். நாராயணி / S. Narayanee

***Abstract***

Pathinen Keezh Kanaku Noolgal are considered as Moral literature in the history of Tamil literature including Thirukkural. Iynthinai, Imbathu, Thinaimozhi Imbathu, Anthinai Ezhubathu, Thinaimalai Noothiriymbathu, Kainilai, Kar Narpathu are said to be Aham literature and Kalavazhi Narpathu as Puram literature. These also indicate morals these ave the way for the upliftment of a man. Leadership quality in an inevilable feature in the betterment of a man. This does not only develop a man but also the society around him. The seven characteristics pointed out in the Western thought had already been resent in the tamil moral literature. This paper brings out how ancient tamil literature show the leadership qualities.

**Key Words:** Tamil Moral Literature, Theory of Leadeship, Leadership Principle, Society, Tamil Literature.

## முன்னுரை

*தமிழ் இலக்கிய வரலாற்றில் பதினெண் மேல்கணக்கு நூல்கள் எனவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் பழைய இலக்கியத்தைப் பாகுபடுத்திக் கூறுவது மரபாகும். இதில் பதினெண் மேல்கணக்கு நூல்கள் என்பன பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கிய நூல்களைக் குறிப்பதகும் (இராசேந் திரன், 2014, ஜீ.10). இவை கி.மு. 100 கி.பி. 500 வரையிலான காலத்தை சங்கம் மருவிய காலம், நீதிநூல் காலம், இருண்ட காலம் இப்படிப் பல பெயர்களால் சுட்டுவர். இவை அனைத்துமே காரணப் பெயர்கள்தான். இக்காலகட்டத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களின் தொகுப்பைத்தான் நீதிநூல்கள் (நீதிநூல் காலம்) எனக் குறிப்பிடுவர் (வரதராசன், 1992, p.65). இந்நீதி நூல்கள், தமிழகத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்று வந்தேரிகளாகிய களப்பிரர்களின் ஆட்சி காலத்தில் (இருண்ட காலம்) தோன்றியவை.*

The author is a Assistant Professor in the Department of Modern Languages, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. silllalee@utar.edu.my / silllalee@yahoo.com

The author is a Ph. D. Research scholar in the Departmernt of Life Long Learning, Bharathidasan University, Trichy, Tamil Nadu, India. narayanee1992@gmail.com

இக்காலகட்டத்தில் தமிழர் (தென்னவர்) சமயம் தாழ்ந்து பௌத்தமும் சமணமும் ஓங்கியிருந்தன என்பதால் நீதி நூல்களும் இச்சமயங்களின் பெருந்தாக்கத்திற்கு உட்பட்டவையாகவே உள்ளன என்பது அறிஞர் பெருமக்களின் கருத்தாகவே உள்ளது (பாலசுப்பிரமணியன், 1974, ஜீ.75).. பதினெண் கீழ்கணக்கு நூல்கள் பட்டியலில் உள்ள அனைத்து நூல்களும் நீதியைக் கூறுவனவாக அமையவில்லை. அதிலும் ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, அந்திணை எழுபது திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது ஆகிய ஆறு நூல்களை அகத்திணை இலக்கியமாகவும், களவழி நாற்பது எனும் நூலைப் புறத்திணை நூலாகப் பகுப்பதுண்டு. (பதினெண் கீழ்க்கணக்கு, 1981, p.9).

இந்தப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் உலகப் புகழ் பெற்ற பெருநூலாகும். இந்நூலே பழைய தமிழ் இலக்கியங்களுள் அதிகம் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டிருக்கும் நூல்கள் வரிசையில் இடம்பெற்றுள்ளது. தற்போதைய கட்டுரை இரண்டு அடிப்படைகளில் தனித்தன்மை கொண்டது. ஒன்று, அதிகம் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டிருக்கும் திருக்குற ளைத் தவிர்த்து பிற நீதி நூல்களின் திரண்ட கருத்துகளின் அடிப்படையில் எழுதப் பட்டுள்ளது. அடுத்தது, பொதுவில் நீதி இலக்கியங்கள் நன்நெறிப் போதனை, சமுதாயச் சிந்தனை, வாழ்வியல் தத்துவங்கள், இலக்கியச் சிறப்புகள் போன்ற பார்வையில் அதிகம் ஆராயப்பட்டுள்ளன. ஆனால் தற் போதைய கட்டுரை தலைமைத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் அடை யாளம் காணப்பட்ட ஏழு கூறுகளை தளமாகக் கொண்டு நீதி நூல்களின் உட்பொருளை முன்னிகீத் துவதாக உள்ளது.

## ஆய்வு முன்னோடிகள் / Literiture Review

ஆய்வு முன்னோடிகள் எனும் போது, நீதி நூல்களுக்கு இயற்றப்பட்டுள்ள விளக்க உரைகளே இவ்விடத்தில் முதன்மை பெறுகின்றன. அதன் அடிப்படையில், வ.சுப. மாணிக் கனார் அவர்களின் பிற்கால நீதி நூல்கள் (1957மறுபதிப்பு 1991, மணிவாசகர் பதிப்பகம்), பாலசுதரம் பிள்ளையவர்களின், கழக வெளியீடாக பதிப்பிக்கப்பட்டுள்ள நாலடியார் மூலமும் உரையும் (1945), அனவரத விநாயகம் பிள்ளை அவர்களின் Naladiyar-Translation (நாலடியார் ஆங்கில மொழிபெயர்ப்புஉலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) (2000) பூவை அமுதன் என்பாரின் நீதிநூல் களஞ்சியம் (1996), அரசு என்பாரின் நீதி நூல்கள் (1979), புலியூர் கேசிகனின் பழமொழி நானூறு தெளிவுரையுடன் (1991) ஆகிய நீதி இலக்கிய நூல்களின் தெளிவுரைத் தொகுப்பு தற்போதைய ஆய்வுக்கு பெரும் பக்கபலமாக விளக்கியுள்ளன.

இதைத் தவிர்த்து நீதிநூல் இலக்கியங்கள் குறித்த பிற ஆய்வுகள் என்று பார்க்கும் போது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறளே பெருவாரியாக ஆய்வுக்கு உட்படுத் தப்பட்டிருப்பது அறியப்படுகிறது. 1968 ஆம் ஆண்டு மலேசியாவின் குவாலாலும்பூர் மாநகரத்தில் நடத்தப்பட்ட அனைத்துலகத் தமிழ்க் கல்வி மாநாட்டுக் கருத்தரங்கு நூலில் வெளியிடப்பட்ட ஆய்வில் திருக் குறளில் சட்டத்தின் பொருண்மை எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்று எம்.சண்முகசுப்புரமணியம் என்பாரால் எழுதப்பட்டுள்ளது. இது போல 1960ஆம் ஆண்டு பி.நடரா ஜன் என்பார் Economic ideas of Tiruvalluvar (திருவள்ளுவரின் பொருளாதாரச் சிந்தனைகள்) எனும் ஆங்கில ஆய்வு நூலை வெளியீடு செய்துள்ளார். 2009ஆம் ஆண்டு செல்வஜோதி எனும் மலாயாப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர் திருக்குறளில் சொல் ஆளுமை எனும் தலைப்பில் முதுகலைப் பட்ட ஆய்வேடு ஒன்றைச் சமர்ப்பித் துள்ளார். இவரைப் போலவே, அண்ணாதுரை எனும் மலாயாப் பல்கலைக்கழக முனைவர் பட்ட அய்வு மாணவர் 2016ஆம் ஆண்டு உயர்ந்த மாணவர்களை உருவாக்குவதில் மலேசியத் தமிழ்ப் பள்ளிகளில் திருக்குறள் போதனை எனும் தலைப்பில் ஆய்வேடு ஒன்றைச் சமர்ப்பித்துள் ளார்.

இது தவிர்த்து பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறளுக்கு அடுத்தபடியாக

அதிக அளவில் அய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் நாலடியார், ஆய்வு முன்னோடிகளில் கவனிக்கத்தக்கதாக உள்ளது. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையில் கோகிலா மணிசேகரன் எனும் மாணவர் திருக்குறளும் நாளடியாரும் போதிக்கும் வாழ்க்கை நெறிகள் (2005) எனும் இளங்கலைப் பட்ட ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இது தவிர்த்து மனித மேம்பாட்டிற்கு நாலடியார் (2006) எனும் மலாயாப் பல்கலைக்கழக முதுகலைப் பட்ட ஆய்வு மாணவி பத்மாவதி முனியாண்டியின் ஆய்வும் இவ்விடம் கவனிக்கப்பட்டுள்ளது.

மேலும், வி.குழந்தைசாமி மற்றும் ரூபா குணசீலன் ஆகியோரின் Management Wisdom in Tamil Ethical Literature (2016), எனும் நூல் தலைமைத்துவப் பண்புக்கு மிகச் சார்புடையதாக உள்ள நிர்வாகத் திறன் குறித்து நீதிநூல்கள் முன்வைக்கும் செய்திகளை விளக்குவதாக உள்ளது. இது தற்போதையை ஆய்வுக்கு மேலும் பலம் சேர்க்கக் கூடிய பல கருத்துகளை முன்வைப்பதாக உள்ளது.

இவற்றைத் தவிர்த்து மலாயாப் பல்கலைக்கழக இளங்கலைப்பட்ட ஆய்வேடுகளில் சில பழமொழி நானூற்றில் வெளிப்படும் தமிழர் பண்பாடு (2012), மலேசியத் தமிழர்களிடையே பழமொழியின் தாக்கம் (2009) எனப் பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் சிலவற்றை ஆய்வு செய்வதாக உள்ளது.

தமிழ் நாட்டில் மேற்கொள்ளப் பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெண்ணியம் எனும் ஆய்வு, நீதி இலக்கியத்தை ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்ப்பதாக அமைந்துள்ளது. பெண்களின் நிலையைப் பகுப்பாய்வு, விளக் கமுறை, ஒப்பாய்வு எனும் மூன்று நிலைகளில் இந்த ஆய்வேடு ஆய்வு செய்திருப்பது பெண்ணியம் குறித்து நீதி நூல்களுள் பொதிந்துள்ள புதிய செய்திகளை சிறப்பாக வெளிக் கொணர்ந்துள்ளது எனலாம்.

இதுவல்லாது இரா.ரவி என்பார் தினமலரில் (15/12/2014) எழுதியுள்ள ஆத்திச்சூடி தரும் தன்னம்பிக்கை எனும் கட்டுரை தற்போதைய ஆய்வுக்குத் தொடர்புடையதாகவே உள்ளது. இக்கட்டுரை முயற்சி, அறம், சினம் கொள்ளாமை, காலம் அறிதல் போன்ற கருத்துகளை முன்னிருத்தி எழுதப்பட்டுள்ளது. இவை யாவும் தலைமைத்துவப் பண்புகளுக்குத் தொடர்புடைய கருத்துகளாகவே உள்ளன.

அடுத்து, கீற்று எனும் இணையத்தளத்தில் படைக்கப்பட்டுள்ள பதினெண் கீழ்க்கணக்குத் தொகுப்பில் அரசியல் உட்கிடக்கை (25/4/2015) எனும் ஆய்வுக் கட்டுரை நீதி நூல் இலக்கிய ஆய்வில் நல்லதொரு படைப்பு. வே.மு.பொதிய வெற்பன் என்பாரால் இயற்பட்டுள்ள இக்கட்டு ரை, அரசியல், அரசியல் நீதி, அதன் முக்கியத்துவம் குறித்து விளக்குவதாக அமைந்துள்ளது. இவரைப் போலவே, சு.ஜெனிபர் எனும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் தமிழியல் துறையின் முனைவர் பட்ட ஆய்வாளர், நீதி நூல்கள் குறித்து இணையத்தளங்களின் பல ஆய்வுக் கட்டுரைகளை இயற்றியுள்ளார். அவற்றுள், அற இலக்கியங்களின் அமைப்பு, நீதி இலக்கியங்களில் ஔவையார் போன்ற ஆய்வுக் கட்டுரைகள் நீதி இலக்கியங்களை சிரந்த முறையில் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளமை தெயியவருகிறது.

இவ்வாறு, ஆய்வு முன்னோடி களின் நீதி இலக்கியங்கள் குறித்த ஆய்வுகளைப் பார்க்கும் போது இவை பெருவாரியாக நன்நெறிக் கூறுகளை யும், சமூகவியல் சிந்தனைகளையும், இலக்கிய இலக்கணங்களை ஆய்வு செய்வதாகவே அமையப்பெற்றிருப்பது அறியப்படுகின்றது. இதனை மேலை நாட்டுக் கோட்பாடுகளை கொண்டு ஆய்வு செய்திருப்பது அரிதாக உள்ளது. மேலும் தலைமைத்துவத்தை அடிப்படையகக் கொண்டு நீதி இலக்கியங்களை ஆய்வு செய்வது அரிதகவே இருப்பதால் இக்கட்டுரை சற்று மாறுபட்ட கோணத்தில் நீதி இலக்கியங்களை ஆய்வு செய்வதாகக் கொள்ளலாம். இதன் வழி இத்து றையில் உருவாக்கம் பெற்றிருக்கும் அறிவு வளர்ச்சிக்குத் தற்போதைய கட்டுரை பயனளிக்கக்கூடியதாக அமையும் என்பது திண்ணம்.

## ஆய்வு நெறி (Methodology)/ கோட்பாடு (Theory)

இந்தக் கட்டுரையானது பண்புசார் நெறியை (Qualitative) அடிப்படை யாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தலைமைத்துவப் பண்புகளாவன ஒருவரிடத்துள் உள்ள தனித்துவத் திறமை, ஆளுமை, வேக விவேகம் போன்ற பண்புகளால் உருவாவதால் இதனை பண்புசார் நெறியைக் கொண்டு ஆய்வு செய்வதே மிகப் பொருத்தமானதாகும் (Sabitha Marican, 2005, p.12). இந்த ஆய்வில் தலைமைத்துவக் கோட்பாட்டின் வழி அடையாளம் காணப்பட்ட ஏழு முதன்மைத் தலைமைத்துவப் பண்பு களை முன்னிருத்தி இப்பண்புகளாவன எவ்வாறு நீதி இலக்கியங்களில் வெளிப்படுகின்றன என இக்கட்டுரை விளக்குவதாக அமைகிறது. இதற்காக நீதி இலக்கியங்களில் இந்த ஆறு பண்புகளுக்கும் மிகப் பொருத்தமான செய்யுள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் தனித்தனியே விளக்கப்படுத்தப்பட்டுள்ளன. ஆதலால் இந்தக் கட்டுரையில் பண்புசார் நெறியில் விளக்கமுறை (Explanatory) உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய ஆய்வு தலை மைத்துவக் கோட்பாட்டின் (Leadership Theory) அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. தலைமைத்தும் என்பது சமூகவியலில் உள்ள மிக முக்கியமான ஒரு நிலைப்பாடு ஆகும் (Chemers, 1997, p.1). இப்பண்பானது பிறக்கும் போதே ஒவ்வொருவரிடமும் இருந்த போதிலும்; ஒருவர் பிறந்து வளரும் சூழல், அவருக்குக் கிடைக்கப்பெறும் வாய்ப்புகள், அவரின் அறிவுத்திறம் போன்றவை ஒருவரது தலைமைத்துமானது எத்த கைய உச்சத்தை அடையும் என நிர்ணயிக்கக் கூடியதாகச் சொல்லப் படுகின்றது (Murray, 1966, p.18).

பொதுவில், தலைமைத்துவம் எனப்படுவது மக்களைத் தனது கொள்கையின் பால் கவர்ந்திழுத்து அக்கொள்கையை அடைய வேண்டி அதனைப் பின்பற்றுவோரை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் எனப் பொருள் கொள்ளலாம் (Chemers, 1997, p.1). மேலும், தமது தலைமைத்துவத்தின் பால் ஈர்ப்பு கொள்ளச் செய்தல், தம்மைத் தலைவராக ஏற்று பின்பற்றும் ஒரு மக்கள் கூட்டத்தை கொண்டிருத்தல் ஆகிய இரண்டையும் உடையவரையே தலைவர் எனத் தலைமைத்துவக் கோட்பாடு குறிப்பிடுகின்றது (Murray, 1966, p.15):-

இவ்வாறு தலைவர்களான வர்களால் வகுக்கப்படுகின்ற கொள் கைகளும் அதற்கான இலக்குகளும் பொதுநலத்தையும், மக்களின் நலத் தையும் அடிப்படையாகக் கொண்டு அமையப் பெற்றால் அத்தலைமைத் துவமானது மிக்க வலிமையுடையதாக விளங்குவதோடு, மக்களுக்கு உற்சாகத்தை அளித்து அவர்களைத் தன்னலமின்றி தியாக உள்ளத்துடன் போராடவும் வழிவகுக்கும் (Jacobs, 1990, p.281). மேலும், தலைவன் என்பவன் தொண்டர்களோடு சேர்ந்து இலக்கை அடைவதற்காகக் போராடு பவனாகவும் இருத்தல் வேண்டும் (Bernard, 1985, 150).

இவ்வாறு தகுதி மிக்கத் தலைவராக ஒருவர் விளங்க வேண்டுமாயின் அவரிடத்தில் இருக்க வேண்டிய சில முதன்மைப் பண்பு களைத் தலைமைத்துவக் கோட்பாடு முன்வைக்கின்றது. அவையாவன (Manning & Curtis, 2007, pp.29-31):-

### அட்டவணை 1: தலைமைத்துவப் பண்புகள்

| | | |
|---|---|---|
| 1) | அறிவுடைமை | எத்தகைய சூழ்நிலையையும் அறிவாலும் திறனாலும் எதிர்கொண்டு ஏற்ற காரியத்தை செம்மையாகச் செய்து முடித்தல். |
| 2) | நிலைத்தன்மை | தாம் கொண்ட கொள்கையைப் பின்பற்றுவதில் சூழ்நிலை, உணர்ச்சிகள், சிக்கல்கள் போன்ற எதற்கும் அசைந்து கொடுக்காது நிலையாக முன்னோக்கிச் செல்லுதல். அதே வேளையில் தற்போதைய சூழ்நிலை மாற்றங்களை உற்று கவனித்து அதன் போக்கிலேயே காரியங்களை ஆற்றி வெற்றி காணுதல். |

| | | |
|---|---|---|
| 3) | பொதுநலம் | தாம் எடுக்கும் எந்த காரியமும் சற்றும் சுயநலமில்லாமல் பொதுநலத்தைப் பேணுவதாக அமைதல் வேண்டும். பிறர் மீது பரிவு கொள்ளுதல் வேண்டும் |
| 4) | தன்னம்பிக்கை | எதையும் சாதிக்க முடியும் எனும் அசைக்க முடியாத மன உறுதி |
| 5) | எழுச்சி | சோர்வின்றி உத்வேகத்தோடு வீறு கொண்டு முன்னோக்கிச் செல்வதோடு, மக்களையும் அதே வேகத்தோடு இலக்கை நோக்கி அழைத்துச் செல்லுதல். |
| 6) | ஆளுமை | தனது தோற்றம், கொள்கை, செயல்பாடு என எல்லாவற்றிலும் மற்றவர்களை விட மேம்பட்ட நிலையில் தனித்துவமாகக் காட்சி தந்து கவர்தல். |
| 7) | துணிவு | எந்தச் சோதனைகளையும் கண்டு அஞ்சாமல் முன்னேறுதல். |

*மூலம்:* Manning & Curtis, 2007, pp.29-31 *(அட்டவணையின் முறையில் மாற்றி அமைக்கப்பட்டது)*

தலைமைத்துவக் கோட்பாடு முன்வைத்துள்ள இந்த ஏழு பண்புகளையும் கொண்டிருக்கும் தலைவர் ஒரு சிறிய சமுதாயத்தின் வழிகாட்டியாக இருந்தாலும் கூட, மக்கள் மனதில் நிலையான தலைவராக வாழ்வார் என இக்கோட்பாடு குறிப்பிடுகிறது (Maxwel, 2008, p.33). இத்தகையப் பண்புகளால் நிலைபெற்ற தலை வர்களே கொள்கைப் பிடிப்பு, செய லாக்கம், சூழலறிதல், தூரநோக்குடைமை, பொதுவுடைமைச் சிந்தனை ஆகிய ஐந்து தலைமைத்துவ பொதுச் சட்டங்களின்படி மக்களை வழிநடத் துவர் என்றும் குறிப்பிடுவர் (Hemphill, 1949, pp.7-8).

## அறிவுடைமை

அறிவுடைமை என்பது அனைத்து மனிதருக்கும் அடிப்படையில் இருக்க வேண்டிய ஒரு கூறாகும். ஒரு சமுதாயத்தில் அனைவரும் அறிவு மேன்மை உடையவர்களாக இருத்தல் சாத்தியத்திற்கு உட்பட்டதன்று (Manning & Curtis, 2007, pp.29-31). ஆயினும் அறிவுடையோர்க்கும் பிறருக்குமிடையே நல்ல தொடர்பிருக்குமானால் அறிவுடையோரின் கருத்துகள் அனைவருக்கும் பயன்படுவதாய், பயனுள்ளதாய் அமையும் என்பது நாகரீகவியளாலர் கருத்தாகும் (Rajantheran, 2012, p.2). எனவே, இவ்வறிவுடைமயானது ஒரு சமுதாய த்தை வழிநடத்துகின்ற தலைவரிடத்தே இருக்க வேண்டுவது அவசியம் என்பதை அறிந்தே தலைமைத்துவக் கோட்பாட்டில் அறிவுடைமையை முதன்மைப்படுத்தியிருக்கின்றனர் என்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

நீதி நூல்களுள் சிறுபஞ்சமூலம், 'கற்றடங்கி னானமிர்து' என்று தனது மூன்றாவது பாடலிலேயே முன்வை ப்பது கவனிக்கத்தக்கது. 'அறிவு நூல்களைக் கற்று அவற்றின் வழியல் அடங்கி நடப்பவன் உலகத்தார்க்கு அமிர்தம் போன்றவனாகும்' என்பது இதன் பொருளாகும். அமுதம் எனப்படுவதை தேவர் உணவு என்றும் குறிப்பிடுவர். அமுதம் குறித்த புராணக் கதையானது அசுரரும் தேவரும் பாற்கடலை மந்தர மலையை மத்தாகவும் வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பெரும் முயற்சியில் கடைய, தோன்றிய மிக அரிய பயன்பளுள் ஒன்றாக அமிர்தத்தைக் குறிப்பிடுவர். இது உண்டாரை நீண்டநாள் வாழவைக்கும் தன்மையது என்பது புராணக் குறிப்பு. எனவே அமிர்தம் என்பது கிடைத்தற்கு அரிதானது, பெரும் பயன் விளைவிக்கக் கூடியது என்பது பெறப்படும் (Subramania Sastry, 1998, pp.73-75). அவ்வகையில் அறிவுடைய ஒருவனைஅமுதத்திற்கு ஈடாக ஒப்பிட்டுக் காட்டுவது தெரிகிறது. அதிலும் இது போன்ற மனிதன் சமுதாயத் தலைமையை ஏற்கும் போது, அது கிடைத்தற்கரிய பேராக சிறுபஞ்சமூலம் குறிப்பு வைக்கிறது. இதன் வழி, இத்தகைய தலைவவனது தலைமைப்பண்பானது மக்களுக்கு நீண்ட நெடிய நற்பயனை விளைவிக்கும் என்பதுவும் பெறப்படும்.

பொதுவில் தலைமைத்துவக் கோட்பாடு அறிவுடைமையை முன்வைக்கிறது (Silllalee, 2016, p.37). சிறுபஞ்சமூலமோ, தீதின்றி வரும் தலைமைத்துவத்தை குறிப்பிடுகிறது. கற்றோர்களுள்ளும் பண்பற்றோர் இருப்பதுண்டு. ஆனால் அமுது என்பது தீமையை முற்றாக விலக்கிய நிலைக்கு உதாரணமாக நாம் ஏற்றுக் கொள்ளலாம். எனவே சிறுபஞ்சமூலம் தலைமைத்துவத்துக் கொண்டுள்ள உதாரணத்தால் உயர்ந்து நிற்கிறது.

## நிலைத்தன்மை

நிலைத்தன்மை என்பது ஒருவர் தாம் கொண்ட கொள்கையில் நிலையாய் நின்று எதற்கும் அஞ்சாமல் தற்போதைய சூழ்நிலை மாற்றங்களை உற்று கவனித்து அதன் போக்கிலேயே காரியங்களை ஆற்றி வெற்றி காணுதல் எனும் தலைமைத்துவப் பன்பைக் குறிக்கிறது (Manning & Curtis, 2007, pp.29-31). நீதி இலக்கியமோ,

'தன் நிலையும், தாழாத் தொழில் நிலையும், துப்பு எதிர்ந்தார்

இன் நிலையும், ஈடு இல் இயல் நிலையும், துன்னி, அளந்து அறிந்து செய்வான் அரைசு; அமைச்சன் யாதும் பிளந்து அறியும் பேர் ஆற்றலான்"

(சிறுபஞ்சமூலம், 56)

எனும் பாடலின் வழி, தன்நிலை, தன்வினைநிலை, பகைவர்நிலை, உலகியனிலை என்பனவற்றை யாராய்ந்து செய்பவனே அரசனாவான் என்கிறது. அரசன் என்பவன் நாட்டுக்குத் தலைவனாவான். தலைமைத்து வங்களில் அரச பதவி என்பது உச்சம். இந்த உச்சத்தை எட்டுபவர்களிடத்தில் மேற்சொன்ன தலைமைத்துவப் பண்புகள் இருக்க வேண்டும் என்பது சிறுபஞ்சமூலத்தின் செய்தியாகும்.

தற்போதைய நவீன தலைமைத் துவப் பண்பானது ஒருவர் தாம் கொண்ட கொள்கையில் நிலையாய் நிற்க வேண்டும் என்கிறது. அஃதோடு சமகாலச் சிந்தனையும் கொண்டு அதன் வழியில் தலைமைத்துவப் பண்பை நிலைநிறுத்த வேண்டும் என்பதாகச் சொல்கிறது (Hemphill, 1949, pp.7-8). இவ்விரண்டு செய்திகளையும் ஒப்பிடுங்கால், சுயமதி ப்பீடு, எதிரிகளின் நிலை அறியும் இரண்டு புதிய செய்திகளை நீதி இலக்கியம் நவீனத் தலைமைத்துவப் பண்புக்குக் கொடுக்கின்ற கொடை யாகக் கொள்வது பிழையாகாது.

இன்றைய சூழலில் எதிரிகளின் நிலை அறியாமல், மதிப்பீடு செய்யாமல், அவர்களின் சூழ்ச்சிகளை உணராமல் தலைமைத்துவத்தில் நீடிப்பது இயலாது என்பது தெளிவு. இங்கே எதிரிகள் எனப்படுபவர் கெட்டவர்களாக இருத்தல் வேண்டும் என்பது அவசியமில்லை. நம்மைக் காட்டிலும் நிலைத்தன்மை மிக்கவராகத் தம்மை எண்ணிக் கொள்ளும் ஒருவர் நமக்கு பதிலாகத் தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் என்பது உலக இயல்பல்லவா? எனவேதான் சிறுபஞ்சமூலம் இக்கருத்தை உணர்ந்து செயல்படும் தலைமைத்துவம் வேண்டும் எனப் பரிந்துரைப்பது போற்றத்தக்கது.

## பொதுநலம்

தலைமைத்துவக் கோட்பாடு, சுயநலமின்மையையும், பொதுநலம் பேணு தலையும், பிறருக்காக இரங்கும் தன்மையையும் வலியுறுத்துகிறது (Jacobs, 1990, p.281). ஆனால் தமிழ் நீதி இலக்கியமோ பொதுநலம் பேணுதலைத் தலைமைத்துவத்தின் மற்றொரு ஆணிவேராகக் கொண்டு, அப்பொதுநலம் பேணுதலில் பிழை பட்டவர் உயிர் துறத்தல் வேண்டும் எனும் உன்னதக் கருத்தை முன் வைப்பதைக் கூர்ந்து கவனித்தல் வேண்டும் (சிறுபஞ்சமூலம், 55). இச்செய்தியை பார்த்த மாத்திரத்தில்

'மன்பதை காக்கும் தென் புலம் காவல்

என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்'

(சிலம்பு, மதுரைக் காண்டம், வழக்குரை காதை, 75:76)

என தன் இனிய உயிரை மாய்த்துக் கொண்ட பாண்டிய மன்னனின் செயல் நம் கண் முன் வருவது தவிர்க்க இயலாத

ஒன்றாகிவிடுகிறது. பொது நலம் என்பது பிழைபடும் போது மக்கள் சொல்லொன்னாத் துயரத்திற்கு ஆளாவதோடு மட்டுமன்றி இதற்குக் காரணமான மனிதரின் பாரம்பரியமும் பாவப்பட்டுப் போவதை மேற்சொன்ன சிறுபஞ்சமூல செய்தியும் சிலம்பின் செய்தியும் பறைசாற்றுவது தெரிகிறது. எனவே சுயநலம் தவிர்த்துப் பொதுநலம் காத்து இரக்கம் கொண்டு தலைமைத்துவத்தை நடத்துவது அடிப் படைச் செய்தி. அதிலிருந்து பொதுநலத்தை உயிராகக் காட்டும் சிறுபஞ்சமூலத்தின் தலைமைத்துவப் பண்பினை எவ்வளவு போற்றினும் தகும். இதுவே இன்றையத் தலைவர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய மந்திரமாக அமைய வேண்டும்.

## தன்னம்பிக்கை

தலைமைத்துவக் கோட்பாடு எதையும் சாதிக்க முடியும் எனும் அசைக்க முடியாத மன உறுதி யை தன்னம்பிக்கை எனும் கொள்கையாகக் காட்டுகிறது (Manning & Curtis, 2007, pp.29-31). அப்துல் கலாம் அவர்கள் கூட, 'நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போது மண்டியிடு வதில்லை' என தன்னம்பிக்கையின் உயர்வைக் கூறுவார். மேற்கத்திய அறிஞரான சாமுவேல் ஜான்சன் என்பார்

'Self-confidence is the first requisite to great undertakings".

(Samuel Johnson, 1819, p.52)

என தன்னம்பிக்கையானது பெரும் வெற்றிகளுக்கு தேவையான முதல் கூறு என்பதாகக் கருத்துரைப்பார். எனவே தன்னம்பிக்கை என்பது தலைமைத்துவத்தின் முக்கியப்பண்பு களுள் ஒன்றாக இருப்பது பொருத்தமாகத்தான் உள்ளது (Sidney Shrauger & Mary Schohn, 1995, p.255).

நீதி இலக்கியம் இத்தன் நம்பிக்கை குறித்துப் பதிவு செய்யும் கருத்து மேற்சொன்ன கருத்துகளுக்கு மேலும் வைரத்தைப் பாய்ச்சும் வரிகளாக அமைந்திருப்பது கண்டு இன்புறத்தக்கது.

*'இசையா தெனினும் இயற்றியோ ராற்றால்*

*அசையாது நிற்பதாம் ஆண்மை இசையுங்கால்*

*கண்டல் திரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப!*

*பெண்டிரும் வாழாரோ மற்று'*
*(நாலடியார், 194)*

இப்பாடலில், ஒரு முயற்சியை மேற்கொள்ளும் போது, ஊழ் வலியால் அக்காரியம் கைகூடாத நிலையில் இருப்பினும் அதற்காகச் சோர்ந்து விடாமல் தன் முயற்சிக்கு வெற்றி கிட்டும் எனும் தன்னம்பிக்கையுடன் போராட வேண்டும் எனும் கருத்து வெளிப்படுகிறது. இவ்வகை மனப்பாங் குடையாரை ஆண்மையுள்ளவராக நாலடியார் உவமைப்படுத்துவது தலைமைத்துவக் கோட்பாட்டு கருத்து களின் மணிமுடியாகத் திகழ்கிறது என்று உறுதியாகக் கூறலாம். காரணம், கூடி வரும் காரியம் என்பதைச் செய்வதற்குப் பெரும் முயற்சியும் தன்னம்பிக்கையும் தேவையில்லை. செயற்கரிய செய்வதற்குத்தான் அது தேவை. செயற்கரிய செய்பவந்தான் தலைவர்களுள் ஏறு.

## எழுச்சி

சோர்வின்றி உத்வேகத்தோடு வீறு கொண்டு முன்னோக்கிச் செல்வதோடு, மக்களையும் அதே வேகத்தோடு இலக்கை நோக்கி அழைத்துச் செல்லுதல் என்பதுவே எழுச்சி எனத் தலைமைத்துவக் கோட்பாடு வரை யருக்கிறது (Jacobs, 1990, p.281). தலைமைத்துவப் பண்பில் எழுச்சி யானது ஒருவரை மக்கள் தலைவனாக அங்கிகரிக்கச் செய்யும் பண்பாக விளங்குகிறது. எழுச்சி மிக்க குணமுடையவன் சோர்வதில்லை. விவேகானந்தரிடம் இத்தகைய எழுச்சி இருந்ததினால்தன் அவரால் இந்து சமயத்தை மேற்கத்திய நாடுகளில் ஒளிவீசச் செய்ய முடிந்தது. காந்தியிடன் இருந்த எழுச்சி பாரத தேசமெங்கும் சுதந்திர வேட்கையைத் தூண்டச் செய்தது. நெல்சன் மண்டேலாவிடம் இருந்த எழுச்சி கருப்பினத்தவரை வீறு கொண்டு எழச் செய்தது.

நீதி இலக்கியம் கூட இக்கருத்துக்குத் துணை நிற்பதாகத் தெரிகிறது. தலைமைத்துவத்தை ஏற்கும் மனிதன் எழுச்சி கொள்ளும் போது யாராலும், எதனாலும் அசைக்க முடியாத வீறு கொண்ட, வைரம் பாய்ந்த மரம் போல் உறுதியாக நிற்கிறான். யானையே வந்து உரசினாலும் ஆட்டம் காணாத வைரம் பாய்ந்த மரம் போல்வன் அவன். இவ்வெழுச்சி அவன் தலைமை ஏற்று நடத்தும் மக்கள் கூட்டத்திற்கும் திடமான எழுச்சியையும் அதன் பயனான உறுதியையும், தொடர்ந்து போராடும் உத்வேகத்தையும் அளிக்கிறது எனும் கருத்து நாலடியாரின் 'ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉம்' எனும் 192வது பாடலின் வழி வெளிப்படுவதை ஆழ்ந்து கவனிக்கும் வேளை தெரிகிறது. எனவே, நீதி இலக்கியம் இவ்விடத்து தலைமைத்துவத்தில் சிறப்பெய்த எழுச்சியோடு உறுதியும் வேண்டும் எனும் கருத்தில் நவீன தலைமைத்துவ இயலாளர்களோடு கைகோர்த்துக் கொள்ளும் அழகைக் காண முடிகின்றது.

## ஆளுமை

தனது தோற்றம், கொள்கை, செயல்பாடு என எல்லாவற்றிலும் மற்றவர்களை விட மேம்பட்ட நிலையில் தனித்துவமாகக் காட்சி தந்து கவர்தல். ஒரு தலைவனானவன் தாம் ஆட்சியில் இருந்தாலும் இல்லா விட்டாலும் தனது தனித்துவத்திலிருந்து நிலை பெயராமல் மற்றவர்களை வழிநடத்திச் செல்லுதலே அவனை ஆளுமையுடையவன் எனக் காட்டும். இதில் தோற்றம், கொள்கை, செயல்பாடு என எல்லாவற்றிலும் மற்றவர்களை விட மேம்பட்ட நிலையில் தனித்துவமாகக் காட்சி தந்து கவர்தல் என்பது முக்கிய அம்சம் (Manning & Curtis, 2007, p.31).

நீதி நூல்களைப் பொருத்த வரையிலும் 'கோடா மொழி வனப்பு' (சிறுபஞ்சமூலம், 6) எனப்படும் நடுநிலைமை எனும் பண்பே ஒரு தலைவனுக்கு தீராத ஈர்ப்பை மக்களிடத்தே ஏற்படுத்தும் எனும் கருத்தை முன்வைக்கப்படுகிறது. என்னதான் ஒரு தலைவன் தோற்றம், கொள்கை, செயல்பாடு என எல்லாவற்றிலும் மற்றவர்களை விட மேம்பட்டு இருப்பதாகக் காட்சி தந்தாலும், நடு நிலைமை இல்லையெனின் மக்கள் அவனை ஏற்க மாட்டார். இனியவை நாற்பது கூட தனது 35வது பாடலில் 'பற்றிலனாயல் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல், வெற்றி வேல் வேந்தர்க்கு இனிது' எனும் வரிகளின் மூலம் எல்லா உயிர்களையும் சமமாகப் பாவித்து முறை செய்வதே இனிதாகும் என்கிறது. இவ்விடம் முறை செய்தல் என்பது அனைவருக்கும் நடுநிலையாக செயல்படும் திறமானதே அரசர்க்கு ஆளுமை தரக் கூடியதாக விவரிக்கப்படுகிறது. இதன் வழி அறவழியில் தலைவன் நிற்க வேண்டும். அதுவே நடுநிலைமை என்பதை நீதி இலக்கியம் சுட்டுவதாகத் தெரிகிறது. இந்த நடுநிலைமை எனும் பண்புதான் அனைத்தையும் தாண்டி ஒரு தலைவனுக்கு முடிவில்லா ஆளுமைப் பண்பை தருகிறது என்பது தெளிவு.

## துணிவு

*'உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,*

*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே'*

*(பாரதியார் கவிதைகள்: 1819)*

எனும் பாரதியின் வாக்கின் படி எந்தச் சோதனைகளையும் கண்டு அஞ்சாமல் முன்னேறும் துணிவு எனும் பண்பை மற்றொரு தலைமைத்துவக் கூறாக கொள்வது நவீன தலைமைத்துவக் கொள்கையின் கருத்தாக உள்ளது. இதன் வழி, அஞ்சாமை என்பதே துணிவுக்கு அடிப்படை என்பதையும் உணருதல் வேண்டும். அதனால் தான் பாரதியாரும் அச்சமில்லை எனப் பாடினார் எனலாம்.

நீதி இலக்கியங்களைப் பொருத்த வரையில் தலைமைத்துவப் பண்பில் அரசரால் போற்றப்படும் கூறுகளாக ஐந்தினைக் கூறுவர். அவையாவன பொருள், இன்பம், அஞ்சாமை, அருள், அறம். அருளும் அறமும் உடையவன் நல்வழியில் வரும் பொருளைத்தான் ஈட்டுவான். அதன் பொருட்டு வரும் இன்பங்களை அனுபவிக்கும் உரிமையைப் பெறுவா ன். தீதின்றி வந்த வாழ்வு என்பதால் அவன்

எதற்கும் அஞ்சாதவனாக வாழக்கூடிய தகுதியைப் பெறுகிறான். இவ்வாறு உயர்ந்து நிற்கும் பண்பாளனே ஒரு கூட்டத்திற்குத் தலைமை ஏற்கும் போது அந்த ஒட்டு மொத்தக் கூட்டமும் பெரும் பயனை அடைகிறது. இதிலே துணிவு என்பது அறத்தின் வழி வந்ததாகத் தெரிகிறது (நாலடியார், 57). அறமே அடித்தளமாக இருப்பதால் துணிவு என்பது வானம் இடிந்து தலையில் விழுந்தாலும் கூட அஞ்சாத நெஞ்சத்தைத் தருகிறது. அதோடு, எடுத்துக் கொண்ட காரியத்தில் துணிவுடன் முன்னோக்கிச் சென்று, தடைகளை உடைத்து, எதிர்த்துப் போராடுபவரே வீரத்தின் அடையா ளமாக விளங்கும் தலைவராவார் (இராசேந்திரன், 2015, pp.89). இத்தகைய குணம் கொண்ட தலைவனே எதையும் சாதிக்கும் தன்மையை அடைகிறான்.

## முடிவுரை

தலைமைத்துவக் கோட்பாடு முன்வைக்கும் ஏழு முக்கியக் கூறுகளை நீதி இலக்கியங்கள் எவ்வாறு பார்க்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அவை தலைமைத்துவக் கோட்பாட்டோடு இயைந்திருப்பதாகவே தெரிகிறது. ஆயினும் சற்றே ஆழ்ந்து பார்க்கும் பொழுது அந்தக் கோட்பாடுகளைக் காட்டிலும் மேம்பட்ட செய்திகளை நீதி இலக்கியங்கள் உள்ளடக்கியுள்ளன என்பதும் ஆய்வின் வழி தெரிய வருகிறது. நீதி இலக்கியங்களைப் பொருத்த வரையில் தலைமைத்துவப் பண்புகளாவன தலைவனிடத்தே தஞ்சம் கொண்டு உயிரினும் மேலாகப் போற்றி வளர்க்கப்படும் ஒரு பாரம்பரிய முதிர்ச்சியைக் காண முடிகின்றது. இந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கத் தவறுகின்ற தமிழன் தன் உயிரை மாய்த்துத் தலைமைத்துவத்தை மாண்புறச் செய்யும் அழகை உலகுக்குக் காட்டுவதக நீதி நூல்கள் அமைகின்றன. முடிவாகத் தமிழர்தம் அறக் கொள்கை எனப்படுவது தலைமைத்துவக் கோட்பாட்டுக்கு ஒரு புதிய எல்லையை வகுத்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

## References


Anavarathavinayakam Pillai, S. (2000). *The Naladiyar*. Chennai: International Institute of Tamil Studies.

Annathurai Kasinadan. (2016). *Tirukkural dalam kurikulum bahasa Tamil sekolah rendah dan menengah: satu kajian persepsi dan amalan ke arah pembentukan insan holistic* (Unpublished. Ph.D). Thesis. Jabatan Pengajian India, Fakulti Sastera dan Sains Sosial, Universiti Malaya.

Arasu. (1979). 7 *Niithi Nuulgal*. Chennai: Gangai Puthaga Nilaiyam.

Balasubramanian, S. (1974). Tamil Ilakiya Varalaru. Chennai: Pari Nilayam.

Balasunram Pillai, S. (1945). *Pathinenkizhk Kanakku Naladiyar*. Thirunelvelly: The South India Saiva Siddhantha Works Publishing Society.

Bernard, M., Bass. (1985). *Leadership and Performance Beyond Expectations*. New York: Free Press.

Chemers, M., Martin. (1997). *A Integrative Theory of Leadership*. New Hersey: Eribaum

Hemphill, K., John. (1949). *Situation Factors in Leadership*. Columbus: The Ohio State University.

Jacobs, T., Owens & Elliot Jaques. (1990). "Military Executive Leadership" in (Eds)

Kennath E., Clark & Miriam B., Clark. *Measure of Leadership*. Pp.281-295. New Jersey: Leadership Library of America.

Kogila Manisegaran. (2005). Thirukuralum Naladiyarum Pothikkum Vazhkai Nerigal. (Unpublished Academic exercise-B.A.). Jabatan Pengajian India, Fakulti Sastera dan Sains Sosial, Universiti Malaya.

Komalavani Sugumar. (2009). *Malaysia Tamilargalidaye Pazhamozhiyin Taakkam: Oor Aivu*. (Unpublished Academic exercise-B.A.). Jabatan Pengajian India, Fakulti Sastera dan Sains Sosial, Universiti Malaya

Kulandaiswamy, V. & Rupa Gunaseelan (2016). *Management Wisdom in Tamil Ethical Literature*. Mumbai: Himalaya Publishing House.

Manikanar, Va.,Suba. (1991). *Pirtkala Niithi Nuulgal*. Chennai: Manivasagar Publications.

Manning George & Curtis Kent. (2007). *The Art of Leadership*. New York: McGraw-Hill.

Maxwell, John. (2008). *The 21 Indispensable Qualities of A Leader*. Kuala Lumpur: PTS Professional.

Murray, G., Ross. (1966). *New Understanding of Leadership*. New York: Association Press.

Natarajan, B. (1960). *Economic ideas of Tiruvalluvar*. Madras: University of Madras.

*Pathinen Kizkanakku.* (1981), Chennai: New Century Printers.

Pathmavathy Muniandy. (2007). Nilai-nilai perkembangan diri dalam teks Naladiyar (Unpublished Dissertation). Jabatan Pengajian India, Fakulti Sastera dan Sains Sosial, Universiti Malaya.

Puliyur Kesigan. (1991). *Pazhamozhi Naanuuru Thelivuraiyudan*. Chennai: Pari Nilayam.

Puvai Amuthan. (1996). *Niithi Nuul Kalanjiyam*. Chennai: Kavitha Publications.

Rajantheran, M. (2014). *Puranaanuuru*. Chennai: Kalaignaan Pathipagam.

Rajantheran. (2012). *An Introduction to Hinduism*. Selangor: Malaysia Hindu Sangam.

Sabitha Marican. 2005. *Kaedah Penyelidikan Sains Sosial*. Petaling Jaya:

Pearson/Prentice Hall.

Samuel Johnson. (1819). *The Beauties of Samuel Johnson: Consisting of Maxims and Observations, Moral, Critical, and Miscellaneous*. London: J. Robertson.

Selvajothi Ramalingam. (2010). Penggunaan bahasa kiasan dalam karya Thirukkural: Satu analisis (Unpublished Dissertation (M.M.L.S.). Jabatan Bahasa-bahasa Malaysia dan Linguistik Terapan, Fakulti Bahasa dan Linguistik, Universiti Malaya.

Shanmugasubramaniam, M. (1968). “Concepts of law in Thirukkural”, *International Conference Seminar of Tamil Studies*. (vol.1 & p.389). Kuala Lumpur: International Association of Tamil Research.

Sidney Shrauger., J. & Mary Schohn. (1995). "Self-Confidence in College Students: Conceptualization, Measurement, and Behavioral Implications", *Sage Journals*. (vol. 2- Issue 3, pp. 255-278). *Silapathikaram*.

Silllalee, K. (2015). "Sangath Tamilarin Manam Katha Veeram", *Journal of Tamil Peraivu*. (Vol. 1, pp.7-15). ISSN 2289-8379.

Silllalee, K. (2016). "Barathidasanin Thalaimaithuva Panbugal", *Journal of Tamil Peraivu*. (Vol. 3, pp.35-48). ISSN 2289-8379.

Subramania Bharathiyar. (2015). *Bharathiyar Kavithaigal*. Mukil E Publishing And Solutions Private Limited.

Subramania Sastry. (1998). *Srimath Bakavatham*. Chennai: Rajan & Company Printers.

Varatharasan, Mu. (1992). *Tamil Ilakiya Varalaru*. New Delhi: Sahitya Akademi.

Venumathi Perumal. (2012). *Pazhamozhi Naanutril Velipadum Tamilar Panbadu*. (Unpublished Academic exercise-B.A.). Jabatan Pengajian India, Fakulti Sastera dan Sains Sosial, Universiti Malaya.

http://www.dinamalar.com/news_detail.asp?id=1138436 - Ravi, Athichudi Tharum Thannambikkai, (15/12/2014).

http://www.geotamil.com/pathivukalnew - S.Jenifer, Arailakkiyangalin Amaippu

.http://www.geotamil.com/pathivukalnew - S.Jenifer, Niithi Ilakkiyangalil Auvaiyar

www.Keetru.com. - Ve.Mu.Pothiya Vertpan, Pathinen Kizhkanakkuth Thokuppil Arasiyal Udkidakkai (25/4/2015).

# ஆலய வழிபாட்டில் மருத்துவம்: ஓர் அறிமுகம்
# Medicine in Temple Worship : an Introduction

முனைவர்சு.மணிமாறன் / Dr.S.Manimaran
கோவி.சிவபாலன் / G.Sivapalan

***Abstract***

Worshiping temples is good according to Avvaiyar. This has been an inate quality of ancient tamils. Temple has been a part and parcel of tamil way of life which inculcated bakthi. In a scientific way constructing temples with Chakras, idols and Kalasam has been a contant practice in the Hindu culture. This also leads to attain a religious life of man. The daily routine which includes poojas, festivals and rituals in temples not only promote bakthi but also priscribe healthy life of man with medicines. The offering of food, things for Archana, the holy water, Abishekam, the musical instruments played, the temple environment, all these, are filled with medicine in one way or other and act as a cure to many diseases. This paper deals with all these ideas of how temples cure people in various ways.

**Key Words:** Hinduism, Temple worship, Hindu temple, Medicine, Ritual

## முன்னுரை

நம் முன்னோர்கள், மனிதன் மனிதனாக வாழ்ந்து மாமனித நிலையை எய்துவதற்கும், மெய்ஞ் ஞான நிலையை அடைவதற்கும் உரிய வழிவகைகளை மக்களின் அன்றாட வாழ்க்கை முறைகளின் வாயிலாக வகுத்து வைத்தனர். இத்தகைய வழிகாட்டல்கள் மனதை யும் உடலையும் முறையாக ஓம்புவதையே மையப்படுத்தி அமைந்துள்ளன. உணவுமுறை, ஓகக்கலை, ஆலய வழிபாடு போன்றவை இத்தகைய வழிகாட் டல்களுள் சிறப்பிடம் பெறுகின்றன. அதிலும் குறிப்பாக, ஆலய வழிபாட்டை மிகச்சிறந்த மருத்துவ முறையாகவே நம் முன்னோர்கள் ஆக்கி வைத்திருந்தினர். ஆலயம் தொழுவது சாலவும் நன்று, என்பது தமிழர் மரபு. இக்கூற்றுக்கிணங்க, பரம்பொருள் வழிபாட்டின் வாயிலாக மக்கள் அகப்புற நிலையில் பல்வேறு நன்மைகளைப் பெறுகின்றனர். அந்நன்மைகளை இல்ல, ஆலய வழிபாட்டின் மூலம் பெற நம் முன்னோர்கள் சில வழிவகைகளை வகுத்தனர் (Subramuniyaswami, 1991) மக்களின் உடல், உள்ளம், உயிர் சிறப்புற இவை துணை செய்வதனால், இவற்றை வழிபாட்டு மருத்துவம் எனக் கொள்ளலாம்.

The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. gsiva_palan@um.edu.my

வழிபாட்டின் உட்கூறுகளாக விளங்கக்கூடிய வழிபாட்டிலுள்ள அருச்சனைப் பொருள்கள், பிரசாதங்கள், அபிஷே கங்கள், தூபதீப ஆராதனைகள், ஒளி, ஓசை, இசை, ஆசனங்கள், ஆலயச் சுற்றுச்சூழல்கள், ஆலயக் கதிரலைகள் ஆகியவை வழிபாட்டு மருத்துவமாக அமைந்து எவ்வ கையில் மக்களுக்கு நன்மை சேர்க் கின்றன என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்தியர்களின் நாகரிகத் தையும் பண்பாட்டையும் அலசிப் பார்த்தால் குறிப்பிடத்தக்க அடைவு களாக அவர்களது சமயமும் மருத்து வமும் விளங்கக் காணலாம் (Subramuniyaswami, 1991). சமயத்தை எடுத்துக் கொண்டால் ஆலய வழிபாடும் அது சார்ந்த வளர்ச்சிகளும் பன்னெடுங்கால மாகப் பல்வேறு மாற்றங்களையும் ஏற்றங்களையும் கடந்து இன்றைய நிலையை எய்தியுள்ளன. இந்தச் சமய வளர்ச்சியையும் அதன் போக்கையும் முன்னிறுத்தி பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன. அவற்றுள், இந்தியர்களின் ஆலய வழிபாடுகளில் பொதிந்துள்ள மருத்துவத் தன்மைகளையும், அவை எவ்வாறு பக்தர்களுக்கு அகப்புற நிலையில் மருந்தாகின்றன என்பதையும் அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறி

இவ்வாய்வு தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியை அடிப்படை யாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது. சமயம், சமூகவியல், பண்பாடு, உளவியல் சார்ந்த துறைகளை ஆய்வு செய்வதற்கு இந்நெறி ஏற்புடையதாகும் (Sabitha Marican, 2005, p.12). தரப்பகுப்பாய்வு முறையில் ஆய்வுப்பொருளின் உள்ளடக்கக் கருத்துகளின் உண்மை நிலையைக் கண்டறிய இயலும் (Merrian, 2009, p.2). தரப்பகுப்பாய்வு ஆய்வுமுறையானது விளக்கமு றைக்கு (interpretation) ஏதுவாகின்றது. விளக்கமுறையின் வழி, சேகரிக்கப்படும் தரவுகள் யாவும் சூழல், கருப்பொருள், நோக்கம் ஆகிய முக்கூறுகளின் அடிப்படையில் ஆராயப்படும். தரப்பகுப்பாய்வு முறையில் நான்கு நடவடிக்கைகள் பின்பற்றப்படும் (Neuman, 2000, p.122). அவை பின்வருமாறு அமைகின்றன. ஆராய்ச்சி ஆவணங்களை அடை யாளம் காணல் (identification and documentation), தரவுகளை ஆராய்ந்து பகுத்தாய்தல் (investiga tion and compartmentalization), செயல்முறை விளக்கத்துடன் பகுத்தாய்தல் (interpretation and analysis), தரவுகளை ஒருங்கி ணைத்து ஆய்வின் முடிவுகளைக் காணல் (integration and conclusion).

ஆலய வழிபாடுகளும் அவற் றோடு தொடர்புடைய மருத்துவத் தன்மைகளும் மிகுந்த ஆழமும் அகலமும் கொண்ட ஆய்வுக்குரியப் பொருளாகும். அத்தகைய ஆய்வுகள் மிகப்பெரிய ஆய்வுகளுக்கு இட்டுச்செல்வதோடு அதிக காலத்தையும் எடுத்துக்கொள்ளும். ஆய்வு முடிகளோ பல நூல்களுக்குள் அடங்கும் வண்ணம் எண்ணிக் கையில் விரியும். எனவே இக்கட் டுரை ஆலய வழிபாடுகளிலுள்ள ஒரு சில எடுத்துக்காட்டுகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றிலுள்ள மருத்துவத் தன்மைகளை மட்டுமே விளக்குகின்றது.

## ஆய்வின் முன்னோடிகள்

ஆலய வழிபாடு தொடர்பாக வேதாகமங்கள், ஆலய நிர்மா ணிப்புத் தொடங்கி வழிபாட்டுமுறை வரையிலான அனைத்துக் கூறுகளையும் தெளிவாக விளக்கு கின்றன. இவ்விளக்கங்கள் அனைத்தும் பெரும்பாலும் சடங்கு ஒழுக்கங்களை அடிப்படையாக மட்டுமே கொண்டு விளங்குகின்றன. இவை அன்றாட வாழ்வியல் முறையை ஒட்டிய விளக்கங் களாகவே அமையப்பெற்றுள்ளன. ஆனால் இன்றைய அறிவிய லாளர்களும் ஆய்வாளர்களும் இந்து ஆலய வழிபாட்டிலுள்ள அறிவியல் பூர்வமான உண்மைகளையும் அதில் மறைந்துள்ள மருத்துவ குணங் களைப் பற்றியும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருவ தாக V.R.Shastry தனது Scince in the Vedas எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் தற்போதைய இந்த ஆய்வுக்குரிய தரவுகளைத் தந்து துணைப்புரிகின்ற சில எழுத்துப்படிவங்கள் வெளிவந்து ள்ளன.

இனி அவற்றைக் காண்போம்.

ஆ.சொக்கலிங்கம் 1953இல் வெளியிட்டுள்ள சமயக் கிண்டர் கார்டன் அல்லது ஆலயங்களின் உட்பொருள் விளக்கம் எனும் நூலின் வாயிலாக, ஓர் ஆலய நிர்மாணிப்புத் தொடங்கி அவ் வாலயத்தில் மேற்கொள்ளப்படும் பூசைகள் வழிப் பெறப்படும் நன்மைகள் வரை பல்வேறு விளக் கங்களைத் தந்துள்ளார். இவ்வி ளக்கங்கள் தற்போதைய இந்த ஆய்வுக்கான பொதுவான ஒரு புரிதலைக் கொடுத்துதவுகின்றன. நஜன் (2000) தனது ஆலயங்களும் ஆகமங்களும் எனும் தனது நூலில் ஆலயங்களிலுள்ள ஆகம வழிபாடு களையும் அதிலுள்ள மருத்துவ நன்மைகளையும் குறித்து மேலெ ழுந்த வாரியாகக் கருத்துகளை முன்வைக்கின்றார். இக்கருத்துகள் தற்போதைய ஆய்வுக்கு நேரடியான சில குறிப்புகளைத் தந்துள்ளன. George Michelle (1988) என்பவர் தனது The Hindu temple: An introduction to its meaning and forms நூலில், இந்து ஆலயங்களின் கட்டுமானமும் வடிவமைப்பும், அதிலுள்ள அறிவியல் உண்மைகள் ஆகிய செய்திகளை முன்வைத்து ள்ளார். இவை தற்போதைய ஆய்வில் இந்து ஆலயங்களின் அமைப்பைப் பற்றிய விளக்கத்துக்கு உதவியுள்ளன.

Willis, Michael, (2009) வெளியிடப்பட்ட. The archaeology of Hindu ritual: Temples and establishment of the Gods எனும் நூலில் இந்து ஆலயங்கள், தெய்வங்கள் மற்றும் இவை சார்ந்த ஆழ்நிலை விளக்கங்களைக் கொடுத் துள்ளார். இதன் வழி தற்போதைய ஆய்வுக்குரிய ஆலயங்கள் மற்றும் தெய்வங்கள் பற்றிய தொடர் புநிலைப் புரிதல் இலகுவாகின்றது. க. கைலாசபதி, 1999இல் எழுதிய பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் எனும் நூலில், பழந்தமிழர்களின் வாழ்க்கையி லுள்ள தெய்வங்களும் வழி பாடுகளும், அவர்களின் இயற் கையோடு இயைந்த வாழ்வியல் முறையில் பின்னிப் பிணைந்திருந்த நிலையினையும் விளக்கிப்பேசியி ருக்கின்றார். இவ்விளக் கங்கள் தற்போதைய ஆய்வுக் கான, தமிழர்களிடையே இருந்த வழிபாட்டு முறைகளைப் பற்றிய புரிதலுக்கு உதவியுள்ளன.

Richard S Weiss என்பவர் 2009இல் வெளியிட்ட தனது Recipies for immortality, Healing, Religion and Community In South India எனும் நூலில் தென்னிந்தியர்களிடையுள்ள சித்த மருத்துவ முறையையும் அவை தற்போதைய மக்களிடம் நன் மதிப்புப் பெற்று வருகின்ற நிலையினையும் விளக்கியுள்ளார். இவ்விளக்கங்கள் தற்போதைய ஆய்வில் பேசப்படும் ஆலய வழி பாட்டிலுள்ள மூலிகைசார் கருத் துகளைப் புரிந்துகொள்ள உதவி யுள்ளன. மேற்கண்ட நூல்களையும் இன்னும் பல எழுத்துப்படி வங்களையும் நோக்குகையில் ஆலய வழிபாட்டிலுள்ள மருத்துவ குணங் களை ஒட்டுமொத்தமாக வெளிப் படுத்தி விளக்குகின்ற ஆய்வுகள் ஏதும் வெளிவந்துள்ளதாகத் தெரிய வில்லை. எனவே தற்போதைய இந்த ஆய்வு அந்தத் தேவையை நிறைவு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆலய வழிபாட்டில் மருத்துவம்

இந்திய வழிபாட்டு மரபை இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று அகவழிபாடு. பிறிதொன்று புறவழிபாடு. 'வழிபாடு' என்பது வழிபடு எனும் சொல்லை அடியாகக் கொண்டது (சாமி. 2000). 'வழிபடுதல்' என்பது அகத்தையும் புறத்தையும் கருவியாகக் கொண்டு இறைவனை உணர்தலும் அவனோடு இரண்டறக் கலத்தலும் ஆகும். ஒரு மனிதனுடைய உடல், உயிர், உள்ளம் எனும் மூன்று தன்மைகளையும் நலமுடன் வைத்துக்கொள்வதற்காக நமது முன்னோர்கள் கையாண்ட வழிமுறைகளை மருத்துவம் என்று சொன்னார்கள் (Silllalee, 2013, p.56 & Kulendiren, 2012).

உடலை அழியாமல் பாது காத்துக் கொள்வதற்கும், உள்ளம் நலமுடன் இருப்பதற்கும் உயிரின் பக்குவத்தையும் உயிரின் தன்மையை உயர்த்துவதற்கும் மருத்துவைத்தை நம் முன்னோர்கள் வகுத்தார்கள் (கைலாசபதி, 1999, ஜீஜீ.1015). இத்தகைய வியத்தகு மருத்துவ முறைகளை மெய்ஞானம் அறிந்த பெரியோர்களாகிய சித்தர்கள், ஞானிகள், மகான்கள் உருவாக்கி மக்களின் பயன்பாட்டுக்கு வித்திட்டனர். வழி பாட்டு மருத்துவமானது, புற உடலாகிய

தூல உடலுக்கு மட்டுமல்லாமல் சூக்கும உடலுக்கும் சிறந்த மருத்துவமாகின்றது (Levy, 1956, pp.35). இதன்வழி ஒருவர் தனது வாழ்நாளில் தன்னையுணர்ந்து அதன்வழி தலைவனையும் உணரும் நன்னிலைப் பெறுகின்ற சூழல் எளிதில் வாய்க்கப் பெறுகின்றது. இவ்வழிபாட்டு மருத்துவமானது ஆலய வழிபாட்டையும் இல்ல வழிபாட்டையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், இதனை ஆலய வழிபாட்டு மருத்துவம் என்பது பொருந்தும். ஆலய வழிபாட்டு மருத்துவம், ஒருவருடைய உடல், உள்ளம், உயிர் ஆகிய முக்கூறுகளும் பக்குவப்பட்டு ஒருங்கிணையும் நிலைக்கு வித்திடு கின்றது.

## அருச்சனைப் பொருள்கள் வழி மருத்துவம்

இல்ல வழிபாடாயினும் ஆலய வழிப்பாடாயினும், அவ்வழிபாடு களில் பயன்படுத் தப்படுகின்ற பொருட்கள் யாவும் மருத்துவத் தன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. அவ்வகையில் ஆலயத்தில் தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை போன்றவை இறை வனுக்குப் படைக்கப்படுகின்றன. இவ்வாறு படைக்கப்படுகின்ற பொருட்களின் மருத்துவத் தன்மையைக் காண்போம். பாக்கு வெற்றிலையை உண்ணும்பொழுது அதிலுள்ள துவர்ப்பு தன்மை உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துகின்றது. அதுபோலவே வாழைப் பழத்தில் பல்வேறு நோய் காக்கும் மருத்துவத் தன்மைகள் அடங்கியுள்ளன. அடுத்து, வழி பாட்டுக்குப் பின், படைக்கப்பட்ட தேங்காயின் பருப்பை உண்ண வேண்டும் என்று நம் வழிபாட்டு மரபில் அன்றே வலியுறுத் தப்பட்டுள்ளது. இந்த நான்கு பொருட்களையும் உட்கொள்வதால் உடல் காய கல்ப நிலையில் இருக்கும் என்பதை அறிந்து இதனை வழிபாட்டில் எடுத்துரைத்தனர் (இராதா, 2012). இனி, மேற்கண்ட நான்கு பொருட்களில் தேங்காய் மற்றும் வெற்றிலையிலுள்ள மருத்துவ குணங்களை எடுத்துக்காட் டாகக் காண்போம்.

## தேங்காயின் மருத்துவ குணம்

தேங்காயில் உள்ள கொழுப்பு அமிலம் (Fatty Acid) உடலில் உள்ள கெட்டக் கொழுப்பைக் கரைக்கிறது; உடல் எடையைக் குறைக்கிறது. தாய்ப்பாலில் உள்ள புரதச் சத்துக்கு இணையானது, இளநீரில் உள்ள புரதச் சத்து. தென்னையின் வேரிலிருந்து குருத்து வரை எல்லாப் பாகங்களிலும் மருத்துவக் குணங்கள் கொட்டிக் கிடப்பதாகச் சொல்கிறது சித்த மருத்துவம். கொப்பரை ஆண்மையைப் பெருக்கும். புரதச் சத்து, மாவு சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு உள்ளிட்ட தாதுப் பொருள்கள், வைட்டமின் சி, அனைத்து வகை பி காம்ப்ளக்ஸ் சத்துகள், நார்ச்சத்து என உடல் இயக்கத்துக்குத் தேவைப்படும் அனைத்துச் சத்துகளும் தேங்காயில் உள்ளன (திவீயீமீ, 2005, ஜீ.126). தேங்காய் எண்ணெய் சீரணச் சக்தியை மேம்படுத்துகின்றது. குழந்தைகளுக்குத் தேவையான எல்லாச் சத்துகளும் தேங்காய்ப் பாலில் உள்ளன. தேங்காய்ப் பாலில் கசகசா, பால், தேன் கலந்து கொடுத்தால் வறட்டு இருமல் மட்டுப்படும். பெரு வயிற்றுக் காரர்களுக்கு (வயிற்றில் நீர் கோர்த்தல்) இளநீர் கொடுத்தால் சரியாகும். தேங்காய்ப் பாலை விளக்கெண்ணையில் கலந்து கொடுத்தால் வயிற்றில் உள்ள புழுக்களை அப்புறப்படுத்தும்.

தேங்காய்ப் பாலில் காரத்தன்மை உள்ளதால், அதிக அமிலம் காரணமாக ஏற்படும் வயிற்றுப் புண்களுக்குத் தேங்காய்ப் பால் மிகவும் சிறந்தது. உடலுக்குத் தேவையான அமீனோ அமிலங்கள் தேங்காயில் உள்ளன. அவை உடலின் வளர்ச்சிதை (metabolism) மாற்றத்துக்குப் பெரிதும் உதவு கின்றன. அது மடுமல்லாது தேங்காய் எண்ணெயை உரிய அளவு தினமும் உணவில் சேர்த்து வந்தால் உடல் எடை குறையும் என்று அண்மைக் கால ஆய்வுகள் கூறுகின்றன (சாந்தி, 2001, p.129).

தேங்காயில் உள்ள லாரிக் ஆசிட் மற்றும் காப்ரிக் ஆசிட் ஆகியவை வைரஸ், பாக்டீரியா போன்ற நுண்கிருமிகளை எதிர்க்கும் திறன் கொண்டவையாக உள்ளன. தேங்காயில் உள்ள மோனோ லாரின் (Mono Laurin)

வைரஸ் செல் சுவர்களைக் கரைக்கிறது. எய்ட்ஸ் நோயாளிகளுக்கு வைரல் லோடைக் குறைக்கிறது. தேங்காயில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம். இதன் மூலம் உடல் சக்தியை அதிகப்படுத்துகிறது. முற்றிய தேங்காய் ஆண்மைப் பெருக்கியாகப் பயன்படுகிறது. அதிலுள்ள வைட்டமின் ணி முதுமையைத் தடுக்கிறது ; தைராய்டு சுரப்பின் செயல்பாட்டை ஊக்கப்படுத்துகிறது (Stiles, 2013).

## வெற்றிலையின் மருத்துவ குணம்

வெற்றிலை ஒரு மருத்துவ மூலிகை யாகும். வெற்றிலை பசியை தூண்டக் கூடியது. கோழை இளக, வயிற்றுக் கோளாறு நீங்க, அசீரணத்தைப் போக்க வெற்றிலை பயன்படுகின்றது. பொதுவாக இருமல், சளி, சுவாசகாசம், மூச்சுக் குழல் ஒவ்வாமை, வாத நோய், நுரையீரல் மற்றும் குடற்புண் போன்ற நோய்களை போக்கக்கூடிய மருத்துவ குணங்கள் கொண்டது வெற்றிலை. வெற்றிலையுடன் பாக்கு சேர்த்து சாப்பிட்டு வந்தால் பல்வேறுபட்ட நோய்கள் நீங்கும்

(National Institute of Industrial Research (India). Board of Consultants & Engineers, 2006, pp.59-69).

வெற்றிலையுடன் பாக்கு குறைவாகவும், சுண்ணாம்பு சிறிது அதிகமாகவும் சேர்த்து சாப்பிட்டால் பசி எடுக்காதவர்களுக்கு பசி எடுக்கும். வயிற்றுப்புண், வாய்ப் புண், வாயில் துர்வாடை பிரச்னை உள்ளவர்கள், மாலையில் வெற்றிலை அதிகமாகவும், பாக்கு சுண்ணாம்பு குறைவாகவும் மென்றால் இந்த பிரச்சனைகள் குணமாகிவரும். ஒரு வெற்றிலை யினுள் ஐந்தாறு துளசி இலைகளை வைத்து சிறிது கசக்கிப் பிழிய வருகின்ற சாற்றினைக் குழந்தை களுக்குக் கொடுத்தால் சளி, இருமல் குணமாகும். வெற்றிலையைப் பயன் படுத்தும்போது அதன் காம்பு, நுனி, நடுநரம்பு இவற்றை நீக்கி பயன்படுத்த வேண்டும். வெற்றி லையில் கால்சியம், இரும்புச்சத்து அதிகம் உள்ளன. வெற்றிலையை நன்கு கசக்கி அதன் சாறு துளிகளை எடுத்து மூக்கில் வைத்து உறிஞ் சினால் தலைபாரம் மற்றும் சளி கரையும் (Manohar & Hoopla digital, 2012, p.238).

மேற்கண்ட விளக்கங்களில், வழிபாட்டுப் பொருட்களுள் இரண்டை மட்டுமே விரிவாகக் கண்டோம். இதுபோன்று இன்னும் பல வழிபாட்டுப் பொருட்கள் மருத்துவ குணம் கொண்டவையாக உள்ளன. விரிவஞ்சி அவை இங்கே விளக்கப் படவில்லை.

## பிரசாதங்கள் வழி மருத்துவம்

ஆலயத்தில் இறைவனுக் காகப் படைக்கப்படும் உணவே பிரசாதம் என்றழைக்கப்படுகின்றது. உண்ணு கின்ற உணவை சாதம் என்போம். அதுவே இறைவனுக்குப் படைக்கப் படும்போது, இறையருள் அங்கே விரவுவதால் அது பிரசாதம் ஆகின்றது. வடமொழியில் ‘பிர’ என்பது தெய்வ அருள் விரவிய எனப் பொருள்படும். இறை வனுக்குப் படைக்கப்பட்டப் பின் அப்பிரசாதம் பக்தர்களுக்கு அளிக் கப்படுகின்றது. பிரசாதங்களுள் புளி சாதம், தயிர் சாதம், எலுமிச்சை சாதம், சக்கரை பொங்கல், வெண்பொங்கல், எள்ளு சாதம் போன்ற சாத வகைகளும் பச்சைப்பயிர், கொண்டைக்கடலை, சுதேசிக்கடலை, நிலக்கடலை போன்ற தானிய வகைகளும் அடங்கும். இப்பிரசாதங்கள் யாவும் மருத்துவ குணங்கள் நிரம்பிய வையாகும். மேற்கூறப்பட்ட இப்பிரசாத வகைகளுள், கொண்டக் கடலை பிரசாதம் மட்டுமே இங்கு ஆய்வு நோக்கத்தில் எடுத்துக் காட்டாக விளக்கப்படுகின்றது.

கொண்டக்கடலையில் நமக் குத் தேவையான புரதச்சத்தும், சிறிய அளவில் கால்ஸியம், இரும்பு, வைட்டமின் பி1, பி2, சீ, போன்றவைகளும் அடங்கியுள்ளன. இதை உண்பதால் இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவு கட்டுப்படுகின்றது. மேலும் உடல் எடையை சமச்சீர் அளவில் பாதுகாப்பதற்கும் இது உதவுகின்றது. செரிமானத்தை அதிகரிக்கவும், இதய நோய் மற்றும் புற்று நோய்க்கு நல்ல நோய் எதிர்ப்பு ஆற்றலையும் வழங்குகின்றது. உடலுக்குத் தேவையான அடிப்படை தாது சத்து, கனிமங்கள், புரதச்சத்து ஆகியவையும் இதில் அடங்கி யுள்ளன (Singh, Jakhar, & Singh, 2007, p.90). இது போன்று, பிரசாத வகைகளும் அதன் மருத்துவ குணங்களும்

எண்ணிக்கையில் அதிகம் உள்ளன. எடுத்துக்காட்டாக கொண்டைக்கடலை மட்டுமே மேலே விளக்கப்பட்டுள்ளது.

## அபிஷேகங்களின் வழி மருத்துவம்

இறைவனுக்காக ஆலயத்தில் செய்யப்படுகின்ற அபிஷேகங்களும் மிகச்சிறந்த மருத்துவ குணங்களைக் கொண்டிருக்கின்றன. இறைவனை நன்னீராட்டுவதையே வடமொ ழியில் அபிஷேகம் என்கின்றனர் (David, *2009*, p.*2)*. நன்னீராட்டில் நீர் முதன்மையாக அமைந்து அதனுடன் பல்வேறு மூலிகை மருந்து பொருட்களும் கலக்கப்படுகின்றன. இவற்றோடு பால், இளநீர், மஞ்சள், சந்தனம், திருநீறு, குங்குமம் போன்றவையும் நெய்வகை அபிஷேகங்களும் பஞ்சாமிர்த அபிஷேகங்களும் நம் வழிபாட்டில் சிறப்பிடம் பெறுகின்றன. தீர்த்த அபிஷே கங்கள் பலவுண்டு. அவற்றுள் இங்கே ஆய்வு நோக்கத்துக்காக துளசி தீர்த்தம் மட்டுமே எடுத்துக்காட்டாக விளக்கப்படு கின்றது. துளசி மிகச்சிறந்த மருந்து மூலிகையாகும் (Manimaran, *2013*, pp.43*44)*. இதில் மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, நார்ச்சத்து, புரதச் சத்து மற்றும் வைட்டமின் A, B, C, E, K போன்ற தாதுக்களுடன் Thiamine B1, Riboflavin B2, Niacin B3, Choline போன்ற பல்வேறு கனிமங்களும் அடங்கியுள்ளன (Makri & Kintzios, 2008, p.25). எனவேதான் இதனை இந்துக்கள் தங்கள் வீடுகளிலும் ஆலயங்களிலும் முதன்மை மூலிகையாக வளர்த்து வருகின்றனர். துளசி மூலிகை கலந்த நீரை அருந்துவதால் உடலுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. துளசி உடல் ஒவ்வாமையைப் போக்குகின்றது. மேலும், சளி, இருமல், சுவாசம், இருதய நோய்கள், வயிற்றுக் கோளாறு, காது, மூக்கு, தொண்டை, கண் சார்ந்த கோளாறுகள், உறக்கமின்மை போன்ற குறைபாடுகளை துளசி சரி செய்கின்றது. மலச்சிக்கல், நோயெதிர்ப்பாற்றல், உயர் இரத்த அழுத்தம், இரத்தத்தில் உயர் சர்க்கரை, மன உளைச்சல், மன அழுத்தம் போன்ற இன்னும் பல்வேறு உடல் பிரச்சினைகளுக்கு துளசி அருமருந்தாகின்றது. துளசி உடலில் பல்வேறு நேர்மறை மாற்றங்களை உருவாக்குகின்றது என்பதை அறிவியல் ஆய்வுகள் இன்று மெய்ப்பிக்கின்றன (Narayan, *2007)*.

## வழிபாட்டிலுள்ள நறுமண மருத்துவம்

உடல் சார்ந்த மருத்துவத்தை ஆலய வழிபாடுகள் எவ்வாறு அளிக்கின்றன என்பதை இதுகாறும் கண்டோம். இனி, உளம் சார்ந்த மருத்துவத்தை ஆலய வழிபாடுகள் தருகின்ற பான்மையைக் காண் போம். இன்று வாழ்வியல் மருத்துவம் என மேல்நாட்டார் கொடுக்கின்ற நறுமண மருத்துவம் (aroma therapy), பன்னெடு ங்காலமாக நம் முன்னோர்களால் மறைபொருளாக ஆலய வழி பாட்டின் மூலம் வழங்கப்பட்டு ள்ளது. நறுமணம் மிகச்சிறந்த மருத்துவத்தன்மையைக் கொண்டுள் ளது. Rhind, J. என்னும் ஆராய்ச்சியாளர், நறுமணங்கள் மனிதனுக்கு மன, உடல் வகையில் நேர்மறைத் தாக்கங்களைத் தரவல் லவை என்கின்றார். மனத்தில் பல்வேறுபல்வேறு வாசனை திரவி யங்களைக் கொண்டுள்ள ஊதுவர்த்திகள், அபிஷேகப் பொருட்கள், இறை வனுக்கு சார்த்தப்படுகின்ற மலர்கள் மற்றும் மூலிகை இலைதழைகள் ஆகியவற்றிலிருந்து வெளிப்படும் இயற்கை மணங்கள், மனிதனுடைய மனத்தையும் உடற்கூறு தன்மை யையும் மாற்றி அமைக்கின்றன என்பதை இன்றைய விஞ் ஞானம் மெய்ப்பிக்கின்றது.

## வழிபாட்டிலுள்ள ஓசை - இசை வழி மருத்துவம்

தொடர்ந்து, இசை மருத்துவம் (music therapy) ஆலய வழிபாட்டில் சிறப்பிடம் பெறுகின்றது என்பதை நம் முன்னோர்கள் உணர்ந்திருந்த காறணத்தால் அதனை வழிப் பாட்டின் முக்கிக் கூறாக அமைத்து வைத்தனர். நாதசுரம், மேளங்கள் மற்றும் இசைக் கருவிகளிலிருந்து வரும் நாதத்தின் வழியாக உடல் சுரப்பிகள் தட்டியெழுப்பப்படு கின்றன என்றும் இதனால் உடலில் பல்வேறு நேர்மறை மாற்றங்கள் உருவாகி உடலை பாதுகாக்கின்றன என்றும் இன்றைய விஞ் ஞானம் ஆராய்ந்து கூறுகின்றது. இதனை யே, Horden, P. எனும் அறிஞர் தனது Music as medicine : The history of music therapy

since antiquity என்னும் நூலின் வாயிலாக உறுதிப்படுத்துகின்றார்.

ஆலயத்தில் எழுப்பப்படு கின்ற ஆலய மணி ஓசை பிரபஞ்ச ஓசை (universal sound) எனவும் அழைக்கப்படுவதுண்டு. மனிதனின் மூளையின் நடு மையத்தில் அமைந்துள்ள சுரப்பியை தட்டி எழுப்பக்கூடிய தன்மை ஆலய மணிக்கு உண்டு. ஆலயத்தில் எழுப்பப்படும் ஓங்கார ஓசைக்கும் இந்த ஆற்றல் உண்டு. ஆலயத்தில் எழுப்பப்படும் மணி ஓசைகள் மனிதனின் மனநிலையிலும், உயிர் நிலையிலும், உடல் சுரப்பிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தவல்லது என இன்றைய ஆறிவியலாளர்கள் கூறுவதை அன்றைய மெய்ஞ் ஞானிகள் அறிந்து பயன்பாட்டில் நடைமுறைபடுத்தியுள்ளனர்.

## வழிபாட்டிலுள்ள ஆசன மருத்துவம்

இன்றைய அறிவியல், யோகானக் கலையை மிகச்சிறந்த உடல் ஓம்பும் கலையாக ஏற்றுக்கொள்கின்றது (Mallika, 2013, p.89). அதன் மிகு பயன் கருதி, இந்துக்கள் யோகாசனக் கலையை ஆலய வழிபாட்டில் மறைபொருளாக வைத்தனர் என்கின்றார் அறிஞர் Varenne *(1989)*. இதே கருத்தை Singh, K. V. *(2015)* என்பவரும் முன்வைக்கின்றார். இக்கலையின் சிறப்பை உணர்ந்த நாம் முன்னோர்கள் இதனை நம் வழிபாட்டின் கூறுகளில் ஒன்றாக இணைத்தனர். யோகாசனம் இன்றளவும் மருத்துவமாக ஆலய வழிபாட்டில் மறைபொருளாக இருந்து வருகின்றது. தோப்புக் கரணம் போடுவதும் ஆலயத்தை மூன்று முறை வலம் வருவதும், வலம் வந்த பிறகு அட்டாங்க நமஸ்காரம் அல்லது பஞ்சாங்க நமஸ்காரம் செய்வதும், அப்பொழுது நம் உடல் குனிந்து, நிமிர்ந்து வளைந்து எழுவதும் யோகாசனக் கலையின் கூறுகளே. இதுபோன் றே ஆலயத்தை வலம் வருவதும், கிரிவலம் வருவதும் ஆலயத்திலும் மலைச்சாரல்களிலும் இருக்கின்ற நேர்மறைக் கதிரலை களையும் காந்த அலைகளையும் நம் மீது செலுத்தி உடலுக்கும் உணர்வுக்கும் மருந்தாகின்றன.

## ஆலயச் சுற்றுச்சூழல் / தியானம் வழி மருத்துவம்

இதுகாறும் நாம் ஆலய வழிபாடு எவ்வாறு உடல் மற்றும் உள்ள த்துக்கு மருந்தாகின்றது என்பதைக் கண்டோம். இனி, உயிருக்கும் உணர்வுக்கும் ஆலயமும் அதன் சுற்றுச்சூழல்களும் மருந்தாகின்ற தன்மையினைக் காண்போம். ஆலயக் கட்டமைப்பு முறையும் குறிப்பாக கருங்கல் பயன்பாடும், ஓவியங்களும், சிற்ப வடிவங்களும், யந்திரப் பதிப்புகளும், ஆலயப் பிரகாரமும், அங்குள்ள மரச்செடி தாவரங்களும் குறிப்பாக ஆலய விருட்சங்களும், பல்வேறு நிறங்களும் அங்கு நிகழும் வழிபாட்டுக்கு ஏற்றதொரு சூழலை உருவாக்கித் தருகின்றன. இதன் வாயிலாக ஆலயத்துக்குச் செல்லும் பக்தன் தன்னுடலாலும், உள்ளத்தாலும், உணர்வாலும் ஒருநிலையெய்தி தியானத்துக்குத் தன்னைத் தயாராக்கிக் கொள்கின்றான்; வழிபாட்டின் உண்மையான நோக்கமாகிய ஆன்மப் பயனை எய்துகின்றான் *(*Subramuniyaswami,*1991).*

## முடிவுரை

இந்து ஆலய வழிபாடு மனிதன், உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றையும் ஒன்றிணைத்த தன்மையில் நன்மை பெறும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆய்வின் வாயிலாக, அருச்சனைப் பொருட்கள், பிரசாதங்கள், அபிஷேகப் பொருட்கள், ஆசனங்கள் உடலுக்கு மருந்தாவ தையும், நறுமணம், ஓசை, இசை,ஆலயச் சுற்றுச்சூழல் ஆகிய வை உளத்துக்கு மருந்தா வதையும் கண்டோம். இவைய னைத்தும் ஒருங்கிணைந்த நிலையில் மனிதன் மனவொருமை எய்தி பரிபூரண இறையருளைப் (இறை யாற்றலை) பெறுகின்றான் என்ப தையும் பார்த்தோம். ஆலயத்திலும் அதன் வழிபாட்டிலுமுள்ள ஒவ்வொரு செயல்களிலும் மருத்துவ குணம் மறைந்திருப்பதையும் இவ்வாய்வின் வழி கண்டறிந்தோம். ஆக, ஆலய வழிபாடென்பது மனிதன் தன்னை உடலாலும், உள்ளத்தாலும் எப்போ தும் ஆரோக்கியமாக வைத்துக் கொண்டு வாழ்வதற்குரிய மிகச் சிறந்த வாழ்வியல் முறை என்பதே இவ்வாய்வின் கருத்து முடிவு.

## References


Cami, A. (2000). *Intu Camaya Italkaḷ: Or Ayvu.* (first ed). Cennai: Navamaṇi Patippakam.

Canti, K. (2001). *Nattuppura Maruttuvam: Or Ayvu* (1st ed.). Tancavur: Tamilp Palkalaikkalakam.

Cattiyapama, M., & International Institute of Tamil Studies. (1996). *Mulikaik Karpaṅkaḷ* (Ed. 1st. ed., Publication, no. 240). Cennai: Ulakat Tamilaraycci Niruvanam.

Cokkalingkam, A. (1953).*Camayak Kintarkartan Allathu Alayangkalin Utporul: Vilakkam*, Madras: A .Cokkalingkam.

David, A., R. (2009). "Gendering the divine: New forms of feminine Hindu worship", *International Journal Of Hindu Studies*, *13*(3), 337-355.

Davidson, R. (2011). "Willis, Michael: The archaeology of Hindu ritual: Temples and the establishment of the gods", *Bulletin-School Of Oriental And African Studies University Of London, 74*, 502-503.

Fife, B. (2005). *Coconut Cures: Preventing And Treating Common Health Problems With Coconut*. Colorado Springs, CO: Piccadilly Books.

Greer, J. (2016). *The Secret Of The Temple: Earth Energies, Sacred Geometry, And The Lost Keys Of Freemasonry*. Woodbury, Minnesota: Llewellyn Publications.

Horden, P. (2000). *Music As Medicine: The History Of Music Therapy Since Antiquity*. Aldershot: Ashgate.

Irata, Pa. (2012). *Vallalarin Tamil Maruttuvam*. Putucceri: Naka Patippakam.

Kailacapathi, Ka. (1999). *Pantaith Thamilar Valvum Valipatum,* (3rd ed. ed.). Chennai: Kumaran Pub.

Kulendiren, P. (2012). *Hinduism: A Scientific Religion & Some Temples In Sri Lanka*. Bloomington: IUniverse.

Levy, J. (1956). *The Nature Of Man According To The Vedanta*. London: Routledge & Paul.

Makri, O., & Kintzios, S. (2008). Ocimum sp.(basil): Botany, cultivation, pharmaceutical properties, and biotechnology. *Journal Of Herbs, Spices & Medicinal Plants*, 13(3), 123-150.

Mallika, Morthey Naidu. *(2013).* "Yoga for Health", Journal of Indian Studies, Special Issues: Articles on Siddha & Ayurveda Traditions. ISSN: 1675-171X.

Manimaran, S. (2013). “Tulasi in Hinduism: An Overview”, Journal of Indian Studies, Special Issues: Articles on Siddha & Ayurveda Traditions. ISSN: 1675-

171X.

Manohar, M., & Hoopla digital. (2012). *Ayurveda For All: Effective Ayurvedic Self-Cure For Common And Chronic Ailments*. United States: V & S.

Merriam, S. (2009). *Qualitative Research: A Guide To Design And Implementation* (The jossey-Bass higher and adult education series). San Francisco: Jossey-Bass.

Michell, G. (1988). *The Hindu Temple: An Introduction To Its Meaning And Forms*, Chicago: University of Chicago Press.

Narayan, M. (2007). *Flipside Of Hindu Symbolism: Sociological And Scientific Linkages In Hinduism*. Fultus.

National Institute of Industrial Research (India). Board of Consultants & Engineers. (2006). *Hand Book On Unani Medicines With Formulae, Processes, Uses And Analysis*. Delhi, India: Asia Pacific Business Press.

Neuman, W. (2000). *Social Research Method : Qualitative And Quantitative Approaches* (4th ed. ed.). Boston: Allyn and Bacon.

Nhatarajan, S. (2000). *Alayangkalum Akamangkalum* (2nd ed. ed.). Madras: Pirathipa: Piracuram.

Rhind, J. (2014). *Fragrance And Wellbeing: Plant Aromatics And Their Influence On The Psyche*. London: Singing Dragon.

Sabitha Marican. (2005). *Membentuk Suasana Kerja Positif: Aspek Hubungan Manusia Dan Persekitaran Sosial* (Siri pengajian dan pendidikan utusan). Kuala Lumpur: Utusan.

Silllalee, K. (2013). “Spritualism and Siddha Medicine as Portrayed by TV Serial ‘Sivamayam’”, Journal of Indian Studies, Special Issues: Articles on Siddha & Ayurveda Traditions. ISSN: 1675-171X.

Singh, K., V. (2015). *Hindu Rites And Rituals: Origins And Meanings*. UK: Penguin

Singh, K., Jakhar, M., & Singh, D. (2007). *Multitherapic Medicinal & Spiceal Plants*. Jaipur: Aavishkar , Distributors.

Stiles, N. (2013). *Coconut Oil Health Benefits Revealed: How To Look And Feel Younger And Healthier Using Natures Amazing Remedy*. Newark, DE: Speedy Publishing, LLC.

Subramuniyaswami, S., S. (1999). *Merging With Siva=Sive Vilayam: Hinduism's Contemporary Metaphysics*. Kapa, HI: Himalayan Academy.

Subramuniyaswami, S., S.(1991). *Living With Siva: Hinduism's Nandinatha Sutras* (1. ed. ed.). Concord, Calif.: Himalayan Acad.

Varenne, J. (1989). *Yoga And The Hindu Tradition* (1st Indian ed. ed.). Delhi: Motilal Banarsidass.

Willis, Michael. 2009. *The Archaeology Of Hindu Ritual: Temples And Establishment Of The Gods*. Cambridge: Cambridge University Press.